University of Madras.

A. EXAMINATION OF 1890.

TAMIL POETRY

CONTAINING

Naladiyar, Naishadham, and Bharatam,

WITH

Copious Notes, Explanations, &c.

EDITED BY

K. SREENIVASARAGHAVACHARYAR,

Head Master, C. H. Orphanage, Vepery, Madras.

Madras:

PRINTED AT THE ALBINION PRESS

BACK OF MEMORIAL HALL.

1889.

KALATARANGINI

A monthly Tamil Journal of **LITERATURE, PHI PHY, SCIENCE** and **RELIGION.**

The Journal will also contain Notes on **Classical Authors; Reviews of Literary Works, and School B Correspondence, &c.**

To Supporters.

In advance per annum (including postage) ... Rs. 5 0 0
„ per mensem (do.) ... „ 0 8 0

The Supporters will be furnished, free of cost and postag with a copy of each number of the *Supplement Series* for the yea ished in connection with the Jour

To Subscribers.

(HALF-YEARLY.)

as ... ... R. 2 0 0 } in advance.
Mofussil ... ... „ 2 8 0 }

(YEARLY.)

ras .. .. „ 3 0 0 } in advance.
Mofussil ... ... „ 4 0 0 }

Single Copies—Eight Annas Each.

unications regarding Subscriptions, Advertisement rs of business should be addressed to P. LOKA *56, Avadhanam Paupier Street, Chulai, Madras.*

ஒருகாலத்தில் சமணமுனிவர் எண்ணாயிரவர் கொடியபஞ்
தால் சுதேசம்விட்டுப் பாண்டிநாடடைந்து அந்நாட்டரசனால் ஆ
க்கப்பட்டுவந்தனர். பிறகு பஞ்சம் நீங்கி நாடுசெழித்ததறிந்து அ
தத்தம் உறைவிடங்கட்கே விடைதரல் வேண்டுமெனப் பாண்
யனே வேண்ட, பல கலைகளிலும் வல்லபுலவர்கள் இருப்பது த
அவைக்களத்திற்கு ஓர் அணிகலனென வெண்ணி அரசன் அவர்
ஏப் பிரிந்திருக்க மனமிலனாய் விடைகொடாது தாமதித்தனன்
இங்ஙனமிருக்க, அம்முனிவர் அனைவரும் சங்கேதமாய் அவ்வரசன
க்குப் பல நீதிகளும் புலப்படுமாறு தனித்தனி ஒவ்வொருவெண்பா
னைப்பாடித் தத்தம் பீடத்தின்கீழிட்டு ஓரிரவில் யாருமறியாதபடி
அந்நாட்டைவிட்டு அகன்றனர். பொழுது புலர்ந்ததும் அரசன் அப்
புலவர்களைக்காணாது திகைத்து அவர்களிருந்த விடங்களைச்சோத
னைசெய்துபார்க்கையில், ஒவ்வொருவர் பீடத்தின்கீழும் ஒவ்வொரு

பது, 10. திணைமாலை நூற்றைம்பது, 11. ————, 12. முப்பால் [=திருக்குறள்], 13. திரிகடுகம், 14. ஆசாரக்கோவை, 15. பழ மொழி, 16. சிறுபஞ்சமூலம், 17. முதுமொழிக்காஞ்சி, 18. ஏலாதி என்பன.

மேற்பாட்டில் ஐந்திணையென்றது திணைகளைப்பற்றிச்சொல்லும் ஐந்து நூல்களையாதலின் கீழ்க்கணக்குத்தொகைபதினெட்டாயது. அவ்வைந்துநூல்களில் நான்குநூல்களே எமக்குக்கிடைத்தன; மற்றொன்றின்பெயர் தெரியாமையின் அதனையெழுதாது கீற்றிட்டு வெற்றிடமாக விட்டனம். ஐந்திணையைம்பது, ஐந்திணையெழுபது என ஐந்திணையென்னும்பெயரால் இரண்டுநூல்களிருக்க,ம-ரா-ள-ஸ்ரீ யாழ்ப்பாணம் சி - வை - தாமோதரம்பிள்ளையவர்கள் கலித்தொகைப்பதிப்புரையுள், "ஐந்திணை அகப்பொருட்டுறைத்தாய் ஐம்பது செய்யுளான் மாறன்பொறையனூர் இயற்றியது ஓர்நூலாக" எனக்கூறியது யாதுகாரணமோ? திருக்குறளின் சிறப்புப்பாயிரத்துள் திருக்குறளை முப்பாலெனவே கூறியிருக்கின்றமையாலும், முப்பாலென வேறுநூல் இதுவரைகாணப்படாமையாலும், இங்கு முப்பாலென்றது திருக்குறளெனவே கொண்டனம். "முப்பாலைத் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரது பொய்யாமொழித் திருக்குறளென்று மயங்கித்தடுமாறுப" என ஷெ-பிள்ளையவர்கள் கூறியதன் கருத்து யாதோ யாமறிகிலேம். முப்பால் திருக்குறளல்ல வெனில், நாலடியென்பதும் 'நாலுயிரண்டுஞ் சொல்லுக்குறுதி' எனத் திருக்குறளோடொப்பாகக் கூறப்பட்டுள்ளதாகியசமணமுனிவர் பாடிய நாலடியாரைக்கொள்ளாது வேறேதோ சிறியநூலெனவே கொள்ள வேண்டியதாகுமன்றே? இந்நூல்களுக்குக் கீழ்க்கணக்கெனப் பெயரிட்டதுவும் அவை தாழ்மையான நூல்களெனக் கொண்டதாகாது; இவ்விஷயங்களை ஆய்ந்துணர்ந்தோர் எமக்கு ஐயமற அறிவிப்பரென வேண்டுகின்றேம்.

ட்டிலெழுதிவைக்கப்பட்டிருந்தது. அவற்றை யெடுத்துப்
க்கையில், அப்பாடல்கள் அனேகமாயும் ஒன்றுக்கொன்று
பொருத்தமில்லாது முரணுயுமிருந்ததனுல் அரசனுத்தர
அவை வைகையாற்றில் எறியப்பட்டன. அவற்றுள் நாலூ
ல்கள் எதிரேறிக் கரைசேர்ந்தன ; அப்பெருமையைக்கண்டு
அதிசயித்து அவற்றையெடுத்து ஒருதூலாக்கி நாலடியார்
பெயரிட்டு வழங்கலாயினன். எஞ்சியபாடல்களும், ஒவ்வோர்
ளில் கரைசேர, அவைகளும் ஒன்றுகச்சேர்க்கப்பட்டு அறநெ
ரம் முதலிய வேறுதூல்களாக வழங்கலாயின என்பர். வைகை
லெறியப்பட்டவைகளுள் இந்நானூறு பாடல்கள் ஆற்றினி
மேலே நாலடியுயரம் எழும்பினவென்றும், அதனுனே இவ
நு நாலடியார் எனப் பெயரளிக்கப் பட்டதென்றுங்கூறுவர்.

எங்ஙனமாயினும் இத்தூல் ஒருவர்செய்ததன்றெனவும் சிதறின
டல்களாலமைக்கப்பட்டதெனவும் தெற்றென விளங்குகின்றது.
தபற்றியே இதில் ஆங்காங்குச் சிலபாடல்கள் அதிகாரத்திற்கு
ந்திப் பொருத்தத்தக்கனவாயிருக்கின்றன. பிற்காலத்துப் பதுமை
என்னு மோர்புலவர் இத்தூற்குப் பாவியலதிகாரமென்னும் பாகு
ட்டமைத்து ஒருவாறு உரையும் செய்திருக்கின்றனர். இக்காலடி
குள் அனைவரும் நன்கு ஒழுகுதற்கு வேண்டியநீதிகள் பலவும்
றப்பதென்றலையின் மிகவும் மேலானதாக இது யாவராலும் கொ
டாடப்படுகின்றது.

கக-ம். அதி.—பழவினை.

[அஃதாவது - பழமையாகிய வினைகளைப்பற்றிச் சொல்வது. பழவினை - ஜன்மாந்தரகன்மம். அவை, பிற்பிறப்பிற் பயன் தரவாய முற்பிறப்பிற்செய்த நல்வினையுந் தீவினையுமாம். வினை புண்யபாபங்கள். ஆகவே, முற்பிறப்பிற்செய்த வினை இப்பிறப்பாகும், இப்பிறப்பிற்செய்த வினை வருபிறப்பிற்கு மென இம்முறையே பழவினையாமென்பது. முற்பிறப்பில் ஈகைமுதலிய நல்வினை செய்தார் பிற்பிறப்பில் பலநன்மைகளை நுகர்வரென்பதனையும் அங்ஙனஞ்செய்யாதார் பசிபிணிமுதலியவற்றுல் நலிந்து திரிவரென்பதனையு மறிவித்தற்கு இது ஈகையின்பின் வைக்கப்பட்டது.]

பல்லா வொளித்து விடினுங் குழக்கன்று
வல்லதாந் தாய்நாடிக் கோடலைத்—தொல்லைப்
பழவினையு மன்ன தகைத்தேதற் செய்த
இழவினை நாடிக் கொளற்கு.

(இ-ள்.) பல் ஆ - பல பசுக்களில், ஒளித்து விடினும் - மறைத்து விட்டாலும், தாய் - (தனது) தாயை, நாடி கோடலை - கண்டுபிடித்து (அதனிடம்) சேர்வதில், குழ கன்று - இளங்கன்றானது, வல்லது ஆம் - வல்லமையுடையதாகும்; தொல்லை பழவினையும் - முற்பிறப்பிலே செய்யப்பட்ட வினையும், தன் செய்த இழவினை - தன்னைச் செய்த வுரிமை யுடையோனை, நாடிக்கொளற்கு - தேடிக்கொள்ளுதற்கு, அன்ன தகைத்தே - அப்படிப்பட்ட வல்லமை யுடையதே, (எ-று.)

குழக்கன்று - உரிச்சொற்றொடர். வல்லது - குறிப்புமுற்று லனையும்பெயர். ஆம் - ஈற்றுமிசையுகரம் மெய்யுடன் கெட்டது. தொல்லைப் பழமை - ஒரு பொருள் குறித்த பல சொல்; ஈண்டு மிகப் பழைய என்னும் பொருள்பட நின்றது; அல்லது பழவினை யென்பதைத் தொடர்ந்துவருங் கருமத்துக்குப் பெயராக்கொண்டு தொல்லை யென்பதை அதற்கு அடையாகக் கொள்ளினுமாம். தகைத்தே, ஏ - தேற்றம். கோடலை, கொளற்கு - இரண்டனுருபும் நான்கனுருபும் இடப்பொருளில் வந்தது வேற்றுமை மயக்கம்.

முன் ஒருவன் செய்த வினை, பின் அவன் அனுபவித்தொழிய வேண்டுமே யல்லது, மற்றைப்படி அவனைவிட்டொழியா தென்பது கருத்து. எனவே, இம்மையிற் செய்யும் கருமங்கள் மறுமையில் அவற்றின் பயனுய நன்மை தீமைகளை வினைவிக்குமென்பதை யுணர்த்து தீவினை யொழித்து நல்வினையே செய்யக் கடவர் என்றதாயிற்று. தாய்ப் பல பசுக்கூட்டத்தினிடை ஒளித்துவிடினும் அதன் கன்று அதனைக்கண்டு அதனிடஞ் சேர்தல்போல, வினை செய்தவன் எவ்விடஞ் சென்று ஒளிப்பினும் அவ்வினை அவனைச் சென்றடையும் என்றற்கு "பல்லா வொளித்து விடினுங் குழக்கன்று வல்லதாந் தாய் நாடிக் கோடலை" என வுவமை யெடுத்துக் கூறினர். பல்லா வொளி

ும் என்பதற்கேற்ப அவன் பல ஜீவ கோடிகளினிடை
கொள்ளினுமெனக் கொள்க. பொருள்களைப் பகுத்தறியு
லாத இளங்கன் றென்றற்கு, குழக்கன் றென்றார். இளா
அவ்வாறு கண்டறிந்து கொள்ளுமாயின் பலகாலும் பழ
ழவினைக்குக் கேட்க வேண்டுமோ வென்றற்குத் தழக்கன்று
ம், தொல்லைப்பழ வினையென்றுங் கூறினர். கன்றுக்குத் தாய்
வினைசேர்தற்கு உரிமைபூண்டவனென்பதுதோன்ற, தற்
த கிழவனென்றார். தாய் நாடிக்கோடலை யென்றதனால், கன்று
ட்டுங் காலத்துத் தாயைத்தேடி யடைதல்போலப் பழவினைப
ருங் காலத்தே செய்தோனைச் சென்றடையுமென்பதும், தொல்
பழவினையு மென்றதனால், வினைசெய்து எவ்வளவுகாலமாயினும்
அவனை விடாதென்பதும் குறிப்பிக்கப்பட்டன. பல்லாவு
ப்த்துவிடினுமென்றும் பாடம்; அதில், தாயைப் பல பசுக்களி
னிடையே கொண்டுவிட்டாலுமெனப் பொருள்கொள்க. இரண்டு
பாடத்திலும் விடினும் என்பதற்குச் செயப்படுபொருள் தாயென
வறிக.

இனி, வினையென்றது நல்வினை தீவினை யிரண்டனையுமாம்; தீவினைபோல நல்வினையும் வீடு பேற்றிற்கு விரோதியாதலின், அவ்விரு வினையும் விலக வழிதேடவேண்டு மென்பார் இவ்வாறு கூறினர் எனக்கொள்வது நன்று; நல்வினை பொன்விலங்கும் தீவினை இருப்புவிலங்கும் போலுமெனச் சான்றோர் சொல்லுதலின். [இதனால் பழவினையின் தன்மை கூறப்பட்டது.] (க)

உருவு மிளமையு மொண்பொருளு முட்கு
மொருவழி நில்லாமை கண்டு—மொருவழி
யொன்றேயு மில்லாதான் வாழ்க்கை யுடம்பிட்டு
நின்றுவீழ்ந் தக்க துடைத்து.

(இ-ள்.) உருவும் - அழகும், இளமையும்—, ஒண்பொருளும் - மேன்மையானசெல்வமும், உட்கும் - கண்டோரஞ்சத்தகும் மதிப்பும், ஒருவழி நில்லாமைகண்டும் - ஒருவழிப்பட்டும் நிலைபெறுமையைக்கண்டும், ஒருவழி ஒன்றேனும் இல்லாதான் - ஒருவழிப்படுதற்கு ஒரு நல்வினையுமில்லாதவனது, வாழ்க்கை - உயிர்வாழ்க்கையானது, உடம்பு இட்டு நின்று - உடம்பிற்கு உணவைக்கொடுத்து நின்று, வீழ்ந்தக்கது உடைத்து - (அதனை கொள்ளவேண்டிய பயனைக்) கொள்ளாமல் வீழுந் தன்மையை யுடையது, (எ-று.)

உட்கு - கருவிப் பொருள்விருதி புணர்ந்துகெட்டபெயர். உண்மைகள் எண்ணுப்பொருளன. கண்டும், ஒன்றேயும்-உண்மைகள் முறையே உயர்வுசிறப்பும், இழிவுசிறப்புமாம்.

மறுமைக்குரிய நல்வினை யாதொன்றுஞ் செய்யாதானது உயிர் வாழ்க்கை வினைன்பதுகருத்து. எனவே, அவ்வாறு ஒரு நல்வினையுஞ் செய்யவொட்டாது அவனது வாணுளை வீணாளாக்குவது பழ

யைக்கைவிடாது இவ்வருஷம் மெட்ரிக்யுலேஷன் பாட புஸ்தகங்களே
கஅகo - ஆவது வருஷத்து பி - ஏ. பரீக்ஷைக்குப் பாடமான தமிழ்
தகங்களும் நம் மாணக்கர்க்கு எளிதில் பொருள்விளங்குமாறு
கங்கே அவசியமான பதப்பிரயோஜனங்களையும் இலக்கணங்க
மெடுத்துக்காட்டி இயன்ற வளவு உரையெழுதினோம்.

அவற்றுள் கஅகo-ம்ஹு எப்-ஏ. பரீக்ஷைக்குப் பாடமாகிய
டியார் முதலானவைகளுக்கு முன்னோர் எழுதியவுரைகளைத் தழு
பதப்பொருளும் கருத்தும் விளங்க ஒருவாறு உரையெழுதப்பட்
இவ்வரியதூல்களுக்கு அவற்றிலுள்ள சொற்சுவை பொருட்சுவை
தலியவை இனிது விளங்கப் பெரியதோருரை யெழுதவேண்டி
அவசியமானதாயினும், அது பரீக்ஷைக்குப்படிக்கும் மாணக்கர்க்
பெரிதும் பயன்படாமைநோக்கி அவர்கட்குப்போதுமானவளவு தெ
ருள் விளங்க உரையெழுதப்பட்டது. இவற்றுள் நாலடியாரிலுள்
நீதிகளும், பாரதத்திலுள்ள விசேஷார்த்தங்களும் நன்கு விளங்
பதப்பிரயோஜனங்களை ஒருவாறு எடுத்துக் காட்டலானேம். இதில்
ஓரிடத்திலெடுத்துக் காட்டிய பதப்பிரயோஜனம் இலக்கணம் முத
லியவற்றை (ன்னும்பின்னும் அவைபோல வருமிடமெங்கும் மா
ணாக்கர் அனுசந்துக்கொள்ளவேண்டும்.

இவ்வருஷம் மெட்ரிக்யுலேஷன் பாடபுஸ்தகத்தின் உரைபோ
லவே இந்த எப்-ஏ-பாடபுஸ்தகத்தையும் முழுதும் ஒரேதடவை
யாக அச்சிட்டுவெளியிட ஆவல்கொண்டிருந்தோமாயினும், இடை
யில் பி-ஏ. பரீட்சை பாடபுஸ்தகங்களை உரையுடன் பூர்ணமாக
அச்சிட்டுவெளியிட நேர்ந்தமையின், இதனை இரண்டுபாகமாக அச்
சிட்டு வெளியிடவேண்டியதாயிற்று. இரண்டாம்பாகம் கூடிய சீக்
கிரத்திலே முடித்து வெளியிடப்படும்.

இவற்றிலுள்ள குற்றங் குறைகளையேனும், எமது சிற்றறிவிற்
குப் புலப்படாத அருமையான வேறுபல விஷயங்களையேனும் எடுத்
துரைவராயினும் எமக்குத் தெரிவிப்பாராயின், "நாண்பெரியோ மல்
லோநா னன்றந்தீது நமக்குரைப்பா ருளரென்று நாடுவோமே" என்
னும் ஆசிரியரருளிச்செயலைச் சிரமேற்கொண்ட யாம், அவரைப் பே
ருதவிசெய்தவராகமதித்து மகிழ்வொடு மறுதடவையில் அவ்விஷ
யங்களை அவர்பெயருடன்பிரசுரஞ்செய்யச் சித்தமா யிருக்கின்றனம்.

தே. ச. ரா.

கோ. ஸ்ரீநி.

ந்தது. சித்தியார், கோவையயார், [illegible]
தியார் என்பவற்றிற்போலச்சிறப்புப்பற்றி ஆர் விகு கூட்ட,
யார் என்றுயிற்று. இது "இயற்பெயர் மூன் ரைக்கி
என்னுஞ் சூத்திரநோக்கிக்காண்க. இந்நூல் நால ானூறு
வழங்கும். குறள் நாலடி என்று கூட்டி வழங்கு ன் நால
து பிறபாட்டின்மேற் செல்லாது வெண்பாவி மேலேயே
ன்மொழித்தொகையாய் நேரிசை, இன்னிவ வெண்பாக்
ர்த்தி, அவற்றுலாகிய நூலுக்கு ஆகுபெயரா று. வெண்
வற்றுள்ளும், குறள் வெண்பா இரண்டடியு ம், சித்தியல்
ா மூன்றடியானும், பஃறொடைவெண்பா ஈான்கின்பிக்க
பானும், வருதலாலும்; சவலைவெண்பா நான்கடியான் வருவ
ுயினும் அது நூல்களுட்பயின்று வருவதன்றுதலானும் இங்
ண்பாவென்றது நேரிசை இன்னிசை வெண்பாக்களையே எ
ாள்க.]

ாலடியார்எனச் சிறப்புற்று வழங்குகின்ற இந் நீதிநூல்,

"நாலடி நான்மணி நானூற்ப தைத்தினைமுப்
பால்கடுகெங் கோவை பழமொழி மாமூல
மெய்ந்நிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு"

னக்கூறப்பட்ட* பதினெண்கீழ்க் கணக்குகளுள் ஒன்று. பதி
னெண் கீழ்க்கணக்குகளுள் ஒன்றெனவே, இது கடைச்சங்கத்
தார் காலத்துச் செய்யப்பட்டு அவரால் அங்கீகரிக்கப்பட்ட தென்ப
தும், இற்றைக்குச் சற்றேறக்குறைய காலாயிரம் வருஷத்தென்ப
தும் தெற்றெனவிளங்குகின்றன. இக்காலடியார் ஒருவர்பாடிய
தாலன்று; பலபேர்களால் பாடப்பட்ட பாடல்களாணைந்த ஒரு
நீதிநூல். இதன் வரலாறென்னவெனில்,—

---

* பதினெண் கீழ்க்கணக்குகளாவன:— 1. நாலடியார், 2.
ான்மணிக்கடிகை,[நானூற்பது=] 3. இனியவைநாற்பது, 4. இன்ன
ாற்பது, 5. கார்நாற்பது, 6. களவழிநாற்பது, [ஐந்திணை=] 7.
ந்திணையைம்பது, 8. ஐந்திணையெழுபது, 9. திணைமொழியைம்

இடும்பைகூர் நெஞ்சத்தா ரெல்லாருங் காண
நெடுங்கடை நின்றுழல்வ தெல்லா—மடம்பம்பூ
வன்னங் கிழிக்கு மலைகடற் றண்சேர்ப்ப
முன்னை வினையாய் விடும்.

(இ-ள்.) அடம்பம்பூ அன்னம்கிழிக்கும் - அடம்பங்கொடியின் பூக்களே அன்னப் பறவைகள் கோதிக்கிழித்து விளையாடுகின்ற, அலைகடல் தண்சேர்ப்ப - அலைகின்ற கடலினது குளிர்ச்சி பொருந்திய துறையையுடைய பாண்டியனே! (சிலர்) எல்லாரும் காண—, இடும்பை கூர்நெஞ்சத்தார் - வறுமைத்துன்பம் மிக்க உள்ளத்தையுடையவராகி, நெடுங்கடை நின்று உழல்வது எல்லாம் - பல தலைவாயில்களில் (போய்) நின்று வருந்துகின்ற செயல் அனைத்தும், முன்னைவினையாய்விடும் - பழவினைப்பயனாகிநிற்கும், (எ-று.)

இடும்பைகூர்நெஞ்சத்தார் என்பதை எல்லாரும் என்பதற்கு அடையாக்கி, இரப்போர்படும் அல்லலைக்கண்டு இரக்கமுற்றவராகிக் காண எனவுங் கூறலாம். உழல்வது - சாதியொருமை. உழல்வதெல்லாம் - பலவகைப்பட்ட உழலுதல்.

பலபேரும் பார்த்திருக்க வயிற்றுக்காக வருந்தி வீடுதோறுஞ் சென்று பிச்சைபுகும்படி யாவதும் பழவினைப் பயனென்பது கருத்து. தாம்வறுமையினைப் படுந் துன்பத்தினும் இல்லையென ஒருவரிடம்போய் வெட்கத்தைவிட்டு வாய்திறந்து கேட்கும்போது உண்டாகுந் துன்பம் மிகப்பெரிதென்பது தோன்ற இடும்பைகூர்நெஞ்சத்தாரென்றும், பல்லும்பார்த்திருக்கப்போய் அங்ஙனமிரத்தல் அதனினும் பெருந்துன்பமென்றற்கு எல்லாருங் காணவென்றும், சென்றவுடனே பிச்சை பெற்றுத்திரும்பமுடியாது பலபேரும் போய்வரும் வழியாகிய தலைவாயிலில் நெடுநேரநின்று கூவிக்கேட்கவேண்டியதாகின்றதென்றற்கு நெடுங்கடைநின் றுழல்வதென்றுங் கூறினர். (எ)

அறியாரு மல்ல ரறிவ தறிந்தும்
வழியோடு பட்டனை செய்தல்—வளியோடி
நெய்த னறவுயிர்க்கு நீள்கடற் றண்சேர்ப்ப
செய்தவினையான் வரும்.

(இ-ள்.) வளி ஓடி நெய்தல் நறவு உயிர்க்கும் - காற்றோடி அசைத்தலினாலே நெய்தற்பூக்கள் தேனைச்சொரிகின்ற, நீள்கடல்தண்சேர்ப்ப—, அறிவது-அறிதற்குரிய தூற்பொருளை, அறியாரும்அல்லர்-அறிந்திராதவருமல்லர்; அறிந்தும் - அங்ஙனமறிந்தும், பழியோடு பட்டனைசெய்தல் - பழியோடு பொருந்திய காரியங்களைச் செய்தல், செய்தவினையான்வரும் - முற்பிறப்பிற் செய்த தீவினையால் உண்டாகும், (எ-று.)

பழி - பழிக்கப்படுவதென்னும் பொருளில் செயப்படுபொருண்மை விகுதிபுணர்ந்து கெட்டபெயர். பழியாவது - உலகநிந்தை. நீள்

கடல் - வினைத்தொகையாதலின் இலமொழி; ஈறு இயல்பாயிற்று. [ந்+மெய்+கு+உ]. சேர்ப்ப - ஈறழிவு விளியுருபு. செய்த வினை - செயப்படு பொருள் செய்ததுபோல வந்தது.

தாம் செய்யப்புகுவது தவறென்று தமக்கு நன்முகத்தெரிந்தும் பட்டப்பகலிலே படுகுழியில் வீழ்வதுபோலப் பலர் அத் தீவினைகளைச்செய்வது பழவினைப்பயனென்பது கருத்து. தாம்செய்யப் புகுவது பிழையென்பதை யுணராது ஒருவர் ஒரு பாதகம் செய்வராயின் அதுசிறியோர்செய்தசிறுபிழையாகப்பொறுக்கலாகும்; அபுத்தி பூர்வமானபாதகங்களுக்குப் பிராயச்சித்தமுஞ் சொற்பமேயெனநீதிநூல்களிற்கூறப்பட்டுளது; அங்ஙனந்தப்பவழியின்றிப்புத்திபூர்வகமாகவே செய்கின்றனரென்றற்கு அறியாருமல்ல ரறிவதறிந்தும் என்றார். [இவ்விரண்டுபோட்டாலும் பழவினையின் செய்கைகூறப்பட்டது.](அ)

நண்டுநீர் வையத்து ளெல்லாரு மெத்துணையும்
வேண்டார்மற் றீய விழைபய னல்லவை
வேண்டினும் வேண்டா விடினு முறற்பால
தீண்டா விடுதல ரிது.

(இ-ள்.) நண்டு நீர்வையத்துள் - கெருங்கிய கடலாற்குழப்பட்ட பூமியின் கண்ணே, எல்லாரும் - உயர்ந்தோர் தாழ்ந்தோர் யாவரும், எத்துணையும் - எவ்வளவேனும், தீயவேண்டார் - தீயவற்றை (ப் பெற) விரும்பார்; விழைபயன் - (அவரால்) விரும்பப்பட்ட பயன்களோவெனின், நல்லவை - நல்லனவேயாம்; வேண்டினும் - நல்லவற்றை விரும்பினாலும், வேண்டாவிடினும் -(தீயவற்றை) விரும்பாது ஒழியினும், உறற்பால - அடைதற்குரிய ஊழின் பயன்கள், தீண்டாவிடுதல் அரிது - வந்தடையாது விடுவதில்லை, (எ-று.)—மன் - அசை.

எல்லாரும்-முற்றும்மை. எத்துணையும்-இழிவுசிறப்போடுமுற்றும்மை. எட்டுணையும்என்றும் பாடம். தீய-பலவின்பெயர். வேண்டா, தீண்டா - ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சங்கள். "தனக்குவமையில்லாதான்றாள்சேர்ந்தார்க்கல்லான், மனக்கவலை மாற்றலரிது" என்னுமிடத்துப்போல நண்டு அருமை இன்மைமேல் நின்றது.

இவ்வுலகத்தவரெல்லாரும் தீயவற்றைச் சிறிதும் விரும்பாது நல்லவற்றையே நாடுகின்றனராதலானும், நன்மையுந் தீமையும் அவரவர் வேண்டியபடி வாராது ஊழ்வினைப்படியே அமையுமாதலானும், வரும்பிறப்புக்களிலாயினுந் தீமையின்றி நன்மையே விளைதற்கு வேண்டியவழியை இப்பிறப்பில் தேடிக்கொள்ளக்கடவரென்பது கருத்து. தீயவைகளை வெறுப்பதும் நல்லவைகளை விரும்புவதும் அனைவர்க்கும் உடன்பாடென்பது தோன்ற நண்டுநீர்வையத்து ளெல்லாருமென்றும், எவ்வளவு தீமைவரினும் பொறுத்தொன்பதற்கு எத்துணையுமென்றும், இவர்களது விருப்பு வெறுப்புக்களுக்கு மாறுகவும்ஊழ்வினைப்பயன்வந்துறுமென்றற்கு வேண்டினும்வேண்டாவிடி-

...செயலே யென்பது குறிப்பிக்கப்படுதலின், இப்பாட்டுக்குப் பழவினையென்னு மிவ்வதிகாரத்துட் பொருத்தமுண்மையறிக. தமதுவாழ்க்கை வீணுகும்படி ஊழ்வினைவந்து வருத்தினும் அதற்குச் சலியாது, ஊழையுமுப்பக்கங் காணும் வலியுடையராகித் தீவினையைவிலக்கி நல்வினையை நாடக்கடவரென்பது தேர்ந்த கருத்து. ஒருவழி நில்லாமைகண்டு மென்றதனுல், இதனுண்மையைப் பார்த்திருந்தும் நல்வினையை நாடாதது கண்ணைத்திறந்துகொண்டு கிணற்றில் வீழ்வதுபோன்றதெனக் கூறியதாயிற்று. உருமாறுபட்ட வழி இளமையாயினும் நிலைநின்றுலும், நன்மை நாடாதிருக்க நினைக்க வேனுங் கூடும்; அதுவுமில்லையென்றற்கு உருவின்பின் இளமையையும், இளமைபோய்ச் செல்வம் நின்றுற் சிறப்புற்று வாழலாம், இவை யனைத்தும் ஒழிந்தவழியும் பெருமையேனும் நிலைபெற்றிருக்குமாயின் இப்பூலோக வாழ்க்கையை விரும்பலாகும்; செல்வமொழிந்தவழி அதனுடனே பெருமையும் போய்விடுமென்றற்கு அதன் பின் ஒண்பொருளையும் உட்கையும் முறையே வைத்து உருவு மிளமையு மொண்பொருளு முட்கு மென்றுர். என்று மழியாப்பேரின்பவீடு பெறமுயலாவிடினும் சிலநாளேனுஞ் சுகம்பெற்று வாழ்தற்கிடமான சுவர்க்காதிலோகங்களைப் பெறுதற்கும் முயலாதவனென்பார் ஒருவழி ஒன்றேனுமில்லாதான் என்றும், இவ்வுடலுக்கு உழைப்பது விழலுக்கு இறைப்பதுபோல் வீணென்பார் உடம்பிட்டு நின்று வீழ்ந்தக்கதுடைத்தென்றுங் கூறினர். [இதனுல் நல்வினை உண்டாவதற்குப் புருஷனது முயற்சி இன்றியமையாததென்பது கூறப்பட்டது.] (உ)

வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை
யளந்தனி போக மவரவ ராற்றுன்
விளங்காய் திரட்டினு ரில்லைக் களங்கனியைக்
காரெனச் செய்தாரு மில்.

(இ-ள்.) வளம்பட - செல்வம்பெற்றுச் சிறப்புடன்வாழ, வேண்டாதார்யார் - விரும்பாதவர்யார் (உளர்), யாரும்இல்லை - ஒருவருமில்லை [யாவரும் விரும்புகிறார்கள் என்றபடி]; (ஆயினும்) போகம்-அவ்வாழ்க்கை, அவர் அவர் ஆற்றுன் - அவரவருழியுலே, அளந்தன - (கருவுற்றனுன்றே) அளக்கப்பட்டன; (தாமேபோகந் தேடிக்கொண்டவரிலரோவெனின்) விளங்காய் திரட்டினுர் இல்லை - விளவின்காய்களைத் திரண்டவுருவாக்கி வைத்தவரு மில்லை; களங்கனியை - களவினது பழங்களை, காரென-கரியனவாக, செய்தாரும் இல்-செய்தவருமில்லை, (எ-று.)

யாரும் - முற்றும்மை. அளந்தன-செயப்படுபொருள் செய்தது பொலக் கூறப்பட்டது. விளங்காய், களங்கனி - உயிரீற்று மரப்பேயர்முன் வலிவர இனமெல்லெழுத்து வந்தது.

நல்வினை செய்தாலன்றி நல்லசுக முண்டாகாததலின் சுகத்தை விரும்புகின்றவர் இப்பிறப்பி லில்லா விடினும் மறுபிறப்பிலாயினும் அதனைப்பெறும்படி இப்பிறப்பில் நல்வினை செய்யக்கடவரென் பது கருத்து. முற்பாட்டிற் கூறியபடி நல்வினைசெய்ய விரும்பா தவர்களாயினும், நன்மைகளைப் பெறுதலில் அனைவரும் ஆவல் கொ ண்டிருக்கின்றனரென்றற்கு வளம்படவேண்டாதார்யார்யாருமில்லை யென்றும், எவ்வளவு பாடுபட்டுப் பயிர்செய்கின்றனரோ அவ் வளவே விளைவுகாணுதல்போல, முன் எத்தனை நல்வினை செய்திருக் கின்றனரோ அத்தனையே இப்பொழுது நன்மையுண்டாகு மென் றற்கு அளந்தனபோகமென்றும், ஒருவர் செய்தவினை மற்றொருவர் க்கு உதவாது, அவரவரது வினையே அவரவர்க்கு உதவியாகு மென் றற்கு அவரவராற்றுணென்றுங் கூறினர். நல்வினை செய்யாமலே நற்பயன்களை நாம் தேடிக்கொள்ளலாகாதோ வெனின் அங்ஙன ம மையாதென்றற்கு "விளங்காய் திரட்டினுள்ளெக் களங்கனியைக் காரெனச் செய்தாருமில்" என உவமை எடுத்துக்கூறினர். எனவே, விளங்காய் திரண்டே யிருக்கவேண்டுமென்பதும், களங்கனி கறுத் தே யிருக்கவேண்டுமென்பதும் எங்ஙனம் ஆண்டவனது ஆஜ் ஞ்சற் பமோ அங்ஙனமே அவரவர்செய்த வினைகளுக்கேற்ப வினைப்பயன் விளையத்தக்கதென்பதும் அவனது சங்கற்பமே; அவன் ஸத்திய ஸங்கற்பனுதலின் அதனையழிக்கப் பின் அவனுலும் ஆவதில்லை யென் பது குறிப்பிக்கப்பட்ட தெனவறிக. [இதனுல் "தவமுந்தவமுடை யார்க்காகும்" என்றவாறு மறுபிறப்பி னற்பயன் பெறுதற்கு முற்பி றப்பி னல்வினை யின்றியமையாததென்பது கூறப்பட்டது.] (கூ)

உறற்பால நீக்க லுறுவர்க்கு மாகா
பெறற்பா லனையவு மன்னவா மாரி
வறப்பிற் றருவாரு மில்லை யதனைச்
சிறப்பிற் றணிப்பாரு மில்.

(இ-ள்.) உறற்பால - நேரிடத்தக்க துன்பங்களை, நீக்கல் - நீக் குதல், உறுவர்க்கும் ஆகா - முனிவருக்கும் மூடியாது ; பெறற்பால் அனையவும் - பெறுதற்கான தன்மையையுடைய இன்பங்களும், அ ன்னவாம் - அத்தன்மையவாகும் [நீக்கலாகாத தன்மையனவாகும்]; (எங்ஙனமெனின்) மாரிவறப்பின் - மழைபெய்யாது நின்றால், (அத னை) தருவாரும் இல்லை - பெய்விப்பவருமில்லை; சிறப்பின் - (அது) மிகுதியாகப் பெய்தால், (அதனை) தணிப்பாரும்இல் - நீக்குவாரு மில்லை (அதுபோலும்), (எ-று.)

உறற்பால் - பலவின்பாற்பெயர்; உறுதற்காகிய தன்மையையு டைய வென்பது பொருள். உறுவர்க்கும், உம்மை - உயர்வுசிறப் போடு எச்சப்பொருளது. ஆகாது என்பது சுறுதொக்கது. அன்ன- குறிப்புவினையாலணையும்பெயர்; இவ்வாறு வினையுடன் சேர்ந்த வரும் பெயரடைகளை விதேயவிசேஷண மென்பர் வடநூலார். தருவா

ரும், தணிப்பாரும் - உம்மைகள் முறையே எதிரது தழீஇயதும் இறந்தது தழீஇயதுமாம். வறப்பின், சிறப்பின் - வினையெச்சங்கள்.

நன்மைவரினும் தீமைவரினும் யாவும் தமது ஊழ்வினைப் பய னேயென வுணர்ந்து பொறுத்திருக்கவேண்டு மென்பது கருத்து. உறற்பால, பெறற்பால என்றதனால் அவை கருவிலேயே அமைக்கப்ப ட்டவை யென்றதாயிற்று. உறுவர்க்குமாகாவெனவே, அதனுண்மை யை யுணர்ந்து மறுபிறப்பில் அங்ஙன மமையவொட்டாது நற்பய வினைய இப்பொழுதேனும் நன்மையைநாடிக் கொள்ளக்கடவ ரென் பது குறிப்பிக்கப்பட்டது. எல்லாவுலகத்தார்க்கு மின்றியமையாத தாகிய மாரியையும் பழவினைக்கு மாறுகப் பெய்விக்க முடியாதென் றால் ஒருவனுடைய சுகத்தை அவ்வாறு செய்விக்கமுடியுமோ வென் றற்கு "மாரிவறப்பிற்றருவாருமில்லை யதனைச் சிறப்பிற்றணிப்பாரு மில்" என உவமை எடுத்துக்காட்டினர். [இதனால் பழவினையின் வலிமைகூறப்பட்டது.] (ச)

தினைத்துணைய ராகித்தந் தேசுள் ளடக்கிப்
பனைத்துணையார் வைகலும் பாடழிந்து வாழ்வர்
நினைப்பக் கிடந்த தெவனுண்டா மேலை
வினைப்பய னல்லாற் பிற.

(இ-ள்.) பனை துணையார் - பனையளவிற் பெரியோ ராயினோர், வைகலும் பாடு அழிந்து - நாடோறும் தம் பெருமை கெட்டு, தினை துணையர்ஆகி - தினையளவிற் சிறியோராகி, தம் தேசு உள் அடக்கி - தமது ஒளியை யுள்ளேஅடக்கி, வாழ்வர்—; நினைப்ப கிடந்தது - (அதற்கு) ஆராய்ந்தறியக் கிடந்த காரணம், மேலை வினை பயன்அல் லால் - முன்னைத் தீவினைப் பயனன்றி, பிற எவன் உண்டு - வேறெ வையுள [ஒன்றுமில்லை], (எ-று.)—ஆம் - அசை.

பனை, தினை என்பவை முறையே இங்குப் பெருமைக்குஞ் சிறு மைக்கு முபமானமாக் கொள்ளப்பட்டன. வைகலும் - முற்றும்மை. எவன் - குறிப்பு முற்றுலணையும் பெயர்.

"அறுசுவை யுண்டி யமர்ந்தில்லாளூட்ட, மறுசிகை நீக்கியுண் டாரும்-வறிஞராய்ச், சென்றிரப்பரோவிடத்துக்கூற்" என முற்கூ றியபடி, ஒரு பிறப்பிலேயே சில நாள் பெருஞ் செல்வம் பெற்று வாழ்ந்தவர்கள் உடனே சிறுமைப்படுவதும் பழவினைப் பயனேயென் பது கருத்து. தீவினைப்பயன் அநுபவிக்க வந்துவிடுமாயின் ராகு வின்வாய்ப்பட்ட சந்திரன்போல அப்பொழுதே ஒளி குன்றுவரென் றற்குத் தந் தேசுள்ளடக்கி யென்றும், பெருமை குன்றுதல் சில நாளி டைவிட்டன்று, உடனுக்கு உடனே யென்றற்கு வைகலுமென்றும், இத்தன்மையாத் துன்புறுவதினும் உயிர் நீப்பது மேலாயினும் அங் ஙன முயிர்நீக்க வொட்டாது முன்னைத் தமது பெருமையைக் கண்ட பலரிடத்துஞ் சென்று பிச்சை புகுந்து பிழைக்கச் செய்யுமென்றற்கு வாழ்வொன்றும், அவ்வாறுதற்கு அப்பிறப்பில் அவர்செய்த தீவினை

யாதுமிலதென்பது திண்ணமா யெவர்க்குந் தெரிந்த தென்பதற்கு நினைப்பக் கிடந்ததெவனுண்டா மென்றும், ஆதலின் அதற்குக் காரணம் பழவினையே யென்பது அநுமானப் பிரமாணத்தா லறியப்படுகின்றதென்றற்கு எவனுண்டா மேலை வினைப்பய னல்லாற் பிற வென்றுங் கூறினர். [இதனால் பழவினை யொன்றுண்டென்பதற்குப் பிரமாணங் கூறப்பட்டது.] (கூ)

பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் வீயவுங்
கல்லாதார் வாழ்வ தறிதிரேற்—கல்லாதார்
சேதன மென்னுமச் சேறகத் தின்மையாற்
கோதென்று கொள்ளாதாங் கூற்று.

(இ-ள்.) பல் ஆன்ற கேள்வி - பலவகைப்பட்ட நிறைந்த கேள்வியினால், பயன் உணர்வார் - மெய்ப்பயனை அறிபவர், வீயவும் - விளைவி லிறந்துபோகவும், கல்லாதார் வாழ்வது - மற்றைப் பேதையராயினோர் நெடுங்காலம் உயிர் வாழ்தற்குக் காரணத்தை, அறிதிரேல் - அறிய வேண்டுவீராயின், கல்லாதார் - அப்பேதையராயினோர், சேதனம் என்னும் அ சேறு - அறிவென்னப்பட்ட அத்தச்சாரத்தை, அகத்து இன்மையால்-உள்ளே உடையராயில்லாமைபற்றி, கோதுஎன்று - திப்பியென்று நினைத்து, கூற்று கொள்ளாது - யமன் (அவரைக்) கொள்ளான், (இதுவே காரணமென்க), (எ-று.)

அறிதிர் - முன்னிலைப்பன்மை வினைமுற்று, எனில் என்பதன் விகாரமாகிய ஏலென்பதனோடு சேர்ந்து வினையெச்சமாகியது. கூற்று-கூறு செய்பவன், யமன்; கர்த்தாப் பொருள் விகுதி புணர்ந்துகெட்ட பெயர்; இது சொல்லாலஃறிணை யாயினும் பொருளா லுயர்திணை.

"பாபீசிராயுஸ் ஸுக்ருதீ கதாயுஃ" என்றபடி கல்வி கேள்விகளால் நிறைந்த மேன்மக்கள் விளைவில் மாண்டுபோக, அங்ஙனமில்லாத கீழ்மக்கள் நெடுநாள் வாழ்ந்திருப்பதும் பழவினைப் பயனுமென்பது கருத்து. இவ்வுலகில்எவரும் ஸாரமுள்ளதைக் கைப்பற்றி ஸாரமில்லதைத் தள்ளிவிடுதல்போல, யம தரும ராஜனும் ஸாரமுள்ளவர்களென்று யோக்கியர்களைத் தன்னிடம் வரவழைத்துக்கொண்டு ஸாரமில்லாதவர்களென்று அயோக்கியர்களை இவ்விடத்தே விட்டுவிடுகிறனெனக் கவிசாதுரியத்தால் தற்குறிப்பேற்றமாக் கூறினர். எனவே, மெய்ப்பயனுணர்ந்த வளவிலே பழவினை ஒழிந்து போவதனால் அவர்கள் உடனே அவ்வினைகளை அநுபவித்தற்கிடமாய இவ்வுடலை விட்டொழிந்து வீடு பெறுகின்றனரெனவும், அங்ஙனமல்லாதவர்க்குப் பழவினை போர் போராகக் கிடத்தலால் அவற்றை யநுபவித்தற் பொருட்டு அவர்கள் இன்னும் அநேக காலம் இவ்விடத்திலேயே அல்லற்படுகின்றனரெனவுங் கூறியதாயிற்று. பழவினை இப்பொழுதும் மெய்ப்பயனை யுணரவொட்டாது இவ்வுலகத்துச் சிற்றின்பமே பேரின்பமென நினைத்து அஞ்ஞானக் கடலில் அவர்களை ஆழ்ந்திருக்கச் செய்யும் என்பதற்கு வாழ்வதென்றார். [இதனால் பழவினை விளைதற்கு உபாயங் கூறப்பட்டது.] (கூ)

னுமென்றும், அவரவர் செய்தவினை அவரவர் அனுபவித்தேதீரத்தக்க தென்றற்கு உறற்பால நீண்டாவிடுதலரிது என்றுங் கூறினர். [இதனால் பழவினையின் வலிமை கூறப்பட்டது.] (கூ)

சிறுகா பெருகா முறைபிறழ்ந்து வாரா
வுறுகாலத் தூற்றுகா வாமிடத்தே யாகுஞ்
சிறுகாலைப் பட்ட பொறியு மதனை
விறுகாலத் தென்னே பரிவு.

(இ-ள்.) சிறுகாலைபட்ட பொறியும்-முற்பிறப்பிற் செய்யப்பட்ட வினைகளும், சிறுகா - தம்மளவிற் சுருங்குவனவல்ல; பெருகா-மேற்படுவனவல்ல ; முறைபிறழ்ந்துவாரா - செய்யப்பட்ட முறைதப்பி வருவனவல்ல, உறுகாலத்து - துன்பமுறுங் காலத்தில், ஊன்றுகா - ஊன்றுகோலாக உதவுவனவல்ல; ஆம் இடத்தே ஆகும் - வருங்காலத்திலே வரும் ; (ஆதலால்) இறுகாலத்துஎன்னைபரிவு-தீவினைப்பயன் அனுபவிக்கவருங் காலத்து இரங்குவதற்குக் காரணம் யாது, (எ-று.)

சிறுகா, பெருகா, வாரா, ஆகா - இவை எதிர்மறைப் பன்மை வினைமுற்று. ஊற்று-ஊன்றுவதற்குக் கருவியாகவுள்ளது என்னும் பொருளில் கருவிப்பொருள்விகுதி புணர்ந்து கெட்டபெயர். ஆம்-செய்யுமென்பெயரெச்ச வீற்றுயிர்மெய் கெட்டது.

மூன்றிப் பாபங்களைச் செய்து பிந்தி அவற்றின் பயனை யநுபவிக்கும்பொழுது வருந்திற் பயனில்லையென்பது கருத்து. “ [illegible] ” எனக் கூறியதுங் காண்க. சிறுகாபெருகாவெனப் பொதுப்படக்கூறினுரேனும், சிறுகா என்பது தீவினைகளையும், பெருகா என்பது நல்வினைகளையும், முறைபிறழ்ந்துவாராமுதலியன இருவினைகளையு மெனக்கொள்ளத்தக்கது; மானிடர் விரும்புவது அவற்றையேயாதலின். முன் நல்வினையநுபவித்துப் பின் தீவினையனுபவிப்போ மென்றலும் அங்ஙனமமையாதென்றற்கு முறைபிறழ்ந்துவாரா வென்றும், அங்ஙனமமையாதாயினும் தீவினையால் துன்பமிகுங்காலத்து நல்வினை சற்றேனுந்துணை நிற்குமோவெனின் அதுவுமில்லை யென்றற்கு உறுகாலத் தூற்றுகா வென்றும், அதிர்ஷ்டமில்லாத காலத்துத் தாம் வேண்டினலும் வாரா தென்றற்கு ஆமிடத்தேயாகுமென்றுங் கூறினர்; “வருந்தியழைத்தாலும் வாராதவரா, பொருந்துவன போமினென்றுற் போகா” எனக் கூறுதலுங் காண்க. இறுகாலத்தென்னே பரிவு என்றதனால் வினை புரியுங் காலத்துப் பரிவுவேண்டுமென்றதாயிற்று. [இதனால் பழவினை சேராமைக்கு உபாயங் கூறப்பட்டது.] (கo)

கடம் அதி—மெய்ம்மை.

[அஃதாவது - உண்மையை உணர்த்துவது. உண்மையாவது அந்தந்தப்பொருள்களின் இயற்கையானதன்மை. பொருள்களின் உண்மையை உணர்ந்து அதன்படி யொழுகுதற்குப் பழவினையே காரணமாதலின், இது பழவினையின்பின்வைக்கப்பட்டது.]

இசையா வொருபொரு வில்லென்றல் யார்க்கும்
வசையன்று வையத் தியற்கை - நசையழுங்க
நின்றுமடிப் பொய்த்த னினைதொடீஇ செய்ந்நன்றி
கொன்றுரிற் குற்ற முடைத்து.

(இ-ள்.) நினைதொடீஇ - ஒழுங்காகிய வினைகளை யுடையவனே! இசையா ஒருபொருள் - கொடுத்தற் கிசையாத வொருபொருளை, இல் என்றல் - எம்மிடத்தி லில்லையென்று (இரந்த அப்பொழுதே) சொல்லுதல், வசையன்று - குற்றமாகாது; வையத்து இயற்கை - நிலவுலகத்தினியல்பாம்; நின்று-யானதனைக்கொடுக்கின்றேனென்று நின்று, ஓடி - நெடுங்காலங் கழித்துச்சென்று, நசை அழுங்க பொய்த்தல் - அவ்விரந்தோனது விருப்பங்கெட இல்லையென்று சொல்லுதல், செய்நன்றிகொன்றுரின் - பிறராற் செய்யப்பட்ட நன்றியை மறந்தவரது செய்கையினும், குற்றமுடைத்து —, (எ-று.)

இசையா - நன்று கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். வையம் - வையத்தார்க்கு ஆகுபெயர். நினைதொடீஇ - அன்மொழித்தொகை, மகடூஉ முன்னிலை; அளபெடை-விளியுருபு. செய்ந்நன்றி - [நன். உயிர். சூ. அ-ஆல்] மெலிமிகுத்துநின்றது. இன் - உறழ்பொருவு. உடைத்து - குறிப்புவினைமுற்று; அகரச்சாரியைபெற்று உடையது என்றும் வரும்.

ஒருவர் விரும்பிக்கேட்டபொருளைக் கொடுப்பதற்கு இசையாமற்போமாயின் உடனே இல்லையென்று சொல்லியனுப்பிவிடவேண்டும், நெடுநேரம் ஆசைகாட்டி நிற்கவைத்துக் கடைசியில் இல்லையென்றுசொல்லிவிடுவது பெரும்பாவமென்பது கருத்து. வையத்தியற்கையெனச் செயற்கையை யியற்கையாவுபசரித்து உலகின்மேல் வைத்துக் கூறினமையின், "எல்லா மிரப்போர்க்கொன்றீயாமை யச்சம்" என மேற் கூறப்படுவதனால், இசையாப்பொருளையுமில்லென்றல் தமக்கு உடன்பாடன்றென்பதும், அந்தணர்வேடம் பூண்டுவந்து யாசித்த தேவேந்திரனுக்குத் தன்னுடன் பிறந்து தற்சிறுமை பூண்ட கவச குண்டலங்களையும், பெருமழை பொழிகையில் விறகுவேண்டுமெனச் செய்தியனுப்பிய கண்ணனுக்கு விறகாகத் தன் ராஜமாளிகையையிடித்து அதிலுள்ள உத்திர முதலியனவற்றையும் விருப்புடன் கொடுத்து "கர்ணனுக்குப்பின் கொடையில்லை" எனத் தன்பெயர் ஒரு பழமொழியாகவும் வழங்கப் பெற்ற கர்ணனும், தன்னைச் சரணமடைந்த புறவைப் பாதுகாத்தற்

பொருட்டுத் தன்னுடலையே கொடுக்க உடன்பட்டுத் தூல யேறிய சிபி சக்கரவர்த்தியும் முதலியோர்போலக் கொடுப்பதற்கு இயையாதவற்றையும் கொடுத்துதவுவது பெருங்கொடை வள்ளலாகிய பெரியோர்களின் இயற்கை யென்பதும், பெறப்பட்டன. "இசைவுகொடுப்பதூஉ மில்லென்பதூஉம், வசையன்று வையத்தியற்கை" என்றார் பிறரும். எதேனுங்கிடைக்கு மென்று ஆசை கொள்ளும்படி நெடுநாள் சாக்கவைத்துப் பின் இல்லையெனில் அவன் பெருந்துன்பம் அடைவா னென்றற்கு நசையழுங்க வென்றார். "எக்கன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு" எனக் கூறியபடி பஞ்சமாபாதகங்களுள் மிக்க கொடும்பாதகமாகிய செய்ந்நன்றி கொல்வதினும் இப்பாதகம் பெரிதெனவே, அவ்வாறு செய்பவர் உய்யும்வழியின்றி எக்காலமும் அல்லற்படுவரென்பது கூறியதாயிற்று. இனி, நின்று - யாசகன் நெடுநேரங்காத்து நின்று, நசையழுங்க - ஆசைகெடும்படி, ஒடி பொய்த்தல்-தாமோடி யொளித்தல் எனவும், பொய்த்தலென்பதற்குக் கொடுப்பதற்கு இசைந்தபொருளைத் தம்மிடத்தி லில்லையெனப் பொய்சொல்லுதலெனவும் பொருள்கொள்ளினும் அமையும். [இதனால் இரப்போரை வருந்தச்செய்வதனால் வரும் பாதகத்தினது தன்மைகூறப்பட்டது.] (க)

தக்காருந் தக்கவ ரல்லாருந் தந்நீர்மை
யெக்காலுங் குன்ற லிலராவ—ரக்காரம்
யாவரே தின்னினுங் கையாதாங் கைக்குமாந்
தேவரே தின்னினும் வேம்பு.

(இ-ள்.) தக்காரும்- தகுதியையுடையவரும் [யோக்கியரும்], தக்கவர் அல்லாரும்-தகுதியையுடையவ ரல்லாதவரும் [அயோக்கியரும்], தம் நீர்மை - தத்தமது இயல்பினின்றும் [முறையே வாய்மை பொய்மைகளினின்றும்], எக்காலும் குன்றல் இலர் ஆவர் - எப்படிப்பட்டகாலங்களிலும்குறைபடுதலில்லாதவராவர்; அக்காரம்-சர்க்கரை, யாவரே தின்னினும் - எவர் தின்ரூலும், கையாது ஆம் - கசவாது, வேம்பு—, தேவரே தின்னினும் - தேவர்களே தின்ரூலும், கைக்கும்—.

தக்கார் - வினையாலணையும் பெயர்; இதில் ககரம் மிகுந்து தன்மையைக் காட்டியதேயன்றிக் காலங் காட்டவில்லை. இங்கு நீர்மை என்றது "நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றும்" என்றதிற்போல் நின்றது. குன்றல் இலராவர் - குன்றுதல் இலர் என்றும், குன்றுதலு இலர் என்றும் இருவகையினுங் கூறலாம்; இல்லையென்னுங் குறிப்புவினை செயப்படுபொருள் குன்றியதும் குன்றுததுமாய் வருதலுமெனவறிக. எழுவாயாக்கொள்ளுங்கால் "உயர்திணை தொடர்ந்த பொருண்முதலாறும், அதனெடு சார்த்தினத்திணை முடிபின" என்னும் விதியாலமைத்துக் கொள்க.

இத்திக்கு மியல்புடையதாகிய சர்க்கரை அனைவராலும் விரும்பப்பட்டு, கைக்கு மியல்புடையதாகிய வேம்பு வெறுக்கப்படுவதுபோல, நற்குணமுடையரல்லோரே அனைவராலும் விரும்பப்பட்டுத் தீக்குணமுடைய தீயோர் வெறுக்கப் படுவரென்றற்கு "அக்காரம், யாவரே இன்னினுங் கையாதாங் கைக்குமாந், தேவரே இன்னினும் வேம்பு" என வுவமை யெடுத்துக் கூறினர். எனவே, விரும்பப்படுவதும் வெறுக்கப்படுவதும் முறையே நற்குணமுந் தீக்குணமுமே யென்றதாயிற்று. எக்காலமென்றது தக்கார் குறைந்த காலத்தும், தகவிலார் உயர்ந்தகாலத்து மென்றபடி. அக்காரம்-இக்ஷுசாரம் என்னும் வடமொழிச் சிதைவுபோலும். தேவரே இன்னினுங் கைக்குமென எகாரங்கொடுத்துக்கூறினமையின், அதுபோல எல்லாக்கொடுமைகளையும் பொறுக்கு மியல்புடைய பெரியோர்க்கும் தீமைக்குணம் வெறுக்கத்தக்கதாகும் என்பது குறிப்பிக்கப்பட்டது. [இதனால் பெரியோர் சிறியோர்களது தன்மை கூறப்பட்டது.] (உ)

காலாடு போழ்திற் கழிகிளைஞர் வானத்து
மேலாடு மீனிற் பலராவ—ரேலா
விடரொருவ ருற்றக்கா லீர்ங்குன்ற நாட
தொடர்புடையே மென்பார் சிலர்.

(இ-ள்.) சாரங்குன்றம் நாட - குளிர்ச்சி பொருந்திய மலையையுடைய நாட்டரசனே! ஒருவர் காலாடு போழ்தில் - ஒருவர் முயன்று பொருளீட்டுங் காலத்தில், கழிகிளைஞர் - (தொடர்பான்) மிக்கசுற்றத்தார், வானத்து மேல் ஆடு மீனின் பலர் ஆவர் - ஆகாயத்தின் கண்ணே சஞ்சரிக்கின்ற நக்ஷத்திரங்களினும் மிகப் பலராய்ச் சூழ்வர்; ஏலா இடர் உற்றக்கால் - பொறுக்கத்தகாத துன்பத்தை (அவர்) அடைந்த காலத்து, தொடர்பு உடையேம் என்பார் - சம்பந்த முடையோமென்று சொல்லுவோர், சிலர் - சிலரே யாவர், (எ-று.)

ஒருவனுக்குச் செல்வம் வந்துற்ற காலத்துச் சுற்றத்தாரென்று பொய்யுறவு பாராட்டிப் பலர்வந்து சூழ்ந்துகொள்வர்; வறுமைப்படும் பொழுது உண்மையான உறவினர்களும் அவன் யாரோவென்று ஒதுங்கிவிடுவ ரென்பது கருத்து. செல்வம் வரத் துவக்கியபொழுதே யென்றற்குக் காலாடுபோழ்திலென்றும், ஒவ்வொருவரும் தாம் தெருங்கிய சுற்றத்தாரெனவே சொல்லிக்கொண்டு வருவரென்றற்குக் கழிகிளைஞரென்றும், வழியே போகின்றவரெல்லாம் பந்துக்களென மிகுதியா வந்து கூடுவரென்றற்கு வானத்து மேலாடு மீனிற் பலராவரென்றுங் கூறினர். சிலர் என்றது அருமை குறித்து நின்றது. (ஊ)

வடுவிலா வையத்து மன்னிய மூன்றி
னடுவண தெய்த விருதலையு மெய்து
நடுவண தெய்தாதா னெய்து முலப்பெய்
கடுவது போலுந் துயர்.

(இ-ள்.) வடு இலா வையத்து-குற்றமற்ற இவ்வுலகத்தினிடத்து, மன்னிய மூன்றின் - நிலைபெற்ற (அறம் பொருள் இன்ப மென்னும்) மூன்றனுள், நடுவணது எய்த - நடுவிற் சொல்லப்பட்ட பொருளை (ஒருவன்) அடைவனுயின், இரு தலையும் - மற்றை முதலிலுங் கடையிலுமுள்ள அறத்தையும் இன்பத்தையும், எய்தும் - பெற்று மகிழ்வான்; நடுவணது எய்தாதான்-நடுவிடத்ததாகிய பொருளைப்பெறுதவன், உலை பெய்து அடுவதுபோலும் துயர் எய்தும் - கொல்ல னுலையிலிட்டுக் காய்ச்சிச் சம்மட்டியா லடித்தாற்போலுந் துன்பத்தை யடைவான், (எ-று.)

நடுவணது, நடு - பகுதி, அண் - இடத்தைக் காட்டும் விகுதி, அதன்மேல் அகரச் சாரியையும், து விகுதியும் வந்து நடுவணது என்றுயிற்று. எய்தும் - செய்யுமென்னு முற்று ஆண்பாலுக்கு வந்தது [நன். வினை. சூ. உக].

பொருளுண்டாகியவழி இம்மைக்கு வேண்டிய இன்பங்களும் மறுமைக்கு வேண்டிய அறமுந் தாமே வந்து அடையும்; அப்பொருளுண்டாகாதவழி அவ்விரண்டுமின்றி மிகத் துன்புறும்படியாகுமென்பது கருத்து. பொருளில்லாதவன் பெறுந்துன்பம் இத்தன்மையதென்று உணர்க்க முடியாமையின், உலைப்பெய்தலுவதுபோலுந் துயர் என உபமானத்தை எடுத்துக்காட்டினர். எல்லா நன்மைகளுக்கும் பொருளே காரணமென்பார் இங்ஙனங் கூறினர். (எ)

நல்லாவின் கன்றுயி ருகும் விலைபெறாஉங்
கல்லாரே யாயினுஞ் செல்வர்வாய்ச் சொற்செல்லும்
புல்லீரப் போழ்தின் னுழவேபோன் மீதாடிச்
செல்லாவா நல்கூர்ந்தார் சொல்.

(இ-ள்.) நல் ஆவின் கன்று ஆயின் - நல்ல பசுவின் கன்றுயிருக்குமாயின், ஈரும் விலை பெறும் - இளங் கிடாரிக் கன்றும் விலை பெறும்; (அதுபோல) கல்லாரே ஆயினும் - படியாதவர்களா யிருந்தாலும், செல்வர் வாய்ச் சொல்—, செல்லும் - பலராலு மங்கீகரிக்கப்படும்; நல்கூர்ந்தார் சொல் - வறுமைப்பட்டவர்களது சொற்கள், புல் ஈரம் போழ்தின் உழவேபோல் - அற்பமான ஈரத்தையுடைய காலத்தில் உழுவதுபோல, மீது ஆடி - மேலே மாத்திரந் தோன்றி, செல்லா ஆம் - உள்ளே அங்கீகரிக்கப்படாவாம், (எ-று.)

பெறாஉம் - இன்னேனசைக்கு வந்த அளபெடை. ஈரும், ஆயினும்—உம்மை - இழிவுசிறப்பு. நல்கூர்ந்தார், பிறர் நல்குவதைக் கொண்டு செல்பவர் என்னுங் காரணத்தால் வறியோர்க்கு வந்தது; நல்குதல் - கொடுத்தல்.

கிடாரிக் கன்றினுல் தமக்குத் தற்காலம் யாதொரு பயனும் இல்லாவிடினும், ஒருகால் அது பிழைத்திருந்து பெரிதாகிக் கன்றுபோட்டாற் பின் பால் கொடுக்குமே என்னும் ஆசையால் அதனை விலை கொடுத்து வாங்கிக் கொள்ளுதல்போல, மூடர்களாயினும் செல்வமு

டையோராயின் அவர் வாய்ச்சொல்லினுல் எதேனும் கன்மையுண் டாகு மென்னு மாசையினுலேயே அனைவரும் அதனை ஆவலுடனேற் றுக்கொள்வார்க ளென்றற்கு, நல்லாவின்கன்றுயி னுகும் விலைபெ றாஉம் என உவமை யெடுத்துக் கூறினுர். தரித்திரர்கள் எவ்வளவு வருந்திச் சொல்லினும் அவர் பேச்சு எற்றுக்கொள்ளப்படா தென்ப தற்குப் புல்லீரப்போழ்தினுழவு அதற்கு உபமானமாக் கொள்ளப்பட் டது. தணியி லீரமில்லாததுபோல அவர் சொல்லைக் கேட்பவர்க்கு அவரிடத்து ஆசையாகிய ஈரமில்லையென வறிக. [இம்மூன்று பாட்டுக் களானும் உடைமை வறுமைகளினது தன்மை கூறப்பட்டது.] (இ)

இடம்பட மெய்ஞ்ஞான நற்பினு மென்று
மடங்காதா ரென்று மடங்கார்—தடங்கண்ணு
யுப்பொடு நெய்பா றயிர்காயம் பெய்தடினுங்
கைப்பரு பேய்ச்சுரையின் காய்.

(இ-ள்.) தட கண்ணுய் - விசாலமான கண்களையுடையவளே! இடம்பட - விரிவுபட, மெய் ஞானம் - மெய்யறிவைப் பயக்கும் நூல்களை, என்றும் கற்பினும் - எக்காலமுங் கற்றலும், அடங்கா தார் - (இயற்கையாக) அடங்குந் தன்மையில்லாதவர், என்றும் அடங் கார் - எக்காலத்தும் அடங்கார்; உப்பொடு நெய் பால் தயிர் காயம் பெய்து அடினும் - உப்பும் நெய்யும் பாலும் தயிரும் காயமும் ஆகிய சம்பாரங்களைச் சேர்த்துச் சமைக்கினும், பேய்ச்சுரையின்காய்—, கைப்பு அரு - கசப்பு ஒழியா (அதுபோல), (எ-று.)

கற்பினும், அடினும் - உம்மைகள் உயர்வு சிறப்பு. என்றும் - மூற்றும்மை. தடங் கண்ணுய் - மகடூ முன்னிலை. தட - உரிச் சொல்லாதலின், தட + கண்ணுய் என்பதில், "இயல்பினும் விதியி னும்" என்றதனுல் வல்லெழுத்துமிகாது "இடையுரிவடசொலின்" என்றதனுல் இனமென்மை தோன்றியது; சுரையின்காய் என னகர மியல்பாதலுக்கு மிதுவேவிதி. அடினும் - செய்யப்படு பொருள் செய் ததுபோல வந்தது. ஒடு - எண்ணொடு; அதனை நெய் முதலிய வற்றேடுங் கூட்டுக. மெய்ஞ்ஞானம் - குறில்வழி யகரமாதலின் மெலி மிகுந்தது. சுரைக்காய் கைப்பரு - இது "உயர்திணை தொட ர்ந்த" என்னுஞ் சூத்திரவுரைநோக்கிக் கொள்க. காய் - வினைமுதற் பொருண்மை விகுதி புணர்ந்துகெட்ட தொழிலடிப்பெயர். மூலை, இலை, மலர், பூ, கனிமுதலியவுமிது. கண்ணுய், ஈறுதிரிதல்விளியுருபு.

இயற்கையில் கல்லறிவுடையராகி அதனுல் அடங்கி கல்வழிப் படாதவர், பின் கல்லறிவு தோன்றுமாறு எவ்வளவு கற்றலும் ஒரு காலுமடங்கி கல்வழிப்படாரென்பது கருத்து. இயற்கையில் அடக்க மில்லாதவர் எக்காலங் கற்பினும் அடக்கமுடையராகாரென்னு முண் மையை, பேய்ச்சுரையை உவமை யெடுத்துக்கூறி உறுதிப்படுத்தின மையின், இது வேற்றுப்பொருள்வைப்பணியம். கல்வி கன் மையே பயப்பதாதலின் அதனுல் கல்வழிப்படாதவரு முண்டோவெ னின், அங்ஙனமன்று; கல்லவர்க்கே அது கன்மை பயப்பதாரு மென்

பது உப்பொடு நெய்பால் தயிர் காயம் பெய்தடினும் கைப்பரு என் பதனுல் விளங்குகின்றது; தின்பண்டங்களுக்கு உருசி யுண்டாக்க வல்ல இவை பேய்ச்சுரைக்காய்க்கு உருசி யுண்டாக்கவல்லன வல்ல வாதல் போலெனவறிக. பேய்ச்சுரை யென்றது அதுபோன்ற மற்றைப் பண்டங்களுக்கு முபலக்ஷணம். [இதனுல் அடங்காமையின் தன்மை கூறப்பட்டது.] (சு)

தம்மை யிகழ்வாரைத் தாமவரின் முன்னிகழ்க
வென்னை யவரோடு பட்டது—புன்னை
விறற்பூங் கமழ்கானல் வீங்குநீர்ச் சேர்ப்ப
வுறற்பால யார்க்கு முறும்.

(இ-ள்.) புன்னைவிறல் பூ கமழ்கானல் - புன்னைமரங்களினது பெருமைபொருந்திய மலர்கள் கமழ்கின்றசோலையையுடைய, வீங்கு நீர் சேர்ப்ப - கடல்துறையையுடைய அரசனே! தம்மைஇகழ்வாரை- (காரணமின்றித்) தம்மைப்பழிப்பவரை, அவரின் முன் - அவருக்கு எதிரிலேயே, தாம் இகழ்க - தாம் இகழக்கடவர்; அவரோடுபட்டது என்னை - அவருடன் தமக்கு உண்டாகியது யாது? உறல் பால - வரத்தக்கவை, யார்க்கும் - எத்தன்மையானவர்க்கும், உறும் - வந்தே தீரும், (எ-று.)— விறல் - தூர்க்கந்தத்தைப் போக்குந் திறம்.

என்னை - எவன் என்னும் வினுப்பெயர் இடைக் குறைந்து ஐகாரச்சாரியையுபெற்றது. பூங்கமழ் - பூப்பெயர் முன் இனமெல் லெழுத்துவந்தது. வீங்குநீர் - வினைத்தொகைப்புறத்துப்பிறந்த அன் மொழித்தொகை. பால - பல்வின்பெயர்.

தம்மையொருவர் இகழ்வாராயின் அதற்குப் பிரதி தாமும் அவ ரெதிரிலேயே அவரை யிகழக்கடவரென்பது கருத்து. போகவிட்டுப் புறங்கூறுதல் பிழையாதலின் அவரின்முன் என்றும், தாமிகழ்ந்த வழி அவர்வாய் உடனே அடங்கிவிடுமாதலின் அதுவு மறமாகுமென் பதுபற்றி இகழ்க வென்றுங் கூறினர். என்னையவரோடு பட்ட தென்றதனுல் அவரது தாக்ஷிண்யத்தா லாகவேண்டுவதில்லை யென் றதாயிற்று. தம்மை அவர் இகழ்ந்ததைப்பற்றியேனும் தாம் அவரை யிகழ்ந்ததைப்பற்றியேனும் நிதுந் சிந்தைகலங்காது எல்லாம் முன் னை வினைப்பயனென்று மனவுறுதிகொண்டிருக்க வேண்டு மென் பார் உறற்பால யார்க்குமுறுமென்றார். [இதனுல் பிறனைப்பழிக்கு மியல்புடைய கீழ்மக்களது தன்மைகூறப்பட்டது.] (எ)

ஆவே றுருவின வாயினு மாபயந்த
பால்வே றுருவின வல்லவாம்—பால்போ
லொருதன்மைத் தாகு மறநெறி யாபோ
லுருவு பலகொள லீங்கு.

(இ-ள்.) ஆவேறு உருவின ஆயினும் - பசுக்கள் தம்மில் வேறு வேறான நிறத்தையுடையனவாயினும், ஆ பயந்த பால் - அப்பசுக்க

னாலே தரப்பட்ட பால்கள், வேறு உருவின அல்ல ஆம் - தம்மில் வேறுவேறுனநிறத்தையுடையன அல்லவாம்; பால்போல் - அத்தப் பாலைப்போல், அறம் - தருமம், ஒரு தன்மைத்து ஆகும் - ஒரே தன் மையையுடையதாகும்;அறநெறி-அத்தருமத்தைத்தரும் மார்க்கங்கள், ஆபோல் - அப்பசுக்கள்போல், ஈங்கு - இவ்வுலகத்தில், உருவுபல கொளல் - பலவுருவங்களைக்கொண்டிருத்தலே (உடையனவாகும்).

ஆபயந்த - [உயிர் - சு - உக - விதியால்] வல்லினம் இயல்பா யது. முன்னிரண்டு உரு - நிறம், பின் உரு - வடிவம்; "உருவே யட் டையும் வடிவு நிறமும்" என்பது நிகண்டு. உரு - ரூபம் என்னும் வடமொழிச்சிதைவு. போல் - போலவென்னும் வினையெச்ச வீறு தொகுத்தல். ஈங்கு - சுட்டுநீண்டது.

பலவகை நிறமுள்ள பசுக்களாலும் பெறுகின்றபால் ஒரேநிற முடையதாயிருப்பதுபோல், பல வகைப்பட்ட அறநெறிகளாலும் பெறும் அறம் ஒரு தன்மையதேயாமென்பது கருத்து. எல்லாப்பாலு நிறமொன்றேயாயினும் ஆக்களின் தன்மைக்கேற்றபடி பாலின் அள வுந் தன்மையும் வேறுபட்டிருத்தல்போல, நற்செயல்கள் பலவற்று லும்விளையுமற மொன்றேயாயினும் அச்செயலின் தன்மைக்கேற்றபடி அவ்வறத்தின் அளவும் குணமும் மாறுபடுமென்பது தோன்ற, ஆ வையும் ஆபயந்த பாலையுமுவமையாவெடுத்துக் காட்டியதனால் எடுத் துக்காட்டுவமையணியாம். எனவே, அதனாலுண்டாகும் பயனும் வே றுமையுடையதாகு மென்றதாயிற்று. அறநெறியாவன: தானம், தவம், விரதம், வழிபடுகடவுள் வணக்கம் முதலியனவாம். அறமா வது - அவற்றாலுண்டாகும் நற்கதிக்கு ஏதுவாகியதோ ரதிர்ஷ்டம். [இதனால் அறத்தினது தன்மை கூறப்பட்டது.] (அ)

யாஅ ருலகத்தோர் சொல்லில்லார் தேருங்கால்
யாஅ ருபாயத்தின் வாழாதார்—யாஅ
ரிடையாக வின்னுத லெய்தாதார் யாஅர்
கடைபோகச் செல்வமுய்த் தார்.

(இ-ள்.) தேருங்கால் - ஆராயுமிடத்து, உலகத்து - இவ்வுலகத் தில், ஓர்சொல் இல்லார் - ஒருவனைச்சொல் இல்லாதவர், யார் - யா வர்; உபாயத்தின் - தந்திரத்தினால், வாழாதார் - செல்வமுற்று வாழாதவர், யார்—; இடையாக இன்னுதது எய்தாதார் - தமது வாழ்நாளி னிடையே துன்பம் பயப்பதை யடையாதவர், யார்—; கடைபோக செல்வம் உய்த்தார் - முடிவுநாளளவுஞ் செல்வத்தை யமையுமெனச் செலுத்தினவர், யார்—, [ஒருவருமில்லை], (எ-று.)— ஓர்சொல் - புக ழ்ச்சொல் எனவும், இறந்தாரென்னும் ஒருசொல் எனவுங்கூறுவர்.

அளபெடை நான்கும் செய்யுளிசை நிறைக்கவந்தன. யார் - இவ்வினாவினைக் குறிப்புமுற்று எவருமில்லையென்னும் பொருள்பட டது. தேருங்கால் - வினையெச்சம், கால் - விருதி.

மைச்சொல்லில்லாதவர்களும், உபாயத்தினால் வாழாதவர்களும்

வாழ்நாளினிடையே துன்பமடையாதவர்களும், வாழ்நாள் முழுமையும் செல்வமனுபவித்தவர்களும் இவ்வுலகிலில்லையென்பது கருத்து. எவரும் பழிச்சொல்லுக்கு அஞ்சவேண்டுவது முதன்மையான தென்பார் யாதுருலகத்தோர் சொல்லில்லார் என முதற்கண் கூறினர். அங்ஙன மின்வுலகவாழ்க்கையைச் செலுத்தல் மிக்க கடினமென்றும் யாதுருபாயத்தின் வாழாதார் என்றார். அங்ஙனம் வருந்தி வாழ்கையிலும் இடையே பலதுன்பங்களெய்துமெனவும், அத்துன்பங்களுக்குத் தலைகொடுத்துப் பொறுப்பினும் பொறுத்தற்கரிய வறுமை வந்துறுமெனவும் பின்னிரண்டடிகளால் முறையே யெடுத்துக் காட்டினர். இவ்வகைக் குற்றங் குறைகளுக் கிடங்கொடாது இவ்வுலகில் வாழ்தலரிதாதலின் இத்தன்மையதாகிய இவ்வுலகவாழ்க்கையை அறிவுடையோர் கடியவேண்டுமென்றபடி. [இதனுல் இவ்வுலக வாழ்க்கையினியல்பு கூறப்பட்டது.] (கூ)

தாஞ்செய் வினையல்லாற் றம்மொடு செல்வதுமற்
றியாங்கணுந் தேரிற் பிறிதில்லை—யாங்குத்தாம்
போற்றிப் புனைந்த வுடம்பும் பயமின்றே
கூற்றங்கொண் டோடும் பொழுது.

(இ-ள்.) கூற்றம்கொண்டு ஓடும்பொழுது - யமன் வந்துகைக் கொண்டுபோகும்போது [இறந்த பின்னே], தம்மொடுசெல்வது - தம்மோடு [ஆத்மாவோடு] கூடிவருவது, தாம்செய் வினை அல்லால் - தம்மாற்செய்யப்பட்ட வினையன்றி, யாங்கணும்தேரின் பிறிது இல்லை - எவ்விடத்துப்புகுந்து ஆராய்ச்சிசெய்யினும் வேறொன்றில்லை; போற்றி - உணவு முதலியவை கொடுத்துக் காப்பாற்றி, புனைந்த - ஆடையணி முதலியவற்றுல் அலங்கரித்துவைத்திருந்த, உடம்பும்—, பயம் இன்றே - பயன்படுதல்லையாகும், (எ-று.)—மற்று - அசை.

அல்லால் - வினையெச்சம். செல்வது - வினையாலணையும் பெயர். தம்மொடுசெல்வது - "மூன்றுறுபெண்" என்னுஞ் சூத்திரவிதியால் வருமொழி முதல்வல்லினமியல்பாயது. யாங்கணும் - முற்றும்மை.

ஒருவர் செய்தவினை மற்றொருவருக்குப் பயன்படாதென்றற்குத் தாஞ்செய்வினையென்றும், தம்மைவிட்டுப்பிரியாது செல்வனவாகிய அறமுதலியவற்றைச் செல்வமாகக் கொள்ளவேண்டுமேயல்லது பிரிந்து செல்வனவாகிய பொருள் முதலியவற்றைச் செல்வமாகக் கொள்ளலாகாதென்பது தோன்றத் தம்மொடு செல்வதென்றுங் கூறினர். தம்மொடு செல்வது தாஞ் செய்வினையே யென வற்புறுத்தற் பொருட்டு, மறுத்துமதனை யாங்கணுந்தேரிற் பிறிதில்லையென எதிர்மறையாலுங் கூறினர். "ஸ-ஷ்ரீ ஹ-ஷ்ரீ ஸ்வெவ ஸஹ ஜ-ஹ்ரீ" எனக் கூறியதுங்காண்க. யாங்கணுமென்றது, பற்பல சமயங்களையும் வருணாச்சிரமங்களையுங் குறித்த நூல்களை. போற்றிப் புனைந்தவென்றதனுல், இவ்வெற்றுடம்பைப்புனையும் பொருள்களைக் கொண்டு அறத்தைப்போற்றினுல் மறுமையிற் பெருமைபெற்று வாழ

வாமென்பது குறிப்பிக்கப்பட்டது. உடம்புமென்ற எச்சப்பொருள்பட்டு நிற்குஞ் சிறப்பும்மையால், உடலே உயிர்க்கிழவனென மயங்கி மிக்க அபிமானத்துடன் அனைவரும் ஆதரிக்கும்படி அதனினுஞ் சிறிதும் வேற்றுமைதோன்றாது நான் என்னுந் தன்மைப்பெயர்க்கு விஷயமாய் விளங்கிய உடம்பே இத்தன்மையாயினபோது மற்றைப் பெண்டாட்டி பிள்ளை பொருள்முதலிய பயனிலவென்பது கூறவேண்டா என்றதாயிற்று. உடம்பு கூடச்செல்லாது இங்கே ஒழிந்துபோவது கண்கூடாக்கண்ட விஷயமென்றற்குக் கூற்றங்கொண்டோடும்பொழுதென்றார். பின்னிரண்டடியால் முன்னிரண்டடிகளிற் கூறிய பிறிதில்லையென்பதை உறுதிப்படுத்தினர். இம்மையிற் காணப்படும் பொருள்கள் யாவும் நிலையில்லனவெனவுணர்ந்து மறுமையில் நற்கதியடைய நாட்டமுடையராகக்கடவ ரென்றபடி. [இதனால் வினையினது தன்மையும் இம்மைப் பொருள்களினது தன்மையுங் கூறப்பட்டன.] (கo)

கஉ-ம் அதி.—தீவினையச்சம்.

[அஃதாவது-தீவினைசெய்தற்கு அஞ்சியொழுகவேண்டு மென்பதைப்பற்றிச்சொல்வது. பொருள்களின் மெய்ம்மையை யுணர்ந்தாலல்லது தீவினை பயப்பவை இவையெனவறிந்து அவற்றினஞ்சி அவற்றைச்செய்யா தொழுகல் கூடாமையின் இது மெய்ம்மையின் பின் வைக்கப்பட்டது.]

துக்கத்துட் டேங்கித் துறவின்கட் சேர்கலா
மக்கட் பிணத்த சுடுகாடு—தொக்க
விலங்கிற்கும் புள்ளிற்குங் காடே புலன்கெட்ட
புல்லறி வாளர் வயிறு.

(இ-ள்.) சுடுகாடு - மயானங்கள், துக்கத்துள் தூங்கி - இல்வாழ்க்கையிலே நிலைபெற்று, துறவின்கண் சேர்கலா - துறவறத்தின் கண்ணே சேரமாட்டாத, மக்கள்-மனிதர்களது, பிணத்த - பிணத்தை யுடையனவாம்; புலன் கெட்ட புல் அறிவாளர் வயிறு - விடயங்களிலே வீழ்ந்து கெட்ட கீழ்மக்கள் வயிறுகளோ, தொக்க விலங்கிற்கும்புள்ளிற்கும் ஏ - நெருங்கிய மிருகங்களுக்கும் பறவைகளுக்குமே, காடு - (இதற்குரிய) மயானங்களாகும், (எ-று.)

புல்லறிவாளர் வயிறு மயானத்தினுங் கடையானதென்பதைக் குறிப்பித்தற்கு மக்கட் பிணத்த சுடுகாடென எடுத்துக் காட்டினர். துறவிகளது தூயவுடல் சுடுகாட்டிற் கொண்டு சுடப்படாது சிறந்த தோரிடத்திற் சேமஞ்செய்து புனிதமாப் போற்றப்படுமாதலின், அதனை யொழித்துத் துறவின்கட்சேர்கலா மக்கட்பிணத்த வென்றார். துக்கத்திற் கிடமாதலின், இல்வாழ்க்கை துக்கமென்றுபசரிக்கப்பட்டது. [புல்லாண்ணுதல் தீவினையென்பது இதனுற் கூறப்பட்டது.] (க)

இரும்பார்க்குங் காலரா யேதிலார்க் காளாய்க்
கரும்பார் கழனியுட் சேர்வர்—சுரும்பார்க்குங்
காட்டுளாய் வாழுஞ் சிவலுங் குறும்பூழுங்
கூட்டுளாய்க் கொண்டுவைப் பார்.

(இ-ள்.) சுரும்பு ஆர்க்கும் - வண்டுகள் ஒலி செய்கின்ற, காட்டுள் ஆய் வாழும்-வனத்துளிருந்து வாழ்கின்ற, சிவலும் குறும்பூழும்-கவுதாரி காடை முதலியனவற்றை, கூட்டுள் ஆய் கொண்டு வைப்பார் - பஞ்சரங்களி லுறைகின்றனவாகக் கொண்டு வைத்து வளர்ப்பவர், இரும்பு ஆர்க்கும் காலர் ஆய் - இருப்பு விலங்குகள் ஒலிக்கின்ற கால்களை யுடையவராய், ஏதிலார்க்கு ஆள் ஆய் - அயலவர்க்கு அடிமைகளாகி, கரும்பார் கழனியுள் சேர்வர் - இருளுலகமாகிய நரகத்திலே சேர்வர், (எ-று.)

சுரும்பு - வண்டுவிசேடம். கூட்டுளாய், ஆய் - எச்சத்திரிபு. வைப்பார் - பெயர்.

பறவைகளைப் பிடித்துக்கூட்டிலடைத்துச் சிறைப்படுத்துகின்றவர் மறுமையில் தாம் விலங்குங்காலுமா யிருந்து நரகத்தில் வீழ்ந்து வருந்துவரென்பது கருத்து. கரும்பார் கழனி - இருளுலகம், தாமிஸ்ரம் என்னும் நரகம்; கடுஞ்சூரமென்னவுமாம். கரும்பு ஆர் கழனி எனப் பிரித்து, கரும்புவிளைகின்ற கழனியிற் சென்று தொழில் செய்வர் எனப்பொருள் கூறுவாருமுளர். புள்முதலியவற்றைச் சிறைப்படுத்தல் பாதகமென்பது அன்னப் பார்ப்பைச் சிறைப்படுத்திய சிவகன் சரித்திரம், தசகுமாரசரித்திரம் முதலியவற்றுள் விளங்கும். காட்டுளாய் வாழுமென்றது, தன்னிஷ்டப்படி எங்கும் திரிந்து விளையாடியிருப்பதென்றற்கு. சிவலுங் குறும்பூழுமென்றது மற்றைப் பறவைகளுக்கு முபலக்ஷணம். [முற்பாட்டிற்கூறியபடி பறவைகளைக் கொன்று தின்பதேயன்றி, அவற்றைப் பிடித்துக் கூட்டிலடைத்து வருத்துவதுந் தீவினையாமென்பது இதனாற் கூறப்பட்டது.] (உ)

அக்கேபோ லங்கை யொழிய விரலழுகித்
துக்கத் தொழுநோ யெழுபவே—யக்கா
லலவனைக் காதலித்துக் கான்முறித்துத் தின்ற
பழவினை வந்தடைந்தக் கால்.

(இ-ள்.) அக்கால் - முற்பிறப்பிலே, அலவனை காதலித்து - கண்களை விரும்பி, கால்முறித்துதின்ற - அவற்றின் கால்களை யொடித்துத் தின்ற, பழவினைவந்து அடைந்தக்கால்-பழையதீவினை வந்தடைந்தால், அக்கேபோல் - சங்குமணிபோல, அங்கை ஒழிய - உள்ளங்கைமாத்திரம் நிற்க, விரல் அழுகி—, துக்கம்தொழுநோய் எழுபஒழியாத துன்பத்திற்கு இடனாகிய குட்டநோய் உண்டாகப்பெறுவர், (எ-று.)

சங்குசுட்ட சுண்ணாம்பு என்பதுபோல, தின்ற என்பது பழவினையென்னுங் காரியப்பெயர்கொண்டது.

முற்பிறப்பில் நண்டைப்பிடித்து அதன்காலை முறித்துத் தின்றவர், பிற்பிறப்பில் அதன் காலைமுறித்த கைவிரல் அழுகிக்குட்ட நோயுண்டாகித் துன்பப்படுவரென்பது கருத்து. கான்முறித்தது என்றதனால், அதனைப் பிடித்துச் சித்திரவதை செய்கின்றனரென்றதாயிற்று. அங்ஙனஞ் சித்திரவதை செய்பவர், அதனால் அதற்குண்டான துன்பத்திலும் பலமடங்கு அதிகமான துன்பங்களை யனுபவித்துச் சித்திரவதைப் படுவரென்றற்கு "அக்கேபோ லங்கை யொழிய விரலழுகித் துக்கத்தொழுநோ யெழுப" என்றார். விரல்களெல்லாமழுகி நொண்டிக்கையாகி உடம்பெங்கும் புண்பட வருத்துங் குட்ட நோயினுந் துக்கமானது வேறில்லை யென்றற்குத் துக்கத் தொழுநோயென்றார். காதலித்து என்றதனால், மிக்க மகிழ்ச்சியுடனே அதனை வருத்திறு தென்றதாயிற்று. அலவனென்றது - மற்ற ஜந்துக்களுக்கு முபலக்ஷணம். உயிர்களை வருத்தாது வதைத்துத் தின்பதினும் இங்ஙனம் வருத்தி வதைத்துத் தின்பது கொடும் பாவமென்பது தோன்ற "விலங்கிற்கும் புள்ளிற்குங் காடே" எனமுன் கூறியதுபோ லிகழ்ச்சி மாத்திரையாகக் கூறாது துக்கத்தொழுநோயெழுப என அதனால் வினையுங் கொடிய துன்பத்தை யெடுத்துக் காட்டினார். [இம்மூன்று பாட்டாலும் இவை மிகக் கொடிய தீவினையாதலின் இவற்றையஞ்சி யொழுகல்வேண்டுமென்பது கூறப்பட்டது.] (க)

கெருப்பழற் சேர்ந்தக்கா னெய்போல் வதூஉ
மெரிப்பச்சுட் டெவ்வநோ யாக்கும்—பரப்பக்
கொடுவினைய ராகுவர் கோடாரும் கோடிக்
கடுவினைய ராகியார்ச் சார்ந்து.

(இ-ள்.) நெய்போல்வதும் - நெய்யைப்போல இதமாகிய பொருளும், கெருப்பு அழல் - கெருப்பினது வெப்பத்தை, சேர்ந்தக்கால் - சேர்ந்தால், எரிப்ப சுட்டு - (உடலை) எரிக்கும்படி காய்ந்து, எவ்வம் நோய் - துன்பப்படுத்தும்படியான நோயை, ஆக்கும் - உண்டாக்கும்; (அதுபோல) கோடாரும் - (நல்லொழுக்கத்தி னின்றும்) தவறி நடவாதவரும், கடுவினையர் ஆகியார் - கடுமையான தீவினை செய்பவர்களை, சார்ந்து—, கோடி - (தம் ஒழுக்கத்தில்) தவறி, பரப்ப-மிகவும், கொடு வினையர் ஆகுவர் - கொடுமையான வினைகளைச் செய்பவராவார்கள், (எ-று.)

ஆகியார்ச்சார்ந்து - உயர்திணைப்பெயர் முன் வலிமிகுந்தது; "இயல்பின் விகாரமும் விகாரத் தியல்பும்" என்பது விதி.

நல்ல தன்மையுடையவர்களும் தீயோருடைய சேர்க்கையால் தீயோராவரென்பது கருத்து. தீயோருடன் சேரும்பொழுது நல்லோர் தமது நற்குணம் முற்று நீங்கி அத்தியோரது தீக்குணமே குழ்ந்தவராவர் என்றதற்கு, "கெருப்பழற் சேர்ந்தக்கா னெய்போல் வதூஉம், எரிப்பச்சுட் டெவ்வநோ யாக்கும்" எனத் திருவள்ளுவநாயனாரும் மெய்த்துக்கூறினர். நெய்போல்வதுமென்ற சிறப்பும்மையால் அது எத்

தன்மையான புண்ணியும் ஆற்று மியல்புடையதென்பது குறிப்பிக் கப்படுகின்றது. அது குடுண்டபோது மேலேபட்ட வளவில் எரித்து விடுமென்றற்கு எரிப்பச்சுட்டு என்றார். எரிப்பச்சுட்டு என்றதற்கேற் பப் பரப்பக்கொடுவினையர் என்றதனால் அவரது கொடுவினை அவரைச் சேர்ந்த பிறரையு மெரிக்கத்தக்கதென்றதாயிற்று. [தீயோருடைய சேர்க்கையால்வருந்தீமை இதனும் கூறப்பட்டது.] (ச)

பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும்—வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலுந் தேயுமே
தானே சிறியார் தொடர்பு.

(இ-ள்.) பெரியவர் கேண்மை - பெரியோரது நட்புக்கள், பிறை போல - இளஞ்சந்திரன்போல, நாளும் - நாடோறும், வரிசை வரிசையா நந்தும் - முறை முறையாக வளரா நிற்கும்; சிறியார் தொடர்பு - சிறியவரது நட்புக்கள், வான் ஊர் மதியம்போல் - ஆகாயத்தின்கண் இயங்குகின்ற (பூர்ண) சந்திரன்போல, வரிசையால் - முறையாக, வைகலும் - நாடோறும், தானே தேயும் - தானே தேய்ந்துபோகும், (எ-று.)

அறிவுடைய பெரியோர் ஒருவரோடொருவர் கொள்ளும் நட்பு நாளுக்கு நாள் அதிகமாகும்; அறிவில்லாத சிறியோர் ஒருவரோடொருவர் கொள்ளும் நட்பு நாளுக்கு நாள் குறைவுபடுமென்பது கருத்து. "கிறைநீரரீரவர்கேண்மை பிறைமதிப், பின்னீரபேதையார்நட்பு" என நாயனார் கூறியதுங் காண்க. கேண்மை, தொடர்பென்பன - ஒரு பொருட் கிளவி. நட்புச் செய்பவரது பன்மையால், நட்பும் பலவாயின. இனிமைபற்றிப் பிறையை உவமையாகக் கூறினர். பெரியவர் கேண்மை முன் சுருங்கிப் பின் பெருகுதற்கும், சிறியவர் கேண்மை முன்பெருகிப் பின் சுருங்குதற்குங் காரணம் தம் முன் முன் அறியாமையும் பின் அறிதலுமாம். காரணங் கடிந்தவழியன்றி அதன் விளைவைக் கடிவது கூடாமையின் தீவினைக்குக் காரணமாகிய தீயோர் தொடர்பைக் கடிந்து நல்லோர் தொடர்பை நாட வேண்டுமென்றபடி. நந்தும், தேயும் என்பவற்றைப் பிறவினையாக் கொண்டு, பெரியவர் கேண்மை ஒருவனை மேன்மேலும் பெருமைப் படுத்துமெனவும், சிறியவர் கேண்மை நாளுக்குநாள் தாழ்மைப் படுத்துமெனவும் பொருள்கொள்ளலுமாம். சிறியோரது சேர்க்கையால் சந்திரன் சாபம்பெற்று கூயிக்கலானதும், பின் பெரியோரது கேண்மையால் வளரும்படியானதும் காண்க. சந்திரன் கூயிக்கும் படி ப்ருஹஸ்பதி சாபமும் தக்ஷப்ரஜாபதி சாபமும் உண்டான கதைகளை உய்த்துணர்க.

இனி, சோதிடதூலார் கொள்கையின்படி சந்திரன் வளர்வதும் தேய்வதும் சூரியனெளியா லாதலின் அதற்கிணங்க, பெரியவர்-எல்லா மண்டலங்களினும் பெரியோனை சூரியனெனவும், தானே

தியார் என்பதை, தான்-எச-இல்-தியார் எனப்பிரித்து சொற் றே டையால் தன்னிடத்துக் குற்றமில்லாத தீப்போன்றவன் [சூரியன்] எனவும் பொருள்கொண்டு, பெரியவரான சூரியனது கேண்மை ஏ ஒக்குநாள் பிறரையவனர்க்குமெனவும், தானேதியார் [சூரியன்] தொடர்பு பூர்ண சந்திரனைத் தேய்க்குமெனவும் பொருள்கொள் வதுமொன்று. தொடர்பு சேர்க்கையாதலின், சந்திரன்தானேதி யாரை [சூரியனை] நெருங்க நெருங்கத் தேய்ந்துகொண்டேபோய் அவனுடன் கூடியபோது [அமாவாசையன்று] முற்றும் தேய்கிறு னென்பது விளங்கும். இங்ஙனந்தேய்தல் இடைவிடாது காளுக்கு நாள் என்றற்கு வரிசையால் வைகலுமென்றும், இதுயாவர்க்கும் கண் கூடாத் தெரிந்ததென்றற்கு வாணுர்மதிய மென்றுங் கூறினர். [இத னால் திவினையுண்டாவதற்குக் காரணமாகிய தியோரது தொடர் பின் தன்மை கூறப்பட்டது.] (இ)

சான்ரோ ரெனமதித்துச் சார்ந்தாய்மற் சார்ந்தாய்க்குச்
சான்றுண்மை சார்ந்தார்க ணில்லாயிற்—சார்ந்தோய்கேள்
சாந்தகத் துண்டென்று செப்புத் திறந்தொருவன்
பாம்பகத்துக் கண்ட துடைத்து.

(இ-ள்.) சான்ரோர் என மதித்து - (இவர் எல்லா நற்குணங்க ளாலும்) நிறைந்தோரென நன்கு மதித்து, சார்ந்தாய் - அவரைச் சேர்ந் தவனே! சார்ந்தாய்க்கு - அங்ஙனஞ் சேர்ந்த உனக்கு, சான்றுண்மை - அந்நிறைவுடைமை, சார்ந்தார்கண் இல் ஆயின் - இன்னுந் சேரப் பட்டவர்களிடத்து இல்லையாயின் (அது), சார்ந்தோய் கேள் - சேர்ந் தவனே கேட்பாயாக; சாந்து அகத்து உண்டு என்று - இதனுள்ளே சாந்திருக்கிறதென்று எண்ணி, செப்பு திறந்து - சிமிழைத் திறந்து, ஒருவன்—, பாம்பு அகத்து கண்டது உடைத்து - பாம்பினை அத னுள்ளே கண்ட தன்மையுடையது, (எ-று.)

மன் - இடைச்சொல். சார்ந்தாய்க்கு - மூன்னிலவினையாலணை யும்பெயர். சார்ந்தோய் - வினை; ஈற்றுனகரம் யகரமானது வினை யுருபு. கண்டது - பெயர்.

முதலில் நன்கு ஆராயாமல் ஒருவனை நற்குணமுடையவனென் று நினைத்து அவனைச் சேர்ந்து பின் அவரிடத்தில் அந்நற்குண மில்லையென்று கண்டால், அது உள்ளே கல்வ கலவைச் சாந்துள தென்றெண்ணி ஒரு சிமிழைத் திறக்கையில் அதனுள் பாம்பிருக்கக் கண்டதுபோல மிகத் துன்பத்திற் கிடமாகுமென்பது கருத்து. அத் தன்மையான சேர்க்கையால் தாம் காடிய நன்மை வினைபாமையே யன்றித் தமது ஆசை உடனே அழிந்து கொடிய தீமையும் வினை தாகுமென்றற்கு, "சாந்தகத் துண்டென்று செப்புத்திறந்தொருவன், பாம்பகத்துக் கண்டதுடைத்து" எனத் திருஷ்டாந்த மெடுத்துக் கூறினர். சான்றுண்மைக்குச் சாந்தும், சார்ப்பட்டவர்க்குச் செப்பும், சார்ந்தவர்க்குத் திறந்தவரும், சான்றுண்மை யில்லாமைக்குப் பாம்பும்

உவமை. பாம்பைத்துக் கண்டதெனவே, அதற்கேற்பச் சான்றாண்மையில்லாமை யென்றற்குத் தீக்குணமுடைமை யெனக் கருத்துக் கொள்க. நன்காராயாது ஒருகாலும் எவருடனும் சேசங்கொள்ளலாகா தென்றதாயிற்று. (சு)

யாஅ ரொருவ ரொருவர்தம் மூள்ளத்தைத்
தேருந் துணைமை யுடையவர்—சாரற்
கணமணி நின்றிமைக்கு நாடகேண் மக்கண்
மணம்வேறு செய்கையும் வேறு.

(இ-ள்.) சாரல் கணம்மணி நின்று இமைக்கும் நாட - மலைச்சாரலின்கண் கனம் பொருந்திய மணிகள் நிலைபெற்று விளங்குகின்ற நாட்டையுடையவனே! ஒருவர் தம் உள்ளத்தை - மற்றொருவர் கருத்தை, தேரும் துணைமை உடையவர் - அறியு மறிவினை யுடையவர், யாரொருவர் - யார் (உளர்) [ஒருவருமில்லை]; மக்கள் மணம் வேறு செய்கையும் வேறு—, (எ-று.)—கேள் - முன்னிலையசை, கேட்பாயாகவென்றுமாம்.

வேறு - ஐம்பான் மூவிடங்கட்கும் பொதுவான குறிப்பு வினை முற்றுப் பகாப்பதம். சாரல் - தொழிற்பெயர், இடப்பெயர்க்கு ஆகுபெயர்.

இவ்வுலகத்தில் மனிதர் பலர்க்கு மனமுஞ் செயலும் ஒன்றுபட்டிராது வேறுகவே யிருக்குமாதலின், ஒருவர துள்ளம் இத்தன்மையதென்று அவரது செய்கையைக் கண்டு தெளியலாகா தென்பது கருத்து. எனவே, பலநாள்பழகி ஒருவரது உண்மையான இயற்கையை உணரவேண்டுமென அதற்கு உபாயங் கூறியபடி. வஞ்சகரது செய்கையைக்கண்டு மயங்கி மோசம் போகவேண்டா மென்பது குறிப்பிக்கப்பட்டது. செய்கையும் வேறெனவே, சொல்வே றென்பது கூறவேண்டா தாயிற்று. ஒருவரது தன்மையைக் கண்டறிய வேண்டுவது செயலாலே யாதலின், அச்செயலும் மனத்துடன் மாறுபடுமெனவே சொல் செயல் முதலியவற்றைக் கண்டு மயங்காது உண்மையான இயற்கை வெளியாகுமளவும் ஜாக்கிரதையுடன் பழகவேண்டுமெனக்கொள்க. (எ)

உள்ளத்தா வள்ளா துறுதித் தொழிலாய்க்
கள்ளத்தா ணட்டார் கழிகேண்மை—தெள்ளிப்
புனற்செதும்பு நின்றலைக்கும் பூங்குன்ற நாட
மனத்துக்கண் மாசாய் விடும்.

(இ-ள்.) புனல் - அருவி நீர், தெள்ளி - (மணி முதலியவற்றைக்) கொழித்து, செதும்பு - சேறு, நின்று - இடையருது நிற்க, அலைக்கும் - அலைத்துப் பாயப்பெற்ற, பூங்குன்ற நாட - அழகிய மலைநாட்டையுடைய அரசனே! உள்ளத்தான் கள்ளாது - மனத்தால் கட்புக் கொள்ளாமல், உறுதி தொழிலர் ஆய் - தமக்கு உறுதியைத் தேடிக்

தொழிலே யுடையவராய், கள்ளத்தான் நட்டார் - வஞ்சனையால் நட்புச் செய்தவரது, கழி கேண்மை - மிக்க நட்பானது, (அவரால் நட்புக் கொள்ளப்பட்டவர்க்கு), மனத்துக்கண் - மனதில், மாசு ஆய்விடும் - துன்பமாய் முடியும், (எ-று.)

நள்ளாது, நட்டார் - நள்-பகுதி. கழி - மிகுதிப்பொருளதாகிய உரிச்சொல். தெள்ளி, தெள்ளு-பகுதி. அலைக்கும், அலை - தன்வினை பிறவினைகளுக்குப் பொதுவான பகுதி.

உள்ளுற நேசமின்றித் தங்காரியம் நிறைவேறுதற் பொருட்டு வெளிக்கு மிக்க நேசமுள்ளவர்போலக் காட்டிக் கபடஞ் செய்பவரது கூட்டுறவு பின் பெருந் துன்பத்தை யுண்டாக்கு மென்பது கருத்து. "உறுவது சீர்தூக்கு நட்புங் கள்வரு நேர்" எனக் கூறியதுங் காண்க. தங்காரியம் நிறைவேறுதற்குக் கள்ள நட்புக் கொள்ளுகின்றவர் மற்றவரினும் மிகுந்த நேசமுடையவர்போல நடிப்பர் என்பது தோன்றக் கழி கேண்மையென்றும், வாய் திறந்து வெளியிற் சொல்லுவெட்கக்கேடாகுந் தீமைகளை அவரிழைப்ப ரென்பதற்கு மனத்துக்கண் மாசாய்விடுமென்றுங் கூறினர். உறுதித் தொழிலராயினவே, தமது கன்மை யொன்றனையும் காடாது நேசிக்கின்றவர்களுடைய நேசமே உண்மையான நேசமாகு மென்பது குறிப்பித்தாயிற்று.

[இவ்வைந்துபாட்டுக்களானும் தீயோரது சேர்க்கைக்கு அஞ்சவேண்டுமென்பது கூறப்பட்டது. தீவினைவிளைதற்குத் தீயோர்சேர்க்கையே காரணமாதலின், அக்காரணங் கடியாதவழித் தீவினையிற்சுதல் கூடாமைபற்றி இவ்வைந்துபாட்டுக்கும் தீவினையச்சத்துள் பொருத்தமுண்மையறிக.] (அ)

ஒக்கிய வொள்வாடன் னொன்னுர்கைப் பட்டக்கா
லூக்க மழிப்பதூஉ மெய்யாகு—மூக்க
மிருணையுஞ் சென்று சுடுதலா னல்ல
கருமமே கல்லார்கட் டூர்வு.

(இ-ள்.) ஒக்கிய ஒள்வாள் - (பகைவனை வெல்ல) எடுக்கப்பட்ட ஒள்ளிய வாளானது, தன் ஒன்னுர் கை பட்டக்கால் - தனது பகைவர் கையிலகப்பட்டதாயின், ஊக்கம் அழிப்பது மெய் ஆகும் - (இம்மையில்) தன் வலிமையை யழிப்பது உண்மையாகும்; (அது போலுமன்றி), ஆக்கம் - கல்வாதாரை ஆக்கிய ஆக்கம், இருமையும் சென்று - இருமையிலும் போய், சுடுதலால் - கெடுத்தலால் [ஆக்கியவனது இருமைப் பயனையுங் கெடுத்தலால்], கல்லார்கண்தூர்வே - கல்லாராகிய தீயோர்க்கு ஆக்கஞ் செய்யாது நீங்கி விடுதலே, கல்ல கருமம் - (ஒருவனுக்கு) நல்ல காரியமாகும், (எ-று.)

அழிப்பதூஉம் - இன்னிசையளபெடை. ஒக்கிய - பிறவினைப் பெயரெச்சம்; ஒக்கு - பிறவினைப்பகுதி, ஒங்கு - தன்வினைப்பகுதி.

கல்லாத கீழ்மக்களுக்குச் செய்யு முதவி இம்மை மறுமை இரண்டிடத்தும் தமக்குக்கேட்டைத் தருதலால் அத்தன்மையோர் தொடர்பைநீக்கல்வேண்டுமென்பது கருத்து. கல்லாதார்க்குத் தாம் செய்த உதவி தம் பகைவர் கைப்பட்ட வாளினுங் கொடிய தென்பது தோன்ற, இருமையுஞ் சென்று சுடுதலா லென்றார். அத்தீயோர்செய்யுந் தீவினை அவர்க்கு உதவினவனையே சாருமாதலின், அங்ஙன முதவினவர்க்கு மறுமைப் பயனுங்கெட்டு இம்மையிலும் பழிப்புண்டாகுமென்பார் அங்ஙனங் கூறினர். ஒன்னார் கைப்பட்ட வாள் அவாது ஊக்கமொன்றனையே யழிப்பது; உயிர்க்கு மூறுபாடின்றி ஒடித் தப்பித்துக் கொள்ளலா மாதலின். கல்லார்க்கு நல்ல செய்யாதிருத்தலே நல்ல கருமமெனவே, கல்லார்க்கு நல்ல செய்தல் தீவினை யென்றதாயிற்று. [அவ்வாறு நல்ல செய்தலாகியதீவினைக்கு அஞ்சவேண்டுமென்பது இதனுற் கூறப்பட்டது.] (க)

மனைப்பாசங் கைவிடாய் மக்கட்கென் றேங்கி
யினைத்தூழி வாழ்தியோ நெஞ்சே—யினைத்துஞ்
சிறுவனையே யாயினுஞ் செய்தநன் றல்லா
லுறுபயனே வில்லை யுயிர்க்கு.

(இ-ள்.) நெஞ்சே - மனமே! மனை பாசம் கைவிடாய் - மனையா ளிடத்துள்ள காதலைக் கைவிடாமல், மக்கட்கு என்று ஏங்கி - பிள்ளைகளுக்கென்றிரங்கி, எனைத்து ஊழி வாழ்தியோ - எத்தனையூழிகாலமிருந்து வாழவல்லையோ? எனைத்தும் - எவ்வளவாயினும், சிறுவனையே ஆயினும் - சிறிது பொழுதாயினும், செய்த நன்று அல்லால் - செய்யப்பட்ட நற்செயலல்லது, உயிர்க்கு—, உறுபயனே - உறுதியானபயனே, இல்லை - வேறில்லை (ஆதலால் நன்மையையே நாடக்கடவை), (எ-று.)

மனை - மனையாளுக்காகுபெயர். எனைத்து - என் என்பதன்மேல் அளவை யுணர்த்தும் ஐ-விகுதிபெற்ற எனை என்பது பகுதி, து - விகுதி; அன்றி, எ-என்னும் வினாவின்மேல் னகரச்சாரியையுவந்ததென்றும் கொள்ளலாம். வாழ்தி, இ - முன்னிலை விகுதி, த் - எழுத்துப்பேறு; தி - விகுதி என்பது நேர்; எதிர்கால முணர்த்தி நின்றது. வாழ்தியோ, ஓ - வினாப்பொருளோடு இகழ்ச்சிப் பொருள் குறித்து நின்றது.

தொழிலை யுடையவராய், கள்ளத்தான் கட்டார் - வஞ்சனையால் கட்புச் செய்தவரது, கழி கேண்மை - மிக்க நட்பானது, (அவரால் நட்புக் கொள்ளப்பட்டவர்க்கு), மனத்துக்கண் - மனதில், மாசு ஆய்விடும் - தூண்டமாய் மூடியும், (எ-று.)

நள்ளாது, நட்டார் - நள்-பகுதி. கழி - மிகுதிப்பொருளதாகிய உரிச்சொல். தெள்ளி, தெள்ளு-பகுதி. அலைக்கும், அலை - தன்வினை பிறவினைகளுக்குப் பொதுவான பகுதி.

உள்ளுற நேசமின்றித் தங்காரியம் நிறைவேறுதற் பொருட்டு வெளிக்கு மிக்க நேசமுள்ளவர்போலக் காட்டிக் கபடஞ் செய்பவரது கூட்டுறவு பின் பெருந் துன்பத்தை யுண்டாக்கு மென்பது கருத்து. "உறவது சீர்தூக்கு நட்புங் கள்வரு நேர்" எனக் கூறியதுங் காண்க. தங்காரியம் நிறைவேறுதற்குக் கள்ள நட்புக் கொள்ளுபவர் மற்றவரினும் மிகுந்த நேசமுடையவர்போல நடிப்பர் என்பது தோன்றக் கழி கேண்மையென்றும், வாய் திறந்து வெளியிற் சொல்லல் வெட்கக்கேடாகுந் தீமைகளை அவரிழைப்ப ரென்பதற்கு மனத்துக்கண் மாசாய்விடுமென்றுங் கூறினர். உறுதித் தொழிலராயினவே, தமது கண்மை யொன்றனையும் காடாது நேசிக்கின்றவர்களுடைய நேசமே உண்மையான நேசமாகு மென்பது குறிப்பித்ததாயிற்று.

[இவ்வைந்துபாட்டுக்களானும் தீயோரது சேர்க்கைக்கு அஞ்ச வேண்டுமென்பது கூறப்பட்டது. தீவினைவிளைதற்குத் தீயோர்சேர்க்கையே காரணமாதலின், அக்காரணங் கடியாதவழித் தீவினையஞ்சுதல் கூடாமைபற்றி இவ்வைந்துபாட்டுக்கும் தீவினையச்சத்துள் பொருத்தமுண்மையறிக.] (அ)

ஒக்கிய வொள்வாடன் னொன்னார்கைப் பட்டக்கா
லுக்க மழிப்பதூஉ மெய்யாகு——மாக்க
மிருணையுஞ் சென்று சுடுதலா னல்ல
கருமமே கல்லார்கட் டூர்வு.

(இ-ள்.) ஒக்கிய ஒள்வாள் - (பகைவனை வெல்ல) எடுக்கப்பட்ட ஒள்ளிய வாளானது, தன் ஒன்னார் கை பட்டக்கால் - தனது பகைவர் கையிலகப்பட்டதாயின், ஊக்கம் அழிப்பது மெய் ஆகும் - (இம்மையில்) தன் வலிமையை யழிப்பது உண்மையாகும்; (அது போலுமன்றி), ஆக்கம் - கல்லாதாரை ஆக்கிய ஆக்கம், இருமையும் சென்று - இருமையிலும் போய், சுடுதலால் - கெடுத்தலால் [ஆக்கியவனது இருமைப் பயனையுங் கெடுத்தலால்], கல்லார்கண்தீர்வே - கல்லாராகிய தீயோர்க்கு ஆக்கஞ் செய்யாது நீங்கி விடுதலே, கல்ல கருமம் - (ஒருவனுக்கு) நல்ல காரியமாகும், (எ-று.)

அழிப்பதூஉம் - இன்னிசையளபெடை. ஒக்கிய - பிறவினைப் பெயரெச்சம்; ஒக்கு - பிறவினைப்பகுதி, ஒன்கு - தன்வினைப்பகுதி.

கல்லாத கீழ்மக்களுக்குச் செய்யு முதவி இம்மை மறுமை இரண்டிடத்தும் தமக்குக்கேட்டைத் தருதலால் அத்தன்மையோர் தொடர்பைநீக்கல்வேண்டுமென்பது கருத்து. கல்லாதார்க்குத் தாம் செய்த உதவி தம் பகைவர் கைப்பட்ட வாளினுங் கொடிய தென்பது தோன்ற, இருமையுஞ் சென்று சுடுதலா லென்றார். அத்தீயோர்செய்யுந் தீவினை அவர்க்கு உதவினவனையே சாருமாதலின், அங்ஙன முதவினவர்க்கு மறுமைப் பயனுங்கெட்டு இம்மையிலும் பழிப்புண்டாருமென்பார் அங்ஙனங் கூறினர். ஒன்னார் கைப்பட்ட வாள் அவரது ஊக்கமொன்றனையே யழிப்பது; உயிர்க்கு மூறுபாடின்றி ஓடித் தப்பித்துக் கொள்ளலா மாதலின். கல்லார்க்கு நல்ல செய்யாதிருத்தலே நல்ல கருமமெனவே, கல்லார்க்கு நல்ல செய்தல் தீவினை யென்றதாயிற்று. [அவ்வாறு நல்ல செய்தலாகியதீவினைக்கு அஞ்சவேண்டுமென்பது இதனுற் கூறப்பட்டது.] (க)

மனைப்பாசங் கைவிடாய் மக்கட்கென் றேங்கி
யினைத்தாழி வாழ்தியோ நெஞ்சே—யினைத்துஞ்
சிறுவரையே யாயினுஞ் செய்தநன் றல்லா
லுறுபயனே வில்லை யுயிர்க்கு.

(இ-ள்.) நெஞ்சே - மனமே! மனை பாசம் கைவிடாய் - மனையாளிடத்துள்ள காதலைக் கைவிடாமல், மக்கட்கு என்று எங்கி - பிள்ளைகளுக்கென்றிரங்கி, எனைத்து ஊழி வாழ்தியோ - எத்தனையூழிகாலமிருந்து வாழவல்லையோ? எனைத்தும் - எவ்வளவாயினும், சிறு வரையே ஆயினும் - சிறிது பொழுதாயினும், செய்த நன்று அல்லால் - செய்யப்பட்ட நற்செயலல்லது, உயிர்க்கு—, உறுபயனே - உறுதியானபயனே, இல்லை - வேறில்லை (ஆதலால் நன்மையையே நாடக்கடவை), (எ-று.)

மனை - மனையாளுக்காகுபெயர். எனைத்து - என் என்பதன்மேல் அளவை யுணர்த்தும் ஐ-விகுதிபெற்ற எனை என்பது பகுதி, து - விகுதி; அன்றி, எ-என்னும் வினாவின்மேல் னகரச்சாரியைவந்ததென்றும் கொள்ளலாம். வாழ்தி, இ - முன்னிலை விகுதி, த் - எழுத்துப்பேறு; தி - விகுதி என்பது நேர்; எதிர்கால முணர்த்தி நின்றது. வாழ்தியோ, ஓ - வினாப்பொருளோடு இசைச்சிப் பொருள் குறித்து நின்றது.

மனைவி மக்களிடத்துப் பாசம்விடாமல் அவர்க்கென்றே வருந்தி யுழைத்து ஊழிகாலம் வாழ்ந்தாலும் கடைத்தேறும் வழி யுண்டாவ தில்லை; ஆதலின் உயிர்க்குறுதியைநோக்கி நல்வினை செய்ய வேண்டு மென்பது கருத்து. மனையாளிடத்திலுள்ள பாசம் நீங்கினவழி மக் கட்பாசம் உடனே நீங்கிவிடுமாதலின் முதலில் மனைப்பாசங் கைவி டாயென்றும், ஒருவன் வருந்தி யுழைப்பதெல்லாம் மக்களுக்கு ஸ்திதிசேர்த்து வைக்கவேண்டு மென்பதற்கே யென்பார் மக்கட்கெ ன்றேங்கி யென்றுங் கூறினர். எனைத்தூழி வாழ்தியோ என்றதனால் இதுவரை மனைவி மக்களிடத்துப் பாசம் விடாது வாழ்ந்த ஊழிக ளுக்கு அளவில்லை யென்றதாயிற்று. இது அத்தனையுந் துன்பமெ ன்பதை யுணராது இன்னும் எத்தனைகாலம் இப்பிறவிப் பெருங்க டலில் அல்லற் படுவாயென இரக்கமுற்று எனைத் தூழி வாழ்தியோ வென்றும், சிறிதளவுநன்மை செயினும் " தவமுந்தவமுடையார்க்கா கும் " என்றபடி அதனால் மேன்மேலும் மிகுதியாக நற்செயல் செய் யும்படியாகி இறுதியில் சுடேறவழியுண்டாகு மென்றற்கு, எனைத் தும் சிறுவனாயே யாயினுஞ் செய்த நன்றென்றுங் கூறினர். [உயி ர்க்கு உறுதியைத்தேடாது வீண்காலங்கழித்தலுக்கு அஞ்சவேண்டு மென்பது இதனால் கூறப்பட்டது.] (கo)

இரண்டாவது

பொருட்பால்.

அஃதாவது-இல்லறத்தின் வழிப்படுவனவாய பொருளின்பங்களுள் இருமையும் பயப்பதாய பொருளினது பகுதியை உணர்த்துவது. பொருளாவது அறவழியினுற் சேர்க்கப்பட்ட பொன் மணி நெல் முதலியனவாம்.

கசடம் அதி.—கல்வி.

[அஃதாவது-கற்றற்குரிய நூல்களைக் கற்பதைப்பற்றிச் சொல்வது; அவை அறநூல் நீதிநூல் முதலாயின. பொருள் பெறுதற்கு முதற்காரணமாயும், பெற்ற பொருளை நன்கு நுகர்தற்குத் துணைக் காரணமாயு மிருத்தல்பற்றிக் கல்வி முதலிற் கூறப்பட்டது.]

குஞ்சி யழகுங் கொடுந்தாணைக் கோட்டழகு
மஞ்ச ளழகு மழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னு நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு.

(இ-ள்.) குஞ்சி அழகும் - குடுமியினழகும், கொடுதாளை கோடி அழகும் - வளையச் சுற்றுகின்ற ஆடையினது கொய்சகத்தி னழகும், மஞ்சள் அழகும்-மஞ்சட் பூச்சாலுண்டாகின்ற அழகும், அழகல்ல—; நெஞ்சத்து - தமது மனத்தின்கண்ணே, நல்லம் யாம் என்னும் - நற்குணமுடையேம் யாம் என்று காண்கின்ற, நடுவு நிலைமையால்-கோடாத நிலைமையினாலே, கல்வி அழகே - கல்விப் பொருளாலுண்டாகிய அழகே, அழகு - அழகாம், (எ-று.)—கொய்சகம் இக்காலத்தில் கொசாமெனவழங்கும்.

நல்லம் - தன்மைப் பன்மைக்குறிப்புமுற்று, அம் - விகுதி. அழகே, ஏ-பிரிநிலை.

ஒருவனுக்குக் கல்வியாலுண்டாகும் அழகு அழகேயன்றி, மற்ற மேனியழகு மேற்பூச்சழகு முதலியவை அழகல்லவென்பதுகருத்து. குஞ்சி-கண்காது முதலிய உறுப்புக்களுக்கும், கொடுந்தாணைக்கோடு - ஆபரணங்களுக்கும், மஞ்சள் - மற்றும் பலவகைப்பட்டமேற்பூச்சுக்களுக்கும் உபலக்ஷணம். குஞ்சி - இயற்கையி லமைந்த அழகு; கொடுந்தாணைக் கோடும் மஞ்சளும் செயற்கை யழகு. குஞ்சியழகு முதலிய தம்மைப் பார்க்கும் பிறர்க்கே யன்றித் தமக்கு இன்பந் தருவனவல்ல, கல்வி யொன்றே தம் மனத்துக்கு இன்பந்தருவதென்பார், நெஞ்சத்து நல்லம் யாமென்னு நடுவுநிலைமையா லென்றார்.

ஆணுக்கே உரியதாகிய குஞ்சியையும், பெண்ணுக்கே உரியதாகிய மஞ்சளையும், முதலிலுங் கடையிலுங் கூறி, இருவர்க்கும் பொதுவாகிய தானையை இடையே வைத்தமையின் இப்பாட்டுள் ஆண் பெண் அடங்கலுஞ் சொல்லப்பட்டதென வறிக. குஞ்சி, பங்கி - ஆண்மயிர்; ஓதி, அளகம், குழல், கூந்தல் - பெண்மயிர். [கல்வியினால் ஒருவருக்கு உண்டாகுமழகு இதனுள் கூறப்பட்டது.] (க)

இம்மை பயக்குமா லீயக் குறைவின்றூற்
றம்மை விளக்குமாற் றூமுளாக் கேடின்றூ
லெம்மை யுலகத்தும் யாங்காணேங் கல்விபோன்
மம்ம ரறுக்கு மருந்து.

(இ-ள்.) இம்மை பயக்கும் - இப்பிறப்பி னின்பத்தையுந் தரும்; ஈய குறைவுஇன்று - (பிறருக்குக்) கொடுத்தலால் (செல்வப் பொருள் போல்) குறைவுபடாது [வளரும்]; தம்மை விளக்கும் - தம்மை (நெடுந் தூரமளவும்) விளங்கச்செய்யும் [பெரும்புகழ் வினைக்கும்]; தாம் உளராகேடு இன்று - தாமுயிரோடு கூடியுள்ளவளவுங் கெடுதலின்றாகும் (ஆதலால்) எம்மை உலகத்தும் - எந்த வுலகத்திலும், கல்விபோல் மம்மர் அறுக்கும் மருந்து - கல்வியைப்போல மயக்கத்தை யொழிக்கு மருந்தை, யாம் காணேம் - யாமறிந்திலேம், (எ-று.)

இம்மை, எம்மை என்பவற்றுள்ள மை விகுதி இடப்பொருளில் வந்தது. இம்மை-இன்பத்திற்கு ஆகுபெயர்.

எல்லாச் சிறப்பையுந் தருதலால் கல்வி எல்லாவற்றினும் மேன்மையுடையதென்பது கருத்து. இம்மையிற் பெறத்தக்க பெரும் பயன்களாய அறம் பொருளின்பங்களினும் கல்விசிறப்புடையதென்பார் இம்மைபயக்குமால் ..... கேடின்றூல் என்றூர். அறம் இம்மை பயவாதாதலின் அதனினுஞ்சிறந்த தென்றற்கு இம்மை பயக்குமாலென்றும், பொருளினுஞ் சிறந்ததென்றற்கு ஈயக்குறைவின்றூ லென்றும், தம்மை விளக்காத இன்பத்தினுஞ் சிறந்த தென்றற்குத் தம்மை விளக்குமாலென்றும், இம்மூன்றினு மொருதலையாச் சிறப்புடையதென்பார் தாமுளராக் கேடின்றூ லெனவுங் கூறினூர். தாமுள்ள பொழுதே பொருளின்பங்கள் அழிவது அனுபவசித்தம்; தாம் இப்பிறப்பிற்செய்த நல்வினை தற்புகழ்ச்சி முதலியவற்றால் உடனே யழிதலும், மூற்பிறப்பின் நல்வினை பயனுகர்ச்சியால் அழிதலும் தூற்றுணிபு. சுவர்க்காதி லோகங்களையும் கூட்டி எம்மையுலகத்து மென்றூர். தெய்வலோகத்து மருந்து மம்மரறுக்காதாதலின் அதனினுமுயர்ந்ததென்பார், யாங்காணேங் கல்விபோன் மம்மரறுக்கு மருந்து என்றூர். [இதனால் கல்வியினது சிறப்பும் அதனால்வினையும் பயன்களும் கூறப்பட்டன. அறம் பொருளின்பம் வீடென்னும் நாற்பயன்களையும் பயத்தலானும் கல்வி மிகச் சிறப்புடையதென்க.] (உ)

களர்நிலத்துப் பிறந்த வுப்பினைச் சான்றோர்
வினைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்
கடைநிலத்தோ ராயினுங் கற்றுணர்ந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்.

(இ-ள்.) களர் நிலத்து பிறந்த உப்பினை - உவர் நிலத்துண்டான உப்பை, சான்றோர் - பெரியோர், வினை நிலத்து நெல்லின் - நன்னிலத்துண்டான நெல்லைப்போல, விழுமிதாக் கொள்வர் - சிறந்ததாகக் கொள்வார்; (அதுபோல) கடை நிலத்தோர் ஆயினும் - தன சாதியராயினும், கற்றுணர்ந்தோரை—, தலை நிலத்து வைக்கப்படும்-மேலான இடத்தே வைக்கலாகும், (எ-று.)

நெல்லின், இன் - உவமப்பொருவு; உறழ்பொருவுமாம். விழுமிய துவினையாலணையும்பெயர். வைக்கப்படும் - ஓர்வகை வியங்கோள்.

தாழ்ந்த சாதிய ராயினும் கல்வி யறிவுடையவர்களை உயர்ந்த சாதியாரோ டொக்க மேன்மையாகக் கொண்டாடுவர் பெரியோ ரென்பது கருத்து. கடை நிலத்தோ ராயினும் என்றதனால் உயர் குடிப் பிறந்தோர்க்குக் கல்வியி னாகும் பெருமை கூறவேண்டாதா யிற்று. உப்பின் சுவை உணவுக் கின்றியமையாததுபோலக் கல்வி யறிவு மக்கட் கின்றியமையாத தென்பது தோன்ற உப்பினைத்திருஷ்டாந்தமா யெடுத்துக் கூறினர். [கல்வி யறிவினு ளுண்டாகு மேற்றமினைத் கூறப்பட்டது.] (க)

வைப்புழிக் கோட்படா வாய்த்தியிற் கேடில்லை
மிக்க சிறப்பி னரசர்செறின் வவ்வா
செச்ச மெனவொருவன் மக்கட்குச் செய்யுள
விச்சைமற் றல்ல பிற.

(இ-ள்.) வைப்புழி கோட்படா - வைக்கப்பட்ட இடத்தில் பிறரால் கவரப்படாது, வாய்த்து சயின் கேடு இல்லை - கொள்வோர் வாய்த்து கொடுத்துக்கொண்டிவரின் கெடுதலில்லை, சிறப்பின்மிக்க அரசர் செறின் வவ்வார் - வனமையின் மிக்க அரசர் சோபஞ் செய்வாராயின் வௌவமாட்டார்; (ஆதலால்) ஒருவன்—, எச்சம் என மக்கட்குச் செய்வன - ஆக்கமென்று புதல்வருக்குச் சேர்த்து வைக்கத் தகுவன, விச்சை-கல்விப்பொருளேயாம்; பிறவல்ல-மற்றைச் செல்வப்பொருள்களல்ல, (எ-று.)

கோள், கேடு - முதனிலை விகாரப்பட்ட தொழிற்பெயர்கள். எஞ்சியது எச்சம், எஞ்சு-பகுதி, அம் - வினைமுதற்பொருள் விகுதி. விச்சை - வித்யா என்னும் வடசொற்சிதைவு. பிற - பலவின் பெயர்.

செல்வப்பொருளினுங் கல்விப்பொருளே சிறந்ததாதலால் ஒருவன்பின்னுக்கு உதவும்படித் தன்மக்களுக்குத்தேடிவைக்க வேண்டியது கல்விப்பொருளேயாமென்பது கருத்து. செல்வப் பொருளைத் தேடிவைத்தால் அது கள்வர் முதலியோராற் கவரப்படும், ஒருவருக்குக் கொடுத்தால் குறைவுபடும், அரசன் கோபித்தால் அவன

லும் அபகரித்துக் கொள்ளப்படும்; இத்தன்மையான அபாயங்கள் கல்விப் பொருளுக்கு ஒருகாலு மில்லை; ஆதலின் அதுவே சிறந்த தென்றற்கு, "வைப்புழிக் கோட்பட்டா வாய்த்தியிற் கேடில்லை, மிக்கசிறப் பினாசர் செறின் வவ்வார்" என்றார். [பொருள் அழியுஞ்செல்வமென்பதும், கல்வி யழியாச்செல்வ மென்பதும், ஆதலின் அவ்வழியாச் செலவத்தை ஒருவன் தான்தேடிக்கொள்வதேயன்றித் தன்மக்களுக்கும் தேடிக்கொடுப்பது இன்றியமையாதது என்பது மிதனுல் கூறப்பட்டன.] "கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவர்க்கு, மாடல்லமற்றையவை" என காயனூர் கூறியதுங்காண்க. (ச)

கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைப்பிற் பிணிபல—தெள்ளிதி
னாராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து.

(இ-ள்.) கல்வி கரையில - வித்தையாகிய கடல் கரையுடையன வல்ல, கற்பவர் நாள் சில - கற்பவரது வாழ்நாட்களோ சிலவாம்; (அவ்வாழ் நாள் சிலவற்றுள்) மெல்ல நினைப்பின் - பொறுத்து யோசித்தால், பிணிபல - நோய்கள் பலவுள; (ஆதலால்) தெள்ளிதின் ஆராய்ந்து - தெளிவு பொருந்த ஆராய்ந்து, அமைவுடையர் - ஸ்ரமுடைய நூல்களை, நீர் ஒழிய பாலுண் குருகின் தெரிந்து - நீரைப் பிரித்துப் பால் உண்ணுங்கின்ற அன்னம்போலத் தெரிந்து, கற்ப - கற்கக் கடவர், (எ-று.)

கல்வி அபாரமா யிருத்தலாலும், அவை யனேகத்தையும் கற்பதற்குச் சிறிதும் போதாமல் மனிதர் வாழ்நாள் மிகச் சொற்பமா யிருத்தலாலும், அச்சொற்ப காலத்திற்குள் நல்லறிவு தோன்றுமாறு அறிவு நூல்களை யாராய்ந்தெடுத்துக் கற்றுத் தேறக்கடவர் என்பது கருத்து. நல்லறிவை விளக்காதனவும் உயிர்க்குறுதி பயவாதனவுமாய நூல்கள் உலகில் பலவுள வென்றற்கு கல்வி கரையிலவென்றும், சிற்றின்ப நோக்கி அவற்றில் காலங் கழித்துவிட்டால் பின் உறுதிநூல் கற்க காளில்லை யென்றற்கு கற்பவர் நாள்சில வென்றும், அவ்வாழ் காளிலும் பின் கற்போமென்றிராது இளமைக்கண்ணே கற்கவேண்டு மென்றற்கு மெல்ல நினைக்கிற் பிணிபலவென்றுங் கூறினர். அமைவுடைய வென்றது - உயிர்க்குறுதி பயப்பனவாய பொருள் நூல்களை. பால்போல நீரும் பருகத்தக்கதே யாயினும் அத்துணை சாரமிலதென் றுணர்ந்து அன்னம் நீரை யொழிப்பதுபோல் மற்ற நூல்களை யொழிக்கவேண்டு மென்பார், நீரொழியப் பாலுண் குருகிற்றெரிந்தென்றார். [இதனுல் கற்கவேண்டிய நூல்கள் இவையென்பது கூறப்பட்டது.] "கசகவாரமவகமாவெழிகவு மேமாகயொவகமவமவி வுவாஃ। யடூாரமாஞிகவிகாவாடீகமஂமொயபாகூரஞிவீரம் வாகிருழு।" என வடமொழியிலும் இதே கருத்துக் கூறப்பட்டிருத்தலுங்காண்க. (இ)

தோணி யியக்குவான் றொல்லே வருணத்துக்
காணிற் கடைப்பட்டா னென்றிகழார்—காணு
யவன்றுணையா வாறுபோ யற்றேதூல் கற்ற
மகன்றுணையா நல்ல கொளல்.

(இ-ள்.) தோணி இயக்குவான்-படகைச் செலுத்துவோன், காணின்—, தொல்லேவருணத்து-பழமையாகிய வருணங்களிலும், கடைப்பட்டானென்று-தாழ்ந்தசாதியனென்று, இகழார்-இகழாராகி, அவன் துணையா - அவனே தமக்குத்துணையாக, ஆறுபோயற்றே - ஆற்று வெள்ளத்தைக்கடந்து போகின்ற அத்தன்மையுடைத்து, தூல்கற்ற மகன்துணையா-தூற்பொருள்களைக்கற்றுணர்ந்த மனிதன்துணையாக, நல்லகொளல்-சிறந்தபொருள்களைக் கொள்ளுதல், (எ-று.)—காணுய்-முன்னிலையசை.

தோணி - தொணி என்னும் வடமொழிச்சிதைவு. இயக்குவான்-பிறவினைவினையாலணையும் பெயர்; இயக்கு-பிறவினைப்பகுதி, இயங்கு - தன்வினைப்பகுதி. தொல்லே, தொல் - பகுதி, பண்படி, ஐ - விகுதி. தொல்லே வருணம் - பண்புத்தொகை. போயற்று - போயதற்று என்பதன் விகாரம். நல்ல - பெயர்.

நல்லதூல்கற்றவர்கள் ஈனஜாதியாயிருப்பினும் அவர்களையும் அடுத்து தூற்பொருள்களையறியலா மென்பது கருத்து. ஆற்றைக் கடக்கநேர்ந்தவிடத்து ஓடம்விடுபவன் ஈனஜாதியானெனை அவனை யிகழ்ந்துஒதுங்கி நில்லாது அவனையேதுணையாகக்கொண்டு அவ்வாற்றினைக்கடத்தல்போல, அறிவுதானுணர்ந்த உயர்குலத்தோர் நேராதவிடத்து, தாழ்ந்தோரிடத்து அதனையறிந்து இப்பிறவிப் பெருங்கடலைக் கடக்கவேண்டுமென்பார், "தோணியியக்குவான்...ஆறுபோயற்றே" என்றார். [பிறப்பிலுயர்ந்தோரும் பெருமையினும் கல்வியினுயர்ந்தோரும் பெருமைசிறந்ததென்பது இதனுல் கூறப்பட்டது.] (சு)

தவலருந் தொல்கேள்வித் தன்மையுடையா
ரிகலில ரெஃகுடையார் தம்மூட் குழீஇ
நகலினிதாயிற் காண்பா மகல்வானத்
தும்ப ருறைவார் பதி.

(இ-ள்.) தவல் அரு தொல் கேள்வி தன்மை யுடையார்-குற்றமில்லாத பழைய தூற்பொருள்களை விசாரிக்கும் தன்மையுடையவரும், இகல் இலர் - தம்மூட் பகைமையில்லாரும், எஃகுடையார் - கூரிய புத்தியுடையவருமாயினோர், தம்முன் குழீஇ - தம்முட்கூடியிருந்து, நகலின் - மகிழ்தலினும், இனிதாயின்-இன்புறுசெய்வதாயின், அகல்வானத்தும்பர் - பரந்த விண்ணுலகத்தின்மேல், உறைவார்பதி - வாசஞ் செய்வோரதுநிலை, காண்பாம்-யாம் காணக்கடவோம், (எ-று.)

எஃகு - கூர்மை, இங்கு அறிவின்மேனின்றது. உம்பர் - மேலிடம், இங்குசுவர்க்கத்திற்கு ஆகுபெயர். குழீஇ - குழுவி.

சுவர்க்காதி லோகங்களிற் சென்று அனுபவிக்கு மின்பத்தினும், கல்விகற்றோர் பலர் கூடிச்செய்யும் பொருளாராய்ச்சியா லுண்டாகு மின்பம் சிறந்ததென்பது கருத்து. பொருள்களே விசாரிக்குந் தன்மை யில்லாதவிடத்து அதில் அவர்கட்கு இன்பந் தோன்றுதாத லானும், உட்பகை யுடையோராயின் பிறர் தம்மினும் சிறந்திருத்தல் கண்டு பொறுமைகொண்டு பேதப்படுவராதலானும், கூறிய புத்தி இல்லாவிடத்துப் பொருளாராய்ச்சிசெய்ய அவர்களாலியலா தாத லானும் இவை மூன்றும் அவர்களுக்கு இன்றியமையாதனவென்பார், "தவலரும் ..... எஃகுடையார்" என்றும், அங்ஙனமாயினும் அவர் கட்கு ஒற்றுமை யின்றியமையாததென்பதுதோன்ற தம்மூட்குழீஇ யென்றுங்கூறினர். அவர்கள் யாதுசெய்யினும் அது வருத்தமின்றி அவர்கட்கு முற்று மானந்தமாகவே யிருக்குமாதலின் அதனை ஈகை யென்றார். இனிதாயின் காண்பாம் என்பது இனிதல்லவென்னும் பொருள்பட நின்றது. [கல்விகற்பதனு லுண்டாகுமானந்த மிதனுல் கூறப்பட்டது.] (எ)

கனைகடற் றண்சேர்ப்ப கற்றறிந்தார் கேண்மை
நுனியிற் கரும்பு தின்றற்றே—நுனிநீக்கித்
தூரிற்றின் றன்ன தகைத்தரோ பண்பிலா
ரீரமிலாளர் தொடர்பு.

(இ-ள்.) கனைகடல் தண்சேர்ப்ப - ஒலிக்கின்ற கடலினது தண் ணிய துறையை யுடையவனே, கற்றறிந்தார் கேண்மை - நல்ல நூல்களைக் கற்று அவற்றின் பொருளே யறிந்தோரது சட்பாவது, நுனியின் கரும்பு தின்றற்று - நுனியினின்று கரும்பைத் தின்று செல்லுகின்ற அத்தன்மைத்தாகும், பண்பு இலாஈரம் இலாளர்தொட ர்பு - கல்வியறிவில்லாமையால் அன்பில்லாதவர்களுடைய நட்பு, நுனி நீக்கி - நுனியை யொழித்து, தூரின் றின்றன்ன தகைத்து - வேர்தொடங்கித் தின்று செல்கின்ற அத்தன்மையினை யுடைத்து.

கற்றோரது நேசம் நாளுக்கு நாள் அதிகமாய் விரும்பத் தக்கதா கும், கல்லாதாரது நேசம் நாளுக்கு நாள் வெறுக்கத்தக்கதாகு மென் பது கருத்து. கற்றோரது கேண்மையா லுண்டாகு மின்பமும், கல்லா தவரது கேண்மையா லுண்டாகும் துன்பமும் நிமிஷத்துக்கு நிமி ஷம் அதிகமாகி வரும் என்பார், நுனியிற் கரும்பு தின்றற்றே யென் றும், தூரிற்றின்றன்ன தகைத்தென்றுங் கூறினர். [கற்றோரது சேர்க்கையால் மற்றோர்க்குண்டாகு மாநந்த மிதனுல்கூறப்பட்டது.]

கல்லாரோ யாயினுங் கற்றாரைச் சேர்ந்தொழுகி
னல்லறிவு காணுந் தலைப்படுவர்—தொல்சிறப்பி
னெண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலாற் புத்தோடு
கண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு.

(இ-ள்.) கல்லாரோ ஆயினும் - தாம் கற்றில ராயினும், கற்றாரை சேர்ந்து ஒழுகின் - கற்று வல்லோரை அடைந்து ஒழுகுவாராயின்,

(அவ்வொழுக்கத்தால்) நல்லறிவு நாளும் தலைப்படுவர் - நல்லறிவு காடோறும் உண்டாகப்பெறுவர்;தொல் சிறப்பின் - பழைமையான சிறப்பையுடைய, ஒள் நிறம் பாதிரி பூ - நல்ல பரிமளத்தையும் நிறத்தையுமுடைய பாதிரிப் பூவை, சேர்தலால்—, புத்தோடு - புதிய பானையானது, தண்ணீர்க்கு தான் பயந்தாங்கு - (தன்னில் தங்கிய) தண்ணிய நீரிற்குத்தான் (நல்ல பரிமளத்தை) தந்ததுபோல, (எ-று)

அறிவுதலைப்படுவர் - " உயர்திணைதொடர்ந்த " என்பது விதி. புத்தோடு - புதுமை ஒடு [நன் - பத - சூ - கூ.]

ஒருவர் தாம் இயற்கையில் கல்லாதவராயினும் கற்றோருடைய சேர்க்கையால் நல்லறிவுடையோராவரென்பது கருத்து. இக்கருத்து நோக்கியே பலநாள் குருகுலவாசஞ் செய்து அவர்களே யடுத்திருந்து நூல்களைக் கற்கவேண்டுமென முன்னோர் கூறியிருக்கின்றனர். கல்லாரே யாயினும் என்ற சிறப்பும்மையால் கற்றவராயின் கேட்கவேண்டாவென்றதாயிற்று. சேர்க்கையொன்றையே அவரது முயற்சி மற்றொன்றும் வேண்டுவ தில்லையென்றற்குச் சேர்ந்தொழுகின் என்றார். நீரொழியப்பாலுண் குருகிற் றெரிந்து கற்றோராதலின், அவரிடத்தினின்றும் தோன்று மறிவு நல்லறிவாயிற்று. அவ்வறிவு நிமிஷந்தோறும் பெருகுமென்றற்கு நாளுமென்றார். ' ஒண்ணிற...பயந்தாங்கு ' என்றதனால், புத்தோடுபோலக் கற்றோரைச்சேர்ந்த கல்லார் அவரிடம் பெற்ற நல்லறிவினாலாகு மின்பத்தைத்தாமனுபவித்து மகிழுந் தன்மை ஒருகாலிலராயினும், அவ்வோடு தான்பெற்ற பாதிரிப் பூமணத்தைத் தண்ணீர்க்கேற்றி அதனால் அந்நீரைப்பருகுவோரை மகிழ்வித்தல்போல, தாம்பெற்ற நல்லறிவைப் பலர்க்கும் ஊட்டி அவர்களெல்லாம் மகிழச்செய்வ ரென்றதாயிற்று. [இதனால்கற்றோரது சேர்க்கையின் சிறப்புக் கூறப்பட்டது.] (கூ)

அலகுசால் கற்பி னறிவனூ லோதா
துலகநூ லோதுவ தெல்லாங்—கலகல
கூஉந் துணையல்லாற் கொண்டு தடுமாற்றம்
போஒந் துணையறிவா ரில்.

(இ-ள்.) அலகுசால் கற்பின் - கணக்கான் மிக்க கல்வியின் கண்ணே, அறிவன் நூல்ஓதாது - கடவுளது ஆகமநூலை யோதாமல், உலகம் நூல் ஓதுவதெல்லாம் - உலகநூலைக்கற்பதெல்லாம், கலகல - கல கல வென்று, கூஉந்துணை - கூவுமளவேயாம்; அல்லால் - அவ்வளவேயன்றி, கொண்டு - அவ்வுணர்ச்சியைக் கொண்டு, தடுமாற்றம் போந்துணை அறிவார் இல் - பிறவித்தடுமாற்ற மொழியுமளவை அறிவோரில்லை, (எ-று.)

ஓதுவதெல்லாம் - ஒருமைப்பன்மை மயக்கம். கலகல - இரட்டைக்கிளவி. அளபெடைகள் செய்யுளிசைக்கண்வந்தன.

கல்வி கற்பவர் இம்மைக்கே பயன்படுவனவாய ஸாமான்ய சாஸ்திரங்களைக் கற்பதிலேயே காலம் கழிக்காமல் கடைத்தேறுவதற்குரியனவாகிய உறுதிநூல்களை ஓதக்கடவரென்பது கருத்து. அலகு

சால்கற்பினென்றது கல்வி கரையிலவெனமுற்கூறியதனை. அறிவன் நூல்—அறிவருல் உபதேசிக்கப்பட்ட நூலெனவும், அறிவனெவிளக்கும் நூலெனவும், அறிவனே யடைதற்குக் கருவியாயுள்ள நூல்எனவுமாம். அவை வேத வேதாந்தங்கள்; அந்தமில் பேரின்பந் தருவனவாகிய அவற்றை ஓதாது மற்ற நூல்களையோதுவது வீணென்பார், அறிவனூல்கல்லா துலகநூ லோதுவதெல்லாம் கலகல வென்னும். கல்லாது உலக நூலோதுவ தெனவே, அறிவனூலோதுதற்குத் துணைக்கருவியாக உலகநூலோதுதல் சிறப்புடைத்தா மென்றதாயிற்று. அறிவுதூல்கல்லாது[=ஞானசாஸ்திரங்களைக் கற்காமல்] எனவும்பாடம். கொண்டு தமொற்றம் போந்துணையறிவாரில் "என்பதனை "வம்வூவெவஹிவிகெகாவெகஹிகஹிரகூகி வாகாகுநிரகிஃ" "கஹிகஹிரகூகிவகூஜூவை" என ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் கூறியிருப்பதனையும், "சத்த மூஞ்சோதிடமு மென்றுங்கிவைபிதற்றும், பித்தரிற்பேதையாரில்" என முன் இக்காலடியாருட் கூறியிருப்பதனையு மறிக.

கடு-ம். அதி.—குடிப்பிறப்பு.

[அஃதாவது - கல்ல குலத்திற் பிறப்பதன் மேன்மையைக் கூறுவது. கற்குடிப் பிறந்தார்க்கே பெரும்பாலும் கல்வி கேள்விப் பயன்களமையுமாதலால், இது கல்வியின் பின் வைக்கப்பட்டது.]

உடுக்கை யுலறி யுடம்பழிந்தக் கண்ணுங்
குடிப் பிறப்பாளர்தங் கொள்கையிற் குன்ரு
நீடுக்கண் டலைவந்தக் கண்ணு மரிமா
கொடிப்புற் கறிக்குமோ மற்று.

(இ-ள்.) உடுக்கை உலறி - உடுக்கப்பட்ட சீலை கிழிந்து, உடம்பு அழிந்தக்கண்ணும் - (உணவின்றி) உட லிளைத்த விடத்தும், குடிபிறப்பாளர் - உயர்ந்த குடியிற் பிறந்தவர், தம் கொள்கையின் குன்ரூர் - தங்குடிப் பிறப்பிற்குரிய கோட்பாட்டினின்றுங் குறைபடார்; அரிமா - சிங்கம், இடுக்கண் தலைவந்தக்கண்ணும் - பசிநோய் முதலிய துன்ப மிக்கு வந்த விடத்தும், கொடி புல் கறிக்குமோ - கொடியோடிப் படருகின்ற புல்லைத்தின்னுமோ [தின்னாது], (எ-று.)—மற்று - அசை.

உடுக்கையுலறி யுடம்பழிந்தக்கண்ணும் என்றதனால் அங்ஙனம் நேருதல் அருமை யென்பதும், மற்றக் காலங்களில் தம் கொள்கையிற் குன்றுமை கூறவேண்டாவென்பதுங் குறிப்பிக்கப்பட்டன. இடுக்கண் தலைவந்தக்கண்ணுமென்னு மிடத்தும்இங்ஙனமே கொள்க. மானத்தைக்காக்க வுடையும் உயிரினைக்காக்க வுணவு மில்லை யென்பார், உடுக்கையுலறி யென்றும் உடம்பழிந்த வென்றுங் கூறினர்; உயர்குடிப்பிறந்தோர்க்கு உயிரினும் மானமே பெரிதாத

லின் அதனைக் காத்தல் முதன்மையான தென்பார், உலக்கை யுலறி யென முதற்கண் கூறினார். கொள்கை - ஒழுக்கமுமாம். "புலி பசித்தாலும் புல்லைத்தின்னாது" என்பது பழமொழியாயினும், இங்கு மிருகேந்திரனுகிய சிங்கத்தை உவமையாக் கூறியது குடிப்பிறப் பாளரது மேன்மை தோன்றற்கு. [குடிப்பிறந்தாரதுதன்மைஇதனுல் கூறப்பட்டது.] (க)

சான்றாண்மை சாய லொழுக்க மிவைமூன்றும்
வான்றோய் குடிப்பிறந்தார்க் கல்ல தவான்றோயு
மைதவழ் வெற்ப படாஅ பெருஞ்செல்வ
மெய்தியக் கண்ணும் பிறர்க்கு.

(இ-ள்.) வான் தோயும் மை தவழ் வெற்ப - வானத்தை யளாவிய மேகந்தவழ்கின்ற மலையையுடைய அரசனே, சான்றாண்மை - சற்குணமுடைமையும், சாயல் - அழகும், ஒழுக்கம் - நல்ல ஆசாரமும், இவை மூன்றும்—, வான்தோய் குடிப்பிறந்தார்க்கு அல்லது - உயர்குடியிற்பிறந்தார்க்கல்லாமல், பெருஞ் செல்வம் எய்தியக்கண்ணும் - பெரியசெல்வ முண்டானவிடத்தும், பிறர்க்கு—, படா - உளவாகாவாம், (எ-று.)

உயர்குடிப்பிறந்தவர்களிடத்தே நல்லகுணங்களும், வடிவழகும், ஒழுக்கமு மமைந்திருக்குமென்பது கருத்து. கருத்தோன்றுங் காலத் தேசான்றாண்மையும், கர்ப்பத்தி லுருவேற்படுங்காலத்துச் சாயலும், இவ்வுலகில் பிறந்தபின்னர் ஒழுக்கமும் அமைவனவாதலின் அம் முறைமை நோக்கி, சான்றாண்மை சாய லொழுக்கம் என முறையே கூறினர். வான்றோய்குடி "வானுயர் தோற்றம்" என்றாற்போல இலக்கணவழக்காய் மிகவும் உயர்ந்த குடி என்னும் பொருள்பட நின்றது; தேவர்களாலும் புகழத்தக்க தென்றற்கு வான்றோய் குடி யென்றாரென்னவுமாம். செல்வத்தால்வருஞ் சிறப்பினும் குடிப்பிறப் பால் வருஞ் சிறப்பே பெரிதென்றற்கு, படா பெருஞ்செல்வமெய்தி யக்கண்ணு மென்றார். பெருஞ்செல்வ மென்றதனுல் சிறுசெல்வத் தைச் சிந்திக்கவேண்டுவதில்லை யென்றதாயிற்று. [குடிப்பிறப்பினு ணண்டாகுஞ்சிறப்பு இதனுல் கூறப்பட்டது.] (உ)

இருக்கை யெழுவு மெதிர்செலவு மேனை
விடுப்ப வொழிதலோ டின்ன—குடிப்பிறந்தார்
குன்று வொழுக்கமாக் கொண்டார் கயவரோ
டொன்று வுணாற்பாற் றன்று.

(இ-ள்.) (பெரியோரைக் காணின்), இருக்கை எழுவும் - இருப் பிடத்தை விட்டெழுதலும், எதிர் செலவும் - எதிர் சென்றழைத்த லும், ஏனை - பின்னும், விடுப்ப - (அவர் செல்லுங்கால் நில்லென) விடைகொடுக்க, ஒழிதலோடு - (அவரைவிட்டுப்) பிரிதலும் (ஆகிய), இன்ன - இத்தன்மையான செயல்களை, குடிப்பிறந்தார் - உயர்ந்த

குடியிற் பிறந்தவர், குன்ரு ஒழுக்கமா கொண்டார் - (தமக்குக்) குறை வுபடாத (இயற்கையான) வொழுக்கமாகக் கொண்டார்கள்; (இவ் வொழுக்க நெறி) கயவரோடு - கீழ் மக்களிடத்தில் (உள்ள), ஒன்று ஆ-ஒருகுணமாக, உணரற்பாற்று அன்று-உணரத்தக்கதன்று, (எ-று.)

ஏனை - இடைச்சொல். ஒடு - எண்ணிடைச்சொல். இன்ன - இன்என்னும் இடைச்சொல்லடியாகப் பிறந்த பல்வின்பாற்பெயர்.

பெரியோனைக்கண்டால் எதிர்சென்று அழைத்துவந்து வேண் டிய வுபசாரங்கள்செய்து பின் அவர் செல்லும்போது பின்சென்று வழிவிட்டு அவரனுமதிபெற்றுத்திரும்புவதாகியநல்லொழுக்கம் உயர் குடிப்பிறந்தார்க்கு இயற்கையா யுள்ளதென்பது கருத்து. இருக்கை யெழலும் எதிர் செலவும் மற்றை யுபசாரங்களுக்கு முபலக்ஷணம். இன்னவென்றதனால் இவைபோன்றமற்றும்பலநல்லொழுக்கங்களுங் கொள்ளப்படும். அவ்வொழுக்க மவர்களுக்கு இயற்கையிலேயே யமைந்ததென்றற்கு குன்ரு வொழுக்கமாகக்கொண்டார் எனவும், கய வர்விரும்பினாலும் பொருந்தாதென்றற்கு ஒன்ரு உணரற்பாற்றன் ரு என்றுங் கூறினர். [இதனால் குடிப்பிறப்பாளரைக் கண்டறியு முபாயங் கூறப்பட்டது. (ரு)

நல்லவை செய்யி னியல்பாகுந் தீயவை
பல்லவர் தூற்றும் பழியாகு—மெல்லா
முணருங் குடிப்பிறப்பி னூதிய மென்னே
புணரு மொருவர்க் கெனின்.

(இ-ள்.) (குடிப்பிறந்தோர்), நல்லவைசெய்யின்-நல்லவற்றைச் செய்தால், இயல்பாகும்-இயற்கையாகும்; தீயவை(செய்யின்) - தீய வற்றைச் செய்தால், பல்லவர் தூற்றும் - பலராலுந் தூற்றப்படுகின் ற, பழியாகும் - நிந்தையாகும்; (ஆதலால்) எல்லாம் உணரும் - (நல்லவை தீயவை) எல்லாவற்றையுமறிகின்ற, குடிப்பிறப்பின் - உயர்குடியிற் பிறத்தலினும், ஊதியம் என் - ஆக்கம்யாது? ஒருவர்க்கு புணரும் எனின்-(அக்குடிப்பிறப்பு) ஒருவருக்குக் கிடைக்குமாயின்.

உயர்குடிப்பிறப்பு ஒருவர்க்குக் கிடைக்குமாயின் அதனினும் பெரும் பேறு வேறில்லை யென்பது கருத்து. குடிப்பிறப்பினூதிய மென் என்பதை முதலிரண்டடி யுறுதிப்படுத்திற்று. நல்லவை செய்யினியல்பாகுமெனவே, மணியினிடத்து ஒளிபோன்றது நல் லோரிடத்து நற்செய்கை யென்றதாயிற்று. மணியினிடத்து அணு வளவு நசனே யிருப்பினும் அது இகழப்படுதல்போலச் சிறிதளவு தீ மையிருப்பினும் பழிக்கப்படுவரென்றற்கு, தீயவை பல்லவர் தூற்றும் பழியாகுமென்ரூர். எனவே, அவர் நன்மையே வடிவமாக்கொண்ட வரெனவும், பழிக்கஞ்சித் தீயவை செய்யத் துணியாதவரெனவும் அவரதுபெருமை கூறியவாறு. உயர்குடிப்பிறந்தார்கண் தீயவைபல் லவர்தூற்றும் பழியாகுமென்பதனை " ஒன்ரும்வ்விடினு முயர்ந்தார்ப் பழிக்குற்றங் குன்றின்மேலிட்ட விளக்கு " என்பதனானுமுணர்க. [இதனால் குடிப்பிறப்பினது சிறப்புக் கூறப்பட்டது.] (ச)

கல்லாமை யச்சங் கயவர் தொழிலச்சஞ்
சொல்லாமை யுள்ளுமோர் சோர்வச்ச—மெல்லா
மிரப்பார்க்கொன் றீயாமை யச்ச மரத்தாரிம்
மாணாக் குடிப்பிறந் தார்.

(இ-ள்.) கல்லாமை அச்சம் - கல்லாமைக்கு அஞ்சுதலும், கயவர் தொழில் அச்சம் - கீழோர் செய்யும் (இழி) தொழிலுச் செய்தற்கு அஞ்சுதலும், சொல்லாமை (அச்சம்) - சொல்லுந்திறமை யில்லாமைக்கு அஞ்சுதலும், உள்ளும் ஓர்சோர்வு அச்சம் - நினைக்கத்தக்க சொற்சோர்வு படுதலுக்கு அஞ்சுதலும், எல்லாம் இரப்பார்க்கு - (தமக்குவேண்டிய) பலவற்றையு மிரப்பவர்க்கு, ஒன்று ஈயாமை அச்சம் - ஒன்றைக் கொடுக்கக் கூடாமைக்கு அஞ்சுதலும் (ஆகிய இவை உயர்குடிப்பிறந்தவரிடத்துள்ளன ; ஆதலால்) இ மாண் ஆ குடிபிறந்தார்-இந்த மாட்சிபொருந்திய குடியிற்பிறந்தவர், மரத்தார்-மரக்கலம்போல அச்சத்திற்கே யிடமாவர், (எ-று.)

கடலில் செல்லும் மரக்கலம் எவ்விடத்து அபாயமுண்டாகுமோ என்ற அச்சத்துடனே ஜாக்கிரதையாய்ச் செல்லுதல்போல், குடிப்பிறந்தோர் இத்தன்மையான பலவற்றிற்கும் அஞ்சினவராகி நல்வழிப்பட்டொழுகுவர் என்பது கருத்து. 'குடிப்பிறந்தார்க்கு உள' எனவருவித் துரைக்கப்பட்டது. இவ்வச்சங்கள் குடிப்பிறந்தாரிடத்து உள்ளன ; இம்மாணு குடிப்பிறந்தார் - இந்தமாட்சிமை யில்லாத தாழ்ந்தகுடியிற்பிறந்தவர், மரத்தார் - மரத்தன்மையுடையவராவர் எனவும் பொருள்கொள்ளலாம்.

எல்லாக்குற்றமும் கல்லாமையால் வீளைவதாதலின் அதற்கு ஒரு தலையா அஞ்சவேண்டுமென்றற்கு, கல்லாமை அச்சத்தைமுதற்கண் கூறினர். முதலில் குற்றங்களைக்கடிந்து பின் குணத்தை நாடவேண்டுமென்பது தோன்ற, ஈயாமைச்ச மிறுதியிற் கூறப்பட்டது. உள்ளதையீதல் அவற்கியல்பாதலின் அதற்கு அஞ்சவேண்டுவ தின்று; தம்மிடத்து இல்லதை ஒருவர்கேட்டால் அதற்கு என்செய்வதென அஞ்சுவர் என்றற்கு, இரப்பார்க்கு ஈயாமை யென்றது எல்லா மிரப்பார்க்கு ஒன்று ஈயாமை யென்றார். [குடிப்பிறந்தார் தீக்குணங்களுக்கு அஞ்சியொழுகல் இதனால் கூறப்பட்டது.] (இ)

இனநன்மை யின்சொலொன் றீதன்மற் றேனை
மனநன்மை யென்றிவை யெல்லாங்—கனமணி
முத்தோ டிமைக்கு முழங்குவரித் தண்சேர்ப்ப
விற்பிறந்தார் கண்ணே யுள.

(இ-ள்.) கனம் மணி முத்தோடு இமைக்கும் - கனம் பொருந்திய அழகிய முத்துக்களோடு கூடி விளங்காநின்ற, முழங்கு வரித் தண் சேர்ப்ப - ஆரவாரிக்கின்ற கடலினது குளிர்ச்சிபொருந்திய துறையுடையவனே, இனம் நன்மை - நல்லினமுடைமையும், இன்சொல் -

இனிய சொற் சொல்லுதலும், ஒன்று ஈதல் - (இன்சொல்லோடு) கிடைத்த ஒரு பொருளை (இரப்போர்க்குக்) கொடுத்தலும், ஏனைமனம் நன்மை - (இவை) ஒழிந்த மனத்தினது தூய்மையும், என்ற இவை எல்லாம் - என்று சொல்லப்படுகிற இவையனைத்தும், இல் பிறந்தார் கண்ணே - உயர்ந்த குடியிற் பிறந்தவரிடத்தே, உள - உளவாம், (எ-று.)—மணி - ரத்நங்களுமாம்; கடலில் ரத்நங்கள் உள்ளனவென்பதை ரத்நாகரம் என்னும் அதன் பெயரினுமறிக. என்று எனப் பிரித்து எண்ணிடைச் சொல்லாகவுங் கொள்ளலாம்.

முன் தீவினையச்சத்துட் கூறியபடி எல்லாத்தீமைகளும் தீயினஞ் சேர்தலாலே விளைவனவாதலால் நல்லினஞ்சேர்தல் முதன்மையாவேண்டுமென்றற்கு முதலில் இனநன்மையைக்கூறினார். இத்தன்மையமேலான குணங்களனைத்தும் பிறப்பிலேயே உண்டாகின்றவையென்பார், இற்பிறந்தார்கண்ணே யுளவென்றார். மகனறிவு தந்தையறிவு என்றும், தாயைப்பார்த்து மகளைக்கொள் என்று மிருப்பதனால் முன்னோர்கள் நல்லவர்களா யிருந்தவழியே பின்னோர்க்கும் அந்நற்குணங்களமையுமென்றபடி. [நற்குடிப்பிறந்தோர் நல்லவைகளையே நாடி நிற்பரென்பது இதனாற் கூறப்பட்டது.] (சு)

செய்கை யழிந்து சிதன்மண்டிற் றாயினும்
பெய்யா வொருசிறை பேரி லுடைத்தாகு
மெவ்வ முழந்தக் கடைத்துங் குடிப்பிறந்தார்
செய்வர் செயற்பா லவை.

(இ-ள்.) பேர் இல் - பெரியவீடானது, செய்கை அழிந்து - கட்டுக்குலைந்து, சிதல் மண்டிற்று ஆயினும் - செல்லா லெரிக்கப்பட்டதாயினும், பெய்யா ஒருசிறை - மழைநீர் உட்புகப்பெறாத ஒருபக்கத்தை, உடைத்தாகும்—; (அதுபோல.) குடிப்பிறந்தார்—, எவ்வம் உழந்தக்கடைத்தும் - தீராத்துன்பத்தை அனுபவிக்கின்ற விடத்தும், செயற்பாலவை - தாம் செய்தற்குரியவற்றை, செய்வர்—, (எ-று.)

தமக்கு எத்தன்மையான துன்பம்வரினும் தாம்செய்யத்தக்கவைகளைச் செய்யாமல் விடார்கள் உயர்குடிப்பிறந்தார் என்பதுகருத்து. ஒரு பெரியவீடு எவ்வளவு சிதிலமாய்ப் போனலும் மழைபெய்யுங்கால் வந்து தங்குவோர்க்கு இடங்கொடுத்துக் காப்பதுபோல, தாம் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் வருந்தித் தம்மையடைந்தவர்களைக் குடிப்பிறந்தார் ஒருதலையாக்காப்பரென்றற்கு வீட்டை உவமையெடுத்துக் கூறினார்; ஆயினும், கடைத்து மென்றதனால், மற்றைக்காலங்களில் அங்ஙனமாதல் கூறவேண்டாதாயிற்று. (ஏ)

ஒருபுடை பாம்பு கொளினு மொருபுடை
யுங்கண்மா ஞாலம் விளக்குறூஉந்திங்கள்போற்
செல்லாமை செவ்வனோர் நிற்பினு மொப்புரவிற்
கொல்கார் குடிப்பிறந் தார்.

(இ-ள்.) ஒருபுடைபாம்பு கொளினும் - தன தொருபாகத்தைப் பாம்பு பிடித்துக்கொண்டாலும், ஒருபுடை - (பிடிபடாது நின்ற) மற்றொரு பாகத்தால், அம்கண்மாஞாலம் விளக்குறும் - அழகிய பெரிய பூமியை பிரகாசிப்பிக்கின்ற, திங்கள் போல் - சந்திரன்போல, குடிப்பிறந்தார்—, செல்லாமை - வறுமையானது, செவ்வன்நோன்றிற் பினும் - செவ்வையாக நோர்ந்து நின்றாலும், ஒப்புரவிற்கு - உபகாரஞ் செய்வதற்கு, ஒல்கார் - தளரார் [தளராம லுதவி செய்வர்], (எ-று.)

முற்பாட்டிற்கூறிய கருத்தே இங்கு திங்களுவமையாற் கூறப் படுகின்றது. திங்களுவமை கூறவே அதனால் அவர்கள் துன்புறு தலில்லை யெனவும், ஒருகால் துன்பம் வரினும் அது உடனே நீங்கு மெனவும் கூறியதாயிற்று. ஒருபுடை பாம்பு கொளினுமெனவே, தன்னைப்பாம்பு பிடித்துக்கொண்டே யிருக்கையில் சந்திரன் விடாது ஒருபுறம் ஒளிகொடுத்துக்கொண்டே நிற்றல்போல, குடிப்பிறந்தோ ரும் ஒருபுறந் துன்பம் வந்துகொண்டே யிருக்கையிலும் ஒருபுறமுத விசெய்வரென்பது விளங்குகின்றது. சந்திரனைப் பாம்பு பிடித்தலா வது கிரஹண மூண்டாவது. கிரணகாலங்களில் சந்திரனை மறைக் கும் பூமியினது சாயையை ராகுகேதுக்களென்னும் பாம்பாகக்கூறும் புராண வழக்குப்பற்றி இங்ஙனங் கூறியது. [இவ்விரண்டு பாட்டா லும், குடிப்பிறந்தார் தாம் துன்பமனுவித்து வருகையிலும் பிறர்க்கு நன்மை செய்வரென்பது கூறப்பட்டது.] (அ)

செல்லா விடத்துங் குடிப்பிறந்தார் செய்வன
செல்லிடத்துஞ் செய்யார் சிறியவர் —புல்வாய்
பருமம் பொறுப்பினும் பாய்பரிமா போலப்
பொருமூ ணாற்றுத லின்று.

(இ-ள்.) செல்லாவிடத்தும்-(தாம் செய்யவேண்டியகடமைகளை வறுமைமுதலியவற்றால் தமக்குச்செய்ய) முடியாதகாலத்திலும், குடி ப்பிறந்தார்—, செய்வன-செய்யவற்றை, சிறியவர் - உயர்குடியிற் பிறவாதார், செல்லிடத்தும் - (செல்வமுதலியவை யமைந்து அவற் றைச்செய்யக்) கூடியகாலத்திலும், செய்யார்—; புல்வாய் - மானி னது, பருமம் பொறுப்பினும் - கல்லணையை [போர்க்கோலத்தை] தாங்கினாலும், பாய்பரிமாபோல் - பாய்கின்ற குதிரைபோல, பொரு மூரண் - போர்செய்யும் வலிமையை, ஆற்றுதல் இன்று - தாங்குதலில்லை (அதுபோல), (எ-று.)

செய்வன - செய்யும் நற்காரியங்கள். குடிப்பிறந்தார்க்கும் மற்ற வர்க்குமுள்ள வேற்றுமையினிதுவிளங்க, செல்லிடத்தும் செய் யார் சிறியவர் என்று எடுத்துக்காட்டினார். ஒருநற்கருமமுஞ் செய் யாமைபற்றி அவனைச் சிறியவர் என்றார். செல்லிடத்து மென்றதி னால் மற்றப்பொழுதுகேட்கவேண்டாதாயிற்று. இக்குணம் இயற்கை யிலமைவதேயன்றி மற்றைப்படி யமைவதின்று என்பதை யுறுதிப்ப

தித்தற்கு, புல்வாய்...ஆற்றுதலின்று என எடுத்துக் காட்டினர். பருமம் - மற்ற அலங்காரங்களுக்கு முதலகுணம். போர்செய்யும் வலிமை யில்லாத புல்வாய்க்குப் போர்க்கோலஞ்செய்தல் எப்படி வீணோ அப்படியே, நற்கருமங்களைச்செய்யும் மனவுறுதியில்லாத புல்லர்க்கு இடம்பொருளேவல் அமைவதும் வீணென்பது மிதனால் குறிப்பிக்கப்படுகின்றது. குதிரைக்குப் போர்செய்யும்வலிமை யியற் கையிலேயே அமைந்ததென்பதும், மற்ற அலங்காரங்கள் அவசிய மின்றென்பதுந்தோன்ற, பாய்பரிமா என்றார். [தாம் துன்புறுங்கா லத்துங் குடிப்பிறந்தார் தமது ஊக்கமழியாரென்பது இதனால் கூற ப்பட்டது.] (க)

எற்றொன்று மில்லா விடத்துங் குடிப்பிறந்தா
ரற்றுத்தற் சேர்ந்தார்க் கசைவிடத் தூற்றூவ
ரற்றக் கடைத்து மகல்யா றகழ்ந்தக்காற்
றெற்றெனத் தெண்ணீர் படும்.

(இ-ள்;) எற்று ஒன்றும் இல்லாவிடத்தும் - (தம்மிடத்து) எப் படிப்பட்ட ஒருபொருளுமில்லாதகாலத்தும், குடிப்பிறந்தார்—, அற் றுதன் சேர்ந்தார்க்கு - (வறுமையால்) ஒன்றுமில்லாமல் தம்மை அடைந்தவர்களுக்கு, அசைவிடத்து ஊற்றூவர். தளர்ச்சிவந்தகாலத் தில் ஊன்றுகோலாவர்; அற்றக்கடைத்தும் - வற்றியவிடத்தும், அகல் யாறு - அகன்ற [பெரிய] நதியானது, அகழ்ந்தக்கால்-தோண்டினால், தெற்றெனதெண்ணீர்படும் - விரைவாகத்தெளிந்தநீர் உண்டாகும் (அதுபோல), (எ-று.)—தன்-பன்மையிலொருமை வந்தவழுவமைதி.

எற்றொன்று மில்லாவிடத்து மென்றதனால் உள்ளபோது ஊற் றுதல் கூறவேண்டாதாயிற்று. சேர்ந்தார்க்கு அசைவிடத்து ஊற்ற றுவர் எனவே, உள்ளபோது சேர்ந்தார்க்கும் சேராதவர்க்கும், அசை விடத்தும் அசையாவிடத்தும் உதவுவரென்பது குறிப்பிக்கப்பட் டது. இது, அற்றகாலத்து அகழ்ந்தவர்க்கேயுதவி, அறுதகாலத்து அனைவர்க்கும் உதவியாகும் அகல்யாற்றி னுவமையால் உறுதியா கின்றது. தெண்ணீர் படுமென்ற திருஷ்டாந்தத்தினால், அங் ஙன முதவிசெய்தற்கு வேண்டியபாக்கியம் அவர்கட்குத் தானேவந் தமையுமென்றது குறிப்பித்ததாயிற்று. குடிப்பிறந்தார்இங்ஙனமுத வுதற்கான பாக்கியம்பெறுதல், விச்வஜித் என்னும் வேள்விபுரிந்து செல்வமனைத்தும் செலவழித்து விருந்தாகவந்தவர்க்கு மட்கலத்தில் நீரளிக்கும்படி வறியனாயிருக்கையில், பதினாயிரங்கோடி வராகன் குருதக்ஷிணைகொடுக்க வேண்டுமெனவருந்தி வந்துயாசித்த கௌத் ஸமுனிவர்க்கு உடனே அப்பொருள்கொடுத்து உதவிய ரகுமகாரா ஜன் முதலியோர் சரித்திரத்தில் கண்டுகொள்வது. [குடிப்பிறந்தார் பிறர்க்கு உதவிசெய்தலின்பெருமை இதனாற்கூறப்பட்டது.] (கo)

ஸ்ரீ

நைடதச்சுருக்கம்.

பாயிரம்.

தழைவிரிகடுக்கைமாலைத் தனிமுதல்சடையிற்சூடுங்
குழவிவெண்டிங்களிற்ற கோட்டதுகுறையென்றெண்ணிப்
புழைநெடுங்கரத்தாற்பற்றிப் பொற்புறவிணைத்துநோக்கும்
மழைமதக்களிற்றின்செய்ய மலரடிசென்னிவைப்பாம்.

நிலவுபொழி தனிக்கவிகை நிடதர்கோன் புகழ்ச்சரித நெடுநீர்
வைப்பில், புலவர்களி யமுதொழுகு புதுமொழிகூட் டுணத்தமிழாற்
பூனைதல் செய்தான், வலனுயர்த்த வண்ணலஞ்சேல் வான்றொடி
பொற் கோட்டிமய வரையிற் றீட்டி, யலர்தலைமா நிலம்புரக்கு மதி
வீர ராமனிக லரச ரேறே.

போர்புரிபடலம்.

அழகினைச் சுமந்த பேறு பெற்றன ளணங்கின் றென்னு
வொழுகொளி யார மார்ப ருவாக்கடன் மெலிய வார்ப்பப்
பொழிகதிர் வயிர வொள்வாட் புரவலன் புழுங்கி நெஞ்சம்
விழியழல் கதுவ நோக்கி வேந்தரை விளித்துச் சொல்வான். (க)

விரிகதிர்ப் பரிதி முன்னர் வெண்மதி மழுங்கு மல்லாற்
பரிதியு மதியந் தோன்றிற் படரொளி மழுங்க லுண்டோ
வரசர்கா ணீவிர் வெய்யோ னருங்குலத் துதித்துந் திங்கண்
மரபின்மன் னவற்கு நுங்கண் மாணெழின் மழுங்கி னீரால். (உ)

சூழிருஞ் சடைக டாங்கிச் சுடர்முடி துறந்து கான்போய்
வீழ்சரு கருந்தி நீவிர் மெய்த்தவம் புரிதல் வேண்டுந்
தாழிருங் கூந்த லாளை நிடதர்கோன் றழீஇய போதே
யாழிசூ ழுலக மெல்லா மவனடி படுக்கு மன்றே. (ங)

கண்டவர் மனமுங் கண்ணுங் கவர்ந்திட வனப்பு வாய்ந்த
வொண்டொடி மாலை வேய்ந்தோற் குரியளென் றெண்ண வேண்டா
திண்டிற னிடதர் கோமான் செருவினி லிரியல் போக
மண்டமர் கடந்த வொள்வேன் மன்னவற் குரிய ளென்றான். (ச)

என்றலுங் கடவுட் டிங்க ளிருங்குல மிழித்துக் கூறல்
நன்றுநன் றென்ன நக்கு நாமவேல் வழுதி சீறி
யுன்றலை துணிப்ப னென்னு வொளிறுவா ளுறையி னீக்கிக்
குன்றெறி வயிர வொள்வாட் குரிசின்மேற் கனன்று சென்றான். ()

வெகுளலே யணங்கிற் காக னளனுருக் கொண்டு மேய
வகில்விசும் பளிக்கும் வேந்த னிவனென வமரர் கூறத்
துகளெழ மௌலி பண்டு தோற்றவன் றன்னே டென்கொ
லிகலெனப் புகையு மொள்வா ளுறை செறித் தேகினானே. (சு)

கூற்றெனக் கனலி யென்னக் குலவரை திரிக்கு மூழிக்
காற்றென வருமே றென்னக் கதிர்முடி யரச ரெல்லா
மாற்றருஞ் சீற்றத் தோடு மடங்கலந் தவிசி னின்றும்
பாற்றினஞ் சுழலும் வைவாட் படையொடு நிலத்திற் பாய்ந்தார். (எ)

கொய்யுளைக் கலினப் பாய்மா கொடிஞ்சியந் தேரிற் பூட்டி
மையன்மா மதத்த யானை பருமித்து மறலி யேனுஞ்
செய்யகண் புதைக்குஞ் சீற்றத் திறல்கெழு வயவர் சூழ
மொய்கழ லரச ரெல்லா முருகுலாந் தும்பை வேய்ந்தார். (அ)

கொடுங்குணில் பொருத வெற்றிப் போர்ப்பறை குளிற வெம்போர்க்
கடுந்திறல் வயவர் விண்ணுண் புடைப்பொலி கடலி னூர்ப்பச்
சுடுங்கனல் குளிர வெய்தாச் சுடர்விழி பொறிகள் சிந்த
மடங்கலே றனைய வேந்தர் வாளம ரழுவத் துற்றார். (கூ)

மன்னவர் தருக்கும் வெம்போர் வயிரவாள் சுமந்த திண்டோட்
பொன்னகர்க் கிறைவன் சூழ்ந்த புணர்ப்புநாங் காண்டு மென்னு
வொன்னல ரகல மூழ்கி யூன்சுவைத் துதிர மாந்து
மின்னகு பரிதி யொள்வேல் வேந்தர்கோன் சிறிது நக்கான். (கo)

செழுங்கடை மழைக்க ணல்லாய் திண்சிலை குழைத்து வெம்போர்க்
கெழுந்தவிவ் வரசர் மார்பத் திழிபெருங் குருதி மாந்தப்
புழுங்குவெம் பகழி மாரி பொழிந்தமர் முருக்கி யாடி
யுழுந்துருள் பொழுதின் மீள்வ லுள்ளநீ கவல லென்றான். (கக)

விளைசமர்க் கெழுந்து நின்ற வீமனை யினிது நோக்கிக்
களிமதக் களிறுந் தேருங் களப்படுத் திகலி னேற்ற
வுளைவயப் புரவித் தானை யொன்னலர்ச் செகுப்ப னீபோய்
நளிகடற் றானை சூழ நங்கையைக் காத்தி யென்றான். (கஉ)

உடல்சின வருமே றென்ன வயவரை யொருங்கு நோக்கிக்
கொடியணி கொடிஞ்சித் திண்டேர் கொய்யுளைக் கலினப் பாய்மா
கடன்மடை திறந்த தென்னக் கரடமூற் றிருந்து பாயும்
படமெதக் களிநல் யானை பண்ணுறுத் திடுமி னென்றான். (கங)

நீங்கருங் கவச மார்த்து நேரலர் மௌலி தேய்க்கும்
பூங்கழ னரல வீக்கிப் போரெனிற் பொருப்பு மஞ்ச
வீங்கிய குவவுத் தோளில் வெங்கணைப் புட்டி முருங்கி
வாங்குவிற் றடக்கை யேந்தி மறலிகண் புதைப்ப நின்றான். (கச)

பொருசமர் தொடங்கி நின்ற புரவலர் மடவார் செய்ய
வரிநெடுங் கண்ணுந் தோளும் வலந்துடித் தின்னல் காட்டக்
குருமணி குயிற்றுஞ் செம்பொற் கோடியர் கொடிஞ்சித் தேரி
னருவரை யிவருஞ் சீற்ற மடங்கலே றென்ன வார்ந்தான். (கடு)

ஊன்பயில் வடிவே லேந்தி யுடன்றுவெம் போரி லேற்ற
தேன்பயி றெரியல் வேந்தர் நடுக்குறத் திசையி னின்ற
கூன்பிறைக் கோட்டு நால்வாய்க் குஞ்சரம் வெருவி யோட
வான்பொதி ரெழியத் தெய்வ வலம்புரி முழக்கி யிட்டான். (கசு)

கொன்னவில் பரிதி வைவாட் கூற்றுயி ருண்ணுங் கூற்றின்
மின்னகு வரிவி லேந்தும் விடலையை நோக்கி யேற்ற
மன்னவ ரளவின் றின்றேன் மணிவரைத் திணிதோள் வீக்க
மென்னினேந் தென்செய் தோமென் றிந்திர னடுங்க லுற்றான். ()

கார்த்திரண் முழக்க மென்னக் கனைகுரன் முரச மார்த்த
தூர்த்தன கடல்க ளேழுந் துரகதக் குரத்தின் றூளி
போர்த்தன விசும்பு பைம்பொற் கொடியொடு குடையு மோங்கி
யார்த்தன வுவகை பொங்கித் துணங்கையிட் டலகை யீட்டம். (கஅ)

கூற்றென வுரறி யார்த்துக் கொல்சின வரியே றென்ன
வேற்றவர் வெருவ நெய்த்தோ ரிடையுரு தொழுகுங் கோட்செ
சிற்றமும் மதத்தி னூழித் தீயையு மவிக்கும் வேகக்
காற்றுறழ் களிறு தூண்டிக் கட்கனல் கதுவச் செல்வார். (கக)

ஒள்ளழல் கண்ணிற் கால வுயிர்ப்பலி யுண்ணுங் கூற்றின்
வள்ளுறை வடிவா ளேந்தி வாய்மடித் தெயிறு தின்று
கள்ளவிழ் தும்பை சூடிக் கழுதுகை கொட்டி யார்ப்ப
வள்ளிலை வயிரப் பைம்பூ ணரசரோ டரச ரேற்றார். (உ0)

மண்ணிடைத் திரிவ போல மாதிரங் கடப்ப தாவி
விண்ணிடைப் பறப்ப வேழ மருப்பிடை மிதித்து மீள்வ
கண்ணிமை பொருந்திற் காணக் கடுப்பின கலினப் பாய்மா
வெண்ணில வயவர் தூண்டி யெதிரெதிர் மலைந்து நிற்பார். (உக)

சூழ்சுடர் வயிர வாளா லிந்திரன் றுமிக்கு முன்னம்
பாழியங் குடுமிக் குன்றஞ் சிறகொடு பறப்ப வென்னக்
கேழ்கிளர் பரிதி யேய்க்குங் கிளர்மணிக் கொடிஞ்சி மான்றே
ராழியோ டாழி தாக்க வருஞ்சமர் தொடங்கி நிற்பார். (உஉ)

கூற்றெடுங் கொம்மை கொட்டிக் குனிக்கும்வா ளுழவர் வேகக்
காற்றினுற் பெண்ணே யின்ற கருங்கனி யுருவ தேபோல்
வேற்றிறல் வயவர் சென்னி வீழ்த்துவெங் கரிக ணூறிச்
சிற்றவெம் மடங்க லேற்றிற் செருக்களத் துழக்கி யிட்டார். (உங)

முழவுறழ் திணிதோள் வீரர் முழுமெயு மிரும்புண் மேய
விழிபெருங் குருதி யாடி யினங்கதிர்ப் பரிதி யேய்ப்ப
வழிகவுட் கடாத்த நால்வா யரசுவா வெருத்திற் றேன்றிப்
பொழிகணே மாரி சிந்தி யகலிரு விசும்பு போர்த்தார். (உச)

அருமருந் தனையாள் சூட்டு மலங்கலந் தோளி னீனப்
பொருதிரைப் புணரி சூழ்ந்த புவியினி லரச ரெல்லா
நிரையுளை யரிமா னேற்றை நிழல்சுளி தறுகட் சிற்ற
வரைபுரை களிநல் யானை வளைந்தென வளைந்து கொண்டார். (உஎ)

கொறில்பரித் தடந்தே ருந்தி நோன்சிலை குழைய வாங்கிப்
பொறியழற் பகழி தூவிப் பொங்குளைப் புரவி மான்றேர்
தெறுகதக் களிநல் யானை சினவுவாள் வயவ ரீட்டங்
குறைபட தூழி லாட்டிக் கூற்றென வரச ரார்த்தார். (உசு)

தெண்டிரைப் பரவை யேழுஞ் சேறுபட் டொழியத் தெண்ணீர்
மொண்டுகொண் டெழுந்தோர் குன்றின் முகிற்குழாஞ் சொரிவ தே
புண்டலை வடிவேன் மன்னர் பொறியழற் பகழி மாரி [ய்ப்பப்
மண்டமர் கடந்த திண்டோண் மன்னன்மேற் பொழிந்திட்டாரே.

கொள்ளைகொண் டோரி புண்ணக் குழாங்கொடு கவந்த மாட
வொள்ளழற் றறுகட் கூற்ற முயிருண்டு தெவிட்டி நிற்ப
வெள்ளவெங் குருதி போர்ப்ப வியன்பணை நிடதங் காக்கும்
வள்ளறன் புருவத் தோடும் வரிசிலை குனிந்த தன்றே. (உஅ)

கூன்பிறைக் கோட்டு வல்விற் குழைத்ததுங் குழைத்துத் தெவ்வ
ரூன்சுவைத் துண்ணும் வாளி விடுத்தது மொன்ன லார்தங்
கான்படு தெரியன் மார்பம் போழ்ந்ததுந் தெரியக் காணர்
வான்படு பிணக்குன் றேங்கி வயின்வயின் விளங்கக்கண்டார். ()

பொருசமத் துடன்ற வீரர் பொன்றிட நின்ற வேந்தர்
வெருவலுற் றிரிய மாறும் வேந்தர்கோன் வலியு நோக்கி
யெரிமணிப் பொன்செ யோடை யிளங்களிப் பகடு சூழக்
கரைபொரு கடலந் தானைக் கலிங்கர்கோ னமரி லேற்றான். (ஙo)

கந்தடு தறுகட் சீற்றக் கடாம்பொழி களிநல் யானை
மந்தர கிரியாற் றூனே வாரிதி யுழக்கி வரனத்
திந்திர குமர னென்ன விகல்புரி நிடதர் கோமா
னுந்துமான் றேரின் மேலு மொருகணை தெரிந்து விட்டான். (ஙக)

களத்திடைக் கலிங்கர் கோமான் கவிழ்தலுங் கடைக்கண் சேப்ப
வுளத்திடை வெகுளி பொங்க வூழிவெங் காலி னோடி
வேளத்தனன் சேனை யோடும் வார்சிலை வணக்கி வெம்போர்
வீளத்தனன் கூற்று மஞ்ச வெந்திறன் மகதர் கோவே. (ஙஉ)

மூரிதிரைப் பரவை வேலை மூகட்டெழுந் தகல்வான் மேய
வீரிகதிர் மதியந் தீண்டும் வெள்ளெயிற் றரவ மென்னக்
குருதிகொப் புளிக்கும் வேலான் கொற்றவெண் குடையின் மீது
வரிசிலை குழைத்து வெய்ய வடிக்கணை யொன்று விட்டான். (ஙங)

சுரும்பிமிர் தும்பை வேய்ந்த சுடர் மூடி மகதர் கோமான்
விரும்பலர்ச் செருக்கும் வேலான் விற்பழுத் துமிழும் வெய்ய
சரம்பட வற்று வீழ்ந்த தன்னுடற் குறைநின் றூட
வரம்பைய ரோடி நோக்கி யணிமணி முறுவல் பூத்தான். (ஙச)

அமைப்பருந் தறுகட் சீற்றத் தாளரி யேறு போல்வான்
சமர்த்தலை யிகலி னேற்ற தரியலர் சென்னி வீழத்
துமித்திடுங் குருதி யொள்வாள் சுடரெழ வீர்ப்ப நோக்கி
யிமைத்தலும் வளவர் கோனை வெருவனீ யேகு கென்றான். (ஙடு)

கொய்யுளைப் புரவி தூண்டிக் கொடுமரங் குழைய வாங்கி
வெய்யவெம் பகழி மாரி விண்ணகம் புதைப்பத் தூவி
யையன்மெய்க் கவச மீது மைங்கணை சிதறி யார்த்தான்
மையறு சிறப்பின் மிக்க வஞ்சியம் பதிக்கு வேந்தே. (நசு)

சில்லியந் தடந்தே ருந்தித் திண்சிலை குழைய வாங்கிக்
கொல்லிய வெழுந்த கூற்றிற் கொடியவெம் பகழி தூவி
மல்லடி தோளு மார்பும் வழிபெருங் குருதி யோடும்
வில்லவன் வெருவி யோட வெஞ்சம முடற்றி னானே. (நஎ)

நிறங்கிளர் வயிரப் பைம்பூ ணிடதர்கோன் முருடுத்த கோலிற்
கறங்கெனத் திரியும் வெய்ய கலினமான் றடந்தேர் வீழ
மறங்கிளர் பரிதி வேலு மானமுந் துறந்து நாணற்
புறங்கொடுத் திரியல் போனான் புட்கரத் தீவின் வேந்தன். (நஅ)

[வேறு.] பாகடு வெந்திறற் பரும யானைமேல்
வேகவெங் கலினமா வெள்ளஞ் சூழ்வரச்
சாகதீ வுக்கிறை சமரி ஞர்ப்பொடு
தோகையர் கண்ணெனப் பகழி தூவினான். (நக)

துணங்கையிட் டலகைக ளெள்ளி யார்த்தெழ
வணங்கெயிற் றரவென வழலும் வாளிகள்
வணங்குவிற் கால்வளைத் தெய்து மாற்றினு
னிணங்கமழ் குருதிவே னிடதர் வேந்தனே. (சஅ)

பாற்றினந் தொடர்வது பகைவ ரூன்சுவைத்
தூற்றிருந் திடையரு துதிரங் கால்வது
கூற்றெடுந் தோழமை கொள்வ தாயதோர்
மாற்றரசுங் கொடியவேன் மன்னன் வாங்கினான். (சக)

அயிலெடுத் தெறிதலு மடர்க்கு மொன்னலார்
வயிறெரி தவழ்ந்தது வயிர வாட்படை
செயிரற வேந்திய சாகத் தீவிறை
யுயிர்துறந் தந்தக னுலகம் புக்கதே. (சஉ)

தூம்புடைக் கரமலை யெருத்திற் றோன்றுபு
காம்பிலிக் கரசன்வில் வாங்கிக் காய்கணை
தேம்பொதி செழுமலர்த் தெரியன் மார்பினான்
வாம்பரித் தேர்மிசை மழையிற் றூவினான். (சஙு)

சிலையுயிர்த் துயிர்ப்பலி கவருந் திண்கணை
கொலைவடி வேலினான் றுரப்பக் குஞ்சர
மலையெனக் கவிழ்தலு மடங்க லேறெனப்
புலவுவா ளொடுமவன் புவியிற் பாய்ந்தனன். (சச)

வார்மயிர்க் கேடகம் பற்றி வாள்விதிர்த்
தார்சினக் களிற்றணி யுழக்கி யொய்யெனப்
போர்முகத் துரறிவெம் புலியின் போத்தெனச்
சாரிகை திரிந்தனன் றறுக ணுளனே. (சடு)

பாரினின் றவணமர் புரியப் பாய்பரித்
தேரினின் றகலேச் செருவி லேத்திட
முருடை வயவர்போர்த் தரும மன்றெனக்
கூர்ந்தி வாளரீ இக் குப்புற் றனரோ. (சக)

மன்பெருங் கேடகங் திரித்து வானிடை
மின்பிறழ்ந் தென்னவாள் விதிர்த்து நோக்கின
ரென்புநெக் குள்ளுடைந் திரிய வேற்றனர்
வென்பிற ரறிகிலாத் திறல்கொள் வீரரே. (சவ)

தெறுஞ்சினந் தலைக்கொளீஇச் செங்கண் மயுகப்
பிறங்குபொற் கேடகம் பிறழ வெற்றியு
மறங்கிளர் வயிரவாள் வாளிற் றுக்கியுங்
கறங்கெனத் திரிந்தனர் காளை வீரரே. (சஅ)

கோட்புலிப் போத்தென நிடதர் கோமகன்
றூட்பினுட் காம்பிலிக் கிறைவ னுமற
வாட்படை யெறிந்துயிர் வவ்வி னனவன்
சேட்புலத் தரம்பையர் தெரியல் குடிஞன். (சக)

அறைகழல் வேந்தர்மே லலங்கல் வேலினு
னெறழ்வலிக் களிற்றிடைத் தாவு மெண்ணிலா
நொறில்பரி தேர்மிசைப் பாயு நோன்கெழு
சிறையொடுந் திரிவதோர் சிய மென்னவே. (சஎ)

இன்னணங் கொருஞ்சமர் முருக்கி யேற்றிகன்
மன்னவர் புறக்கொடை கண்டு மாலைதாழ்
கொன்னவில் குருதிவேற் குவவுத் தோளினுன்
சென்னிவான் றடவுபொற் றேரி னேறினன். (சஏ)

[வேறு.] இகன்மிகு திறல்வேந்த ரேதியாற் களப்படுத்த
புகர்முகக் கடாயானை பொழிகுருதிச் செழுஞ்சேற்றிற்
றிகிரிய கொடிஞ்சிகெடுத் தேருழக்கத் துகளெழுந்தவ்
வகலிரு விசும்புபோர்த் தந்திவான் போன்றதுவே. (சஐ)

ஒளிகிளர் மணியோடை சிதைந்தொழிய வுடன்றபோர்க்
களிசின மால்யானைக் கதிர்மருப் புமிழ்ந்ததீ
முளிதடஞ் சினமேயு முருங்கெரி யெனப்பற்றி
விளிதரு வயவருடல் வெந்தொழிப் பரந்ததே. (சக)

பரிதிவடி வாள்பிடித்துப் பல்லிரு ளிதழதுக்கித்
திருகுசினந் தலைக்கொளீஇச் செங்கண்க ளுமிழக்
குருதிபா யுகளத்திற் குற்றயிரிற் கிடந்தார்க்கண்
டருகணையக் கொடுங்கூற்று மஞ்சினின் றலறுமால். (சஉ)

சிலைபொரு திணிதடந்தோட் டேர்வேந்தர் செருமலைந்து
கொலைபுரி யுகளத்திற் குடர்பின்னிக் கிடந்ததனைப்
புலவுநா றுடற்றசைவேட் டெண்ணவரும் புள்ளினங்கள்
வலைவனைந்த தெனவெண்ணி வானினிடைச் சுழலுமால். (சஊ)

சிற்றமிகுங் களியானைத் திறல்கெழுபோர் வயவேந்தர்
காற்றரளக் குடைதுணிந்து களத்தினிடைக் கிடப்பனக
ளேற்றெருமை யுகைத்தடரு மிருணிறத்த வெரிகுஞ்சிக்
கூற்றமுயிர்ப் பலியேற்குங் கொள்கலம்போன் றிருந்தனவே.

[வேறு.] இன்ன களத்தி னிரிந்தவ ரல்லாற்
றுன்னின ராவி துறத்தலும் வெங்கூற்
றன்னவன் வாளம ராற்றலு நோக்காப்
பொன்ன கரத்திறை புந்தியி னேர்ந்தான். (கூஎ)

மன்றன் மலர்த்தொடை மன்னவ னெய்தி
வென்றிகொள் போரை விலக்கில மாயிற்
றுன்று நிரைக்கடல் சூழுல கெல்லா
மின்று முடித்திடு மென்ன நினைந்தே. (கூஅ)

மழகளி றன்னவன் மாணுரு நீங்கி
விழைவொடு தம்முரு மேவிய விண்ணோ
ரழகுறு காளைய ரவ்வுரு விட்டோர்
கிழவுரு வெய்திய கேண்மைய ரொத்தார். (கூக)

முன்னுரு மேவிய மொய்கழல் விண்ணோர்
மன்னவ னெய்துபு வாய்மையி னுணுந்
துன்ன லரைத்தெறு தோள்வலி யானு
நின்னை நிலத்திடை நேர்பவர் யாரே. (கூ0)

துன்று களத்தெதிர் துன்னலர் யாரும்
பொன்ற முருக்கிய போர்த்தொழி னீங்கி
வென்றிகொள் வேலவ மின்னவ னாடன்
மன்றன் முடித்தனை வாழிய வென்றார். (கூக)

விண்ணவ ரின்னணம் வேண்டினர் கூறப்
புண்ணுறு வெய்ய புலால்கமழ் வைவே
லண்ணல மர்த்தொழி லாற்றில னுகிப்
பண்ணமை தேரி னிழிந்து பணிந்தான். (கூஉ)

கருணையி னெய்திய காளையை நோக்கி
யருமக மெவ்வுழி யாற்றினு மாங்க
ணுருவொடு வந்தவி யுண்குவ மென்னு
மருவுரு நல்வரம் வாசவ னீந்தான். (கூங)

மிடல்கெழு மேழக மேற்கொளு மேலோ
னுடைதிரை வேலையி னின்னமு தொப்ப
மடிதலில் வெங்கன லின்றியும் வாளா
வடிசில டுந்தொழில் விஞ்சை யளித்தான். (கூச)

அல்ல லுழந்தனு ரெய்தினு நெஞ்சி
னல்லற மெய்தவு நண்ணிய ஞாட்பில்
வெல்படை வேண்டுவ வெய்தவும் வென்றிக்
கொல்சின வெம்பக ரேற்றி கொடித்தான். (கூடு)

தார்புல ராது தயங்கவும் வேண்டி
னூர்கலி வற்ற வமைக்கவு மல்லா
னீரறு பாலியி னெஞ்சி னிணைப்பின்
வார்புன லெய்தவும் வருண னளித்தான், (சுசு)

ஆண்டகைக் கின்ன வளித்தரி வைக்கு
மாண்டகு கற்பை வருத்துவ மென்னுத்
தீண்டின ராவி சிதைந்திடு மாறும்
வேண்டிரு வெய்தவும் விண்ணவ ரீந்தார். (சுஎ)

கண்ணகன் ஞால மளித்த கழற்கா
லண்ணலே யேத்தி யருந்ததி மானும்
பெண்ணமு தத்தை வியந்து பெருஞ்சீர்
விண்ணவர் தம்பதி மேவின ரன்றே. (சுஅ)

இம்பர்மற்றியாதுசொல்லவிளைஞரையழைத்ததென்றான். (கஎடு)

அதிரதர்முதலாவுள்ளவவனிபர்வளைந்துநிற்ப
எதிர்முகிறவழுங்கோயிலெரியினையெங்குமூட்டி
விதுரனுமவனுஞ்சேரவெந்திடமிலவதல்லால்
மதிபிறிதில்லையின்னேவல்விளைந்தெழுமினென்றான். (கஎசு)

செங்கதிரெழுந்துசீறிற்செறியிருணீப்பதுண்டோ
இங்கிவணிருந்தவில்லிலெரியிடவேண்டுமோதான்
வெங்கணையொன்றினுலேவிளிந்திடவென்றுமீள்வேன்
கங்குலினெழுமினென்றுகன்னனுங்கனன்றுசொன்னான். (கஎஎ)

பதிப்பெயர்ந்தேகினாளேப்பகைவரைக்கூடுமாயின்
விதிப்பயனென்னநம்மைவெஞ்சமர்வெல்லவொட்டான்
மதிப்பதென்வேறுகள்ளமாயனேமனையிற்கோலிச்
சதிப்பதேகருமமென்றுசௌபலன்பின்னுஞ்சொல்வான். (கஎஅ)

கொல்லுவதியற்கையன்றுசூழிபறித்தரக்கரோடு
மல்லையிருத்திமேலோராசனம்வகுத்துகாலே
எல்லிடையழைத்துவீழ்த்தியிகலுடன்விலங்குபூட்டித்
தொல்லருஞ்சிறையில்வைத்தறுதருக்குரிமையென்றான். (கஎக)

மாதுலனுரைத்தமாற்றமருகனுமிசைந்துகங்குற்
போதிடையேகமல்லர்வருகெனப்புகன்றுதானும்
நீதியினிருத்துதாழநிலவரைசமைத்தபின்னர்
ஆதிரையிரம்போரரக்கையதனுள்வைத்தான். (கஅ0)

மல்லர்ப்பப்பரவர்தம்மைமற்றதினிரட்டிவைத்தான்
வில்லுடைவீரர்தம்மைவேறதினிரட்டிவைத்தான்
பல்படைவல்லோர்தம்மைப்பதின்மடங்கதனில்வைத்தான்
அல்லிலோர்கடிகைதன்னிலழிவனேயழைக்கவென்றே. (கஅக)

பெரும்பிலவறையவேயின்பிளப்பிலுனிைத்துசூழ்ந்து
அரும்பெறன்மணிகளாலோராசனமதன்மேலாக்கிச்
சுரும்பிமிர்மாலைதூக்கித்தொழிலுடைவிதானமேற்றி
வரம்பிலாவென்றிவேலான்மாறிலாவண்ணஞ்செய்தான். (கஅஉ)

அடியவர்மனத்திலுள்ளவாரிருட்கங்குதீர்க்கும்
நெடியவனிருக்கவென்றுநிலவறைவிரதிற்செய்த
கடியவனியற்கையஞ்சிக்கங்குலுங்கடிதிற்போகப்
படியவர்துயிலும்போகப்பரிதியுமுதயஞ்செய்தான். (கஅசு)

சிரந்தருசுடிகைநாகத்திரண்மணிபலவுஞ்சிந்தி
நிரந்தரமருவிவீழுநிறந்திகழுதயக்குன்றில்
பரந்தெழுமருக்கன்சூழ்ந்தபடரிருட்கங்குல்கண்டு
புரந்தரன்கோயிலிட்டபொங்கொளித்தீபம்போன்றான். (கஅச)

* * * * *

இருந்துயிலுணர்ந்துவேந்தர்யாவருமிரவிற்சற்றும்
வருந்துயிலிலுத்தகண்ணன்வாழ்பெருங்கோயில்புக்கார்
பெருந்துயிலநந்தபோகப்பேரனேதுறந்தமாலும்
அருந்துயிலெழுந்துகாலையருங்கடன்முறையிற்செய்தான். (கஅசு)

மாதவனிருந்தகோயில்வந்தடிவணங்கிமன்னன்
தூதுவராழியங்கைத்தோன்றலேதுளவமாலே
யாதவகுலத்தோரேறேயெழுந்தருள்கென்றுனின்றெம்
மேதகுமரசனென்றூர்முகுந்தனும்விளைந்துசென்றான். (கஅள)

கந்தடகளிற்றுவேந்தன்கண்ணிலாவரசுகங்கை
மைந்தனுமுதலாவுள்ளமன்னருமிவல்லோரும்
தந்திரவகையுமேனையீளுருந்தன்னேச்சூழ
இந்திரனிருக்கையன்னகோயிலூடினிதிருந்தான். (கஅஅ)

நாமவேலரசரோடொல்வகைச்சேனையோடும்
மாமுகில்வண்ணன்வந்தானென்றனர்வரவுகண்டோர்
வீமலர்த்தொடையிலுனும்வேத்திரத்தவனைநோக்கித்
தாமரைத்தடங்கண்மாயன்றன்னேயேவிமினென்றான். (கஅசு)

தன்பெருஞ்சேனைநிற்பத்தண்டொழாயலங்கலானும்
இன்புறுகைத்துவேந்தரிருந்தபேரவையினெய்த
மின்புனர்துவசநாகவிடைநிகர்மனத்திலுனும்
அன்பொடுதிகிரியானேயதன்மிசையிருக்கவென்றான். (கஈ0)

[வேறு.] இறைவனெழிற்கதிர்மணிகளழுத்தியதவிசினிருத்தலுமே
நெறுநெறெனக்கொடுநிலவறையிற்புகுநெடியவனப்பொழுதே
மறலியெனத்தருபனியற்றியவிரகமனத்துணரா
முறுகுசினத்துடனடியதலத்துறமுடுகனத்துறவே. (கஈஉ)

அஞ்சினமஞ்சினமென்றுவினாத்துயரண்டர்பணிந்திடவும்
துஞ்சினமின்றெனவன்பணியின்னேதுன்பமுழந்திடவும்
வஞ்சமனங்கொடுவஞ்சகனின்றிவெஞ்சினனன்றிதெரு
செஞ்சில்வெகுண்டலெகொன்றுபடும்படிநின்றுநிமிர்ந்தனனே. (ககூ)

மல்லரரக்கர்குலத்தொடுபெப்பரர்வாளினர்வேலினர்போர்
வில்லினரிப்படிதுற்றநிலத்தறைமேவியவீரரெலாம்
தொல்லையிடிக்கபர்வற்றுயிரிற்றுறுசடிகையராவெனவே
கல்லெனவுட்கினர்தத்தமுடற்பலகால்கொடுதைத்திடவே. (ககூ)

அற்புதபங்கயநற்பதமுந்தலினக்குழியின்புடையே
சற்பதலந்தொறுமற்றுவிழுந்தனதத்தெடுந்தலைபோய்
மூற்பவனன்பொரமுக்குவடுந்துணிபட்டுமெடங்கியபொன்
வெற்பெனநின்றனர்வெற்றுடலங்கொடிவிற்படைகொண்டவரே.
மேல்வலியற்றெதிர்வீசியெழிற்கருமேகநிறத்திருமால்
கால்விசையிற்படமோதுதலிற்பொருகாமர்புயத்துணைபோய்
நீலநிறக்கவின்வாசவன்வச்சிரநீள்படையிற்சிறகீர்
மால்வரையொத்தனர்வாகைபெறக்கதிர்வாள்களெடுத்தவரே. (ககஎ)

வெயில்விடைபைத்தலையமளிமிசைத்துயில்விபுதர்களுக்கரியோன்
பயிலவுதைத்தலினவர்களுரத்திடைபதமலர்பட்டுருவா
மயில்கடவிக்கடவுளர்பகையைக்கதிர்மருடமூருக்கியவேள்
அயில்கொடுதுத்தியெடுவையொத்தனரயில்களெடுத்தவரே. (ககஅ)

மின்சுடிகைப்புயகங்கள்வெருக்கொளுமெங்கருடக்கொடியோன்
வன்பதபற்பகங்கொடெடுத்துயர்வண்ணகனத்திடலான்
முன்புவனத்திடைவந்துகவிக்கிறைமொய்ம்புணரப்புகல்போ
தென்புமலைக்குறுபண்டையெடுத்தனரெஞ்சியபப்பரரே. (ககக)

மைந்துபடைத்துயர்பஞ்சவர்சொற்படிவந்தமலர்க்கழலால்
உந்தியுதைத்துடலம்புதையப்பிலமொன்றியொளித்திடலால்
அந்தணன்மூற்பகல்வந்துபுடைத்திடவஞ்சிநிலத்திடைவீழ்
விந்தமொடொத்தனர்வன்குழியிற்றிகழ்வெங்கணரக்கருமே. (ககஅ)

அந்தவிடத்தெறிபம்பரமொத்துடலஞ்சுழலச்சுழலக்
குந்தியுறித்தயிருண்டவர்பொற்கழல்கொண்டுசுழற்றுதலான்
மூந்தமரர்க்கமுதந்தரமைக்கடன்முன்சுழலச்சுழலும்
மந்தரமொத்தனர்குந்தமெடுத்தெதிர்வந்தமலத்தவரே. (ககூக)

மூட்டியதொல்குருதிக்கடன்மல்கலின்மூட்டிகொள்பல்விரலான்
கெட்டலைம்வகிர்பட்டதினுள்விழுந்தர்செய்கொல்வினையால்
மட்டறவல்விறலுற்றெதிர்செல்கவிமைக்கடலெல்லையிலே
இட்டனகல்வனையொத்தனர்வெல்கழலெக்குலமல்லருமே. (உ00)

எப்புவிநிற்பனவெக்கிரிநிற்பனவெக்கடனிற்பனவென்
றிப்புவனத்துயிர்மூற்றுமயக்குறவுட்கினரெய்த்திமையோர்
மைப்புயலொத்தொளிர்பச்சைநிறத்தினன்வர்க்கமலர்க்கழலால்
ஒப்பறமட்குழியுற்றவரைப்படவொற்றியிதித்தலுமே. (உ0க)

கொண்டன்முழக்கெனவம்புவியைக்கடல் சொண்டெழுதற்கெதிரு
சண்டமுழக்கெனவன்பவனக்கிளைதந்தமுழக்கெனவே [ம்
வண்டினமொய்த்தெழுவண்டுளவத்தொடைவண்டுவைத்திருமால்
அண்டமுகட்டுறநின்றுரிரித்தனனங்கணெருப்பெழவே. (உ0உ)

ஒன்றுபடக்கடலம்புமுகப்பனவும்பர்குலத்தருவும்
சென்றுமுறிப்பனவெண்டிசையிற்குலசிந்துரமெற்றுவெண்
குன்றமுடைப்பனபைம்பொனூரக்கிரிகொண்டெதிரிப்பனவால்
அன்றுதனித்தனிநின்றுமலைத்தருளங்கைகள்பற்பலவே. (உ0ரு)

துகிரிதழ்வைத்துகல்வளைகண்முழக்கினதொடர்சிலகைத்தலமே
அகிலம்வெருக்கொளவரிமழுவெற்றினவுசிலகைத்தலமே
புகலும்வடிக்கணையுவணமெடுத்தனபொருசிலகைத்தலமே
திகழ்விசயத்தொடுசிலைகள்குனித்தனசிலசிலகைத்தலமே. (உ0ச)

வெங்கணையத்திரள்குந்தநிறப்படைவெம்புமுலக்கைகள்போர்
பொங்கியவச்சிரமுந்துகலப்பைகள்புண்கழுவர்க்கமயில்
எங்குமலைத்தெழுசெஞ்சுரிகைத்திரடண்டமிவற்றினெடும்
தங்கியசக்கரபந்திதரித்தனதண்டலகைத்தலமே. (உ0கி)

மேலெழுமங்கதிர்வாளுறைபோம்படிவீசினவர்ன்படையே
தோலினமேந்தினரீள்கவணேந்தினசோரிகள்சோர்ந்திடவே
ஞாலமெலாம்பொருதோமரம்வாங்கினநாவொருமூன்றனவாம்
சூலமொடோங்கினபாசமொடோங்கினசூழ்சிலபூங்கரமே. (உ0சு)

சிலசிலகைத்தலமவிர்கழலிற்பலதிணிகழல்கட்டினவே
சிலசிலகைத்தலமறுபுயத்திடைசெறிதொடையிட்டனவே
சிலசிலகைத்தலமணிகொளுரத்திடைபணிகடிருத்தினவே
சிலசிலகைத்தலம்விரல்கொசெட்டினசெறிர்திகைத்திடவே. ()

மாயிருஞாலமெலாம்வெளியாயொளிர்மரகதகோபையுறப்
போயிருபாலும்வளைந்துவளைந்தெதிர்பொருமுனைவெம்படையோ
டாயிரமாயிரமங்கைபுறப்படவண்டருமாதவரும்
பாயிரநான்மறைபாடியடியந்துபணிந்துபுகழ்ந்தனரே. (உ0அ)

ஆரணனேயரனேபுவனங்களனேத்தையுமன்றுதவும்
காரணனேகருணாகரனேகமலாசனிகாதலனே
வாரணமேபொதுவேயொருபோிடவந்தருளும்புயலே
காரணனேமுனியேன்முனியேலெனநாகர்பணிந்தனரே. (உ0கூ)

மாதவனேமுனியேலெமையாளுடைவானவனேமுனியேல்
யாதவனேமுனியேலிதயத்திலிருப்பவனேமுனியேல்
ஆதவனேமுனியேன்மதிவெங்கனலானவனேமுனியேல்
நீதவனேமுனியேன்முனியேலெனநின்றுபணிந்தனரே. (உ0ஐ)

கங்கைமகன்கதிரோன்மகனம்பிகைகாதன்மகன்றநயர்
அங்கவையின்கணிருந்தகரா திபரடையவெழுந்தடைவே
செங்கைதுவித்தசிரத்தினராயுணர்வொன்றியசிந்தையராய்
எங்கள்பிழைப்பினையின்றுபொறுத்தருளென்றுபணிந்தனரே. ()

கண்ணபொறுத்தருள்வெண்ணெயருந்தியகள்வபொறுத்தருள்கார்
வண்ணபொறுத்தருள்வாமபொறுத்தருள்வரதபொறுத்தருணீ
திண்ணமனத்துணர்வொன்றுமிலாதவர்செய்தபெரும்பிழையென்
றண்ணல்மலர்க்கழல்சென்னியில்வைத்தெதிரன்றுதுதித்தனரே.

தேவருமும்வாசவனுந்தவருந்திசைமுகனுராதிபரும்
பாவருமன்பிலைடாயிரகாமமுமெண்ணியிறைஞ்சுதலால்
மூவருமொன்றெனகின்றருணைதனுமுனிவுதவிர்த்தருளா
நீவருமண்டமுறுந்திருமேனியொடுங்கினண்மீளவுமே. (உகக)

தன்னிலுயர்ந்தவர்யாருமிலாமுன்சிலசதுர்மறையின்படியே
எந்நிலமுந்திருவடியின்மறைந்திடவிப்படிநின்றிடலும்
பின்னையுமஞ்சியயர்ந்திலனெஞ்சபெயர்ந்திலனசனமும்
சென்னியிறுங்காட்டவைத்திலன்வண்புகழ்சிறிதுமொழிந்திலனே. ()

தொல்லைவயின்கணிருந்தராதிபதுன்மதியாலெனைநீ
கொல்லகினைந்தநுகன்றெனவன்றிறல்கூறினனெம்பெருமான்
ஒல்லையினின்குலமுற்றுமடிந்திடவுற்றமலங்தார்கணத்
தெல்லையின்வெஞ்சமர்தானுவன்யாவருமேறுவர்வானுலகே. (உகஉ)

அஞ்சினனின்னையழித்திடகின்னுடனன்றபெருஞ்சமர்வாய்
வெஞ்சுடராயுதமொன்றுமெடுக்கிலமென்றுவிளம்பியதும்
எஞ்சமலெய்தெதிர்வந்துயிர்கொள்ளுதுமென்றுதனித்தனியே
பஞ்சவர்கூறியவஞ்சினவாசகமும்பழுதாமெனவே. (உகங)

என்றுரையாடியெங்கடல்வண்ணனெழுந்தருளப்பிறகே
சென்றனரெம்முடிமன்னவரும்பணிசேர்கொடியோனையலார்
நின்றுபசாரமுரைத்தவர்தம்மைநிறுத்தியகந்தரமே
வன்றிறல்கர்பிராஞ்செகூறினண்மற்றெருவாசகமே. (உகச)

வண்மையினுலயரங்கர்குலாதிபமிகுலம்வாழ்வுறவர்
தண்மையினுலயர்மன்னவரைவருமுன்னிலுனக்கிலையோர்
பெண்மையினுலயர்குந்தியிற்றிடைபெருமையினுவிதயத்
திண்மையினுலயர்கின்னையுமன்பொடினகரனல்கினனே. (உகஎ)

வயுகெங்கொடிமுரசுடையோனெழிற்றருமன்றாவே
வாயுவழங்கினன்வீமனைகல்கினன்விசயனைவாசவனும்
ஆயுகழ்ந்திவேதமருத்துவன்பொடனித்தனர்செக்
தெயுவெனுந்திறனகுலனையுஞ்சகதேவனையும்பெரிதே. (உகஙு)

அந்தணன்முன்தருமந்திரமைந்தினிலறவையுங்கடவுட்
குந்திபயந்தனள்யானினியென்பலகூறுவதுங்களினீர்
இந்தநிலம்பெறுவீர்தவிர்கிற்பெறயானினிவேறுரியார்
வந்தினிதம்பியர்தம்மொடுசேர்கெனமாயன்மொழிந்தனனே. ()

[வேறு.] கன்றுவிளவின்கனியுகுத்துங்கழையானையின்கண
மழைத்தும், குன்றுன்மழையின்குலந்தடித்துங்குலவுஞ்செல்வக்கோ
பாலா, இன்றுவெனதுபிறப்புணர்ந்தேனென்றன்புருகியெம்பியர்பா
ல், சென்றுலெண்ணேயறியச்செகத்தாரென்றுஞ்சொலியாரோ. (உஉக)

ஆரென்றறியத்தகாதவெனையரசமாக்கிமுடிசூட்டிச்
சீருந்திறமுந்தனதுபெருந்திருவுமெனக்கேதெரிந்தளித்தான்
பாரின்றறியதூற்றுவர்க்கும்பழிதீர்வென்றிப்பாண்டவர்க்கும்
போரென்றறிந்துஞ்செய்க்கன்றியிபோற்றூதவரிற்போவேனே. ()

இரவிக்குரியதிருமதலையிவ்வாறுரைக்கவிசைவண்டு
விரவிப்பயிலுந்துழாய்முடியோன்வேறூர்மொழியும்விளம்பாமல்
உரவித்தடந்தோளுரவோனேயெகென்றருளியொருசார்வெம்
புரவித்தாமாநின்றூனவருகென்றழைத்துப்புகல்கின்றூன். (உஉசு)

போயேகானம்பலதிரிந்துபுகன்றவிரதம்பொய்யாதோர்
ஆயேவந்தபாண்டவர்களைந்தூர்வேண்டமறுத்ததற்குச்
சேயேனையசிலைமுனிவன்சேயேகாளைச்செருக்களத்தில்
நீயேகரியென்றெடுத்துரைத்தானெடியோன்றூளவமுடியோனே. ()

ஆவுவுன்தாண்மைக்குநிகரவணிதலத்தில்வேறுண்டோ
ஞாலதிபனேபோர்க்களத்திலுகக்கொடியோன்பணிந்துன்னைச்
சேனபதியாகென்றூலுஞ்செலுத்தேனென்றுமீமறுத்தி
யாலையவ்வாவுமற்றவர்பாலுனக்குமன்புண்டே. (உஉடு)

ஆயோதனத்திலடலரியேறனையான்றன்னையிவ்வாறு [ன்
மாயோனுரைத்துத்தன்விரலின் மணியாழியைமண்ணிடைவீழ்த்தா
சேயோனதனையெடுத்தவன்றன்செங்கைகொடுப்பவாங்காமல்
தூயோர்கோள்பரிதிதனைச்சூழ்ந்ததகல்வான்மீதென்றே. (உஉசு)

வரித்தாமரைக்கட்டிருநெடுமால்வான்வாய்நோக்கவரிவிற்கைப்
பரித்தாமாவுமாழியுடன்பரிதிவடிவந்தனைப்பார்த்தான்
கிரித்தாழ்கவிகைக்கருங்கல்வன்கிளர்தூன்முனிவன்மைந்தனையும்
பிரித்தானவனுஞ்சூளுற்றூனென்றூரிருந்தபேரவையோர். (உஉஎ)

தனிவந்தகலுந்தூதனைப்போய்த்தானேயணுகித்தடஞ்சாப
முனிவன்புதல்வன் மோதிரந்தொட்டருஞ்சூண்முன்னர்மொழிகின் [ரூன்
இனிவந்துறவாய்நின்றூலுமெங்ஙன்றெளிவதிவனையெனத்
துனிவந்தரசர்முகநோக்கிச்சொன்னனிடியேறன்னானே. (உஉஅ)

துளியார்மதுவின்வலம்புரித்தார்த்துரியோதனன்றூன்சொல்லியதும்
ஒளியாரவையில்வாள்வேந்தரொருவர்க்கொருவருரைத்தனவும்
களியானையனன்செவிப்படலுங்கலங்கிச்சித்தமிவரென்னைத்
தெளியாவண்ணம்பேதித்தான்றிருமாலென்றேசிந்தித்தான். (உஉசு)

திண்ணந்துளவமுடியோனுந்தனித்தங்கிருந்துதன்மனத்தின்
எண்ணம்பலித்ததெனமகிழ்ந்தேயினையோன்றனக்குவிடைகல்கி
விண்ணின்றமரர்மிகத்துதிக்கவிதுரன்மனையின்மேவியபின்
திண்ணங்கடவட்குலவரசன்வருமாறறிந்துசிந்தித்தான். (உசூ)

அந்தக்கணத்தில்வந்திறைஞ்சமாகண்டலனேமுகநோக்கிக்
கந்தத்துளவமுடியோனுங்கண்ணுங்கருத்துங்களிகூரத்
தந்தத்தொழிலினரிசமந்ததவிரினிடையேயுடனிருத்தி
முந்தக்கருதுகின்றவினைமுடிப்பானுபாயமொழிகின்றூன். (உசுஎ)

கிரியின்சிறகையரிபடையாய்கேண்மோவாண்மைக்களமீதில்
வரிவெஞ்சிலக்கைவிசயனுக்குமாறுமுனிந்துவருகின்ற
எரியுங்கல்வாய்வீடவரவொன்றிவனுக்குற்றபகையான
அரியின்புதல்வன்றனக்கொருபோம்பாகியதார்மியாதார். (உகஉ)

கன்னன்விசயன்றனைக்கொல்விற்கடற்பார்முழுதுங்கண்ணில்லா
மன்னன்புதல்வன்றனக்கேயாமொழிந்தோர்தாமுமடிந்திவார்
முன்னஞ்சூதின்மொழிந்தபகைமுடியாதிருக்கினவர்க்கன்று
நின்னெஞ்சறியாதனியினக்கேவசையுநிலாமே. (உகங)

கவசங்கனககுண்டலமென்றிரண்டுபேனியிற்கற்பாந்த
திவசம்பொரினுங்கன்னனுயிர்செகுப்பார்மண்ணிற்சிலருண்டோ
அவசங்கிளருருத்துணைவாற்றக்களத்திலெருக்குத்
துவசம்படத்தோணபடம்பயந்ததுணைவாவின்னேசொன்னேனே.

வல்லார்வல்லகூலருருக்குமறதூலவர்க்குங்கடவுளர்க்கும்
இல்லாதவர்க்குமுள்ளவர்க்குமிரந்தோர்தமக்குந்துறந்தவர்க்கும்
சொல்லாதவர்க்குஞ்சொல்பவர்க்குஞ்சூழ்ந்சமயாதிபர்களுக்கும்
அல்லாதவர்க்குமிரவிமகனாயதானமளிக்கின்றான். (உகஇ)

மைத்தற்றாறுதிரிவேண்டின்வல்லேமுனிவர்வடிவாகிச்
சந்தப்பனுவவிசைமாலைத்தாருகரனைவிளைத்தெய்தி
அந்தக்கவசகுண்டலங்களளிப்பாயென்றுலவுரைஞ்சும்
இந்தப்புவியின்மறத்தியானுயிரேயெனினுமீந்திவொன். (உகசு)

இரண்டுமவன்பாணிகவரினிருந்தேரூர்ந்திப்படியரசர்
திரண்டுவரினும்வெஞ்சமரிற்றிண்டோர்விசயனெதிர்நில்லார்
முரண்டுபொருவிற்கன்னனுந்தன்முன்னேயெய்திமுடிதறிப்
புரண்டுறியுமெனவணங்கிப்புத்தேளரசன்போகின்றான். (உகள)

[வேறு.] தண்டோளெனக்குனிந்துடலலமரத்தாளிணைதளர்ந்து
தள்ளாடக், கண்டியாவருங்கைதொழுக்கவித்தகைக்குடையுடன்கங்
கைநீர்துளையை, மொண்டுமேலுறச்சொரிந்ததாமெனகனாதிரையுட
ன்மூப்பொருவடிவும், கொண்டதாமெனவொருமுனியாகியேகொற்
றவன்வாயில்சென்றடைந்தான். (உகஎ)

அடுத்தாணமும் பரிசிலுமிரவலர்க் கருளுடன் மூற்பகலளவும்,
கொடுத்தாயகன் புகுந்தனஞ்சோறீ குறுகுதியென்றவன்கோயில்,
தடுத்தவாயிலோர் மீளவுமுணர்த்தவிற் றலைவனுந்தருகெனவினாவி
ன், விடுத்தகான்மறை முனியையுமன்காண்டலும் வேந்தனுந்தொழு
தடிவீழ்ந்தான். (உகஅ)

என்னமாதவம்புரிந்தனன்பரிந்துகீயீண்டெழுந்தருளுதற்கென்று,
பொன்னிஞ்சனத்திருத்தி மெய்யருளுடன் பூசையுமுறைமுறைபுரி
ய, அன்னவேதியன்றளர்ந்தவெள்ளடையிலைலானதேபிற்பகலென்
று, சொன்னவேலையினைத்துனக்களிப்பனீசொன்னவையாவையு
மென்றான். (உசஅ)

அருத்திமீ தல்பொற்சுரதருவினுக்குமற்றரி துரீயளித்தியோவென்
று, விருத்தவேதியன்மொழிந்திடாகைத்துரீமெய்யுயிர்விழைத்திருத்
தாலும், கருத்திலேனெக்களித்திலேனெனினெதிர்கறுத்தவர்கண்
ணினேசிவப்ப, உருத்தபோரினிற்புறந்தருநிருபர்போயுறுபதமுறுவ
னென்றுரைத்தான். (உசக)

வந்தவந்தணன்கவசகுண்டலங்களைவாங்கிநீவழங்கெனக்கென்ன
த், தந்தனன்பெறுகெனவவன்வழங்கவிண்டலத்திலோர்தனியசரீரி,
இந்திரன்றனை விரகிருன் மாயவனேவினுன் வழங்கனீயெனலும்,
சிந்தையின்கணேர்கலக்கமற்றளித்தனன் செஞ்சுடர்த்தினகரன்சிறு
வன். (உசஉ)

அண்டர்யாவரு மல்மழை பொழிந்தன ரந்தரதுந்துபி யார்ப்பக்,
கொண்டல்வாகனன்கொண்டமெய்யொழிந்ததன் கோலமெய்யுட
ன்வெளிநின்றனன், கண்டமொமனமுருகியேகளித்திடுங் கன்னனுக்குக்
நெடுங்கடவுள், மண்டுபோரினில்வயந்தருமிதுவெனமற்றொருகொற்
றவேலெடுத்தே. (உசசு)

வெலற்கருந்திறல்விசயன்மேலொழித்துரீவெஞ்சினமடங்கல்போ
னெஞ்சில், கலக்கமொன்றறப்பொருதிறல்புனைந்திடுகடோற்கசக்கா
ஸதன்னுயிரே, இலக்குவந்தெதிர்மலைந்தபோதிதற்கெனவேவென
மறையுயுமியம்பிச், சொலற்கரும்புகழ்ச்சுரபதிகொடுப்பவத்தோன்
றலுந்தொழுதுகைக்கொண்டான். (உசஎ)

நிரந்தரம்புகழ்நிலைபெறுங்கன்னனெஞ்சமகிழ்ந்தவணிறுத்திப்,
புரந்தரன்பசுந்தண்டொயணிந்திடும்புயல்வணனிருந்துழிப்போந்தே,
இரந்துசென்றுதான் மொழிந்ததுமவ்வளலீந்ததுமாங்கவற்கைசத்தா
ன், வரந்தருந்திருமாலதைவினவியவ்வாசவன்றனக்குரைவழங்கும்.

உண்மையாகவெஞ்சமர்முகத்தெறிபடையொன்றும்வந்துடலுற
வொட்டாத், திண்மையாலுயர்கவசகுண்டலங்களைச்சென்றிரந்தவற்
கிவன்கொடுத்தான், எண்மையாயினுங்கினேஞரேயேற்பினுமியல்பி
லாப்புன்செல்வரீயார், வண்மையாள்தம்மாருயிர்மாற்றலார்கேட்பி
னுமறுக்கிலாரென்றே. (உசஅ)

வாசவன்றனக்குவிடைகொடுத்ததன்பின் வந்தகாரியந்தனைமுடிப்
பான், கேசவன்றனதுதாதையோடுதித்தகேண்மைகூர்தெரிவையை
க்கிட்டித், தேசவன்றந்தகுரிசில்பால்விரைவிற்செல்கெனப்பயந்தசே
யிழையும், பாசமுன்னுறமாலேவலாற்றனது பாதபங்கயஞ்சிவப்பித்
தாள். (உசஎ)

வந்துகுந்திநின்கோயிலெய்தினளெனவாயிலோருரைத்திடமைந்த
ன், மூத்தமன்புடன்றொழுதெதிர்கொண்டுகென்மூறைமையாலாசன
த்திருத்தி, இந்துவின்கதிர்கண்டுமேன்மேலுமுற்றிரங்கிவான்கைக
டந்தேறும், சிந்துவெண்டிரைச்சிந்துவொத்திருகுறந்தெரிவையோ
டொகிலசெப்பும். (உசஅ)

அன்னேவந்ததென்னருந்தவப் பயனெனவன்பிலுலின்புறவணங்கி, என்னேவந்தவாறென்னமற்றவளுமேயீன்றதாயானுனக்கென்று, முன்னேவந்தொருமந்திரந்தவமுனி மொழிந்தருங்கதிரவனருளால், பின்னேவந்ததும்பேழையில்விடுத்ததும்பிழையிலாதுணர்த்திடக்கேட்டான். (உசக)

மாயனூர்விரகிதுவெனமனத்தினின்மதித்துவந்தளித்திடும்வள்ளல் நீயாரெனேப்பயந்தவளென்னினுநின்மொழிநெஞ்சுறத்தேறென் பேயனூர்சிலர்பேரறிவின்மையாற்பெற்றதாயெனக்கெனவந்து தூயநாகரினமைந்ததோர்துகிலாற்றுன்பமுற்றென்புருவாளூர். ()

அடாதுசெய்தவர் படாதுபட்டன ரெனுமங்கர்கோனருண்மொழி கேட்டுத், தடாதவன்புடைக்கெடாததூமொழிபகர்தையலுமையலிற் றவிர்ந்து, படாமதென்கையிற்றருகெனவருதலும்பயந்திலேனெனி னெனேமுனியென், றெடாவிரித்தலேத்துடற்படப்போர்த்தெதிர்ன் றதாயாமெனவிருந்தாள். (உருக)

* * * * * *

வருகவென்மதலாயினருளாவருநின் மலரடியன்பிலுல்வணங்கி, உரிமையான்மனமொத்தேவலேபுரிய வொருதனிச்செயலகோலோச்சி, அரசெலாம்வந்துங்கடைத்தலேவணங்கவாண்மையுஞ்செல்வமும் விளங்கக், குருகுலாதிபர்க்குங்குரிசிலாய்வாழ்வுகூர்வதேகடனெனக் குறித்தாள். (உருஉ)

பெற்றநீர்மகவண்பிலாமையோவன்றிப் பெரும்பழிநாணியோவிடுத்தீர், அற்றைநாட்டொடங்கியென்னேயின்றளவுமாருயிர்த்துணேயெனக்கருதிக், கொற்றமாமகுடம்புனேந்தரசளித்துக்கூடவுண்டுரியதம்பியரும், சுற்றமானவருமென்னடிவணங்கத்தோற்றமுமேற்றமுமளித்தான். (உருச)

மடந்தைபொற்றிரு மேகலேமணியுகவே மாசறத்திகழுமேகாந்த, இடந்தனிற்புரிந்தேதானையர்ந்திருப்பவெடுக்கவோகோக்கவோவென்றன், திடம்படத்திடவேலிராசராசனுக்குச்செருமுனேச்சென்றுசெஞ்சோற்றுக், கடன்கழிப்பதுவேயெனக்கினிப்புகழுங்கருமமுந்தருமமுமென்றன். (உருடு)

பின்னேயும்பல்சொன்மொழிந்தபின்பலவும் பேசியென்பூசலோவினேந்த, துன்னிநீரிங்குவந்ததென்கரவாதுண்மையாலுள்ளவாறுணர்மின், என்னமைந்தனுமிப்பரிசுளுளைப்பவீன்றதத்துறந்தவன்றையினும், அன்னேநெஞ்சழிந்தேயிருகணீர்சொரியவலறிவாய்குழறினேனந்தழுதான். (உருஎ)

ஆண்மொமகனுமிருகணீர்துடைத்தவ்வன்னேயைப்பன்முறைதேற்றி, மூண்டவல்வினேயின்பயனலாதியார்க்குமுயற்சியால்வருவதொன்றுண்டோ, வேண்டுமெய்யாவையுமேதருகுவேனீரும் வேண்டியவேண்டுகவென்னப், பாண்டவின்றிருமாமனேவியுமகற்குப்பண்பிலுலின்னனபகர்வாள். (உருஏ)

பார்த்தன்வெஞ்சமரினின்னுடன்மலைந்தாற்பகைப்பெரும்பார்த்தள
ம்பகழி, கோத்தலும்பிழைத்தான்மறித்துநீவிடுத்துக் கொல்லலென்
றொருவரங்குறித்தாள், வாய்த்தமற்றவர்களிலைஞரென்றவனைமலைய
லென்றொருவரங்குறித்தாள், மூத்தவன்காதலிலைஞர்தம்பொருட்டா
ன்மொழிந்தமைகேட்டிவைமொழிவான். (உடுச)

தெறுகணையொன்றுதொடுக்கவுமூனைந்துசெருச்செய்வோன்சென்
னியோடிருந்தால், மறுகணைதொடுப்பதாண்மையோவலியோ மான
மோமன்னவர்க்கறமோ, உறுகணையொன்றேபார்த்தன்மேற்றொடுப்ப
லெழிந்துளோருய்வரென்றுரைத்தான், தறுகணரலர்க்குந்தறுகணை
வர்க்குந்தண்ணளிநிறைந்தசெங்கண்ணன். (உடுக)

பெருவரமிரண்டும்பெற்றபின்றன்னைப் பெற்றதாயினைக்கரங்குவி
த்துத், தருவரமெனக்குமிரண்டுளவுலகிற்சராசரங்களுக்கெலாந்தாயீர்,
வெருவருமமரிற்பார்த்தனுலடியேன்வீழ்ந்தபோதவனிபரறிய, மருவ
ருமூலப்பாலெனக்களித்துந்தமகனெனும்வாய்மையுமுரைப்பீர். ()

உய்வருதிறல்வெம்போர்மூடிப்பளவுமுமக்கு நான்மகனெனுந்தன்
மை, ஐவருமறியாவண்ணநீர்காப்பீரல்லதங்கவர்சிறிதறியின், மைவ
ருங்கடற்பாரனைத்தையுமெனக்கே வழங்குவர்வழங்கிலுல்யானென்,
கைவருந்தூணைவன்றனக்கலால் வழங்கேன்கடைப்பிடிகருமமீதென்
றான். (உசுக)

என்றலுமதுகேட் டுன்றதாயொக்குமென்று கொண்டிவ்வரநேர்ந்
து, வன்றுயர்மேன்மேல்வளரயான்றளராவகையுயிருனக்குமுற்பெய
ர்வு, தென்றினியெனத்தன்கண்கணீர்சொரியவினைந்துகைந்தழுதழு
திரங்கி, என்றருண்மதலைதனைத்தழீ இநிறுத்தியாதவனிருந்துழிச்செ
ன்றாள். (உசுஉ)

கண்ணனுங்குந்திகன்னிலைடுரைத்த கருத்தெலாந்திருத்துமாக்கே
ட்டாங், கெண்ணமுமுடிந்ததெனமகிழ்ந்தந்தவணங்கையுமில்லிடை
யிருத்தித், தண்ணளியுடன்றன்பின்வருநிருபர் தம்மையுமுறைமு
றைநிறுத்திப், பண்ணமைதடந்தேர்மீதுகொண்டன்றேபாண்டவரு
றைநகரடைந்தான். (உசுங)

தூதுபோயரவத்துவசனேறுதிசொன்னதுமறுத்தவன்சினந்து,
மோதுபோர்புரியத்துணிந்ததும்வியதுரன்மூரிவில்லிறுத்ததுங்கும்,
போதுபோர்வஞ்சம்வினைத்ததுங்கன்னன் புரந்தரற்கீந்ததும்பயந்த,
மாதுபோய்வரங்கள் பெற்றவையொழியமற்றெலாமைத்துனற்குரை
த்தான். (உசுச)

ஸ்ரீ

நைடதச்சுருக்கம்.

[நிஷதம் என்பது ஓர்நாடு, அந்நாட்டையாள்பவன் நைஷதன் [நளன்]; அவனைக்குறித்துச்செய்ததால் நைஷதம். இதுவடதூன் மூடிபு. வடமொழியில் நளனது சரித்திரத்தைச்சொல்லும் ஓர் காப்பியத்திற்குக் கொள்ளப்பட்ட இப்பெயரே அதன்வழிநூலாகிய இதற்கும் பெயராக்கொள்ளப்பட்டது [நன்-பாயிரம்-சூ. சக]. இப்பெயரின் இடைநின்ற ஷ-ட ஆயிற்று. சுருக்கியது-சுருக்கம். நைடதத்தின் சுருக்கம் எனவிரியும்.]

பாயிரம்.

தழைவிரிகடுக்கை.....வைப்பாம்.

[இதனுல் எடுத்துக்கொண்டகாப்பியம் இடையூறின்றி இனிது முடிதற்பொருட்டு உயர்ந்தோர் வழக்கத்தின்படியே கவி கடவுள் வணக்கஞ்செய்தல் சொல்லப்படுகின்றது.]

(இ-ள்.) தழை-செழித்த, விரி-மலர்ந்த, கடுக்கை-கொன்றைமலர்களாலாகிய, மாலை-மாலையையுடைய, தனி-ஒப்பில்லாத, முதல்-பரமசிவனுல், சடையில்-சடையின்கண், சூடும்-சூடப்பட்டிருக்கிற, குழவி-குழந்தையாகிய, வெள்-வெள்ளிய, திங்கள்-சந்திரனை, இற்ற-ஒடிந்த, கோட்டது-(தன்) கொம்பினது, குறையென்று-சேஷமென்று, எண்ணி-நினைத்து, புழை-தொளையையுடைய, நெடு-நெடிய, கரத்தால்-துதிக்கையினுலே, பற்றி-பிடித்து, பொற்பு-அழகானது, உற-பொருந்த, இனைத்து-(அதிற்) பொருத்தி, நோக்கும்-பார்க்கின்ற, மழை-மழைபோல்கின்ற, மதம்-மதத்தையுடைய, களிற்றின்-யானைமுகக்கடவுளுடைய, செய்யமலர்-செந்தாமரைமலர்போலும், அடி-திருவடிகளை, சென்னி-தலைமேல், வைப்பாம்-(நாம்) சூடிக்கொள்வாம் (எ-று.)

தழை விரி என்கிற பெயரெச்சத்தொகைகளடுக்கிக் கொன்றை மலரென்கிற வினைமுதற்பெயர் கொண்டன; "மூவா முதலாவுலகம் மொருமூன்றுமேத்த" என்பதில் பெயரெச்ச வெதிர்மறைகளடுக்கி வினைமுதற்பெயர் கொண்டமைபோல. எல்லா அவயவங்களிலு முதன்மையாகிய தலை யானைத்தலையாயிருத்தல்பற்றி விநாயகக்கடவுளை யானையென்றார். பலமலர்களினுந் தாமரைமலர் சிறந்தமைபற்றி மலரெனப்பட்டது. "பூவெனப்படுவதுபொறிவாழ்பூவே" என்பதனுலுமறிக. தந்தைக்கு மூத்தபிள்ளையின்மேலுந் தாய்க்கு இளையபிள்ளையின்மேலும் அன்புமிகுத லுலகியற்கையாதலாற் பரம

சிவனிடத்தே விநாயகக் கடவுளுக்கு விளையாட்டுச் சொல்லப்பட்டது; "மூத்தமகனிடத்தார்வ மீன்றெடுத்தபிதாமகற்கு முதிருமாற்றால்" என்பதனானுமறிக. பிறையைக் கொம்பின் குறையென்று மயங்கினமையால் மயக்கவணியாம். இது பெரும்பாலுமுதற்சிறும் சான்காஞ்சிரும் விளச்சிர்களும் மற்றை சான்கு மாச்சிர்களுமரிய வடிகளால்வந்த ஆசிரியவிருத்தம்.

இப்பாட்டிற்கு இயற்றமிழாசிரியர் இராமாநுஜ கவிராய ரியற்றிய உரை வருமாறு:—

(இ-ள்.) தழைவிரிகடிக்கைமாலைத்தணிமுதல் - (இடையிடை) பச்சிலையிட்டுத்தொடுக்கப்பட்டு (வாடாமலே) விரிந்துவிளங்கா நின்ற கொன்றைமாலையைத்தரித்த ஒப்பற்றகடவுளாகிய ஈச்சுரரானவர், சடையிற்சூடுங் குழவிவெண்திங்கள்-சடையிலேதரிக்கப்பெற்ற பிள்ளைத்தன்மையையுடைய வெண்மையாகிய இளம்பிறையை, இற்ற கோட்டதுகுறையென்றெண்ணி - தமது ஒடிக்கப்பட்டகொம்பினதுகுறை யீதென்றுநினைத்து, புழைநெடுங்கரத்தாற்பற்றி - துவாரத்தோடுகூடி நீண்ட துதிக்கையிலேபிடித்து, பொற்புறவினைத்து நோக்குமழைமதக் களிற்றின் - அழகுபொருந்தும்படி இயைத்துப் பாராநின்ற மழைபோற்பெய்யுமதத்தாலையையுடைய யானையினது, செய்யமலரடிசென்னிவைப்பாம் - சிவந்தமலர்போன்றதிருவடிகளே யெங்கள் சிரசுகளுக்கு (அணியாகத்) தரிப்போம் (யாம்), (எ-று.)

தனிமுதல் என்றது-இன்னுரெனவிளங்காததனிலே கடுக்கைமாலையென்றது விளக்கிற்று. தழை-பச்சிலை; "புலராப்பச்சிலையிடையிடுதொடுத்தமாலை" என்பது திருமுருகாற்றுப்படை; ஆதலால், அதுமாலைகட்டுதற்கு இலக்கணம்எனக் காண்க. திங்களென்றது முழுமதியாதலாற் குழவியென்றது இளம்பிறையெனவிளக்கிற்று. இற்ற என்றது செயப்பாட்டுவினை, இவரொடிக்க ஒடிந்ததாதலால். இது மரபுவழுவமைதி; என்னெனின், இந்நூலுடையார் வழிபடுகடவுளை வாழ்த்தும்வாழ்த்து இதுவாதலால் அக்கடவுளைமதத்திலேப்பருவமுடையவராக வாழ்த்தினர்; அந்தப்பருவத்தே அவர்க்குக்கொம்பிரண்டு மிருந்தன; பின்பு பாரதகதையை மகமேருவிலெழுதத்தொடங்கியபோது ஒரு கொம்பையொடித்து எழுத்தாணியாகக் கொண்டெழுதினாதலாலெனக்காண்க. புழை - துவாரம்; கரமென்றது கையாதலால், புழையென்றது துதிக்கையெனவிளக்கிற்று. பொற்பு - அழகு. மழைமதம் - மழைபோற்பெய்யும்மதம். செய்யமலரடியென்றதனிலே களிறென்றது யானைமுகத்தினையுடைய கடவுளென்பது விளங்கிற்று; யானைக்குக்கறையடியாதலால் [கறை - உரல்]. சென்னியில்வைப்பது முடியும்முடிமாலையுமாதலாற், சென்னிக்கு அணியாகவென்று சொல்லவந்தவர் சென்னிவைப்பாமெனத்தொகுத்துக்கூறினர். வைப்பாம் - தன்மைப் பன்மைமுற்று; யாம் என்னும் பயனிலைகுறைந்துநின்றது; இனி, யாமென்பது தோன்ற எழுவாயெனக்கொண்டு வைப்பாமென்னும் வினைப்பயனிலைகொண்டெனினும் அமையும்.

இது கடவுள்வணக்கமாதலால், "நான்முகற்றொழுது கன்னியம்புவன்," "பந்தமடிதொடை பாவினங்கூறுவன்" என்றாற்போல ஒருமையாற்கூறித் தன்னேத்தாழ்த்தாமல் பன்மையாற்கூறித் தன்னேயுயர்த்தியபின் இதில் வணக்கமென்னெனின், அங்ஙனமுயர்த்திக்கூறுதல் பிறவிடங்களிலுண்டெனினு மிவ்விடத்தில் உயர்த்தியதன்று; யாம்எனத் தம்மைச்சேர்ந்தாரையு முளப்படுத்திக் கூறியது; தன்மைப்பன்மையென்பது தன்னேசேர்ந்தாரையுங்கூட்டியல்லது தனித்தியல்லாமையால்; தானெருவன் கடவுளையறிந் தன்புகூர்ந்து வணங்கியப்பயனேத்தானடைதலினுஞ் சிருட்டிதொடங்கித் தன்கோத்திரத்தாரையுந் தன்னெடுகூட்டிவணங்கி அவர்க்குமப்பயனே யடைவித்தலேசிறந்ததெனக்கருதிச் சான்றோரெல்லாந் தொன்று தொட்டிவ்வாறு கூறிவருவதோர்மரபாமென்க [மரபு-பழமை]; என்னெனின், "ஏகதந்தனிணையடிபணிவாம்," "ஏத்தியேத்தித் தொழுவோராமே," "சரணவாரிசமலர்தலேக்கொள்வாமரோ," எனவிவ்வாறு கூறியவை அளவிலவென்க. தழைவிரிகடிக்கைமாலேத் தனிமுதற்சடையிற்சூடுங் குழவிவெண்டிங்களேப்பற்றி யினேத்து நோக்குங்களிற்றின் சேவடி சென்னிவைப்பாம்யாமெனக் கூட்டி ஒழிந்தனவெல்லா மிடைப்பிறவரலெனப் பொருளுணர்க. இனி யாமென்னுந்தோன்றுவெழுவாயை முதற்கட்கூட்டி வைப்பாமென முடிப்பினும், இச்செய்யுளில் நின்றுங்கே யாமென்பதனே யிறுதியிலே கூட்டிமுடிப்பினும், யாற்றுநீர்ப்பொருள்கோளெனக்காண்க [பொருள்கோள் - அன்வயம்]. இங்ஙனம் வணங்கியதனல் எடுத்தகருமம் இனிதுமுடியுமென்பது கருத்து.

இவரிம்மதலேப்பருவத்தில் நிங்களேக்கோடென்றெண்ணி இங்ஙனஞ்சேர்த்துநோக்குதலாகக் கூறினதனலே இது திரிபதிசயவலங்காரம். துறை - கடவுள்வாழ்த்து.

இச்செய்யுள் கட்டளேக்கலித்துறையன்று, கலித்துறை; இதனே யறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தமென்பாரு முளர். இச்செய்யுளே எந்தூன்முகத்துவைப்பினும் அமையுமாதலாற் பொதுப்பாயிரமெனக் காண்க. இங்ஙனம் விரிவஞ்சிச்சுருக்கியுரைசெய்யப்பட்டது.

நிலவுபொழி.....அரசமேறே.

[இதனுல் ஆக்கியோன்பெயர் முதலானவை சொல்லப்படுகின்றன.]

(இ-ள்.) இகல் - பகைத்த, அரசர் - மன்னராகிய (யானேகளுக்கு), ஏறு - ஆண்சிங்கமாயுள்ளவனுகிய, வலன் - வெற்றியினுல், உயர்த்த - உயர்த்தப்பட்ட, அண்ணல் - பெருமைபொருந்திய, அம் - அழகிய, சேல் - மீனக்கொடியை, வான் - ஆகாசத்தை, தொடு - அளாவிய, பொன் - பொன்மயமான, கோட்டு - சிகரத்தையுடைய, இமயவரையில் - இமயமலையினிடத்தே, தீட்டி - (தனக்குரியவெல்லேக்கல்லாக) எழுதி, அலர் - பரந்த, தலே - இடத்தையுடைய, மா - பெரிய, நிலம் - பூமியை, புரக்கும் - காக்கின்ற, அதிவீராமன் -

அதிவீராமனென்கிற வியற்பெயருடைய (பாண்டியராஜனெனவன்), நிலவு - சந்திரிகையை, பொழி - பொழிகின்ற, தனி - ஒப்பற்ற, கவிகை - (முத்துக்) குடையையுடைய, நிடதர்கோன் - நளமஹாராஜனது, புகழ் - புகழையுடைய, சரிதம் - சரித்திரமாகிய, களி - களிப்பைத்தருகின்ற, அமுது - அமிர்தத்தை, நெடுநீர் - கடலாற் சூழப்பட்ட, வையம் - பூமியிலுள்ள, புலவர் - புலவரானவர், கூட்டுண - கொள்ளை கொள்ளும்படியாக, ஒழுகு - (அவ்வமிர்தம்) பெருகுகின்ற, புதுமொழி - புதியகாப்பியத்தை, தமிழால் - தமிழ்மொழியினாலே, புனைதல்செய்தான் - அலங்கரித்துப்பாடினான், (எ-று.)

புலவனென்பது தேவர்க்கும் வித்துவான்களுக்கும் பெயர். இங்கே வானென்றது நீலநிறமுள்ளதாகக் காணப்படு மாகாசமாம். பின் வருவனவற்றையும் இப்படியேகொள்க. கூட்டுணற்குக் கொள்ளையிடலென்பது "நலமணிமகுடந்தேடிக் கண்டிலர் நிதிநிலகண்டிலர் நிகைத்துவாடிச் சிந்தைநோயுழந்தது மாற்றவர் கூட்டுண்டோடிப் போயினது" என்பதனாலறிக. மொழியென்பது தன்காரியமாகிய காப்பியத்தையுணர்த்த, புதுவென்பது அக்காப்பியத்தை விசேடித்து நிற்கையால் இருபெயரொட்டாகுபெயரா மென்றறிக.

அதிவீராமனெனவே ஆக்கியோன்பெயரும், நிடதர்கோன் புகழ்ச்சரிதம் எனவே நூதலியபொருளும், அக்காரணத்தாலே தோன்றுகிற நைடதம் என்கிற வடமொழிப்பெயரே இதற்குப் பெயரென்பதும், கூட்டுணவெனவே இந்நூற்குப் பயனும் பெறப்பட்டன. தமிழாற் புனைதல் செய்தானெனவே முன்பிது தமிழிலின்றி வடமொழியிலிருந் தெடுத்துத் தமிழின் மொழிபெயர்க்கப்பட்ட தென்பது குறிக்கப்படுகின்றது. நெடுநீர் வையம் புலவர்களியமுதொழுகு என்றதனால் விண்ணிற் புலவர்க்குக் கடலமிர்தம்போல மண்ணிற் புலவர்க்கு இச்சரித்திராமிர்த மமையுமென்னும் உவமையணி தொனிக்கின்றது. 'இகலரசரேறு' என்பதில் அதிவீராமனிடத்தே சிங்கத்தன்மையை ஏற்றினதற்கேற்பப் பகைவரிடத்தே யானைத்தன்மையை யேற்றுமையால் ஏகதேசவுருவகவணியாம். இது பெரும்பாலு மீற்றுச்சீர்களிரண்டு மாச்சீர்களு மற்றை நான்கு காய்ச்சீர்களுமாகிய வடிகளால் வந்த ஆசிரிய விருத்தம்.

இனி, இப்பாட்டிற்கு இராமானுஜகவிராயருரை வறுமாறு:—

(இ-ள்.) நிலவுபொழிதனிக்கவிகைநிடதர்கோன் - வெண்ணிலாவை மிகுதியாகப்பெய்து ஒப்பற்ற கொற்றக்குடையினையுடைய நிடதர்கோனுகிய நளனுடைய, புகழ்ச்சரிதை - புகழையுடைய சரித்திரமாகிய வமுதத்தை, நெடுநீர் வையம் - கடல்சூழ்ந்த வுலகத்தில், புலவர்களியமுது - கடவுளர் மகிழ்ச்சியைத்தருகின்ற அமுதத்தை (க்கூட்டுண்டதுபோல), புலவர்கூட்டுண - கலைவல்லோர்கள் சேர்த்துண்ணும்படியாக, ஒழுகுபுதுமொழி தமிழாற்புனைதல் செய்தான் - நேராயுள்ள வியப்பாகிய சொல்லையுடைய தமிழ்ப்பரிகலத்தில் (பரிமாறி) அலங்கரித்துவைத்தான்; (இங்ஙனம் புனைதல்செய்

தான் யாரெனின்) இகலரசரேறு - மாற்றரசராகிய யானைக்குழாத்திற்கு ஓராண்சிங்கமாகிய, வலனுயர்த்தவண்ணலஞ்சேல் - வலது பாரிசத்திலே பிடிக்கப்பட்ட பெருமையையும் அழகினையுமுடைய மீன [மீனக்கொடியை], வான்றோடு பொற்கோட் டிமயவரையிற் றீட்டி - ஆகாயத்தைத் தொடாநின்ற பொற்சிகரங்களையுடைய மகமேருவரையிலேயெழுதி, அலர்தலைமாஞாலம் புரக்கும் அதிவீராமன் - விரிந்த இடத்தையும் பெருமையையுமுடைத்தாயிருக்கின்ற பூமிமுழுதையுங் காத்தரசுசெயும் அதிவீராமனென்கின்ற இயற்பெயரினையுடைய பாண்டியன், (எ-று.)

பொழியென்ற சொல்லாற்றலால் மிகுதியாகப்பெய்தென்பதும், தனியென்பது வினைத்தன்மைப்பட்டு நிற்றலால் ஒப்பற்றவென்பதும் பெற்றும்; பெறவே ஒப்பு மதியென்பதாயிற்று; ஆகவே பொருளாகிய குடை நிலவை மிகுதியாகப்பெய்தலால் மதியொளி மழுங்க ஒப்பற்றகவிகையெனநின்று பொதுநீங்குவமையின்பாற்பட்டது. நிடதர்கோன் - நளன், நிடததேசத்திலுள்ளவர்க்கு இறைவனவனேயாதலால். தனிக்கவிகை நளனென்றமாத்திரமே அக்குடைக்கு மேலாகிய குடையுடையாரில்லாததனுலே அவனரசர்க்கரசனென்பது விளங்கிற்று. பின்னர்க்களியமுதெனவருதலாற் சிதையாகியவமுதெனக்கொள்க. அதனினுண்ட நீரில்லாததனுலே நெடுநீரென்றது கடலெனவும், வைப்பென்பது இடமாதலால் அத்நற்சூழப்பட்டஇட முலகமெனவுங்காண்க. புலவர் - வானவர்; அமுது - திருப்பாற்கடலிற்பிறந்த தேவாமிர்தம். பொருளில் [உவமேயத்தில்] வருகின்ற கூட்டுணவென்பதை உவமைக்கும், உவமையிற்சொல்லிய புலவரென்பதை உவமேயத்திற்குந்தந்துரைத்துக்கொள்க. கூட்டுணல் - சேர்த்துணல். கூடுதல் கூட்டாதலால், புலவர் கூட்டமுண்ண வெனினும் அமையும். ஒழுகல் - சேர்ச்சி; ஒழுகுகொடி, ஒழுகொளிவண்ணனென்றுற்போல. புதுமை - அதிசயம். தமிழில்என்னு மேழாம்வேற்றுமைப்பொருளில் ஆலுருபுமயங்கிநின்றது; இது உருபுமயக்கம்; இடப்பொருளாதலால் பாத்திரமென்பதுபெற்றும். நடத்தலைச்செய்தானென்றுற்போலப் புனைதல்செய்தானென்பது ஒருசொன்னீர்மைத்தாய் நின்றது. "புனைதல்கைசெய்தல் வேய்தல்" என்பதுநிகண்டாதலால், புனைதல் - அலங்கரித்தல். இகலரசரேறு என்றது ஏகதேசவுருவகவலகுகாரம். அண்ணல் - பெருமை, அம் - அழகு, சேல் - மீன், மீனெழுதிய கொடியென்பதற்குமீனென்றது ஆகுபெயர். இனி வலனுயர்த்தவென்பதற்கு வெற்றியினுலே பிடிக்கப்பட்டவெனினும் அமையும். இமயம் - பொன்மலை; "இமயப்பொருப்பகஞ்சேர்ந்த பொல்லாக் கருங்காக்கையும் பொன்னிறமாயிருக்கும்" என்றதனுங்காண்க. தீட்டல் - எழுதுதல்; இமயவரையை யெல்லைக்கல்லாகவைத்து அதிலே தனதுகொடியை இதுவரையுந் தன்னெல்லையென்பதற்கு அடையாளமாக வெழுதியெனக் காண்க. மகமேருவையெல்லையாகக்கொண்டதனுலே பூமிமுழுதுமென்பதும், மீனக்

கொடியென்றதனுலே பாண்டியனென்பதும் பெற்றும். நிலவுபொ
ழிதனிக்கவிகைநிடதர்கோன்புகழ்ச்சரிதை புலவர்களியமுது கூட்
ண்டதுபோல வுலகத்திற் புலவர்கூட்டணை ஒழுகுபுதுமொழித்த
மிழிற் புனைதல்செய்தான் இலரசரேறு வலனுயர்த்த வண்ணைலஞ்
சேல்வன்ரெடுபொற்கோட்டிமயவரையிற்றீட்டி யலர்தலைமா நிலம்
புரக்குமநிவீராமன் எனக்கூட்டி, அதிவீராமனென்னும் பரியாய
காமத்தையுடைய திருமாலானவர் பாற்கடல்கடைந்தெடுத்த களிய
முதை அப்புலவர்கூட்டணை அமிர்தகலசத்திலலங்கரித்துவைத்தது
போல அந்தப்பரியாயநாமத்தைக்கொண்ட இத்தப்பாண்டியனுன
வன் நளசரித்திரமாகிய களியமுதையிந்தப்புலவர்கூட்டணைத் தமிழ்ப்
பாத்திரத்தில் அலங்கரித்துவைத்தான் எனப்பொருளுணர்க. புலவ
ரென்பதுதேவரையும் கவிவல்லோரையு மூணர்த்துமாதலாலிரட்டை
மொழிந்தார். புலவர்களியமுதென்றவிடத்தில் - அப்புலவர் அக்க
ளியமுதத்தைப்போல இப்புலவர் நளசரித்திரமாகிய இக்களியமுதத்
தைக்கூட்டணைவென விரட்டித்துக்கொள்க. இனிப்பிறவிலக்கணங்
களையுங்கண்டுகொள்க. விரிவஞ்சிவிட்டனம். இது கொண்டுகூட்
டுப்பொருள்கோள். புனைதல்செய்தான் அதிவீரராமனெனமுற்றும்
பயனிலையுமாகிமுடிந்தது. இது தொழிலுவமை யலங்காரம்; இத
னுட்பிறவலங்காரங்களும் வீரவியிருத்தலாற் சங்கரணமன்றே வெ
னின், அவைவெளிப்பட்டு நில்லாமலடையாய்நிற்றலா லன்றென்க.

இச்செய்யுள், கழிநெடிலாசிரிய விருத்தம்.

இன்னுனின்னதுசெய்தானெனப்பிறன்கூறியதுஇதன்கருத்து.

பாயிர முற்றிற்று.

போர்புரிபடலம்.

[இப்படலத்தால், சுயம்வரத்திற்குவந்த அரசர்கள் தமயந்தி னளனேவிரும்பி மாலைசூட்டியது கண்டு தாம் அவளைக் கைப்பற்றும் பொருட்டு அவனை வெல்லவெண்ணிச் செய்யும் யுத்தம் சொல்லப் படுகின்றது.]

க.—இப்பாட்டுக்குக் கதையின் தொடர்ச்சி:— நிலமகளுக்குத் திலகம்போன்ற நிடதநாட்டில் நளமகாராஜன் செங்கோல் செலுத் திவருநாளில் விதர்ப்பதேசத்தரசனை பீமராஜனுக்குத் தமயந்தி யெனப் பெயர்பெற்ற பெண்மணியொருத்தி இருந்தனள். அழகி னுக் கழகுபோன்றவளாகிப் பெண்மைக்குணங்கள் பலவும் அமை ந்துள்ள அம் மாதுசிரோமணி நளமகாராஜனது அழகு ஆண்மை முதலிய மகாகுணங்கள் பலவும் கேள்வியுற்றுத் தனக்கேற்ற கண வனிவனேயெனக் கருத்துட்கொண்டு அவனையே மணம்புரிய மன முடையவளாயிருந்தனள். அந்நளமகாராஜனும் தமயந்தியினது ரூ பலாவண்ய முதலியவற்றைப் பலர் பலவாறுகூறக் கேள்வியுற்ற தன்றியும், தான் ஒருநாள் தனது உத்தியானவனத்திற்கு உலாவச் சென்றவளவில் அங்குத்தான் கண்ணுற்ற ஓரசவன்னம் அவ்வண ங்கினழகை யதிசயமாகப் புகழ்ந்துகூறியதுகேட்டு அவ்வழகியே த னக்கு வாழ்த்கைத்துணேயாக வாய்க்கவேண்டுமென விருப்பமுற்று அவ்வன்னத்தையே அவளிடம் தூதுபோக்கித் தன் கருத்தை அவ ளுக்கு அறிவித்துத் தானும் அவள்கருத்தையதனனறிந்து அவளை மணம்புரியுமமையத்தை யெதிர்பார்த்திருந்தனன். அங்ஙனமிருக்க விதர்ப்பர்கோன் தன்மகள் தமயந்திக்குச் சுயம்வரங் கோடித்து பத் திரிகைகள் போக்கிப் பலதேசத்துவேந்தர்க்கும் அச்செய்தியை அறி வித்தனன். தமயந்தியினது வடிவழகையும், அவளுக்குச் சுயம் வரங்கோடித்த செய்தியையும் அச்சுயம்வரத்துக்கு மண்ணுலகத்து மன்னவர் பலரும் பெருமையாய்ப் பரபரப்புடன் செல்வதையும் வி ண்ணுலகத்தி இந்திரன்முதலிய இமையவர் நால்வரும் கேள்வியுற் றுத் தாமும் அச்சுயம்வரத்துக்குச்செல்பவர் வழியே நளமகாராஜன் அச்சுயம்வரத்துக்குச் செல்வதுகண்டு அவனையே தமயந்தியினிடம் தமக்காகத் தூதுசெலவிடத்து, நளனையன்றி மற்றெவரையும் தான் வரிப்பதில்லையென்னும் அவளது மனவுறுதியையறிந்து அவளை யடைக்கவெண்ணித் தாம் நால்வரும் தனித்தனி நளனுருக்கொண்டு சுயம்வரமண்டபத்துச் சென்றிருந்தனர். ஆயினும் புத்தி நுட்பமு டையளாதலின் அப்பெண்மணி பல காரணங்களால் உண்மையான நள னிவனெனவுணர்ந்து அவனுக்கே மணமாலை சூட்டினள் என் பதாம். அதுகண்டு அரசர்கள் மகிழ்ச்சிகொண்டதும் இந்திரன் பொறாமைகொண்டதும் இதனுற் கூறப்படுகின்றது.

(இ-ன்.) அழகினை - சௌந்தரியத்தை, சுமந்தபேறு - தாங்கிய பேற்றினை, அணங்கு - தமயந்தியானவள், இன்றுபெற்றனளென் ஹ - இன்றுதான் பெற்றுளென்று, ஒளி ஒழுக - ஒளி விளங்குகின்

று, ஆம் - மணிவடமணிந்த, மார்பர் - மார்பையுடைய அரசர்களனை வீரும், உவாக்கடல் - பர்வகாலத்துக் கடலானது, மெலிய - ஒலியிற்குறையும்படி, ஆர்ப்ப - ஒலிக்க, (அதுகண்டு), கதிர்பொழி - கிரணங்களை வீசுகின்ற, ஒள்வயிரவாள் - ஒளி பொருந்திய வச்சிரவாளையுடைய, புரவலன் - இந்திரனனவன், நெஞ்சம்புழுங்கி - மனம்வெந்து, விழி - கண்களில், அழல்கதுவ - நெருப்புப்பற்ற, நோக்கி - பார்த்து, வேந்தரை - அரசரை, விளித்து - அழைத்து, சொல்வான் - சொல்லுகின்றான், (எ-று.)—[அது மேற்கூறுகின்றார்].

நளனுக்கு மாலேகுட்டதலால் தமயந்தியழகிற்கு அவனன்றி நாம் தகுதியுடையோமல்லமென்று மற்றையரசர் நினைத்தமைதோன்ற அழகினைச்சுமந்தபேறு பெற்றனளணங்கின்றென்றும், அதிலவ்வரசர்க்கு மகிழ்ச்சியன்றிப் பொறுமையின்மை தோன்ற ஆரமார் பருவாக்கடன்மெலிய வார்ப்பவென்றும், இந்திரன் தூதுகள் விடுத்தும் நளவேடங்கொண்டும் தம்மிலொருவர்க்கும் அவளிசையாமையால் வந்த அவமானம்பற்றிப் பொறுமையும் வெகுளியுங் கொண்டமைதோன்றப் புழுங்கி நெஞ்சம் விழியழலக்கதுவவென்றும், அதனால் அவ்வரசர்க்கும் பொறுமை யுண்டாக்கினமை தோன்ற வேந்தரை விளித்துச் சொல்வானென்றும் கூறினர். "வெள்ளிலை வேற்கணைச் சேவகன் வீணவென்று, வெள்ளியனென்று மாந்த ருவாக்கடன் மெலியவார்ப்பக், கள்வராற் புலியைவேறு காணியகாவன் மன்ன, னுள்ளகம் புழுங்கிமாதோ வுரைத்தனன் மன்னர்க்கெல்லாம்" எனச் சிந்தாமணியுட் கூறுதலுங்காண்க. பார்வகாலத்தில் நிறைமதி கண்டால் கடல் மிக்கொலித்தலறிக.

உ.— [இதுமுதல் மூன்றுபாட்டுக்கள் இந்திரன் கலகமூட்டுதல்.]—(இ-ள்.) விரிகதிர் - விரிந்த கிரணங்களையுடைய, பரிதிமன்னர் - சூரியன் முன்னே, வெண்மதி - வெண்மையைப்பொருந்திய சந்திரன், மழுங்குமல்லால் - மழுங்கிப்போகுமல்லாமல், பரிதியும் - சூரியனும், மதியந்தோன்றில் சந்திரனுதித்தால், படர் - விரிகின்ற, ஒளிமழுங்கலுண்டோ - ஒளிகெடுதலுண்டோ, (இல்லை, இவ்வாறிருக்க), அரசர்காள் - அரசர்களே, நீவிர் - நீங்கள், வெய்யோன் சூரியனுடைய, அருங்குலத்து திதிம் - பிறத்தற்கரிய மரபினிற்பிறந்தும், திங்கண்மரபின் மன்னவற்கு - சந்திரவம்சத்திற்பிறந்த அரசனுக்கு [நளனுக்கு], நுங்கள் - உங்களுடைய, மாண் - பெருமை பொருந்திய, எழில் - அழகு, மழுங்கினீர் - மழுங்கிப்போயினார்கள், (எ-று.)—ஆல் - அசை.

சந்திரவம்சத்திற்பிறந்தவன் நளனாகையால், உலகத்தில் யாவருக்கும் குலத்தையிழிவுபடுத்தலிலுண்டாகும்வேறுகுணம் மற்றொன்றிலுண்டாகாதென்பதுபற்றி அரசனைநோக்கிஇவ்வாறுசொல்லினனென்க.

ஈ.—(இ-ள்.) சுடர்முடி - கிரணங்களையுடைய கிரீடங்களை, துறந்து - விடுத்து, சூழ் - சுற்றுகின்ற, இரு - பெரிய, சடைகள்தாங்கி - சடைகளைச்சுமந்து, கான்போய் - வனத்திற்சென்று, வீழ் - அங்கே

யுதிர்கின்ற, சருகு அருந்தி - சருகைப்புசித்து, கீவிர் - (அரசர்களே) நீங்கள், மெய்த்தவம் - உண்மையாகிய தவத்தை, புரிதல்வேண்டும் - செய்தல்வேண்டும்; (அஃதேனெனில்), தாழ் - தாழ்ந்த, இரு - பெரிய, கூந்தலாளை - அளகபாரத்தையுடைய தமயந்தியை, நிடதர் கோன் - நளன், தழீஇயபோதே - தழுவியபோதே, ஆழிசூழ் - கடலாற்சூழப்பட்ட, உலகமெல்லாம் - பூவுலகமனைத்தும், அவன் - அவ்வரசனுடைய, அடிபடைக்கும் - அடிபணிந்து நடக்கும், (எ-று.)— அன்று, எ - அசைகள்.

உம்முடையகுலத்திற்கும் உமக்கும் இப்பொழுதுவந்த சூற்றம் போரில்வென்று நீக்கல்வேண்டும்; அங்ஙனமின்மையால் இச்செய்யாலன்றித் தீராதென்பான் மெய்த்தவம்புரிதல் வேண்டுமென்றும், தமயந்தி இலக்கணமுழுவதும் அமைந்த வுருவுடையவளாதலால் அவளைமணந்தவன் பூமண்டலமுழுதும் ஆள்வனென்பது தோன்ற, ஆழிசூழ்உலகமெல்லா மவனடிபடைக்குமென்றும் கூறினான். "வடதிசைக்குன்றமன்ன வான்குலமாசுசெய்தீர், விடுகிரிப் பரிதிமுன்னர்பின்மினிவிளக்கமொத்தீர், வடுவுரையென்றுமாயம்வானமரஞ்சினீரேன், முடிதுறந்தளியீர்போகிமுனிவனம்புகுமினென்றான்." "திருமகளிவளைச்சேர்ந்தான்றெண்டிரையாடைவேலி, யிருநிலமகட்குஞ்செம்பொனேமிக்குமிறைவனுகுஞ், செருநிலத்திவளைவென்றீர்திருவினுக்குரியீரென்றான், கருமனச்சுவெஞ்சொற்கட்டியங்காரனன்றே" என்றார் சிந்தாமணியுள்ளும்.

ச.—(இ-ள்.) கண்டவர் - தன்னைப் பார்த்தவர்களுடைய, மனமும் - மனத்தையும், கண்ணும் - கண்களையும், கவர்ந்திட - வாரிக்கொள்ளும்படி, வனப்புவாய்ந்த - அழகுபெற்ற, ஒண்டொடி - தமயந்தியானவள், மாலைவேய்க்தோற்கு - மாலைசூட்டினவனுக்கு, உரியளென்று - உரிமையுடையவளென்று, எண்ணவேண்டா - நினைக்கவேண்டா; திண்திறல் - மிகுந்த வலிமையையுடைய, நிடதர்கோமான் - நிடததேசத்தரசன், செருவினில் - போரில், இரியல்போக - ஓடிப்போக, மண்டி - நெருங்கிய, அமர் - யுத்தத்திலே, கடந்த - செயித்த, ஒள்வேல் - ஒளிபொருந்திய வேலையுடைய, மன்னவற்கு - அரசனுக்கு, உரியனென்றான் - உரிமையுடையவனாவா னென்றான்.

களைப்போர்செய்து வெல்லினும் அரசர் பலராதலால் இவன் எவனுக்கு உரியவளாதலென்னுஞ் சந்தேக முண்டாகாமைப்பொருட்டு இந்திரனவன், நிடதர்கோமான் செருவினிலிரியல்போக மண்டமர் கடந்தவொள்வேன்மன்னவற்குரியளென்றானென்க. "அனிச்சப்பூங் கோதைகுட்டி னம்மனே யோவென்றஞ்சிப், பனிக்குநண்ணுசுப்பிற்பாவை பொருத்திராம் பலரென்றெண்ணித், தனித்து நீர்துணங்கல்வேண்டாத்தூமணிச்சிவிறிதூய்த், தனிக்கயத்தழுக்கி வென்றீரையலேச்சார்மினென்றான்" எனச் சிந்தாமணியுட் கூறுதலுங் காண்க.

இ.— [அக்கலகவார்த்தை கேட்ட பாண்டியன் வெகுளல்].— (இ-ள்.) என்றலும் - இப்படியென்று இந்திரன் சொன்ன வள

வில், கடவுள் - தெய்வத்தன்மையுள்ள, திங்களிருங்குலம் - பெரு மைபொருந்திய சந்திரவம்சத்தை, இழித்துக்கூறல் - இழிவுபடுத்திச் சொல்லல், நன்றுநன்றென்ன - நல்லது நல்லதென்று, நக்கு - நகைத்து, நாமவேல் - அச்சத்தைத் தருகின்ற வேற்படையையு டைய, வழுதி - பாண்டியராஜன், சீறி - அதட்டி, உன்றலை - இப்ப டிசொல்லிய உனது சிரத்தினை, துணிப்பனென்னு - சதித்துவிடு வேனென்று, ஒளிறு - பிரகாசிக்கின்ற, வாள் - வாளை, உறையினீ க்கி - உறையினின்று நீக்கி, குன்றெறி - மலைகளின் சிறகையறுத்த, வயிரவொள்வாள் - ஒளியையுடைய வச்சிரவாளை யேந்திய, குரிசின் மேல் - இந்திரன்மேல், கனன்று - கோபித்து, சென்ருன்—,(எ-து.)

குன்றென்பது அதன் சிறகினுக்காதலால் ஆகுபெயர்.

உமையவள், பரமசிவன், குமரவேள் என்னு மூவரும் விரும்பி வந்து அரசு செய்திருந்த குலமாதலாலும், சந்திரனைச் சிவன் முடி மேற் கொண்டிருத்தலாலும், அந்த வம்சத்தைக் கடவுட்டிங்களிருங் குலமென்றார். அதனல் அக்குலத்திற்ருன்றிய பாண்டியனுக்கு அதை இழிவுபடுத்திய இந்திரன்மேல் வெகுளியுண்டாயிற்றென்க.

சு.—[இதனுமது.]—(இ-ன்.) வெகுளலே - கோபிபாதே, அணங்கிற்காக - தமயந்திக்காக, களனுருக்கொண்டுமேய - களன் வடி வங்கொண்டுவந்த, அகல்விசும்பு - அகன்ற தெய்வலோகத்தை, அளிக்கும்வேந்தன் - காக்குமிந்திரன், இவனென - இவனென்று, அமரர்கூற - தேவர்கள் சொல்ல (அதுகேட்டு), துகளெழ - தூளி யெழும்ப, மௌலி - கிரீடம், பண்டு - முன்னே, தோற்றவன்தன் னோடு - தோற்றுப்போன இவனோடு, என்கொல் இகலென - என்ன போரென்று, புகையும் - புகைகின்ற, ஒள்வாள் - ஒளிபொருந்திய வாட்படையை, உறைசெறித்து - உறையிலிட்டு, எதிரான் - போ ருன், (எ-து.)—கொல் - அசை.

மதுரையில் உக்கிரபாண்டியன் அரசுசெய்திருந்தகாலில், அவன் அந்நாட்டிலிருக்கும் பொதியமலையின்கண் மேய்ந்திருந்த மேகங்களை ப்பிடித்துத் தூளாசெய்தான்; அதைக்கேட்டு அப்பாண்டியனோடெதி ர்த்து யுத்தஞ்செய்து இந்திரன் மகுடபங்கப்பட்டுத் தோற்றோடிய படியால், தோல்வியடைந்தவரோ டெதிர்த்தல் தருமமன்றெனபது பற்றி, இவன் அவ்விந்திரனென்றுகேட்ட வரசன், தூளெழுமென விபண்டதோற்றவன்றன்னோடென்கொலிகலெனப்புகையுமொள்வா ளுறைசெறித்தேகினனென்றார்.

எ.— [இதுமுதல் மூன்றுபாட்டால் அரசர்களின் செய்கைகூ றல்.]—(இ-ன்.) கூற்று என - யமன்போலவும், கனலி என்ன - அக் கினிபோலவும், குவவுதோ - சந்தருகிரிகளையும், நிரிக்கும் - சுழற்று கின்ற, ஊழிக்காற்றென - முடிவுகாலச் சாத்துப்போலவும், உருமே றென்ன - இடியேற்றைப்போலவும், எதிர்முடி - சிரஸ்களையுடை யகிரீடமணிந்த, அரசெல்லாம் - அரசரனைவரும், மாற்றரும் - பகை குறத்தகரிய, சிற்றத்தோடு - கோபத்துடன், மடங்கலர்தலினின்

றும் - சிங்காதனத்திலிருந்து, பாற்றினம் - பருந்துக்கூட்டங்கள், சூழலும் - வட்டமிடுன்ற, வை - கூர்மைபொருந்திய, வாட்படை யொடும் - வாளாயுதத்துடன், நிலத்தில் - பூமியிலே, பாய்ந்தார் - குதித்தார்கள், (எ-று.)

பாறு=பருந்து. உயிர்போக்கலால் யமனையும், நீறுசெய்தலால் அக்கினியையும், வேகத்தோடி தள்ளுதலால் காற்றையும், கர்ச்சித்து கடிக்கஞ்செய்தலால் இடியேற்றையும், பெரும்பான்மைபற்றி அர சர்க்கு உவமையாக்கினர்.

கூ.—(இ-ள்.) கொய்யுளை-கொய்துகட்டிய புறமயிரினையுடைய, கலினம் - கடிவாளம் பூண்ட, பாய் - தாவுகின்ற, மா - குதிரைக ளை, கொடிஞ்சியந்தேரில் - மேன்மொட்டையுடைய இரதங்களில், பூட்டி—, மையல் - மயக்கம்பொருந்திய, மா - பெரிய, மதத்த - மும் மதத்தையுமுடைய, யானை - யானைகளை, பருமித்து - அலங்கரித்து, மறலியேனும் - கூற்றுவனையினும், செய்யகண் புதைக்கும் - சிவந்த கண்களை மூடிக்கொள்ளத்தக்க, சீற்றம் - கோபத்தையுடைய, திறல் கெழு - வலிமைமிகுந்த, வயவர்சூழ - காலாள்கள் தம்மைச்சூழ்ந்து வரும்படி, மொய் - நெருங்கிய, கழல் - வீரக்கழலையணிந்த, அர சரெல்லாம்—, முருகுலாம் - தேனெழுகுகின்ற, தும்பை - தும்பைமா லையை, வேய்ந்தார் - தரித்தார்கள், (எ-று.)

கூ.—(இ-ள்.) கொடுங்குணில் - கொடிய குறுந்தடியால், பொ ருத - அடிக்கப்பெற்ற, வெற்றி - சயத்தைத் தருகின்ற, போர்ப்ப றை - ரணபேரிகை, குளிற - ஒலிக்க, வெம்போர் - வெவ்விய போர் செய்கின்ற, கருந்திறல் - மிகுந்த சௌரியத்தையுடைய, வயவர் - படைவீரர்கள், வில் - வில்லாளத்துச் செய்யும், காண்புடைப் பொலி - குணத்தொனிகள், கடலிளூர்ப்ப - கடல்போலொலிக்க, சுடுங்கனல் - சுடுகின்ற நெருப்பும், குளிர - குளிரும்படி, வெய்தா - வெப்பமாக, சுடர்விழி - சிவந்த கண்கள், பொறி - நெருப்புப்பொ றிகளை, சிந்த - சிதற, மடங்கலேறனைய - சிங்கவேற்றையொத்த, வேந்தர் - அரசர்கள், வாளமர் - வாட்போர்செய்கின்ற, அழுவம் - யுத்தகளத்தில், உற்றார் - அடைந்தார்கள், (எ-று.)

அனேகரிறக்கும்படிச்செய்யும் போராக்குறித்துப் பறையை யடிக்கின்ற தாதலால், குணிலென்னாது கொடுங்குணிலென்றார். விழிகள் சிந்தும் பொறிகளுக்குச் சுடுகனலை ஒப்புச் சொன்னல் நெருப்புக்கு நீரை ஒப்புச் சொல்லுதல்போ லிருத்தலாற் சுடுங்கனல் குளிரவெய்தாச்சுடர்விழிபொறிகள் சிந்தவென்றார். குளிற, ஆர்ப்ப, சிந்தவென்னும் செயலெனைச்சங்கள் உற்றாரென்று முற்றைக் கொண்டு முடிந்தன.

கூ.—[இதனுல் களனது செருக்குச் சொல்லப்படுகின்றது.]—(இ-ள்.) மன்னவர் - அரசர்களுடைய, தருக்கும் - கர்வமும், வெ ம்போர் - வெவ்விய போர்செய்கின்ற, வயிரவாள் சுமந்த - வச் சிராயுதத்தைச் சுமந்த, திண்டோள் - வலிமை பொருந்திய தோள்

கனியுடைய, பொன்னகர்க்கிறைவன் - இந்திரனனவன், சூழ்ந்த - எண்ணிய, புணர்ப்பும் - சம்பந்தமும், காங் காண்டு மென்னு - காங்காண்போமென்று, ஒன்னலர் - சத்துருக்களுடைய, அகலம் - மார்பினிடத்திலே குளித்து, ஊன்சுவைத்து - மாமிசத்தை மென்று, உதிரம்மாந்தும் - புண்ணீரைக் குடிக்கின்ற, மின்னகு - ஒளி விடுகின்ற, பிரிதி - சூரியன்போன்ற, ஒள்வேல் - ஒளிபொருந்திய வேற்படையையுடைய, வேந்தர்கோன் - களமகாராஜன், சிறிது - கொஞ்சம், நக்கான் - சிரித்தான், (எ-று.)

இங்கே களன் சிரித்தது வீரச்சிரிப்பாம். அது பரமசிவன் சிரித்துத் திரிபுரத்தை யெரித்தலா லறிக. "ஒன்னலரைச் செற்றனவொக்குஞ் சிறுநகைசெய்வன" என்றுர்பிறரும்.

கக.— [களன் தமயந்தியைத் தேற்றல்.]—(இ-ள்.) செழுங்கடை - செழுமையுள்ள கடையையுடைய, மழைக்கணல்லாய் - குளிர்ச்சிபொருந்திய கண்களையுடைய தமயந்தியே! திண்சிலை - வலிமையையுடைய வில்லை, குழைத்து - வளைத்து, வெம்போர்க்கு - வெவ்விய யுத்தத்திற்கு, எழுந்த - புறப்பட்ட, இவ்வரசர் மார்பத்து - இவ்வரசர் மார்பினிடத்திலே, இழி - இழிகின்ற, பெருங்குருதி - அதிக வுதிரத்தை, மாந்த - உண்ணும்படி, புழுங்கு - வெம்புகின்ற, வெம்பகழிமாரி - வெவ்விய பாணமழையை, பொழிந்து - சொரிந்து, அமர் - யுத்தத்திலே, முருக்கி - கொன்று, ஆடி - வினையாடி, உழுந்துருள் பொழுதின் - ஒரு உழுந்துருளுகிற காலத்திலே, மீள்வல் - திரும்புவேன், நீ,—உள்ளம் - மனத்தினிடத்து, கவலல் - கவலைப்படவேண்டாம், என்றான் - என்று (தமயந்தியைநோக்கி) கூறினான், (எ-று.)

தமயந்தி யாற்றுமையையுங் கவலைப்படுதலையு நோக்கி வினாவுதொன்ற உழுந்துருள்பொழுதின் மீள்வ லென்றான். [உழுந்துருள் பொழுதினென உலக வழக்கச்சொல்லைத் தழுவிச் சொல்லுதலால் உலகவழக்க நவிற்சியணி].

கஉ.— [களனுக்கு உதவியின்றிய பராக்கிரமஞ் சொல்லல்.]—(இ-ள்.) வினை-உண்டாகின்ற, சமர்க்கு - போர்க்கு, எழுந்து நின்ற - (துணையாகப்) புறப்பட்டு நின்ற, வீமனை - வீமராஜனை, இனிதின் - இனிமையாக, நோக்கி - பார்த்து, களி - களிப்பையுடைய, மதக்களிறும் - மதயானையையும், தேரும் - தேரையும், களப்படுத்து - யுத்தகளத்திலழித்து, இகலின் - பகையினால், எற்ற - எதிர்த்த, உரை - புறமயிரினையுடைய, வயப்புரவி - வலிமைபெற்ற குதிரைகளையும், தானை - காலாட்சேனையையுமுடைய, ஒன்னலர் - சத்துருக்களை, செகுப்பல் - கொல்லுவேன், நீபோய்—, களி - குளிர்ச்சி பொருந்திய, கடல் - கடல்போன்ற, தானைசூழ் - சேனைசூழ்ந்திருக்க, நங்கையை - தமயந்தியை, காத்தி யென்றான் - காப்பாயென்றான், (எ-று.)—(களன்) நங்கையைக் காத்தியென்று னென்க.

தமயந்தி நமக்கு மாலையிட்ட பின்பு அவளை விரும்பி நம்மோடெதிர்க்குமரசர் நாம் போர்செய்யும்போது அவனைக்கரந்து வெளவவரினும் வருவரென்பது பற்றியும், தன் பொருட்டு வந்தபோனை மற்றொருவர்பால் விடில் தனக்கிழி வென்பதுபற்றியும், அவட்குத் தந்தையாகிய வீமனை அவளைக் காக்கும்படி வைத்தனனென்க.

கசு.—[நளன் போர்முயற்சி செய்தல்]—(இ-ள்.) உடல் - பொருகின்ற, சினம் - கோபத்தையுடைய, உருமேறன்ன - இடியேற்றையொத்த, வயவரை - சேவகரை, ஒருங்கு நோக்கி - ஒரேதரம் பார்த்து, கொடியணி - கொடிகளையணிந்த, கொடிஞ்சி - மேன்மொட்டையுடைய, திண் - வலிமைபொருந்திய, தேர் - தேரையும், கொய்யுளை - கொய்துகட்டிய புறமயிரினையுடைய, கலினம் - கடிவாளம் பூண்ட, பாய்மா - குதிரைகளையும், கடல் - கடலானது, மடைதிறந்ததென்ன - மடைதிறந்ததென்றுசொல்லும்படி, கரடம் - கண்ணுஸ்தலங்களினின்றும், ஊற்றிருந்துபாயும் - சுரந்து பாய்கின்ற, படமெதம் - மிக்கமதஜலத்தையுடைய, களிநல்யானை - களிப்பையுடைய நல்லயானைகளையும், பண்ணுறுத்திடுமினென்றான் - அலங்கரியுங்களென்றான், (எ-று.)—[மேன்மொட்டு - சிகரம்.]

தனித்தனி உத்தரவுபண்ணிற் கால நீட்டிக்கு மென்பதுபற்றி விரைந்துகூறினமைதோன்ற வயவரை யொருங்குநோக்கித் தேர், பாய்மா, யானை, பண்ணுறுத்திடுமினென்றுனென்க.

கச.— [நளன் போர்க்கோலங் கொள்ளுதல்.]— (இ-ள்.) நீங்கரும் - பிரிதற்கரிய, கவசமார்த்து - கவசமணிந்து, நேரலர் - சத்துருக்களுடைய, மௌலி - முடியை, தேய்க்கும் - தேய்க்கின்ற, பூங்கழல் - அழகிய வீரக்கழலை, நரல - ஒலிக்கும்படி, வீக்கி - கட்டி, போரெனில் - யுத்தமென்றால், பொருப்புமஞ்ச - மலையுமஞ்சும்படி, வீங்கிய - பருத்த, குவவுத்தோளில் - திரட்சிபொருந்திய புயத்தின்கண், வெங்கணை - வெவ்விய பாணங்களையுடைய, புட்டில்தாங்கி - அம்புக்கூட்டைத் தாங்கி, வாங்கு - வளைக்கப்பட்ட, வில் - வில்லை, தடக்கையேந்தி - விசாலமானகையி லேந்தி, மறலி - யமனும், கண்புலதப்ப - கண்களை மூடிக்கொள்ளும்படி, நின்றான் - நின்றனன்.

நளன் கவசமார்த்துக் கழல்வீக்கிப் புட்டில்தாங்கி வில்லேந்தி நின்றனனெனக் கூட்டுக. சத்துருக்கள் பணிந்து கிடத்தலால் நேரலர் மௌலி தேய்க்கும் பூங்கழலென்றார். மறலியென்பதில் உயர்வுசிறப்பும்மை தொக்குநின்றது.

கஞ.—[நளன் தேரேறுதல்.]—(இ-ள்.) பொரு - பொருகின்ற, சமர் - யுத்தத்தை, தொடங்கி நின்ற - ஆரம்பித்து நின்ற, புரவலர் - அரசர்களுடைய, மடவார் - மாதரது, செய்ய - சிவந்த, வரி - அரிபரந்த, நெடுங்கண்ணும் - நெடிய கண்களும், தோளும் - தோள்களும், வலந்துடித்து - வலப்பக்கந்துடித்து, இன்னல்காட்ட - துன்பக்குறிகாட்ட, குருமணி - சிறந்தரத்தினங்கள், குயிற்றும் - பதிக்க

ப்பெற்ற, செம்பொன் - சிவந்தபொன்னாற்செய்த, கோடெயர் - சிகரத்தினையுயர்ந்த, கொடிஞ்சித்தேரின் - மேன்மொட்டையுடையதேரின்மேல், அருவரை - அரியமலையின்மேல், இவரும் - ஏறுகின்ற, சீற்றம் - கோபத்தையுடைய, மடங்கலேறென்ன - ஆண்சிங்கம்போல், ஆர்த்தான் - ஏறினான், (எ-று.)

(களன்) தேரிலேறினனெனக் கூட்டுக. மாதர்க்குத் தன்பம் வருமாறல் வலத்தோளும் வலதுகண்ணும் துடிக்குமென்பது துடியாலின் மரபு.

கசு.—[களன் சங்கத்தொனி செய்தல்.] -(இ-ள்.) ஊன்பயில்-மாமிசத்தங்கிய, வடிவேலெந்தி - கூரிய வேற்படையைத் தாங்கி, உடன்று - கோபித்து, வெம்போரில் - வெவ்விய யுத்தத்தில், எற்ற - எதிர்த்த; தென்பயில் - தென்திசைக்குரிய, தெரியல் - மாலையையுடைய, வேந்தர் - அரசர்கள், நடுக்குற - நடுக்கமடைய, திசையில் நின்ற - எட்டுத்திசையினும் நின்ற, கூன் - வளைவுபொருந்திய, பிறை கோட்டு - பிறையையொத்த கொம்பினையும், நால்வாய் - தொங்குகின்ற வாயினையு முடைய, குஞ்சரம் - யானைகள், வெருவியோட - பயந்தோடும்படி, வான் - ஆகாயம், பொதிர் எறிய - நடுக்கமடைய, தெய்வவலம்புரி-தெய்வத்தன்மை பொருந்திய வலம்புரிச்சங்கத்தை, முழக்கியிட்டான் - தொனிசெய்தான், (எ-று.)

சங்கத்தொனியிலுல் தான் எதுஎது எப்படிஆதல்வேண்டுமென்ற நினைக்கின்றதோ அது அது அப்படியாகத் தொனித்தலால் தெய்வவலம்புரி யென்றார்.

கஎ.— [இந்திரனேக்கஞ் சொல்லல்.]—(இ-ள்.) கொல் - கொலைத்தொழிலில், கவில் - பழகிய, பரிதி - சூரியன்போன்ற, வைவாள் - கூர்மைபொருந்தியவாளையுடைய, கூற்றுயிர் - யமனுயிரையும், உண்ணும்-உண்ணுகின்ற, கூற்றின்-ஒருயமன்போல், மின்னகு-ஒளியைவீசுகின்ற, வரிவில்-கட்டமைந்தவில்லை, ஏத்தும்-தாங்கிய, விடலையை-நளமகாராஜனை, நோக்கி - பார்த்து, இன்னோன் - இவ்வரசனுடைய, மணிவரை - அழகுபொருந்திய மலைபோன்ற, திணி - வலிமைபெற்ற, தோள் - புயங்களினுடைய, வீக்கம் - பூரிப்பு, எற்ற - எதிர்த்த, மன்னவர் - அரசர்களது, அளவன்று - அளவுடையதன்று, (ஆதலினுல்) என்னினைந்து - யாதுநினைந்து, என்செய்தோமென்று - யாது செய்தோமென்று, இந்திரன் - இந்திரனுனவன், நடுங்கலுற்றான் - நடுங்கினான், (எ-று.)

நாம் பொறுமையால் மூட்டிவிட்ட சண்டையிற் கோபப்பழிவந்து, அதிலும் நமக்கு அவமானமே வருதற்கு ஐயமில்லையென்று இந்திரன் நடுக்கலுற்றனென்க.

கஅ.— [இனியிரண்டுபாட்டால் சேனைகளின் ஆரவாரஞ் சொல்லல்.]—(இ-ள்.) கார்த்திரள் - மேகக்கூட்டங்களது, முழக்கமென்ன - சத்தம்போல், கனை - முழங்குகின்ற, குரல் - ஒலியையுடைய, முரசம் - பேரிகைகள், ஆர்ப்ப - ஒலித்தன; கடல்கள் எழும் - எழு

சமுத்திரங்களேயும், துரகதம் - குதிரைகளினுடைய, குரத்தின் தூளி - குளம்பினின்றுமெழுகின்றபுழுதிகள், தூர்த்தன - தூர்த்துவிட்டன; விசும்பு - ஆகாயத்தை, பைம்பொன்கொடியொடு - பசும்பொன்னாற் செய்தகொடிகளோடு, குடையும் - குடைகளும், ஓங்கி - உயர்ந்து, போர்த்தன - மூடிக்கொண்டன; அலகையீட்டம் - பேய்க்கூட்டங்கள், உவகைபொங்கி - மகிழ்ச்சிமிகுந்து, துணங்கையிட்டு - கூத்தாடி, ஆர்த்தன-சத்தித்தன, (எ-று.)

கார்த்திரள் முழக்கமென்ன முரசமார்த்தவெனலால் அனேக முரசங்களென்பதும், குரத்தின்தூளி கடல்களேழுந் தூர்த்தனவெனலால் அனேகங் குதிரைகளென்பதும், கொடியொடுகுடை விசும்பைப் போர்த்தனவெனலால் அனேகங் குடைகள் கொடிகளென்பதும், துணங்கையிட்டார்த்தனவெனலால் மாமிசமுண்ணுவந்தன அனேகம் பேய்க்கூட்டமென்பதும் பெறப்பட்டன.

கக.—(இ-ள்.) கூற்றென - யமனைப்போல், உறழ் - ஆரவாரித்து, கொல் - கொல்கின்ற, சினம் - கோபத்தையுடைய, அரியேறென்ன - சிங்கவேற்றைப்போல், ஆர்த்து - கர்ச்சித்து, எற்றவர் - எதிர்த்தவர்கள், வெருவ - அஞ்ச, கெய்த்தோர் - உதிரமானது, இடையறாது ஒழுகும் - நீங்காதொழுகப்பெற்ற, கோட்டு - கொம்பையும், சிற்றம் - கோபத்தையுமுடைய, மும்மதத்தின் - மும்மதங்களால், ஊழித்தியையும் - வடவாமுகாக்கினியையும், அவிக்கும் - அவிக்கவல்ல, வேகக்காற்றுஉறழ் - சண்டமாருதத்தையொத்த, களிறு தூண்டி - யானையைச்செலுத்தி, கண் - விழிகளில், கனல்கதுவ - கெருப்புப்பற்ற, செல்வார் - செல்வார்கள், (செலுவீரர்), (எ-று.)

வீரரைத் தன்கோட்டாற் குத்திக்கொல்லுதலால் யானைக்கொம்பு கெய்த்தோரிடையறாதொழுகுங்கோடெனப்பட்டது.

உ.—[இதுமுதல் ஐந்துபாட்டால் இருதிறச்சேனைகளும் பொருதல் சொல்லல்.]—(இ-ள்.) ஒள் - பிரகாசம்பொருந்திய, அழல் - கெருப்பு, கண்ணில் - கண்களினின்றும், கால - வீச, உயிர்பலி - உயிராகிய உணவை, உண்ணும் - உண்ணுகின்ற, கூற்றின் - யமன்போல், வள்உறை - கெருங்கிய வுறையையுடைய, வடிவாளேந்தி - கூரியவாளேயேந்தி, வாய் மடித்து - உதட்டை மடித்துக்கொண்டு, எயிறுதின்று - பல்லைக் கடித்து, கன்அவிழ் - தேனொழுகுகின்ற, தும்பைகுழை - தும்பைமாலையைத் தரித்து, (இதுகண்டு) கழுது - பேய்கள், கைகொட்டி - கைகளைக்கொட்டி, ஆர்ப்ப-கர்ச்சிக்கும்படி, அள்இலை - அள்ளிக்கொள்ளும் இலைபோன்ற, வயிரப்பைம்பூண் - பலியென்னிற் பதித்த வச்சிராபரணத்தையுடைய, அரசரோடு - அரசருடன், அரசர் - அரசர்கள், எற்றார் - எதிர்த்தார்கள், (எ-று.)

அனேகரைச் சேதித்து உயிரை யுண்ணுதலால் வாட்படைக்கு யமன் உவமை சொல்லப்பட்டது. வாய்மடித்தலும் பற்கறித்தலும் சினக்குறிப்பை வெளிப்படுத்தி நின்றன. அதிரப் பொருதற்கு வந்த குறிப்புத் தோன்ற கன்னவிழ் தும்பைகுழி யென்றார். கெடுங்காலம்

போரில்லாமையால் உணவு கிடையாதிருந்த வருத்தம் இப்பொழுது கெடுமென்னும் உவகை மிகுதியால் கழுது கைகொட்டி யார்ப்ப வென்றார் [தன்மைநவிற்சியணி.]

உக.—(இ-ள்.) மண்ணிடை - பூமியின்கண்ணே, நிரிவபோல - நிரிவனபோல, மாநிரம் - நிசைகளை, கடப்ப - தாண்டுவனவும், தாவி - பாய்ந்து, விண்ணிடை - ஆகாயத்திலே, பறப்ப - பறப்பனவும், வேழ மருப்பிடை - யானைக்கொம்பின்கண், மிதித்து—, மீள்வ - திரும்பு வனவும், கண் - கண்கள், இமைபொருந்தில் - இமைக்கோட்மாளல், காணக்கூடாத - காணக்கூடாத வேகத்தையுடையனவும் ஆகிய, கனைப்பாய்மா - கடிவாளம்பூண்ட தாவுகின்ற குதிரைகள், எண் ணில - அளவற்றவைகளை, வயவர்தூண்டி - காலாள்கள் செலுத்தி, எதிரெதிர் - நேர்நேராக, மலைந்த - போர்செய்து, கிற்பார்—.

கடப்ப, பறப்ப, மீள்வ, கடுப்பினவாகிய பாய்மாவெனக் கூட் டுக வேழமருப்பு இங்கே வெள்ளியானைக்கொம்பெனக் கொள்க. [இதுவும் அவ்வணி].

உஉ.—(இ-ள்.) குழ்சுடர் - ஒளிசுழ்கின்ற, வயிரவாளால் - வச் சிராயுதத்தால், இந்திரன்துமிக்குமுன்னம் - இந்திரனழிப்பதற்கு முன்னே, பாழி - அகன்ற, குகை - சிகரங்களையுடைய, குன்றம் - மலைகளானவை, சிறகொடு-இறகுடனே, பறப்பவென்ன - பறப்பன போலப்பறக்கின்ற, செழ்ஞெர்-செக்கிறமிகுந்த, பரிதியேய்க்கும்-சூரி யனையொத்த, கிளர்மணி - ஒளிவிளங்குமணிகள்பதித்த, கொடிஞ்சி - மேன்மொட்டையுடைய, மான்தேர் - குதிரைகட்டிய தேர்கள், ஆழி யோடாழிதாக்க - உருளைகளோடு ருளைகள் மூட்ட, அருஞ்சமர் - அரியயுத்தத்தை, தொடங்கி - ஆரம்பித்து, கிற்பார் - கிற்பார்கள்.

ஒவ்வொரு தேர் ஒவ்வொரு மலைபோல் திரிதலால் அவைகட் குச் சிறகுடையமலை யுவமை சொல்லப்பட்டன. அநேகத்தேராத லால் தெருக்கம்பற்றி ஆழியோடாழிதாக்க வென்றார். அரசரோ டரசரெதிர்த்தலால் ஆழியோடாழி தாக்கினவென்க.

உக.—(இ-ள்.) கூற்றெடும் - யமனுடனே, கொம்மைகொட்டி - கைதட்டிக்கொண்டு, குனிக்கும் - கூத்தாடுகின்ற, வாளுழவர் - வாட் படையையுடையவீரர்கள், வேகக்காற்றினுல்-சண்டமாருதத்தினுல், வெண்ணெயின்ற - பஞ்சமாத்தந்த, கருங்கனி - கரியபழம், உருவதை போல் - உதிர்வதுபோல, வேல்திறல்-வேற்படையில்திறலுடைய, வயவர் - படைவீரர்களுடைய, சென்னி - தலைகளை, வீழ்த்து - தள் ளி, வெங்கரிகள் - வெவ்விய யானைகளை, தாழி - கொன்று, சிற்றம் - கோபத்தை யுடைய, வெம்மடங்கலேற்றின் - வெவ்விய சிங்கவேற் றைப்போல், செரு களத்து - போர்க்களத்தில், உழக்கியிட்டார் - கலக்கினர்கள், (எ-று.)

கொல்லுதலில் அவனே டொப்பதலால் அவ்வரியைபற்றிக் கூற்றெடு கொம்மை கொட்டியென்றார். கொம்மை கொட்டலா

வது - அகங்கையிரித்துக் கொட்டுதலாம். மயிருள்ள தலையாதலால் வயவர் சென்னிக்குப் பனையின் கருங்கனி உவமை சொல்லப்பட்டது. [மடங்கலேற்றி னுழக்கியிட்டா ரெனலால் உவமையணி].

உசு.—(இ-ள்.) முழவுமுழ் - மத்தளத்தையொத்த, தினை - வலிமையொருங்கிய, தோள் - புயத்தையுடைய, வீரர் - படைவீரர், முழுமெயும் - தேகமுழுதும், இரு - பெரிய, புண்மேய - புண்ணிற பொருந்திய இழி - ஒழுகுகின்ற, பெருகுருதியாடி - பெரியவுதிரத்தில்மூழ்கி, இளங்கதிர் - இளவெயிலொருங்கிய இரணதையடைய, பிரிதியேப்ப - சூரியனையொப்ப, கவுள் அழி - கவுள்மதத்திற்குக் காரணமான, கடாத்த - மதநீர்ப்பெருக்கையுடைய, கால்வாய் - தொங்குகின்ற வாயையுடைய, அரசவா - அரசயானையின், எருத்தில் - பிடரியின்மேல், தோன்றி - ஏறி, பொழி - பொழிகின்ற, கணமாரி - பாணவர்ஷங்களை, சிந்தி - சிதறி, அகல் - அகன்ற, இரு - பெரிய, விசும்பு - ஆகாசத்தை, போர்த்தார் - மறைத்தார்கள், (எ-று.)

அரசவாவென்றது - எழுதப்பு நிலந்தோய்ந்து வெள்ளியகத்தாய்க் காலாலுங்கையாலும் வாலாலும் கோட்டாலும் பகையைக்கொல்ல வல்லதாய் எழுமுழமுயர்ந்து ஒன்பதுமுழநீண்டு பதின்மூன்று முழஞ் சுற்றளவுடையதாய்த் தியுமிழ் சிதகணுஞ்செம்புகருமுடைத்தாய் முன்புயர்ந்து பின்பணிந்திருப்பதாம்; அது "காலொரு கான்குந்துதிக்கையுங் கோசமும், வாலுறப்போடேழுமாகிலந்தோய்ந்து, பாலுஞ்சங்கும் போலக்காலுகிர், காலினுகான்ற வொருதனிக்கையினும், வாலினுமருப்பினுங்கோறல்வல்லதாய்ப், பதின்மூன்றுமுழச் சுற்றுடையதாகி, யெழுமுழமுயர்ந் தொன்பதுமுழநீண்டு, தியுமிழ் சிறுகணுஞ் செம்புகருமுடைத்தாய், முன்புயர்ந்து பின்பணிந்ததாயினவ்யானை, அரசவாவென்ன வறையப்படுமே" என்பதனானுமறிக.

உஎ.— [இனி மூன்றுபாட்டால் அரசர் களனேயெதிர்த்தல்.] (இ-ள்.) அருமருந்தனையான் - அரியதேவாமிர்தத்தையொத்த தமயந்தியானவள், சூட்டும் - தரித்த, அலங்கலந்தோளினானை - மாலைவினங்கும்புயத்தையுடைய நளனை, பொருதினை - மோதுகின்ற அலகனையுடைய, புணரிசூழ்ந்த - கடலாற் சூழப்பட்ட, புவியினில் - பூவுலகத்து, அரசரெல்லாம் - அரசரனைவரும், நினை - வரிசைபெற்ற, உனை - புறமயினையுடைய, அரிமானேற்றை - சிங்கவேற்றை, நிழலேக்கோபிக்கின்ற, தறுகண் - அஞ்சாமையையும், சிற்றம் - கோபத்தையுமுடைய, வரைபுரை - மலையையொத்த, களிகல்யானை - களிப்பையுடைய கல்லயானைகள், வனைந்தென - வனைந்தனபோல், வளைந்துகொண்டார் - சூழ்ந்துகொண்டார்கள், (எ-று.)

இத்தனை யரசரெதிர்த்தும் களனுக்கு இனையாகமாட்டாரென்பது தோன்ற அரிமானேற்றைக் களிகல்யானை வனைந்தென வளைந்துகொண்டாரென்றார். [உவமையணி.]

உசு.—(இ-ள்.) கொறில் - வினைவினையுடைய, பரி - குதிரைகட்டிய, தடம் - விசாலம்பொருந்திய, தேர்உந்தி - தனைச்செலுத்தி,

தோன்றிலை - பெரியவில்லை, குழையவாங்கி - வளையவளைத்து, பொறி அழல் - அக்கினிப்பொறியையுடைய, பகழிதூவி - பாணங்களை வீசி, பொங்குளை - மிகுந்தபுறமயிரினையுடைய, புரவி - குதிரைகளும், மான்தேர் - குதிரைகட்டிய தேர்களும், தெறுகதம் களிறல்யானை - மிகுந்த கோபத்தையுங் களிப்பையுமுடைய யானைகளும், சினவுவாள் வயவரீட்டம் - கோபிக்கின்ற வாட்படையையுடைய பல்வீரர்கூட்டமும், குறைபட - குறையும்படி, தூழிலாட்டி - தூழிலாட்டுச்செய்து, கூற்றென - யமன்போல், அரசர் - மன்னர்கள், ஆர்த்தார் - கர்ச்சித்தார்கள், (எ-று.)

தேருந்தி, சிலைவாங்கி, பகழிதூவி, தூழிலாட்டி, ஆர்த்தார் அரசரெனக்கொள்க. தூழிலாட்டாவது - பகைவர் ஓடும்படி தன் மார்பிற்றைத்துக்கிடந்த ஆயுதத்தைப் பிடுங்கியெறிதல்; "கைவேல் களிற்றொடுபோக்கிவருபவன், மெய்வேல்பறியாநகும்" என்பதனை நுமறிக.

உஎ.—(இ-ள்.) தெண்டிரை - தெளிவுபொருந்திய அலைகளையுடைய, பரவை யேழும் - கடல்களேழும், சேறுபட்டொழிய - சேறுபட்டு நீங்க, தெள்ளீர் மொண்டுகொண்டு - தெளிவானநீரை மொண்டுகொண்டு, ஓர்குன்றில் - ஒருமலையில், முகில்குழாம் - மேகக்கூட்டங்கள், சொரிவதேய்ப்ப - பொழிவதைபோல, புண்தலை - ஊனைத்தலையிலுடைய, வடிவேல்மன்னர் - கூரியவேற்படையையுடைய வரசர்கள், பொறியழல் - நெருப்புப்பொறிபறக்கின்ற, பகழிமாரி - அம்புமழையை, மண்டு - நெருங்கிய, அமர்கடந்த - யுத்தத்திற்செயித்த, திண்டோள் - வலிமைபொருந்திய புயத்தையுடைய, மன்னன்மேல் - நளமகாராஜன்மேல், பொழிந்திட்டார் - சொரிந்தார், (எ-று.)

பரவையேழுஞ் சேறுபட்டொழியத் தெண்ணீர்மொண்டுகொண்டெனலால் அரசர்கள் வைப்பாகவைத்திருந்த பாணங்களையும் நளன்மேற் பொழிந்தனரென்றதாயிற்று.

உஅ.—[இனி இரண்டுபாட்டால் அவ்வரசரை நளனெதிர்த்தல்.] (இ-ள்.) கொள்ளைகொண்டி - கொள்ளையாக வாரிக்கொண்டு, ஓரி உண்ண - நரிகளுண்ண, குழாங்கொடி - கூட்டங்கொண்டு, கவந்தமாடஉடற்குறைகள் கூத்தாட, ஒள்அழல்-ஒளியையுடைய நெருப்புப்பொறி பறக்கின்ற, தறுகண் - அஞ்சாமையையுடைய, கூற்றம் - யமனைவன், உயிருண்டு - உயிரையுண்டு, தெகிட்டிநிற்ப - பின்னும் வேண்டாது நிரப்பியடைத்துநிற்க, வெள்ளவெங்குருதி - வெப்பம் பொருந்திய உதிரவெள்ளம், போர்ப்ப - மூடிக்கொள்ள, வியன் - பெரிய, பூண - வயலையுடைய, நிடதம்காக்கும் - நிடதநாட்டைப் புரக்கின்ற, வள்ளல்தன் - களனுடைய, புரவுத்தோடு - புரவுத்துடன், வரிசிலை - அவனது நெடியவில்லானது, குனிந்தது - வளைந்தது, (எ-று.)—அன்று, ஏ - அசைநிலைகள்.

ஓரியுண்ண, கவந்தமாட, கூற்றமுயிருண்டு தெவிட்டி நிற்ப, குருதிபோர்ப்ப வள்ளல்நிலை குளிர்ததெனக்கூட்டுக. [புருவத்தோடும் சிலைவளைந்ததெனலால் உடனடுச்சியணி.]

உக.—(இ-ள்.) கூன் - வளைவுகொண்ட, பிறை-பிறையையொத்த, கோட்டெவ்வில்-கொம்பிலுள்ளதாகிய வலியவில்லை, குழைத்ததும் - வளைத்ததையும், குழைத்து - வளைத்து, தெவ்வர் - பகைவருடைய, ஊன்சுவைத்து - மாம்சத்தைமென்று, உண்ணும் - உண்ணுகின்ற, வாளிவிடுத்ததும் - பாணங்களை விட்டதையும், ஒன்னலார்தம் - சத்துருக்களுடைய, கான்படி - மண்ணுண்டாகிய, தெரியல் - மலர்மாலையையணிந்த, மார்பம் - மார்பை, போழ்ந்ததும் - பிளந்ததையும், தெரிபக்காணர் - ஒருவருந்தெரிபக்கண்டிலர், (யாதுகண்டென வெனில்) வான்படி - ஆகாயமளாவிய, பிணக்குன்றேறுங்கி - பிணமலைகளுயர்ந்து, வயின்வயின் - இடங்கடோறும், விளங்க - விளங்குதலை, கண்டார் - பார்த்தார்கள், (எ-று.)

புகையினுல் நெருப்புண்டென் றறிந்ததுபோல் பிணக்குன்றினுல் ளன் பொருதனனென் றறிந்தனரென்க. [பிணக்குன்றேறுங்கி வயின்வயின் விளக்கக்கண்டாரென்னுங் காரியத்தினுல் காரணமாகிய ளனது வில்லாண்மைதோன்றுதலால் பூர்வவிலுபுஞ்சீர்ச்சியணி.]

கூ.—[இனிளனெஞ்சு தனித்தனி அரசரெதிர்த்துப் பொருதல் சொல்லத்தொடங்கி, இப்பாட்டாலும் மேற்பாட்டாலும் கலிங்கராட்டரசனெதிர்த்தல் சொல்லப்படுகின்றது.]—(இ-ள்.) பொருசமத்து - பொருகின்றபோரில், உடன்ற வீரர் - கோபித்தெதிர்த்த வீரர்கள், பொன்றிட - இறந்துவிட, கின்றவேந்தர் - நின்றமற்றையரசர்கள், வெருவுற்ற - பயந்து, நிரியுமாறும் - ஓடுந்தன்மையையும், வேந்தர்கோன் - ளமகாராஜனுடைய, வலியும் - வலிமையினையும், கோக்கிபார்த்து, எரிமணி - ஒளியையுடைய மணிகள்பதித்த, பொன்செய்ஓடை - பொன்னுற்செய்த முகபடாத்தையுடைய, இளங்களிப்பகடு சூழ - இளமைபொருந்திய களிப்பையுடைய யானைகள் சூழ்ந்துவர, கனைபொரு - கனையோடுமோதுகின்ற, கடலந்தானை - சேனை சமுத்திரத்தையுடைய, கலிங்கர்கோன் - கலிங்கதேசத்தரசன், அமரில் - யுத்தத்தில், எற்றுண் - எதிர்த்தான், (எ-று.)

எதிர்த்தவக ளிறத்தலையும் மற்றவேந்த ரோடுதலையும் ளன் வலிமையையுங் கண்ட கலிங்கதேசத்தரசன், அவனெதிர்ப்பற்றனனென்க. சேனையிற் குறைவிலனென்பது தோன்றக் கடலந்தானைக் கலிங்கர்கோனென்றார்.

கக.—(இ-ள்.) கந்து - கட்டுத்தறியை முறிக்கின்ற, தறுகண்-அஞ்சாமையையுடைய, சிற்றம் - கோபத்தையுடைய, கடாம்பொழி - மதம்பொழிகின்ற, களிறல்யானை - களிப்பையுடைய வல்லயானையாகிய, மந்தரகிரியால் - மந்தரமலையினுல், சாணவாரிதி - சேனை சமுத்திரத்தை, உழக்கி - கலக்கி, வானத்து - விண்ணுலகத்து, இந்திரருமரெனன்ன - இந்திரகுமரரைப்போல், இகல்புரி - போர்செய்கி

ன்றி, நிடதர்கோமான் - நளமகாராஜன், உந்து - செலுத்துகின்ற, மான்றேரின்மேலும் - குதிரைகட்டிய தேரின்மேலும், ஒருகணை-ஒரு பாணத்தை, தெரிந்து - பார்த்து, விட்டான் - விடுத்தனன், (எ-று.)

இவன் விடும் பாணங்களுக்கும் வலிமைக்கும் தனது கோலொன்றே நிகரென்பவன்போலொருபாணம் விடுத்தனனென்க. உம்மைசிறப்பு. [யானையை மந்தரகிரியாகவும் தானையை வாரிதியாகவும் உருவகப்படுத்திச் சொல்லுதலால் உருவகவணி.]

[இவ்வாறுபொருத கலிங்கர்கோன் நளன் கைப்பகழிபாய்ந்து களத்திடைக் கவிழ்ந்தனன்.]

கூஉ.—[இனி மூன்று பாட்டுக்களால் மகததேசத் தரசன் எதிர்த்திறத்தல்.]—(இ-ள்.) களத்திடை - யுத்தகளத்திலே, கலிங்கர்கோமான் - கலிங்கதேசத் தரசன், கவிழ்தலும் - இறந்தவளவில், கடைக்கண்சேப்ப - கடைக்கண்கள் சிவக்க, உளத்திடை - மனத்தில், வெகுளிபொங்க - கோபமிக, ஊழிவெங்காலின் - யுகமுடிவி லுண்டாகும் வெவ்விய காற்றுப்போல், ஓடி—, வளைத்தனன் - வளைத்தனனாகி, சேணோடும் - சேணுடனே, வார் - நெடிய, சிலைவணக்கி-வில்லை வளைத்து, கூற்றுமஞ்ச - யமனு மஞ்சும்படி, வெந்திறல் - வெவ்விய திறலையுடைய, மகதர்கோ - மகததேசத்தரசன், வெம்போர் - வெவ்வியபோரை, விளைத்தனன் - செய்தான், (எ-று.)

மகதர்கோவானவன் கடைக்கண்சேப்ப வெகுளிபொங்க ஓடி வளைத்தனனாகி விளைத்தனனெனக் கூட்டுக.

கூக.—(இ-ள்.) மூரி - வளைத்த, திரை-அலையையுடைய,பரவை-பரப்பையுடைய, வேலை-கடலினின்று, முகட்டு-உதயகிரியில், எழுந்து-உதித்து, அகல்வான்மேய-அகன்ற ஆகாயத்தைப்பொருந்திய, விரிகதிர்மதியம்-விரிகின்றகிரணங்களையுடைய சந்திரனை, தீண்டும்-தொடுகின்ற, வெள்எயிற்ற அரவமென்ன - வெள்ளிய பல்லையுடைய சர்ப்பம்போல், குருதிகொப்புளிக்கும் - உதிரத்தை யுமிழ்கின்ற, வேலான் - வேற்படையையுடைய நளனனவன், கொற்றம் - சயத்தைத் தருகின்ற, வெண்குடையின்மீது - சவளசத்திரத்தின்மேல், வரிசிலை குழைத்து - நெடியவில்லை வளைத்து, வெய்ய - கொடிய, வடிக்கணை யொன்று - கூரியகணையொன்றை, விட்டான் - விடுத்தனன், (எ-று.)

மதியந்தீண்டும் வெள்ளெயிற் றரவமென்னல் "கண்டதுமன் னுபொருநாளலர்மன்னுந், திங்களைப் பாம்புகொண்டற்று" என்பதனாலறிக. [வெண்குடைக்கு மதியையும் பாணத்திற்குச் சர்ப்பத்தையும் ஒப்புச்சொல்லுதலால் உவமையணி.]

கூச.—(இ-ள்.) சுரும்பு - வண்டுகள், இமிர் - ஒலிக்கின்ற, தும்பைவேய்ந்த - தும்பைமாலை தரித்துவந்த, சுடர்முடி - கிரணங்கள் வீசுகின்ற கிரீடத்தையுடைய, மகதர்கோமான் - மகததேசத் தரசனனவன், விரும்பலர் - சத்துருக்களை, செகுக்கும் - கொல்லுகின்ற, வேலான் - வேற்படையையுடைய நளனது, வீற்பழுத்து - வில்லான

து பழுத்து, உமிழும் - உமிழுகின்ற, வெய்யசரம்பட - வெவ்வியபாணங்கள்பட, (அவைகளால்) அற்றுவீழ்ந்த - துணிந்துவீழ்ந்த, தன்-தன்னுடைய, உடற்குறை - கவந்தமானது, நின்று—, ஆட - கூத்தாட, அரம்பையரோடு - தெய்வமாதரோடு, நோக்கி - பார்த்து, அணி - அழகிய, மணி - முத்தையொத்த, நகைதோன்ற, முறுவல் பூத்தான் - நகைத்தனன், (எ-று.)

மகததேசத்தரசன் தெய்வவுருப் பெற்றமையால் அதிற்குறைந்த மனிதவுருவை யிகழ்ந்து நகைத்தனனென்க. தன்னுடற்குறை நின்றாட நோக்கி யெனலால், தறிபட்ட வுடலாடி நிலத்தின் விழுமுன்னமே தெய்வவுருப்பெற்றனனென்னும் விரைவு தோன்றியது. நாணமுற்றவர் உடன்சிரித்திடுவரென்பது இயல்பாதலால் தனக்குமாலுசூட்டிய அரம்பையரோடு நோக்கி யணிமணிமுறுவல் பூத்தானென்றார்.

கூடு.—[சோழனெதிர்த்தல்]—(இ-ள்.) அமைப்பரும் - அமைத்தற்கரிய, தறுகண் - அஞ்சாமையையும், சிற்றத்து - கோபத்தையும், ஆள் - ஆளுகின்ற, அரியேறுபோல்வான் - சிங்கவேற்றையொத்த ளனனவன், சமர்த்தலை - யுத்தகளத்தில், இகலினேற்ற - பகையினுலெதிர்த்த, தரியலர் - சத்துருக்களுடைய, சென்னிவிழ - தலைகள் வீழும்படி, தமித்திடும் - தறித்திடுகின்ற, குருதி - உதிரத்தையுடைய, ஒள்வாள் - ஒள்ளிய வாட்படையை, சுடரெழ - ஒளிதுளும்ப, விதிர்ப்ப - அசைக்க, நோக்கி - அதுகண்டு, இமைத்தலும் இமைக்கோட்டிமளவில், வளவர்கோனை - சோழனை, வெருவல் - அஞ்சாதே, நீ—, எதுகென்றான் - போவென்றான், (எ-று.)

ளன், வாளசைத்ததைக்கண்டு கண்ணிமைக் கோட்டலால் நம்மோடு பொருதற்கு அஞ்சினன்; இவனோடு பொருவது தருமமன்றென்று, சோழனைப்பார்த்து, அஞ்சாதே நீபோவென்றான். அதுதோல்வியென்பது "விழித்தகண் வேல்கொண் டெறிய வழித்திமைப்பி, னேட்டன்றே வன்கணவர்க்கு" என்பதனாலறிக.

கூக.—[இப்பாட்டும் மேற்பாட்டும் சேரமான் எதிர்த்துத் தோற்றல்.]—(இ-ள்.) மையறு - குற்றமற்ற, சிறப்பின்மிக்க - சிறப்பினுயர்ந்த, வஞ்சியம்பதிக்கு - வஞ்சியென்னு நகரத்திற்கு, வேந்து - அரசனுடைய சேரமான், கொய்யுளை—, புரவி-குதிரையை, தூண்டி - செலுத்தி, கொடுமரம் - வில்லை, குழையவாங்கி—, வெய்ய - கொடிய, வெம்பகழி மாரி - வெவ்வியபாண மழையை, விண்ணகம் - ஆகாயமுழுவதும், புதைப்ப - மூடும்படி, தூவி - இறைத்து, ஐயன்-ளனுடைய, மெய்க்கவசமீதும் - சிரவின்மேலும், ஐங்கணைதூவி - ஐந்துபாணம் விட்டு, ஆர்த்தான் - கர்ச்சித்தான், (எ-று.)

ளன்மேல் ஐங்கணைதூவினனெனலால் பகழிமாரி விண்ணகம் புதைப்பத்தூவி யென்பதைச் சேனைகண்மேலெனக் கொள்க.

ரூஎ.—(இ-ள்.) சில்வி - உருவினையையுடைய, தடம் - விசாலம் பொருந்திய, தேர்உந்தி - தேரைச்செலுத்தி, திண் - வலிமைபொருந்திய, சிலை - வில்லை, குழைபவாங்கி—, கொல்லிய வெழுந்த - கொல்லவெழுந்த, கூற்றின் - யமன்போல், கொடிய - கொடியவாகிய, வெம்பகழி - வெவ்விய பாணங்களை, தூவி - விட்டு, மல்லடி - மற்போர்செய்கின்ற, தோளும் - புயங்களிலும், மார்பும் - மார்பிலும், வழி - வழிகின்ற, பெருங்குருதியோடும் - அதிக உதிரத்துடனே, வில்லவன் - சேரமான், வெருவியோட - அஞ்சியோடும்படி, வெஞ் சமம் - வெவ்வியபோரை, உடற்றினன் - செய்தான் (நளன்), (எ-று.)

வில்லவனையிலும் நளன்வில்லுக்குத் தோற்றோடினமை தோன்றச் சேரமானுக்குப்பலபேரிருக்க வில்லவனென்றார். வில்லவன்-வில் கொடியுடையவன். வாங்கிதூவிஉடற்றினன் (நளன், எனவியைக்க.

ரூஅ.—[புட்கரத்தீவினரசனெதிர்த்தல்].—(இ-ள்.) புட்கரத்தீ விண்வேந்தன் - புட்கரத்தீவையாளு மரசனனவன், நிறங்கிளர் - ஒளி விளங்குகின்ற, வயிரப்பைம்பூண் - வச்சிராபரணத்தையுடைய, நிட தர்கோன் - நளமகாராஜன், தொடுத்த - பிரயோகஞ்செய்த, கோலில் - பாணத்தால், கறங்கெனத்திரியும் - காற்றடிபோற்றிரிகின்ற, வெய்ய - வெவ்விய, கலினமான் - கடிவாளம்பூண்ட குதிரைகட்டிய, தடம் - விசாலம்பொருந்திய, தேர்வீழ - இரதம்வீழ, மறங்கிளர் - கொடுமை மிகுந்த, பரிதிவேலும் - சூரியனையொத்த வேற்படையையும், மான மும் - அபிமானத்தையும், துறந்து - விட்டு, நாணல் - நாணத்தால், புறங்கொடுத்து - முதுகுகாட்டி, இரியல்போனன் - ஓடிப்போனன், (எ-று.)

மானமும் ஒரு ஆபரணம்போலணிபவனுதலின் புட்கரத்தீவின் வேந்தை வேலுமானமுந் துறந்துபோனனென்றார். "மானவருங்கலனீக்கி" என்றார்பிறரும்.

ரூக.—[இதுமுதல் நான்குபாட்டு சாகத்தீவரசன் எதிர்த்தல்]—(இ-ள்.) சாகத்தீவுக்குஇறை - சாகத்தீவுக் கரசனனவன், வேகம் - வேகத்தையுடைய, வெங்கலினமாவெள்ளம் - வெவ்விய கடிவாளம் பூண்ட குதிரைக்கூட்டங்கள், சூழ்வர - தன்னைச்சூழ்ந்துவர, பாகு - பாகனை, அடு - கொல்லுகின்ற, வெந்திறல் - வெவ்விய திறலையுடைய, பருமயானைமேல் - ஒப்பனைசெய்த யானையின்மேல், (இருந்து) சமரின் ஆர்ப்பொடும் - போரிரைவாரத்துடன், தோகையர்கண்ணனை - மாதர்விழிகள்போல், பகழி - பாணங்களை, தூவினன் - சிந்தினன், (எ-று.)

மாதர்கண்கள் பாணங்களினுங் கொடியனவாதலால் தோகையர் கண்ணைனப் பகழிதூவினனென்றார். பாகுஎன்னும் பண்புப் பெயர் பண்பிக்காயிற்று. [இது உவமேயமாகிய கண்களைஉவமானமாகிய பாணங்களுக்கு ஒப்புமைசொல்லலால் எதிர்மறையணி.]

சஅ.—(இ-ள்.) துணங்கையிட்டு - கையைக்கொட்டி, அலகைகள் - பேய்கள், துள்ளி - குதித்து, ஆர்த்து - ஒலித்து, எழ - எழும்ப, அணங்கு - வருந்தத்தைச்செய்கின்ற, எயிற்று - பல்லையுடைய, அரவென - சர்ப்பம்போல, அழலும்-சுடுகின்ற, வாளிகள் - பாணங்களை, வணங்கு - வளைகின்ற, வில் - வில்லை, கால்வளைத்து - காலினாலன்றி வளைத்து, எய்து - பிரயோகஞ்செய்து, மாற்றினான் - நீக்கினான், கிணங்கமழ் - தொழும்பு நாறுகின்ற, குருதிவேல் - உதிரந்தோய்ந்த வேற்படையையுடைய, கிடதர்வேந்தன்—, (எ-று.)—எ - சற்றசை.

இப்போரில் நமக்கு நல்லவுணவு கிடைக்குமென்று அதிகமகிழ்ச்சியால் பேய்கள் கர்ச்சித்தலால் துணங்கையிட்டலகைகடுள்ளிபார்த்தெழுவென்றார். அரவப்பாணத்துக்கும் எயிற்றை அதன் மூளைக்கும் உவமையாகக்கொள்க.

சக.—(இ-ள்.) பாற்றினந்தொடர்வது - பருந்துக் கூட்டங்கள் தொடர்வதும், பகைவர் - சத்துருக்களுடைய, ஊன் - மாமிசத்தை, கவர்வது - மென்று, உள்நிரந்து - ஊற்றுகவிருந்து, இடையறாது - ஒழியாமல், உதிரங்கால்வது - உதிரங்கக்குவதும், கூற்றொடும் - யமனுடன், தோழமை கொள்வதாயது - சினேகங் கொள்வதாகியதுமாகிய, ஓர் - ஒரு, மாற்றரு - தடுப்பதற்கரிய, கொடியவேல் - கொடியவேற்படையை, மன்னன் - களுனவன், வாங்கினான் - கைக்கொண்டான், (எ-று.)

ஒருவர்மேல்விட்டால் அதன்கொடுமை சொல்ல வேண்டுவதில்லையென்பது தோன்றச் சுபாவத்தில் இம்முக்குணங்களையுமுடைய வேலென்றார்.

சஉ.—(இ-ள்.) அயிலெடுத்தெறிதலும் - வேற்படையை யெடுத்து வீசியவளவில், அடர்க்கும் - பொருகின்ற, வன்னலார் - பகைவருடைய, வயிறு - வயிறானது, எரி - நெருப்பிலை, தவழ்ந்தது - தவழ்ந்திடப்பட்டது, வயிரவாட்படை - வச்சிரவாளே, செயிர்அறுகுற்றமற, எந்திய - தாங்கப்பெற்ற, சாகத்திவிறை - சாகத்திவுக்கரசனுடைய, உயிர் - உயிரானது, துறந்து - உடலைவிட்டு, அந்தகனுலகம் - யமலோகத்தில், புக்கது - புகுந்தது, (எ-று.)

வயிறெரிதவழ்ந்தலால், அடர்க்குமென்னலென்றது சாகத்திவரசனேவந்து எதிர்த்தவனை யெனக்கொள்க. நிராயுதனுகியிறந்திலனென்பது தோன்ற வயிரவாட்படை செயிறற வேற்திய சாகத்திவிறையென்றார்.

சஎ.— [இதுமுதலேழுபாட்டால் காம்பிலிதேசத்தரசனெதிர்த்தல்.]—(இ-ள்.) தூம்புடை - துவாரத்தையுடைய, கரமலை - யானையினது, எருத்தில் - பிடரியின்மேல், தோன்றுபு - தோன்றி, காம்பிலிக்கரசன் - காம்பிலிநாட்டுக் கரசனுனவன், வில்வாங்கி வில்லை வளைத்து, காய் - கொல்லுகின்ற, கணை - பாணங்களை, தேம் - வாசனை, பொதி - நெருங்கிய, செழுமலர் - செழுமையுள்ள பலராற்றொ

தித்த, தெரியல் - மாலையையணிந்த, மார்பினன் - நளனது, வரம் - தாவுகின்ற, பரி - குதிரைகட்டிய, தேர்மிசை - தேரின்மேல், மழையின் - மேகம்போல், தூவினன் - பிரயோகித்தான், (எ-று.)

துதிக்கையொன்று தவிர மற்றையுடல் மலைபோலிருத்தலால் யானையைக் கரமலையென்றார்; கரம் - துதிக்கை. காம்பிலிதேசத்தரசன் நளன்தேரின்மேற் பாணந் தூவினனெனக் கூட்டுக.

சச.—(இ-ள்.) சிலையுயிர்த்து - வில்லால்விடப்பட்டு, உயிர்ப்பலி கவரும் - உயிராகியவுணவை யுண்கின்ற, திண்கணை - வலிமை பெற்ற பாணங்களை, கொலைவடிவேலினன் - நளனவன், தூப்பசெலுத்த, குஞ்சரம் - (எறிவந்ததன்) யானையானது, மலையெனகவிழ்தலும் - மலைபோற் கவழ்ந்து வீழ்ந்தவளவில், மடங்கலேறென - ஆண்சிங்கம்போல, புலவு - புலாலுற்றத்தையுடைய, வாளொடும் - வாட்படையுடன், அவன் - அவ்வரசனவன், புவியில்-பூமியிலே, பாய்ந்தனன் - குதித்தனன், எ-று.

தன்னைவிட்டுத் தன் தேரின்மேற் பாணம் விடுத்தலால் நளனும் அவ்வரசனேறிவந்த யானைமேற் பாணம்விடுத்து அதைக் கொன்றனனென்க. [மலையெனவெனலால் உவமையணி.]

சஙி.—(இ-ள்.) வார் - நெடிய, மயிர்க்கேடகம் - மயிரையுடைய தோற்கேடகத்தை, பற்றி - பிடித்து, வாள்விதிர்த்து - வாளை யசைத்து, ஊர்-நடக்கின்ற, சினம் - கோபத்தையுடைய, களிற்றணி - யானைகுப்பை, உழக்கி - கலக்கி, ஒய்யென - விரைவில், போர்முகத்து - யுத்தமுகத்தில், உரறி - கர்ச்சித்து, வெம்புலியின் போத்தென - வெவ்விய ஆண்புலிபோல, சாரிகைதிரிந்தனன் - வட்டமாகத் திரிந்தான், கறுகணுளன் - அஞ்சத்தக்கவைகட்கு அஞ்சாத காம்பிலிதேசத்தரசனவன், (எ-று.)

பாணங்கள் தைப்பினும் அழிவில்லாதிருத்தற்கு மயிருள்ளதோலினாற் செய்வது பற்றி மயிர்க்கேடகமென்றார். ஒருகுற்றஞ் செய்தவர்க்குப் பலகுற்றஞ்செய்பவர்போல் தானேறிவந்த ஒரு யானையைக் கொன்ற நளனது களிற்றணியுழக்கிச் சாரிகை திரிந்தனனென்றார். [புலியின் போத்தென வெனலால் உவமையணி.]

சசு.—(இ-ள்.) பாரினின்று - பூமியிலிருந்து, அவனமர்புரிய - அவ்வரசன்போர்புரிய, பாய் - தாவுகின்ற, பரித்தேரினின்று - குதிரைகட்டிய தேரிலிருந்து, அகலுணை - கொல்லாநின்ற பாணங்களைக் கொண்டு, செருவிளைத்திடல் - யுத்தஞ்செய்தல், தாருடை - வெற்றிமாலையையணிந்த, வயவர் - படைவீரருடைய, போர்த்தருமமன்றென - யுத்தத்திற்குரிய தருமமன்றென்று, கூர் - கூரிய, நுதி - நுனியையுடைய, வாளுரீஇ-வாளையுருவிக்கொண்டு, குப்புற்றான்-குதித்தான் (நளன்), (எ-று.)—அரோ - அசை.

நளன் அறனிலைப்போர் செய்பவனுதலால் தன்னை யெதிர்த்த காம்பிலிதேசத் தரசனவன் பூமியில் இருத்தல்பற்றித் தானும்பூமியிற் குதித்தனனென்றார்.

சஎ.—(இ-ள்.) மன் - நிலைபெற்ற, பெருங்கேடகம் - பெரிய பரிசையை, திரித்து - சுழற்றி, வானிடை - ஆகாயத்தின்கண், மின் பிறழ்ந்தென்ன-மின்னலைசந்தாற்போல், வாள்விதிர்த்து - வாட்படையை யசைத்து, கோக்கினர் - பார்த்தவர்களுடைய, என்புஎலும்புகள், நெக்கு - நெக்குவிட்டு, உள் - உள்ளே, உடைந்திரிய - உடைந்துபோகும்படி, வென் - தம்முதுகை, பிறர் - பிறரால், அறிகிலா - அறியப்படாத, திறல்கொள் - வலிமையைக்கொண்ட, வீரர்க- வீரராகிய காம்பிலிதேசத்தரசனும்களனும், எற்றனர்-எதிர்த்தனர், (எ-று.)

வென்பிற ரறிகிலா வென்பதனால் ஓரிடத்திலும் இவ்விருவரும் தோற்றவரல்லரென்பது கருத்து; தோற்றவரே முதுகுகாட்டியோடி வராதலின். [இது உவமையணி.]

சஅ.—(இ-ள்.) தெறும் - அழிக்கின்ற, சினம் - கோபமானது, தலைக்கொளீஇ - அதிகரித்து, செங்கண் - சிவந்தகண்களினின்றும், தீயுக - நெருப்புதிர, பிறங்கு - உயர்ந்த, பொன்கேடகம் - அழகியகேடகத்தை, பிறழ - நீங்கும்படி, எற்றியும் - எறிந்தும், மறம்கிளர் - கொலைத்தொழில்மிகுந்த, வயிரவாள் - வச்சிரவாளை,வாளிற்றுக்கியும் - வாளினுலெறிந்தும்,கறங்கென-காற்றடிபோல், காவீரர் - காவலைபோன்றஅவ்வீரர்கள், திரிந்தனர் - திரிந்தார்கள், (எ-று.)

இவ்விரண்டு பாட்டால் ஒருவருக்கொருவருயர்வுதாழ்வு சொல்லாமையால் வாட்போரில் இவ்விருவரு மொத்தனரென்பதாம்.

சக.—(இ-ள்.) கோள் - கொலைசெய்கின்ற, புலிப்போத்தென - ஆண்புலிபோல், நிடதர்கோமகன் - நளனுனவன், சூட்பினுள் - யுத்தத்தின்கண், காம்பிலிக்கிறைவன் - காம்பிலிநாட்டரசனுடைய, நாம்அற-நாமமறும்படி, வாட்படை - வானாயுதத்தை, எறிந்து - வீசி, உயிர் - ஆவியை, வவ்வினன் - கொண்டான், அவன் - அவ்வரசன், சேட்புலத்து - விண்ணுலகத்தின்கண், அரம்பையர் - தெய்வமகளையரால், தெரியல் - மாலை, சூடினன் - சூடப்பெற்றான், (எ-று.)

நிடதர்கோமகன் - நிடதநாட்டாரதுஅரசன். நாமம் - நாமெனக் கடைகுறைந்தது. தோல்வியின்றி வாட்போரில் எதிர்த்திறந்தவனதலால் காம்பிலிதேசத்தரசனுக்கு அரம்பையர் மாலைசூட்டினரென்றார்.

சஏ.—அலங்கல் - வெற்றிமாலைதரித்த, வேலினை - வேலையுடைய களன், நோன்கெழு - பெருமை பொருந்திய, சிறையொடு திரிவது - சிறகினுடன் றிரிவதாகிய, ஓர் - ஒரு, சீயமெனன - சிங்கம்போல், அறை - ஒலிக்கின்ற, கழல் - வீரக்கழலையணிந்த, வேந்தர்மேல் - அரசர்கள்மேலும், எறுழ்வலி - மிகுந்தவலிமையையுடைய, களிற்றிடை - யானையின்மேலும், தாவும் - தாவுவான், எண்ணிலா - அளவில்லாத, கொறில் - ஒலியையுடைய, பரி (மிசை) - குதிரைமேலும், தேர்மிசை - தேரின்மேலும், பாயும் - பாய்வான், (எ-று.)

"நளன்செய்தபோரைத் தனித்தனிச் சொல்லின் முடியாதென் தொகுத்துச்சுட்டலென்னு முத்தியால் வேந்தர்மேல் களிற்றி ட பரி தேர்மிசை இவ்வாறெதிர்த்து வென்றனனென்றார்.

நுக.—(இ-ள்.) இன்னணம் - இந்தப்பிரகாரம், கொசெமர் - கொடியயுத்தத்தில், முருக்கி - கொன்று, எற்று - எதிர்த்து, இகல் - பகைக்கின்ற, மன்னவர் - அரசர்கள், புறக்கொடைகண்டு - முதுகு கொடுத்தோடச்செய்து, மாலைதாழ்- மாலைதாழ்கின்ற, கொல்நவில் - கொல்லுதலைச்சொல்லுகின்ற, குருதி - உதிரந்தோய்ந்த, வேல் - வேற்படையையுடைய, குவவுதோளினன் - திரட்சிபொருந்தியதோள் களையுடைய நளனுனவன், சென்னி - தலையினுல், வான் - ஆகாயத்தை, தடவு - தடவுகின்ற, பொன்தேரின் - அழகிய தேரின்மேல், எறிஞன்—, (எ-று.)

கொல்லுதலைத்தெரிந்தவர் வாயினுற்சொல்லாது செய்கையாற் சொல்லுதல்போல் வேற்படை கொலைசெய்தலாற் சொல்லுதலின் கொன்னவில் குருதிவேலென்றார்.

நுஉ.—[இனி ஐந்துபாட்டால் படைகளச்சிறப்புச் சொல்லப்படு கின்றது.]—(இ-ள்.) இகல்மிகு - பகைமைமிகுந்த, திறல் - வலிமை பொருந்திய, வேந்தர்—, எதிர்தல் - வாட்படையால், களப்படுத்த - யுத்தகளத்திற்கொன்ற, புகர்முகக்கடாயானை - புள்ளிபெற்ற முகத் தையுடைய மதயானைகள், பொழி - ஊற்றிய, குருதி செழும்சேற் றில் - செழுமைபொருந்திய உதிரச்சேற்றில், திகிரிய - உருளைகளை யுடையவும், கொடிஞ்சி - மேன்மொட்டை யுடையவுமாகிய, நெடுந் தேர்-நெடியதேர்கள், உழக்க-கலக்க, துகள் - தூளிகள், எழுந்து—, அ அகலிருவிசும்பு - அந்த அகற்சியுள்ள பெரிய ஆகாசத்தை, போர்த்து - மூடிக்கொண்டு, அந்திவான் போன்றது - செவ்வானத்தைப் போன்றது, (எ-று.)

குருதிச்சேறுயினும் அனேகந்தரம் தேருருளைக ளோடுதலாற் புழுதியாயிற்றென்க; அப்புழுதி மூடுதலால் ஆகாயம் செவ்வானம் போன்றதென்றார். [இது உவமையணி.]

நுக.—(இ-ள்.) ஒளிகிளர் - பிரகாசமிகுந்த, மணியோடை - அழகிய முகபடாமானது, சிதைந்து ஒழிய - கெட்டு ஒழிய, உடன்ற - வெகுண்ட, போர் - யுத்தத்தில், களி - செருக்கையும், இனம்- கோபத்தையுமுடைய, மால் - பெரிய, யானை - யானைகளுடைய, கதிர்-பிரகாசம்பொருந்திய, மருப்பு - தந்தங்கள், உமிழ்ந்த - சொரிந்த, தீ—, மூளி - காய்ந்த, தடம் - பருத்த, சினை - கினைகளை, மேயும் - தின்கின்ற, முருங்கு எரியென - அழியுந்தியைப்போல், பற்றி - பற்றிக்கொண்டு, விளிதரு - இறந்த, வயவருடல் - படைவீரருடை ய தேகங்கள், வெந்தொழிய - வெந்துபோகும்படி, பரந்தது - பர வியது, (எ-று.)—ஆல் - அசை.

போர்க்களத்தில் யானைக்கொம்பிற் பிறந்த தீயே வயவருடல் வெந்தொழியப் பரந்ததெனக்கொள்க.

நிச.—(இ-ள்.) பரிதி - சூரியன்போன்ற, வடி - கூரிய, வாள் - வாட்படையை, பிடித்து - கையிற்பற்றி, பல்லினால்—, இதழதுக் உதட்டைக்கடித்து, திருகு - மாறுபட்ட, சினம் - கோபம், தலை - கொளீஇ - அதிகரித்து, செங்கண்கள் - சிவந்த கண்களானவை, தீ உமிழ - நெருப்பைச்சொரிய, குருதிபாய் - உதிரம்பரவிய, அடுகளத்தில் - கொலைக்களத்தில், குற்றுயிரின் - குற்றுயிருடன், கிடந்தார் கண்டு - கிடந்தவர்களைக்கண்டு, அருகு அணைய - அவர்களருகேவரு தற்கு, கொடுங்கூற்றும் - கொடியயமனும், அஞ்சிநின்று - அச்சமுற்று நின்று, அலறும் - அலறுவான், (எ-று.)—ஆல்-அசைநிலை.

குற்றுயிரிற் கிடக்கும்போது யமன் அவனைப்பற்றுதற்கு அலறுவானெண்ணில், போரிலெதிர்க்கும்போது அவனைக்கண்டவர் அஞ்சுதல் சொல்லவேண்டுவதில்லையாயிற்று.

இடி.—(இ-ள்.) சிலைபொரு - மலையையொத்த, திணி - வலிமை பொருந்திய, தடந்தோள் - பருத்த தோள்களையுடைய, தேர்வேந்தர் - தேரையுடைய அரசர்கள், செருமலைந்து-போர்செய்து, கொலைபுரி - கொலைசெய்த, அகளத்தில்—, குடர் - குடர்கள், பின்னிகிடந்த தினை - ஒன்றோடொன்று பின்னிக்கிடந்ததை, புலவுநாறு - புலாலுற்றம் நாறுகின்ற, உடல்தசை - தேகத்தின் மாம்சத்தை, வேட்டு - விரும்பி, உண்ணவரும் - உண்பதற்குவந்த, புள் இனங்கள் - பறவைக் கூட்டங்கள், வலைவளைந்ததென - வலையானது வளைந்ததென்று, எண்ணி—, வானினிடை - ஆகாயத்தின்கண், சுழலும் - வட்டமிடும், (எ-று.)—ஆல் - அசை.

தசைவேட்கையினும் உயிரின்வேட்கை பெரிதாதலாலும், தசையையிட்டு நீங்கற்கு மனமெழாமையாலும், குடர் பின்னிக்கிடந்ததை வலைவளைந்ததென்று தசைவேட்டுண்ணவரும் புள்ளினங்கள் வானினிடைச் சுழலுமென்றார்.

இசு.—(இ-ள்.) சிற்றமிரும் - கோபமிகுந்த, களியானை - செருக்கையுடைய யானைகள்போல், திறல்கெழு - வலிமைமிக்க, போர் - போர்செய்கின்ற, வயவேந்தர்-வெற்றிமிகுந்த வீரர்களுடைய, கால் - காலையுடைய, தாளம்குடை - மூத்துக்குடைகளானவை, துணிந்து - துண்டுபட்டு, களத்தினிடை - போர்க்களத்தின்கண், கிடப்பனகள் - இருப்பனவாகி, எருமைஎறு - எருமைக்கடாவை, உகைத்து - செலுத்தி, அடரும் - நெருங்குகின்ற, இருள்நிறத்த - இருளையொத்த நிறத்தையுடைய, எரிருஞ்சி-எரிபோன்ற சிகையையுடைய, கூற்றம் - யமன், உயிர்பலிஎற்கும் - உயிர்ப்பிச்சையேற்கின்ற, கொள்கலம் போன்று - பாத்திரத்தையொத்து, இருந்தன—, (எ-று.)—எ-அசை.

கள் - இங்கே இசைநிறைத்தற்பொருட்டு விகுதிமேல் விகுதியாய் வந்தது. [காம்பு துணிந்துகிடந்த குடையைப் பலியேற்கும் பாத்திரமாகக் குறித்தலால் தற்குறிப்பணி.]

இஎ.—[அப்பொழுதுஇந்திரனெண்ணுதல்.]—(இ-ள்.) இன்ன களத்தின் - இப்படிப்பட்ட யுத்தகளத்தில், இரிந்தவரல்லால் - ஓடிப்

போரைவரல்லாமல், துன்னினார் - எதிர்த்தவர்கள், ஆவிதுறத்தலும் - உயிர் விடுதலையும், வெம்கூற்று அன்னவன் - வெவ்விய யமனை யொத்த நளன், வாளமர் - வாட்போரை, ஆற்றலும் - செய்தலையும், நோக்கா - பார்த்து, பொன்நகரத்து இறை - இந்திரன், புந்தியின் - தன்புத்தியில், ஓர்ந்தான் - சிந்தித்தான், (எ-று.)

ஓடினவர் பிழைத்தலையும் எதிர்த்தவ ரிறத்தலையும் நளன் வாட்போர் ஆற்றலையும் பார்த்து இந்திரன் ஆலோசித்தனனென்பதாம்.

நக.—[இனி இரண்டு பாட்டு இந்திரன் முதலானூர் நினைந்து தம்முருக்கொளல்.] (இ-ள்.) மன்றல் - வாசனையுள்ள, மலர்த்தொ டை - மலர்மாலையுயணிந்த, மன்னனை - நளனை, எய்தி - அடைந்து, வென்றிகொள் - வெற்றியைக்கொண்ட, போரை - யுத்தத்தை, விலக் கிலமாயின் - விலக்காமற்போவோமாகில், துன்று - நெருங்கிய, தி ரை - அலையையுடைய, கடல்சூழ் - கடலாற் சூழப்பட்ட, உலகெல் லாம் - பூவுலகத்திலுள்ளயாவரையும், இன்று - இப்பொழுதே, முடித் திடுமென்ன - அவன் கொல்லுவானென்று, நினைந்து - கருதி, (எ-று.)

இச்செய்யுளு மேற்செய்யுளுங் குளகமாதலின், இதில் நினைந் தென்னும் வினையெச்சம் மேற்செய்யுளில் மேவியவென்னும் பெய ரெச்சவினைகொண்டது. நாம் இப்போரை விலக்காது விட்டன மென்னில் உலக முழுவதையும் நளன் கொல்லுவனென்று (இந்தி ரன்முதலிய நால்வரும்) நினைந்தனரென்க.

நக.—(இ-ள்.) மழகளிறு அன்னவன் - இளங்களிற்றை யொத் தநளனது, மாண்-பெருமைபொருந்திய, உரு - வடிவத்தை, நீங்கி - விட்டுநீங்கி, விழைவொடு - விருப்போடு, தம்உருமேவிய - தங்கள் வடிவைப்பொருந்திய, விண்ணோர் - தேவர்கள், அழகுறு - அழகின் மிக்க, காஞையர்-காஞைப்பருவத்தையுடையவர், அவ்வுருவிட்டு-அக் காஞை வடிவத்தைவிட்டு, ஓர்கிழவுரு வெய்திய - ஒருகிழவடிவத் தையடைந்த, கெண்மையர்-தன்மையராதலை, ஒத்தார்—, (எ-று.)

நளனுருவிற்கும் இந்திரன் முதலிய நால்வருருவிற்கும் ஒப்புச் சொல்லில் அழகிய காஞையர் வடிவிற்கும் கிழவர் வடிவிற்கும் ஒப்புச் சொல்லுதல்போலா மென்பது விளங்குகின்றது.

நக.—[இனி இரண்டுபாட்டு நளன் போரை விலக்குதல்.]—(இ-ள்.) முன்உருமேவிய - பழைய வடிவினைப்பெற்ற, மொய் - நெருங்கிய, கழல் - வீரக்கழலையணிந்த, விண்ணோர் - தேவர்கள், மன்னனை எய்துபு - நளனையடைந்து, வாய்மையினும் - சத்தியத் தினும், துன்னலரை - சத்துருக்களை, தெறு - கொல்லுகின்ற, தோள்வலியானும் - புஜபலத்தினும், நின்னை - உன்னை, நேர்பவர் - ஒப்பவர், நிலத்திடை - பூமியில், யார் - எவர், [ஒருவருமில்லை,] (எ-று.)—எகாரம்-ஈற்றசை.

யாவரும் புகழ்ச்சியில் வயப்படுதல்போல் மற்றொன்றினும் வயப் படாரென்பது தெரிந்த தேவர்கள் நளனைப் பூமியில் வாய்மையிலும்

வலிமையிலும் உனக்குச் சமானமானவ ரில்லையென்றார். [உவ மேயமாகிய நளனே உவனமாகக் கூறி அவனுக்கு மற்ற வரசரோடு ஒப்பின்மை கூறலால் எதிரிலியணி.] இப்பாட்டும் மேற்பாட்டு மொருதொடர்.

சுக.—(இ-ள்.) வென்றிகொள் - வெற்றியைக்கொண்ட, வேல் வ - வேற்படையையுடைய நளனே! துன்று-நெருங்கிய, களத்து எதிர் - யுத்தகளத்திலெதிர்த்த, துன்னலர்யாரும் - சத்துருக்களெல்லாம், பொன்ற - இறக்கும்படி, முருக்கிய - கொன்ற, போர்தொழில்நீங்கி - போர்த்தொழிலைவிட்டு, மின்னனையாள்தன் - மின்னலையொத்த தமயந்தியினது, மன்றல் - விவாகத்தை, முடித்தனை - செய்துகொண்டவனாகி, வாழியவென்றார் - (நீ) வாழக்கடவையென்றார்கள், (எ-று.)

போரைவிட்டு விவாக முடித்துக்கொண்டு தமயந்தியுடன் நெடுங்காலம் அரசு புரிவையாக வென்பார் வாழியவென்றார்.

சுஉ.—[இந்திரன்முதலிய நால்வரையும் நளன் வணங்குதல்.]—(இ-ள்.) விண்ணவர் - தேவர்கள், இன்னணம் - இந்தப்பிரகாரம், வேண்டினர் - வேண்டினவராகி, கூற - சொல்ல, புண்உறு - மாமி சந்தங்கிய, வெய்ய - வெவ்விய, புலால் - புலானாற்றம், கமழ் - வீசுகின்ற, வைவேல் - கூரியவேற்படையையுடைய, அண்ணல் - நளனனவன், அமர்தொழில் - யுத்தத்தை, ஆற்றிலனாகி - செய்யாதவனாகி, பண்அமை - அலங்காரமமைந்த, தேரினிழிந்து - தேரினின்றுமிறங்கி, பணிந்தான் - (அந்நால்வரையும்) வணங்கினன், (எ-று.)

போர்த்தொழிலில் மூடினனாயினும் நளன் தேவர்கள் வேண்டுகோளுக் குடன்பட்டவனாய் அமர்த்தொழில்விட்டுத் தனதுபொறை தோன்ற அவரைப் பணிந்தனனென்க.

சுங.— [இனி ஐந்துபாட்டு தேவர்கள் வரங்கொடுத்தல்.]—(இ-ள்.) வாசவன்-இந்திரன், எய்திய - அடைந்த, காளையை-நளனை, நோக்கி - பார்த்து, அருமகம் - அரியயாகத்தை, எவ்வழி - எவ்விடத்தில், ஆற்றினும் - நீ செய்தபோதிலும், ஆங்கண் - அவ்விடத்தில், உருவொடு-உருவுடனே, வந்து-அடைந்து, அவி-அவிர்ப்பாகத்தை, உண்குவம் என்ன - யாமுண்போமென்று, மருவரும் - அடைதற்கரிய, நல்வரம் - நல்லவரத்தை, கருணையின்-அருளினால், ஈந்தான்-கொடுத்தனன், (எ-று.)

உருவுடனே தேவர்கள் வந்து யாகத்தில் அவிர்ப்பாகங் கொள்வது அருமையென்பது தோன்ற மருவருநல்வர மென்றார்.

சுச.—(இ-ள்.) மிடல்கெழு - வலிமைமிகுந்த, மேழகம் மேற்கொளும் - ஆட்டுக்கடாவின்மேலேறும், மேலோன் - அக்கினிதேவனனவன், உடைதிரைவேலையின் - உடைகின்ற அலைகளையுடைய கடலிற்பிறந்த, இன் அமுது ஒப்ப - இனிய அமிர்தத்தையொப்ப, மடிதல் இல் - கெடாத, வெங்கனல் இன்றியும் - வெவ்விய தியில்லா

மலுங், வாளா - சும்மா, அடிசில் - உணவை, அடுதாழில் - சமைக்குந் தொழிலாகிய, விஞ்சை - வித்தையை, அளித்தான் - வரமாகக் கொடுத்தான், (எ-று.)

அக்கினிதேவன் இவ்வரங்கொடுத்தலால் உலகத்தில் இப்பொழுதும் நளபாகம்போலென்று உவமை சொல்லும்படி விளங்கிற்றென்க.

சுடு.—(இ-ள்.) வென்றி - வெற்றியையும், கொல்சினம் - கொல்லாநின்ற கோபத்தையுமுடைய, வெம்பகடூர்தி - வெவ்விய எருமைக்கடா வாகனத்தையுடைய யமன், அல்லல்உழந்து-வருத்தப்பட்டு, அஞர் எய்தினும் - துன்பமடையினும், நெஞ்சில் - மனத்தில், நல்அறம்எய்தவும் - நல்லதருமமடையவும், நண்ணிய - பொருந்திய, ஞாட்பில் - யுத்தத்தில், வெல்படை - வெல்லத்தக்க ஆயுதங்கள், வேண்டுவ - வேண்டுவனவற்றை, எய்தவும் - அடையவும், கொடுத்தான் - நளனுக்கு வரங்கொடுத்தான், (எ-று.)

காரணம் காரியத்துள்ளதென்பது பிரசித்தப்படும்படி யமன் தருமனென்னும் பெயர்க்கேற்ப நளன் அல்லற்படும்போதும் நல்லறமெய்தவும், கொலைத்தொழிற்கேற்ப யுத்தகளத்தில் வெல்படைகளெய்தவும் வரங்கொடுத்தனனென்றார்.

சுசு.—(இ-ள்.) வருணன் - வருணனென்பவன், தார் - மாலைகள், புலராது - வாடாமல், தயங்கவும் - விளங்கவும், வேண்டின் - வேண்டினால், ஆர்கலி - சமுத்திரமானது, வற்ற அமைக்கவும் - வற்றும்படிசெய்யவும், அல்லால்-அவையன்றியும், நீர்அறுபாலியின் - நீரில்லாத பாலைநிலத்தில், நெஞ்சின் நினைப்பின் - நெஞ்சிலே நினைத்தால், வார் - நெடிய, புனல்எய்தவும் - நீருண்டாகவும், அளித்தான் - நளனுக்கு வரங்கொடுத்தான், (எ-று.)

இதனால் மழையில்லாது விடினும் இவன் தேசத்துக்கு நீராற் குறைவில்லையாம்.

சுஎ.—(இ-ள்.) விண்ணவர்-இந்திரன்முதலிய தேவர்கள், ஆண்தகைக்கு - நளனுக்கு, இன்னஅளித்து - இவ்வரங்களைக் கொடுத்து, அரிவைக்கும் - தமயந்திக்கும், மாண்தகு - மாட்சிமை பொருந்திய, கற்பை - கற்பினை, வருத்துவமென்ன - வருத்துவோமென்று, தீண்டினர் - தொட்டவர்களுடைய, ஆவி - உயிர், சிதைந்திடுமாறும் - கெடுமாறும், வேண்டு உரு எய்தவும் - வேண்டிய வடிவங்களெடுக்கவும், ஈந்தார் - வரங்கொடுத்தனர், (எ-று.)

அரிவைக்கும் - எச்சவும்மை. தாங்கள் பலமுயற்சிசெய்துஞ் சம்மதியாமல் மனிதருயிய நளன்மேல்வைத்த கருத்தின்படி சாதித்தலால் தேவர்கள் அதில் மிகவும் மகிழ்வுடையவராய்த் தமயந்தி கற்பை வருத்தவெண்ணின் அவருயிர் மாயும்படி வரந் தந்தனரென்க.

சுஅ. — [தேவர்கள் மகிழ்வோடு தமது பதியடைதல்.]—(இ-ள்.) கண் அகல் - இடமகன்ற, ஞாலம்-பூமியை, அளித்த - இரகூடித்த, கழல்கால் - வீரக்கழலையணிந்த காலையுடைய, அண்ணல

ளனை, ஏத்தி - துதித்து, அருந்ததிமானும் - அருந்ததியையொத்த, பெண் அமுதத்தை - தமயந்தியை, வியந்து - கொண்டாடி, பெரு சீர் - மிகுந்த சிறப்பையுடைய, விண்ணவர் - தேவர்கள், தம் பதி - தம்முடைய நகரங்களை, மேவினர் - அடைந்தனர், (எ-று.)

குற்றமில்லாத தன்மே லெதிர்க்கவந்த மற்றையரசரை விடுத்தலால் ஞாலமளித்த அண்ணலென்றார். அருந்ததிமானுமென்பது கற்புக்கெனக்கொள்க. அருந்ததியென்பவள் வசிஷ்டமுனிவருடையமனைவி; கற்புடையார் பலரினும் இவளுக்குமேன்மையெனினை, நக்ஷத்திரமேலையிலும் கணவனைப் பிரியாதிருக்கை; அதைஇங்ஙனமறிக: வடக்கில் ஸப்தரிஷி மண்டலமென்று (2700) வருஷங்களுக்கு ஒருசுற்றுசுற்றுகிற நக்ஷத்திரக்கூட்ட மொன்றிருக்கின்றது. அதில் நான்குநக்ஷத்திரம் நீண்டசதுரமாய்ப் பெட்டிப்பண்டிபோலிருக்கின்றன; அவற்றின் மூற்புரத்தடியில் நடுவனைந்த னர்க்காலைப் போலே மூன்று நக்ஷத்திரமிருக்கின்றன. இவற்றில்நடுநக்ஷத்திரம் வசிஷ்டநக்ஷத்திர மென்பதாம். அதனடியிற்கிட்டினதாய் தூட்பநோக்கினுற் காணப்படத்தக்க தொருநக்ஷத்திர மிருக்கின்றது; இதுதான் அருந்ததிநக்ஷத்ரம். இதைவிவாகத்தில் பிரவேசஹோமம் என்கிற சடங்கில் மணமகளுக்குக் காட்டுவதுண்டு; இதுகற்புநிலைநோக்கியெனவறிக. பெண்ணமுதத்தை வியந்தென்பது தமயந்தி நற்குணநற்செய்கையையென்க.

சுக.—[நளன் தன்னிருக்கைசேர்தல்]—(இ-ள்.) அங்கண் - அழகிய இடத்தையுடைய, வானத்து-தெய்வலோகத் திருந்துவந்த, அமரரும் - தேவரும், ஆழியின் - சமுத்திரம்போல், பொங்கு - மிகுந்த, தானை - சேனையையுடைய, அரசரும் - அரசர்களும், போயபின் - போனபின்பு, திகழ் - பிரகாசிக்கின்ற, மாமணி - மாணிக்கமணிகளிழைத்து, தங்கு - தங்கிய, பைம்பொன் - பசிய பொன்னாற்செய்த, இருக்கையில் - விடுதியில், சிங்கம் ஏறு அனையான் - ஆண்சிங்கத்தையொத்த நளனனவன், சார்ந்தனன் - சேர்ந்தான், (எ-று.)

தேவரும் அரசரும் தம்மிடத்திற் சென்றபின்பு நளனும் தனது விடுதி சேர்ந்தனனென்பதாம்.

மணம்புரிபடலம்.

[இப்படலத்தால் நளமகாராஜன் தமயந்தியை விவாகஞ்செய்தல் சொல்லப்படுகின்றது.]

க.—[புரோகிதர் கல்யாணமண்டபத்திற்குவருதல்.]—(இ-ள்.) வேள்வி - யாகங்களை, ஆற்று - செய்கின்ற, அருந்தவர் - முனிவர்கள், சூழ்வர - சூழ்ந்துவர, நான்மறை-நாலுவேதங்களையும், போற்று-போற்றுகின்ற, கோதமன்-கௌதமமுனிவர், போர்கெழு - போரின்மிக்க, வேல்தடகண் - வேல்போன்ற விசாலமான கண்களையுடைய,

விளங்கிழை - தமயந்தியினது, மன்றலுக்கு - விவாகத்துக்கு, ஏற்ற யாவையும் - ஏற்ற திரவியமனேத்தையும், கொண்டு - வருவித்துக் கொண்டு, உடன் - அதனுடனே, எய்தினன் - வந்தார், (எ-று.)

கௌதமமுனிவர் விவாகத்திற்கு வேண்டிய புட்பம், சந்தனம், சோபநாக்ஷதை, சமித்து, தருப்பை முதலியவற்றை வரவழைத்துக் கொண்டு வந்தனரென்பதற்கு மன்றலுக்கேற்ற யாவையுங் கொண்டெ னைத்தினுனென்றார்.

உ.—[நளனுக்கு விவாகமுகூர்த்தவேளை முன்பறிவித்தல்.]—(இ-ள்.) வேரிஅம்தொடை - தேனொழுகும் மலர்மாலையையணிந்த, வீமனும் - வீமராஜனும், வேந்தரும் - மற்ற அரசர்களும், தேரு நான் மறைசெல்வரும் - சாலு வேதங்களையு மறிந்த பிராமணர்களும், மன்ற லுக்கு - விவாகத்திற்குக்குறித்த, ஓரை எய்தியது என்று - முகூர்த் தம் வந்ததென்று, உழை - அருகிலிருந்த, ஒற்றரால் - தூதராலி, ஆரம் மார்பற்கு - முத்துமாலையணிந்த மார்பினையுடைய நளமகாராஜ னுக்கு, அறிய-தெரியும்படி, உணர்த்தினர்-தெரிவித்தார்கள், (எ-று.)

விவாகத்திற்கு முன்பு நடக்கவேண்டிய சடங்குக ளனேத்தையு நடத்தவேண்டி ஓரையெய்தியதென்று ஒற்றரால் ஆரமார்பற் குணர்த் தினரென்க.

ஊ.—[நளனுக்கு மங்களஸ்நாகஞ்செய்வித்தல்.]—(இ-ள்.) ஒற் றர்கூற - தூதர்சொல்ல, (அவ்வளவில்) ஒளிர்முடி - விளங்குகின்ற மகுடத்தையுடைய, வேந்தனை - நளனே, கற்றை - மயிர்த்தொகுதி யாகிய, வார்சடை - நெடிய சடையையுடைய, காசிபனுதியோர் - காசிபர்முதலிய முனிவர்கள், சொற்றநான்மறைதூல்வழி - வேத நூலிற்சொல்லிய வழிப்படி, தூ-பரிசுத்தமாகிய, மணி-நவமணிகள் பதித்த, பொன்தசும்பினில் - பொற்குடங்களிற் கொணர்ந்த, பூம்பு னல் - பொலிவையுடைய தீர்த்தங்களினுல், ஆட்டினர் - ஸ்நாகஞ் செய்வித்தார்கள், (எ-று.)

பூம்புனலெனலால் கங்கைமுதலிய தீர்த்தமெனக்கொள்க. நூல் வழிப் பூம்புனல்ஆட்டினரெனலால் முப்பத்திரண்டுவகையுள்ள ஓமா விகையையும், விரைஐந்தையும் துவர் பத்தையும் பூசி மங்களஸ்நா நஞ்செய்வித்தனரென்க. ஓமாலிகை முப்பத்திரண்டும் விரையைந் தும் துவர்பத்தும் இவையென்பதை "புழுகுசட்டங் கோட்டமாரி யக்கோட்டகாகப் - பூமுத்தக் காசுசயிலேகம் விலாமிச்சம், பழுதிலி ருவேரிமலே யிருவேரிமாஞ்சில் - பச்சிலைகச் சோலமதிமதுரந்தக்கோ லம், வழைமலர் நன்னரிதிம் பூவெண்ணெய் கண்டில்-வகுளப்பூத்தா வரிசி யேலஞ் சாதிக்காய், தழைசரள மிலவங்கநாகணமஞ் சட்டி, சண்பக மொட்டாரத்தைநறும் பிண்டகரங் குக்குல்." "கூறியவோ மாவிகையெண் ணைன்கொடெத்தூரி - குங்குமங்கர்ப் பூரமகில் சந்தன மைவிரையும், வீரியபான் மரநான்கு திரிபலைமா நாவன் - மிக்ககருங் காலியெனுந் துவர்பத்து கல்லோர், தேறுவெள்ளி லோத்திரப்பூம் பொருகரைத்த சாந்துஞ் - சேர்த்துநறு நெய்பூசித் திமிர்ந்தருவி

போல; ஆரியமா மதக்களிற்றுப் பிடரின்வருகங்கை - யுவந்தாட்டித் திருமேனியொற்றுடை புரிந்தார்" என்னும் பார்க்கவபுராணச் செய்யுள்களானும், "கங்கையின் களிற்றி னுச்சிக் கதிர்மணிக் குடத்திற் றந்த, மங்கலவாசனன்னீர் மணிநிறங் கழீஇய தொப்ப, நங்கையை நயப்பவெல்லா வினையொடு துவருஞ்சேர்த்தி, யங்கரவல்குலாளை யாட்டிநை ரரம்பையன்னார்" என்னுஞ் சிந்தாமணிச் செய்யுளுரையுள் நச்சினார்க்கினியரெடுத் தோதிய "இலவங்கம் பச்சிலை கச்சோல மிருவேரி மலையிருவேரி வகுளப்பூச் சுரபுன்னைப்பூ எலந் தக்கோல மந்தாவிசி சாதிக்காய் நாகணமஞ்சட்டி நறும்பிசின் குக்குலுமாஞ்சில் கண்டில் வெண்ணெய் தீம்பூ நன்னாரிவே ரடவிக்கச்சோல மரத்தை சரளம் புழுகுசட்டங்கோட்ட மாரியக்கோட்டந் தகர மதிமதுரமுத் தக்காசு வாய்ந்த விலாமிச்சம் சயிலேக நாகப்பூச் சண்பகமொட் டென்று முழுதுணர்ந்தோ ரோதிய மூப்பத்திரண்டே விதிவகை யோமா விகை." "சந்தனமகிலொடு கருப்பூரங் கத்தூரி, குங்குமமென்றிவை யைந்தும்விளையே." "நாற்பான் மரமாநாவறிரிபலை, வன்கருங்காலி பத்துத்துவரே" என்னும் மேற்கோள்களானு மூணர்க. நாற்பான் மரமாவன: ஆல், அரசு, அத்தி, இத்தி என்பன. திரிபலை: கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய். கலியாணப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் மேற்சொல்லிய திரவியங்களை வெவ்வேறு சேர்த்து அரைத்துப் பூசி மங்கள்ஸ்நானஞ் செய்வித்தல் சாஸ்திரங்களிற் சொல்லிய முறை யெனவுணர்க.

ச.—(இ-ள்.) புனிறு இள - மிகுந்த விளமைபொருந்திய, பிறை கண்ணியன் - பாலசந்திரனுகிய மாலையணிந்த பரமசிவனுடைய, பூகழல் — அழகியபாதங்களை, மனத்தின் எண்ணி - இதயத்திலே தியானித்து, வழிபட்டு - பூசித்து, மாமறையனைத்தும்வல்ல - வேத முழுதுந்தெரிந்த, அறநெறி - தருமமார்க்கத்தினின்ற, அந்தணர் - பிராமணர்கள், நினைத்தயாவையும்-நினைத்தவையனைத்தையும், நீரொடு - நீருடனே, நல்கினன் - கொடுத்தனன், (எ-று.)

குறிப்பறிந் தீபவனுதலால் அந்தணர் நினைத்தயாவையு நீரோடு தானஞ்செய்தனனென்க.

ஞ.—[இதுமுதல் ஆறுபாட்டு நளனுக்கு அலங்காரித்தல்.]—(இ-ள்.) அழகுவாய்ப்ப - அழகுபொருந்த, வினைபவர் - அலங்காரிப்பவர்கள், அண்ணலைதொழுது - நளனை வணங்கி, நல் அருள் பூண்டு-அவனுடைய திருநயனப்பெற்று, சுடர்வீர்-கிரணம் விரிகின்ற, மழுவநன்கதிர்-இளஞ்சூரியனுனவன், மால்வரை சேர்ந்தென - உதயகிரியில் வந்ததுபோல், செழுமணி-செழுமையுள்ள மணிகள் பதித்த, பொன் - பொன்னுற்செய்த, திகழ் - பிரகாசிக்கின்ற, மூடி - கிரீடத்தை, சூட்டினர்-தரித்தார்கள், (எ-று.)

அணிதலில் வல்லவரென்பதுதோன்ற அழகுவாய்ப்ப வினைபவரென்றும், நளனருள் பெற்றென்பதற்கு நல்லருள் பூண்டென்றும்,

அரசர்க்கு முடி பிரதானமாகையால் முடிசூட்டியென்றுஞ் சொல்லினர். [கதிர்வளை சேர்ந்தென வெனலால் உவமையணி.]

சு.—(இ-ள்.) புயங்கள் என்னும்-தோள்களென்கின்ற, பொன் கிரிமீது - மேருமலையின்மேல், வான் - ஆகாயத்தில், தயங்கு - விளங்குகின்ற, சோதி - ஒளியையுடைய, கதிர்கள் - சூரியர்கள், தவழ்ந்தென - தவழ்ந்தாற்போல, கயம்கொள் - தடாகங்களிலுள்ள, வள்ளை - வள்ளையிலையினுடைய, கவின் - அழகை, கவர் - கொண்ட, காதினில் - செவிகளில், வயங்கு - பிரகாசிக்கின்ற, பசுமைபொன் - பசும் பொன்னாற்செய்த, மணிகுழை - ரத்ன குண்டலங்களை, சேர்த்தினர்-தரித்தார்கள், (எ-று.)

[நளன் புயங்களென்னும் பொலங்கிரியென்றது-உருவகவணி; கதிர்கள் தவழ்ந்தென மணிக்குழையென்றது - உவமையணி; வள்ளைக் கவின்கவர்காதென்றது - காட்சியணி; இம்மூன்றுங் கலந்து வருதலிற் கலவையணி.] மூலத்தில் தயங்குசோதியெனத்திருத்துக.

எ.—(இ-ள்.) வண்ணமேகலையார் - அழகிய மேகலையைத் தரித்த மங்கையர்களுடைய, மனம் - நெஞ்சை, கூட்டுண - கொள்ளை கொள்ள, கண் அகன்று - இடமகன்று, கவின்செயும் - அழகைச்செய்யும், மார்பிடை - மார்பின்கண்ணே, அண்ணல் - பெரிய, மால்வரை - மேருமலையில், தாழும் அருவிபோல்-தாழ்ந்தொழுகு மருவிநீரைப்போல், தெள் - தெளிந்த, நிலா - ஒளியையுடைய, மணியார்வடம்-முத்துவடங்களை, சேர்த்தினர் - தரித்தார்கள், (எ-று.)

மாதர்க்குத் தழுவற்குரிய ஆடவர் மார்பிடத்தில் மிகுந்த மகிழ்ச்சியென்பது தோன்ற மேகலையார் மனங் கூட்டுணுமார்பெனப்பட்டது. [மார்பிடை வரைதாழ் மருவிபோல் வடஞ் சேர்த்தினரென லால் உவமையணி.]

அ.—(இ-ள்.) பூமலர் - பொலிவுபொருந்திய மலர்களையுடைய, செழு - செழுமையுள்ள, கற்பகம்புல்லிய - கற்பகத்தருவைத்தழுவிய, காமவல்லியென - காமவல்லிபோல், கவின்செய்திட - அழகைச்செய்ய, தூ - பரிசுத்தமாகிய, மணிசுடர் - நவமணியின் கிரணங்கள், தூங்கு - தங்கிய, பொன்தொடி - பொன்னாற்செய்ததோள்வளையை, தேமலர்தொடை - வாசனைபொருந்திய மலர்மாலையையணிந்த, திண்புயம்-திண்ணியதோள்களில், சேர்த்தினர்—.(எ-று.)

காமவல்லி - கற்பகத்தருவிற் படருமோர்கொடி. [கற்பகம் புல்லிய காமவல்லிபோல் பொலந்தொடியைத் திண்புயஞ் சேர்த்தினரெனலால் உவமையணி.] மூலத்தில் காமவல்லியெனத் திருத்துக.

க.—(இ-ள்.) துளங்கு - அசைகின்ற, தெண்திரை கடல்சூழ் - தெளிந்த அலைகளையுடைய கடலாற் சூழப்பட்ட, வையகம் - பூமியில், அளந்துகோடற்கு - அளவிட்டுக் கொள்வதற்கு, அருவிலை - அரியவிலையையுடைய, பூந்துகில் - அழகியஆடையை, விளங்கு - பிரகாசிக்கின்ற, பொன் அம்கிரியினை - மேருமலையை, வெண்முகில் -

வெள்ளே மேகமானது, வளைந்ததென்ன - சூழ்ந்ததுபோல், மருங்கினில் - அரையில், சாத்தினர் - தரித்தார்கள், (எ-று.)

[பொன்னங்கிரியினே வெண்முகில் வளைந்ததென்னப் பூந்துகில் மருங்கினிற் சாத்தினரெனலால் உவமையணி.]

கo.—(இ-ள்.) பாந்தள் - ஆதிசேடனுல், எந்திய - சுமக்கப் பட்ட, பார்-பூமியை, பொதுநீக்கிய - யாவருக்கும் பொதுவாதலே நீக்கிய, ஏந்தல் - ளனது, செம்மை அடிபோதின் - சிவந்த பாதமலர்களில், எழில்பெற - அழகு பெறும்படி, வேந்தர் - அரசர்களுடைய, பொன்முடி - சுவர்ண கிரீடங்களால், தேய்த்து - தேய்க்கப்பட்டு, விளக்கிய - பிரகாசித்த, காந்து - சொலிக்கின்ற, பைம்பொன் - பசும் பொன்னுற்செய்த, கணைகழல் - ஒலிக்கும் கழலே, வீக்கினர் - கட்டினர்கள், (எ-று.)

பூமி அரசர்க்கெல்லாம் பொதுவாயிருப்பதை நீக்கித் தனதாக்கி யாளுகையால் பார் பொதுநீக்கிய வேந்தலென்றார். வீரத்தன்மை தோன்றக் கணைகழல் வீக்கினரெனப்பட்டது.

கக.—[இதமுதல் கூ-பாட்டெல் ளன் கலியாணமண்டபஞ்சேர் தல்.]—(இ-ள்.) இன்ன - இப்படிப்பட்ட, பேர்அணியாவும்-பெரிய விலையுள்ள ஆபரணங்களனைத்தும், எழில்செய - அழகினைச்செய்ய, எங்கும் - எவ்விடத்தும், துன்னி - நெருங்கி, மூழவம் - பேரிகைகள், தூவைத்திட - முழங்க, பொன் - பொன்னுற்செய்த, சுழி - முகபடாத்தையுடைய, புகர்முகம் - புள்ளிபெற்றமுகத்தையுடைய, வெற்பின்மேல் - மலேபோன்ற யானையின்மேல், மன்னர் மன்னன் - அரசர்க்கரசன் [ளன்], மகிழ்ச்சியொடு—, எகினன் - சென்றான், (எ-று.)

அரசன் புறப்பாடு யாவர்க்குந் தெரிவித்தற்கு எங்கு முழவந் தூவைத்திடவென்றும், சக்கரவர்த்தி யென்பது தோன்ற மன்னர் மன்னனென்றுங் கூறினர்.

கஉ.—(இ-ள்.) நேமிசூழ்ந்த - சமுத்திரஞ் சூழ்ந்த, நெடுநில்மன்னர் - நெடிய மண்ணுலகத்தரசர், தாமம் - ஒளிபொருந்திய, வெண்குடை - வெண்கொற்றக்குடையை, தாங்கினர் - சுமந்தவராகி, பின்வர - பின்னேவரவும், வாமம் - அழகிய, மேகலை-மேகலாபரணத்தையுடைய, மங்கையர் - மாதர்கள், அம்கையில் - அழகிய கையிலுல், காமர் - அழகிய, செம்பொன் - சிவந்த பொற்காம்பையுடைய, கவரி-சாமரங்களே, இரட்ட - வீசிவரவும், (எ-று.)

குடைதாங்குதல் அருமையாதலால் அதற்கேற்ப அரசனையும், கவரியிரட்டல் எளிதாதலால் அதற்கேற்ப மங்கையரையுஞ் சொல்லினர். இப்பாட்டும் மேற்பாட்டுங் குளகம்.

கங.—(இ-ள்.) தண் அம்தாமரை-குளிர்ச்சிபொருந்திய தாமரை மலரிலிருக்கின்ற, தாக்கணங்கு அன்னவர் - இலக்குமியையொத்தமங்கையர், கண்ணும்நெஞ்சும் - கண்ணுமனமும், உவந்து - மகிழ்ச்சியடைந்து, களிப்புற - களிப்புமிக, எண்ணில்வேதியர் - அளவற்ற

பிராமீணர்கள், ஆசிஇயம்பிட-ஆசீர்வதிக்க, வண்ணம் மாமணி - அழகிய மாணிக்கமணிகள்பதித்த, மண்டபத்து-கல்யாணமண்டபத்தில், எய்திஞன் - வந்துசேர்ந்தான், (எ-று.)

நீனைக்குநெஞ்சு களித்தற்கு நோக்குங்கண் காரணமாதலால் கண்ணுநெஞ்சு முவந்து களித்திடவென்றும், கல்யாண மண்டபத்தெய்துஞ் சமயமாதலில் எண்ணில் வேதிய ராசியியம்பிடவென்றுங் கூறினர்.

கஉ.—[இதுமுதல் உ-பாட்டு தமயந்தி கல்யாணவேதிகை சேர்தல்.]—(இ-ள்.) வேனில் - வசந்தகாலத்திற்குரிய, ஐங்கணைவேள் - பஞ்சபாணங்களையுடைய மன்மதனுனவன், புறம்காத்திட - புறங்காத்துவர, பானல்உண்கண் - நீலோற்பலம்போன்ற மையுண்டகண்களையும், பணிமொழி-குளிர்ச்சிபொருந்திய சொல்லையும், வான்நுதல்-ஒளிபொருந்திய நெற்றியையும், தேன்அவாம் குழல் - வண்டுகள் விரும்புகின்ற கூந்தலையுமுடைய, தேமொழியைகொடு-தமயந்தியையழைத்துக்கொண்டு, மானின்நோக்கின் - மான்பார்வையையொத்த பார்வையையுடைய, மடந்தையர்-மாதர்கள், எய்திஞர் - (கல்யாண மண்டபம்) அடைந்தார்கள், (எ-று.)

நளனை வெல்ல வந்தவளாதலால் வேள்புறங் காத்திடவென்றார்.

கஙி.—(இ-ள்.) கள் அரு - தேன்பெருக்கு இடையறுத, மலர் காற்றி - மலர்மாலை தூக்கி, எண்காவதம் - எட்டுக்காததூரம், உள் அகன்ற - உள்ளேவிரிந்த, ஒளிர் - பிரகாசம்பொருந்திய, மணிமாடத்தின்-மணிகள்பதித்த உபரிகையில், பிள்ளைமான்கிகர் -மான்கன்றின் பார்வைபோன்ற, நோக்கினை - பார்வையையுடைய தமயந்தியை, பெய்கழல் - வீரக் கழலையணிந்த, வள்ளலோடு - நளனுடன், மணம் தவிசு - கல்யாண மனையில், ஏற்றினர்—, (எ-று.)

தவிசு - ஆஸனம். இடமுழுவதும் அலங்கரித்தமை தோன்றக் கள்ளருமலர் காற்றி யெண்காவதமென்றார்.

கஊ.—[இதுமுதல் உ-பாட்டு வீமராஜன் எழுந்து தாளை வார்த்தல்.]—(இ-ள்.) உதகம் நல்கும் - தாளைவார்த்தற்குரிய, நல் ஒளை-நல்லமுகூர்த்தம், இஃதென - இதுவென்று, விதியின் நாடி - சோதிடவிதிப்படிபார்த்து, கணிதர் - கணிதனூலோர், விளம்பலும் - சொன்னவளவில், பதலை - வாத்தியங்கள், ஆர்த்து எழ - மிகஒலிக்க, பாவையைநல்கிய - தமயந்தியைப்பெற்ற, மதுமலர்தொடை - தேனெழுகு மலர்மாலையையணிந்த,மன்-வீமன்,எழுந்தான்—,(எ-று.)

கஎ.—(இ-ள்.) கமலமீது - தாமரைமலரின்மேல், செங்காந்தள் அலர்ந்தென-சிவந்த காந்தண்மலர் பூத்ததுபோல், குமரன் அங்கையில் - நளனது உள்ளங்கையில், கோல்வளை-தமயந்தியினது, செங்கை வைத்து - சிவந்தகையையவைத்து, இமயமாதும் - பார்வதியும், இறைவனும்போல் - பரமசிவனும்போல், வாழ்தும்—, அமைதிரென்ன - பொருந்தியிருங்களென்று, அரும்புனல்-அரியநீரை, நல்கிஞன் - வார்த்தான் [கன்னிகாதானஞ் செய்தான்], (எ-று.)

[கமலமலரையும் காந்தண்மல்லையும் நளன் தமயந்தி யென்னும் இருவர்கரங்களுக்கும், இமய மாதையும் இறையையும் அவ்விருவர்க்கும் இணைசொல்லுதலால் உவமையணி.]

கஅ.—[நளன்பாணிக்கிரகணஞ் செய்தல்.]-(இ-ள்.)சாந்தம்மூழ்கு - சந்தனக்குழம்பில் மூழ்கப்பெற்ற, தடம்புயன் - பருத்த புயங்களையுடைய நளனுவன், ஆர் - பொருந்திய, அழற்கு எய்ந்தயாவும்-அக்கினி காரியத்துக்குப் பொருந்திய அனேத்தையும், இனிதுமுடித்தபின்-இனிமையோடு செய்துமுடித்தபின்பு, ஆய்ந்த-ஆய்ந்திருக்கின்ற, நான்மறையின்வழி - வேதமார்க்கப்படி, ஆயிழை - தமயந்தியினது, காந்தண்மெல்விரல் - காந்தளரும்புபோன்ற மெல்லிய விரல்களை, கை-தன்கையால், பற்றினன் - பிடித்தான், (எ-று.)

மணக்கோலந் தோன்ற சாந்தமூழ்கு தடம்புயனென்றும், அரசர்க்குப் பாணிக்கிரகணமே சிறப்பென்பது தோன்ற நான்மறையின் வழியாயிழை காந்தண் மெல்விரல் கைப்பிடித்தென்றும் கூறினர்.

கக.—(இ-ள்.) பொங்கு - மிகுந்த, செந்தழல் - அக்கினியை, சூழ்வந்து - வலம்வந்து, பூபொரி-அழகியபொரியை, செங்கை ஆர - நிவந்தகைநிறைய, சொரிந்து - அத்தீயில் ஓமஞ்செய்து, திருமகள் - தமயந்தியினது, பங்கயம்பதம் - தாமரைமலர்போன்ற பாதத்தை, பைம்பொனின் - பசிய பொன்னுற்செய்த, அம்மிவைத்து - அம்மியின்மேல் தூக்கிவைத்து, அங்கண்வானத்து - அழகிய இடத்தையுடைய ஆகாயத்திலிருக்கின்ற, அருந்ததி - அருந்ததி நக்ஷத்திரத்தை, காட்டினன் - காண்பித்தான், (எ-று.)

அக்கினி வலஞ்செய்து நெற்பொரியைப் பெய்து அம்மி மிதிக்கச்செய்து அருந்ததி காட்டினனென்க. அக்கினி வலஞ்செய்தல் முதலியவை விவாகத்தில் செய்யும் சடங்குகள். அருந்ததி காட்டலை, போர்புரிபடலம் சூ-ம் பாட்டினுரையிற் காண்க. "நெற்பொரி நிறையப் பெய்து" என்றும், "விளங்கொளி விசும்பிற் பூத்த வருந்ததி காட்டி" என்றுங் கூறினர் சிந்தாமணியுள்ளும்.

உ0.—(இ-ள்.) எனையுள்ளன - மற்றகாரியங்கள், யாவும் - எல்லாம், முடித்தபின் - முடித்தபின்பு, மானின்நோக்கி - தமயந்தியானவள், ஓர்வல்லியின் - ஒருகொடிபோல், ஒல்கிப்போய் - அசைந்துபோய், தானை அம்கடல்-சேனைசூழ்ந்திரத்தையுடைய, தாதை-தகப்பனுடைய வீமனது, பொன்தாளினில் - அழகியபாதங்களில், தேனவாம் - வண்டுகளால் விரும்பப்படுகின்ற, குழல் - கூந்தலாகிய, தேமலர்-வாசனை பொருந்திய மலரை, சூட்டினள் - தரித்தாள், (எ-று.)

விவாகமுடிவில் தந்தையைவணங்கி மங்கலவாழ்த்துப் பெறுதல் மகளிர்க்கு இயல்பாதலின், அவ்வாறு தமயந்தியும் தன் தாதையாகிய வீமனை வணங்கினளென்க.

உக.—(இ-ள்.) சென்னிதாழ்த்து - தலைகுனிந்து, வணங்கிய - பணிந்த, தேமொழி-தேன்போன்ற சொல்லையுடைய, மின் அனை-

மின்னற்கொடிபோன்ற தமயந்தியை, உவந்து - மகிழ்ந்து, விதர்ப் பர்கோன்-வீமனுனவன், பொன்னந் தாமரைப்பூவையும் - இலக்குமி யும், மாலும் போல-திருமாலும்போல், மன்னர்கோனெம்-நளனே மும், வாழ்க எனவாழ்க்கடவையென்று, வாழ்த்தினன்—, (எ-று.)

இங்கே காப்பது கருதித் திருமாலையும், செல்வ மிகுதிகருதித் திருமகளையும், நளனுக்குந் தமயந்திக்கும் உவமைகூறலாயிற்று. அ வ்விருவரையும்போல் நெடுங்காலம் வாழ்கவென வாழ்த்தினனென்க.

உஉ.—(இ-ள்.) முருகு - தேனை, வாய்மடுத்து - உண்டு, அளி - வண்டுகள், மூசு - மொய்க்கப்பெற்ற, பூதெரியல்மார்பினன் - மலர் மாலையணிந்த மார்பையுடைய நளனுனவன், தேசிகர் - ஆசிரியரது, தாள்தொழுது - பாதத்தைவணங்கி, உருகும்-கனிகின்ற, அன்பின் - பத்தியினால், உவந்து-மகிழ்ந்து, விதர்ப்பர்கோன் - வீமராஜனுடைய, வரைகொள்மார்பம் - மலையினதழகைக்கொண்ட மார்பினை, மகிழ் வுற - மகிழ்ச்சியடைய, பல்லினன் - தழுவினன், (எ-று.)

தேசிகனாதலின் தாடொழுதென்றும், தான் சக்ரவர்த்தியாதலின் விதர்ப்பர்கோன் வரைகொண்மார்ப மகிழ்வுறப் புல்லினனென்றுங் கூறினர்.

உங.—(இ-ள்.) கோதில் - குற்றமற்ற, நான்மறை - நாலுவேதங் களையுடைய, கோதமனுதியாம் - கௌதமமுனிவர்முதலாகிய, மாத வத்து-பெரியதவத்தைச்செய்யும், முனிவரும் - தபோதனரும், மன் னரும் - அரசரும், காதல் - ஆசையாகிய, வேலை - கடலானது, கரையழிந்து—, ஓங்கிட - உயர, ஆதரத்தொடும் - அன்புடனே, ஆசி இயம்பினர் - ஆசீர்வதித்தார்கள், (எ-று.)

தவமுதலியவற்றிற் றலைமையுடைமைபற்றிக் கோதமனுதியா முனிவரென்றார். விவாகமானபின் பெரியோர் ஆசீர்வாதஞ் செய்ய வேண்டுவதாதலின் ஆசியியம்பினரென்றார்.

உச.—[இவ்வாறு கலியாணம் நன்கு நடந்தேறித் தமயந்தியினு டன் அங்ஙனிருக்கையில் ஒருநாள் நளன் தன்னகருக்குச் செல்ல வெண்ணி விடைகேட்டதும் அதற்கு வீம னுடன்பட்டதும்.]— (இ-ள்.) திருதுயில் - இலக்குமி தங்குகின்ற, ஆரம்மார்பன் - முத்து மாலையணிந்த மார்பினையுடைய நளமகாராசன், செம்மை அரிகண்ணி யோடும் - தமயந்தியோடும், அருத்தியின் - ஆசையினால், உவந்து - மகிழ்ந்து, பசுமைபொன் - பசிய பொன்மயமாகிய, அணிநகர்க்கு - அழகிய மாவிந்தமாநகர்க்கு, ஏக எண்ணி - போகநினைத்து, விருப் பொடு - ஆசையுடன், விதர்ப்பர்கோனுக்கு - வீமராஜனுக்கு, உணர்த் தலும் - அறிவித்தலும், விதர்ப்பன் - வீமராஜன், காதல் - ஆசை யையுடைய, புரிகுழல் - முடிக்கப்பட்ட கூந்தலையுடைய, மடந்தை யோடும் - தேவியுடன், வதுவைமண்டபத்தில் - விவாகமண்ட பத்தில், புக்கான் - புகுந்தான், (எ-று.)

உஞ.—[நளன்வந்து மாமனுரைவணங்கி விடைபெறல்.] (இ-ள்.) கதிர்பொழி - கதிர்களை வீசுகின்ற, மணியின்செய்த - ரத்நங்களாற்

செய்த, புதவு உடை-கதவையுடைய, கடிகொள்-காவலைக்கொண்ட, வாயில் - வாசற்படியில், குழைமுகம் - காதின்முகத்தை, பொருத - மோதிய, வேல்கண் - வேல்போன்ற கண்களையுடைய, கோதையர் - மாதர்கள், விணவின் ஓடி - விளைந்துபோய், விழைவொடும் - விருப்பத்தோடும், விதர்ப்பர்கோமான் - வீமராஜன், போந்தமை - வந்தமையை, விளம்பலோடும் - சொன்னவளவில், மழவிடை அனையான் - காளையையொத்த களமகாராஜன், போந்து - வந்து, மாமனை - மாமனை, தழுவினன்—, (எ-று.)

உசு.—[தமயந்தி தாயாரைவணங்கி விடைபெறல்.]—(இ-ள்.) மழை உறழ் - மேகத்தையொத்த, தடக்கை - நீண்டகையையுடைய, வேந்தன் - வீமனுடைய, மனை - வீட்டுக்கு, பெருங்கிழமை பூண்ட - பெரிய உரிமையைக்கொண்ட, தொழுதகு - வணங்கத்தக்க, கற்பினை-கற்பையுடையதாருகாசனியை, சுடர்-காந்தியையுடைய, மணிகொம்பின்-ரத்நக்கொம்புபோல், ஒல்கி-வளைந்து, எழில்குவிந்தனைய - அழகெல்லாமொன்றுய்க் குவிந்ததை யொத்த, நங்கை-தமயந்தியானவள், இறைஞ்சலும் - வணங்கலும், எடுத்து மோந்து-கையாலெடுத்து உச்சிமோந்து, விழைவொடு-ஆசையோடு, குறங்கில்வைத்து - துடையின்மேல் வைத்துக்கொண்டு, மெய்யுற - தன் உடம்போடுபொருந்த, தழுவினள்—, (எ-று.)

உஎ.—[இதுமுதல் உ-பாட்டு தமயந்திக்குச் சிதனங்கொடுத்தல்.]—(இ-ள்.) பண் அமை - சேணமமைந்த, கலினம் - கடிவாளத்தையுடைய, மான் - குதிரைகட்டிய, தேராயிரம் - ஆயிரந் தேர்களும், இரட்டிபாய்மா - அதற்கிரட்டிப்பாகிய [இரண்டாயிரங்] குதிரைகளும், அண்ணல் - பெருமையினையும், அம் - அழகினையும், களி - செருக்கினையு முடைய, நல் - நல்ல, யானையாயிரத் தறுபத்தொன்பான் - ஆயிரத்தறுபத்தொன்பது யானைகளும், கண் அகல் - இடமகன்ற, விசும்பு - தெய்வலோகம், பூத்த - மலர்ந்த, கற்பகத் தருவினேனும் - கற்பக விருட்சங்களுடனே, மண் - பூமியினிடத்து, இழிந்தனைய - வந்ததையொத்த, பேரூனாம்பதும் - ஐம்பதுபெரிய கிராமங்களும், வழங்கினன் - கொடுத்தான், (எ-று.)—எ-அசை.

உஅ.—(இ-ள்.) பொழிகதிர் - கிரணங்களைப்பொழிகின்ற, மணிசெய் - ரத்தினங்களாற்செய்த, கட்டில் - கட்டிலும், புனைமலர் பாயல் - புட்பசயனமும், பைம்பொன் - பசும்பொன்னாற் செய்த, இழைபயில் - ஆபரணங்கள் வைக்கின்ற, வண்ணப்பேழை - அழகியபெட்டிகளும், இனிய - இனிமையுடைய, சாந்தாற்றியோடி - ஆலவட்டத்துடன், நிழல்தவழ் - ஒளிதவழ்கின்ற, மணிகண்ணுடி, ரத்தினத்தால் விளிம்புசெய்த கண்ணுடிகளும், நித்திலம் - முத்துக்களால், முகடுவேய்ந்த - முகடுசெய்யப்பட்ட, ஒழுகு ஒளி - மிகுந்த ஒளியையுடைய, கவரி - சாமரைகளும், இன்ன - ஆகிய இப்படிப்பட்டவைகளை, உலப்பில - அளவற்றவைகளாக, கல்கினன்-கொடுத்தான் (வீமராஜன்), (எ-று.)—எ-அசை.

உக.—[இதுமுதல் கூ-பாட்டு தமயந்தியைப்பிரிய ஆற்றாது அன்னைமுதலாயினோர் வருந்திவழிவிடல்.]—(இ-ள்.) அல்லி அம்கமலம்-அகவிதழையுடைய தாமரைமலரை, நீங்கி - விட்டு, அரசர் இல்-இராஜமாளிகையில், புகுந்து - சேர்ந்து, வாழும் - வாழ்கின்ற, மெல்லியல் - இலக்குமிபோன்ற தமயந்தியை, பிரியல் ஆற்றா - பிரியமாட்டாது, விழைவொடு - ஆசையுடனே, பலகால் - பலதரம், புல்லி - அணைத்துக்கொண்டு, மல்லல் - வளம்பொருந்திய, தெரியல் - மாலையணிந்த, வீமன் - வீமராசனுடைய, மனைவியர்பலரும் - தேவிமார் பலரும், மாழ்கி - மயங்கி, எல்லையில் - அளவில்லாத, துயரினோடும் - துன்பத்தோடும், தனித்தனி - தனித்தனியாக, இரங்கினர் - வருந்தினர்கள், (எ-று.)—எ-அசை.

கூ.—(இ-ள்.) பெருதுயர் உழந்து - மிகுந்த துன்பத்திலேந்து, வாடும் - வருந்துகின்ற, பிணையனர்தம்மை - மானையொத்தமங்கையரை, நோக்கி - பார்த்து, விரிந்த - மலர்ந்த, பூ - புட்பத்தையுடைய, துளவினோன்பின் - துளசிமாலையணிந்த ஸ்ரீமகாவிஷ்ணுவின் பின்னே, விரை - வாசனைபொருந்திய, மலர் - தாமரைமலரில் வசிக்கின்ற, கோதை - இலக்குமியானவள், ஏக - போக, வருந்தி - வருத்தப்பட்டு, முன் உயிர்த்த - முன்னே பெற்ற, தெள் நீர் - தெளிந்த நீரையுடைய, மறி - புரளாநின்ற, கடல் - சமுத்திரமானது, வருந்திற்றோ என்று - வருத்தமுற்றதோவென்று, அருதவர்க்கு-அரியதவத்தையுடையவர்க்கு, இறைவனை-தேவனை, கோதமன்-கௌதமர், ஆற்றினன் - தேற்றினர், (எ-று.)

கூக.—(இ-ள்.) அன்னையர் - தாய்மார்கள், அம் - அழகிய, மெல் - மிருதுவாகிய, ஓதி - கூந்தலையுடைய, தோழியை - உயிர்ப்பாங்கியை, அருளின் - கிருபையினால், நோக்கி - பார்த்து, உன்னினும் - உன்னைப்பார்க்கிலும், இவள்மேல் - இந்தத்தமயந்தியின்மீது, காதல் - ஆசை, உளமென - உள்ளமென, உரைக்கிலேம் - சொல்லுகின்றிலேம், என்னினும் - ஆனாலும், இன்றுதொட்டும் - இன்று முதலாக, இன் - இனிதாகிய, உயிர்த்தோழியல்லை - உயிர்ப்பாங்கியல்லை, மின் அனாட்கு - மின்னலையொத்த தமயந்திக்கு, அன்னீயே - நீயேதாய், வேண்டுவ - வேண்டியவைகளை, புரிதியென்றார் - செய்யென்று சொன்னார்கள், (எ-று.)

மீட்சிப்படலம்.

[இப்படலத்தால் நளமகாராஜன் தமயந்தியோடு தன்னகரத்திற்குப் போதுதல் சொல்லப்படுகின்றது.]

க.—(இ-ள்.) மற்றிவை - பின்பு இக்காரியங்கள், நிகழும்வேலை - நடக்கும்பொழுது, மகிழ்வொடு - சந்தோஷத்துடனே, மாமன்தன்பால் - வீமராஜனிடத்தில், வெற்றிகொள் - செயத்தைக் கொண்ட,

குருதி - இரத்தந்தோய்ந்த, வைவேல் - கூர்மைபொருந்திய வேலையுடைய, வேந்தர்கோன் - நளமகாராஜன், விடைகொண்டெழ - உத்தரவுபெற்றுக்கொண்டுபோய், அற்றமில்-சோர்வில்லாத, கேள்வி - கல்விகளையுடைய, சான்ற - (அறிவினாலும் குணத்தினாலும்) சிறந்த, அமைச்சரை - மந்திரிகளே, இனிதின்நோக்கி - இனிதாகப்பார்த்து, இற்றைநாள் - இன்றைத்தினம், எழுச்சியென்ன-பிரயாணமென்று, இமிழ் - சத்தியாநின்ற, முரசு - பேரிகைகள், அறைக என்றான் - முழங்கக்கடவனவென்று சொன்னான், (எ-று.)

உ.—(இ-ள்.) அண்ணல் - பெருமைபொருந்திய, அம் - அழகிய, குருதி - இரத்தந்தோய்ந்த, வேல் - வேலாயுதத்தையுடைய, அரசன் - நளமகாராஜனுடைய, எவலின் - உத்தரவினால், கண் அகல் - இடமகன்ற, முரசு - பேரிகைகள், எழுகடலின் - எழ்கடல் களைப்போல், ஆர்த்து எழ - மிருந்தொலிக்க, எண் இடை - எள் இதற்கும், இடமிலையென்ன - இடமில்லையென்று சொல்லும்படி, நேமிசூழ் - சமுத்திரஞ்சூழ்ந்த, மண்ணகம் - பூமியினுடைய, வரைப் பெல்லாம் - எல்லையெல்லாம், தானை-சேனைகள், மலிந்த - நிறைந்தன, (எ-று.)

ஊ.—(இ-ள்.) நிலவு - பிரகாசியாநின்ற, வெண்கவிகை - வெண் கொற்றக்குடை, மேல்-மேலே, நிழற்ற - நிழலைச்செய்ய, தண்மதி-குளிர்ச்சிபொருந்திய சந்திரனுடைய, கலை - சோடச கலைகளின், நிலா - பிரகாசம், குவிந்தன - குவிந்ததோற்றம்போல், சுவரி - சாமரைகள், கால்செய - காற்றைவீச, மலர்தலை யுலகெலாம் - பரந்த விடத்தையுடைய உலகமுழுதும், புரக்கும் - காக்கின்ற, மன்னவன்-அரசன், சிலைஉலாம் - மலைபோல் உலாவுகின்ற, தமனியம் தேரில் - பொற்றேரின்மேல், எறிந்தான்—, (எ-று.)

எ.—(இ-ள்.) கலிகெழு - சத்தம்பொருந்திய, முரசுகண் - பேரிகையின் கண்ணானது, கறங்கும் - ஒலிக்கும், ஓதையால் - சத்தத்தினால், பொன் - அழகுபொருந்திய, முகடு - அண்ட முகடானது, உடைந்து - உடைபட்டு, மேல்போயிற்று இவ்வேயேல் - மேல்எண்டங்களில் போகாமற்போனால், நிலமிசை - பூமியின்மீது, எழுந்து - எழும்பி, மேல் - மேலே, நிமிர்ந்த-உயர்ந்த, தூளி - புழுதிகள், அலர்தலை - பரந்த விடத்தையுடைய, விசும்பினில் - ஆகாசத்தில், அடங்கலாவதே - அடங்குவதா [அடங்குவதன்று], (எ-று.)

ஏ.—(இ-ள்.) இரு - பெருமை பொருந்திய, கடல் தானையின் - சேனைசமுத்திரத்தில், எழுந்த - எழும்பிய, நுண்துகள் - நுண்ணிய பொடிகள், பொரும் - சண்டைசெய்கின்ற, களிறு - யானைகள், உமிழ் - கக்குகின்ற, மதம் - மும்மதத்தையும், பொழிந்தகில்லேயேல்-பொழியாமற்போனால், கருகடல் - கறுத்தகடல்நீரை, அளறு எழ - சேறுபட, பருகி - குடித்து, கார்முகம் - மேகக்கூட்டங்கள், ஒருங்கு-ஒருமுகமாய், வான் - ஆகாசத்தினின்று, பொழியினும் - கொரிந்தாலும், ஒழிக்க ஒண்ணுமே - போக்கக்கூடுமோ [கூடாது], (எ-று.)

"கூ—(இ-ள்.) சுடர்விடு - ஒளி வீசுகின்ற, பருமணி - பருத்த ரத்தினங்கள் பொருந்திய, கூட்டு - உச்சியையுடைய, அரா வின்மேல் - ஆதிசேஷன்மீது, நெடுநிலம் - நெடியபூமி, துளக்குற - அசைவுற, நின்ற ஆற்றினால் - இருந்தபடியினால், படர் - விரிந்த, இரு - பெருமைபொருந்திய, விசும்பினில் - ஆகாசத்தில், பாய்ந்தஅல்லது - தாவிச்சென்றன் வல்லாமல், புரவிவெள்ளம்-குதிரைக் கூட்டங்கள், புடவிமேல்-புவியின்மீது, மிதித்தில - நடக்கவில்லை, (எ-று.)—எ-அசை.

எ.—(இ-ள்.) புதை இருள் - நிறைந்த இருளை, சீத்து-கெடுத்து, ஒளி பொழியும் - பிரகாசத்தைச் சொரிகின்ற, செங்கதிர் - சூரியன், உதயமால்வரைஎழ - உயர்ந்த உதயகிரியிலுதிக்க, ஒளியிழந்தலால் - பிரகாசத்தை இழப்பதனால், மதி - சந்திரன், பலவாய் - அனேக ரூபமாய், வெயில் - சூரியனை, மறைத்தல்போலும் - மறைத்தலை யொத்தன, (எவையெனில்) கதிர்நிலா - நிலவுபோற் கிரணத்தைவீசு கின்ற, முத்தம் - முத்தினாற்செய்த, வெள் - வெண்மைபொருந்திய, கவிகைஈட்டம்-குடையின் கூட்டங்கள், (எ-று.)—ஆல், எ-அசை.

அ.—(இ-ள்.) கதிர் - கிரணங்களையுடைய, மணி - ரத்நத்தினாற் செய்த, அடைப்பையும்-தாம்பூலப்பையையும், கால்செய்வட்டமும்-விசிறிகளையும், தசை - நெருங்கிய, மயிர் - மயிரையுடைய, கவரியும்-சாமரைகளையும், தாங்கி - சுமந்து, மெல்லென - மெதுவாக, அதிர் - அதிர்ந்த, குரல் - சத்தத்தையுடைய, கிண்கிணி - கிண்கிணிகள், சிலம்பு - சிலம்புகளுடனே, ஆர்ப்பெழ - ஆரவாரிக்க, மதர்-மதர்த்த, அரி - செவ்வரிபரந்த, நெடுங்கணார் - நீண்ட கண்களையுடைய மாதர் கள், மருங்கு - பக்கத்தில், போயினர் - போனார்கள், (எ-று.)

கூ.—(இ-ள்.) கொடிகளும்—, குடைகளும்—, குழும-சுற்றிவர, பல்இயம் - பல வாத்தியங்கள், கடலுடைந்தாலென - சமுத்திர மூடைந்து வருதல்போல, கறங்கி ஆர்த்தெழ - மிக ஆரவாரிக்க, வடி-கெழு - வடித்தல்பொருந்திய, குருதி - இரத்தந்தோய்ந்த, வேல் - வேலாயுதத்தையுடைய, மன்னர் - அரசர்கள், சூழ்வர - சூழ்ந்துவர, நிடதநாடு அடைந்தனன் - நிடததேசத்தைச் சேர்ந்தான், நேமி வேந்தன் - சக்கரவர்த்தியாகிய நளமகாராசன், (எ-று.)

கo.—(இ-ள்.) அருமறை - அரிய வேதத்தையுணர்ந்த, முனி வரும் - வேதியரும், அமைச்சர் வெள்ளமும் - மந்திரிகளின் கூட்ட மும், குளைகடல்தானையும் - ஒலிக்கின்ற சேனைசமுத்திரமும், குரவர் கூட்டமும் - பெரியோர்கள் கூட்டமும், முரசு ஒலி - பேரிகையின் சத்தமானது, அதிர்குரல் - அதிர்கின்ற குரலையுடைய, முகிலின் - மேகம்போல், ஆர்த்தெழ - ஆரவாரிக்க, இரு நிலக்கிழவனை - பெரிய பூமியையாளுகின்ற நளமகாராஜனை, எதிர்கொண்டார்—, (எ-று.)—ஆரா - அசை.

கக.—(இ-ள்.) அகழி அம்கடல்-அகழியாகிய சமுத்திரத்தை, புடைஅணிந்து - பக்கத்தில் தரித்து, நீல்நிறம்-நீலகிறம்பொருந்திய,

முகில்தவழ் - மேகந்தவழாநின்ற, மூதெயில் - பழமையாகியமதில், முற்றி - சூழ்ந்து, இன் அகில் புகை - இனிய அகிலினது புகையானது, கமழ் - பரிமளிக்கின்ற, எரிமணி - பிரகாசம்பொருந்திய ரத்நத்தினாலும், பொன் - பொன்னாலும், செய்-செய்த, மாடத்தின் - உபரிகையின்மீது, நகை - பிரகாசியாநின்ற, நிலாமதி - சந்திரிகையையுடைய சந்திரன், தவழ் - தவழாநின்ற, நகரம் - மாவிந்த நகரத்தை, எய்தினான் - சேர்ந்தான், (எ-று.)

கூ.—(இ-ள்.) பொருவரு - ஒப்பில்லாத, கங்கைநீர் - கங்காசலத்தை, நிறைத்து - பூரித்து, பூசுரர் - வேதியர்கள், எரிமணி-பிரகாசம்பொருந்திய ரத்நமழுத்திய, பொன்தசும்பு-பொன்னாற்செய்த பூர்ணகும்பத்தை, ஏந்தி - தாங்கி, முன்வர - எதிர்வர, விசைகமழ் - பரிமளியாநின்ற, செழு - செழுமையாகிய, தொடை - மாலையையணிந்த, வீமன்மாதொடும் - தமயந்தியினுடனே, திருவளர் - இலக்குமிவாசம்பண்ணுநின்ற, கோயிலில் - இராஜமாளிகையில், செல்வன் - நளமகாராஜன், எய்தினான் - சேர்ந்தான், (எ-று.)

கலிதோன்றுபடலம்.

[இப்படலத்தால் தமயந்தியின் விவாகத்தைக் கருதிவந்த கலி அவனோ நளன் விவாகஞ் செய்துகொண்டானென்று கேட்டுப் பொறுமைகொண்டு அவனே வருத்தற்கு அவனது நகரத்திற்சென்றிக் காலம்பார்த்திருந்தமை சொல்லப்படுகின்றது.]

க.—(இ-ள்.) ஈங்கு - மாவிந்தமாநகரத்தில், இவன்-இந்த நளமகாராஜன், இன்னணம்-இவ்வாறு, இருப்ப-(தமயந்தியோடுமெகிழ்ந்து) இருக்க, வானிடை - ஆகாசத்தில், பூ - அழகிய, கழல் - வீரகண்டையையணிந்த, விண்ணவர்-தேவர்கள், போகும் எல்லையின்-போகுஞ் சமயத்தில், திங்குஉறு - குற்றம்பொருந்திய, படுபழி - மிக்கபழியும், இது - பொல்லாங்கும், சூழ்வர - சுற்றிக்கொண்டுவர, அவர்முன் - அந்தத்தேவர்களுக் கெதிரில், கலி - கலிபுருஷன், அடைந்தது - வந்ததை, ஓதுவாம்-சொல்லுகிறோம், (எ-று.)—ஆங்கு - அசை.

[தமயந்தியின் சுயம்வரத்துக்கு வந்து திரும்பிச்சென்ற இந்திராதி தேவர்கள் வழியே கலிபுருஷன் எதிர்ப்பட அவனைக்கண்டு நீயாண்டு எருகின்றாயென, தமயந்திக்குச் சுயம்வரமென்று கேட்டு அதன்பொருட்டுச் செல்கின்றேனென்றனன்.]

உ.—(இ-ள்.) என்றலும் - என்று கலிபுருடன் சொன்னவளவில், அமரர்கோன் - தேவேந்திரன், முறுவல்எய்தி -சிரித்து, அமன்றலுக்கோ - அந்தக் கலியாணத்திற்கா, தனி - தனியாக, வந்தது ஈங்கு எனை - இவ்விடத்தில் வந்ததென்று சொல்லி, வென்றி - வெற்றி பொருந்திய, வேல் - வேலையுடைய, நிடதர்கோன்தனக்கு - நளமகாராஜனுக்கு, மென்தொடை - மிருதுவாகிய மாலையை, தூன்று -

நெருங்கிய, இரு - பெருமைபொருந்திய, கூந்தலாள் - கூந்தலையுடைய தமயந்தி, சூட்டினுள் என்றான்—, (எ-று.)

கூ.—(இ-ள்.) விண்ணவரனைவரும்-தேவர்கள்யாவரும், வெள்கவெட்கப்பட, பூதொடை - புட்பமாலையை, மண்ணகத்தரசனுக்கு - பூலோகத்து ராஜனுக்கு, அணியும் - தரித்த, மாண் இழை - மாட்சிமை பொருந்திய ஆபரணங்களையுடைய பெண்ணினது, எண்ணமும் கெடுத்து - நினைப்பையுங் கெடச்செய்து, ஈண்டு - இப்பொழுதே, அவள் - அவளை, பிரிப்பன் - பிரித்துவிடுவேன், எனா - என்று, கண் அழல்கதுவ - கண்களில் நெருப்புப்பொறி பறக்க, வெங்கலியும் - வெவ்விய கலிபுருஷனும், கூறினான்—, (எ-று.)

ச.—(இ-ள்.) புகழின்மிக்கோய் - கீர்த்தியின் மிக்கவனே, அருந்ததி - அருந்ததியையொத்த, கற்பின் - பாதிவிரத்தியத்தையுடைய, நல்லாள் - தமயந்தி, அரசிளங்குமரன்தன்னை - இளமைபொருந்திய ராசகுமாரனுன நளனை, பிரிந்திட இயற்றி - பிரியும்படிசெய்து, பின்னர் - பின்பு, பெறுவது - அந்தமாதைப் பெற்றுக்கொள்வது, தீமையன்றே - குற்றமல்லவோ; விரிந்த - பரந்த, நூல்கேள்வி - நூல்விசாரணை, என்னும் - யாது பயனைத்தரும்; கல்லா புல்லரின், படியாத மூடனைப்போல, பிறர்மனைவிழைய - பிறர்மனைவியை விரும்ப, உள்ளம்பொருந்தியதுஎவன் - மனஞ் சம்மதித்தது என்னகாரணம், (என்று இந்திரன் கூறினான்), (எ-று.)—கொல்-அசை.

[இங்ஙனங்கூறிய தேவேந்திரனுக்குச் சமாதானஞ்சொல்லிவிட்டு நளனை வஞ்சிக்குமாறு நிடதநாட்டை யடைந்தனன் கலிபுருஷன்.]

ரு.—(இ-ள்.) மல்லல்-வளம்பொருந்திய, அம்-அழகிய, பழனம்-கழனிகளையே, வேலி - வேலியாகவுடைய, வளம்கெழு - செல்வம் மிகுந்த, நிடதநாட்டின் - நிடததேசத்தில், அல்லல்உற்று - துன்பமுற்று, அரிதில்செல்லும்-அருமையாகப் போகாநின்ற, கொடும்கலி-கொடியகலியானவன், அமரர்வேட்ப-தேவர்கள்விரும்ப, எல்லையில்-அளவில்லாத, வேள்வி ஆற்றி - யாகத்தைச்செய்து, அரு மறைபயில்வோர் - அரியவேதங்களை யோதுகின்றவர்களாகிய பிராமணர்கள், எங்கும் - எவ்விடத்திலும், சொல்லிய - சொன்ன, பதங்கள் கேட்டு - வேதபதங்களைக் காதிற்கேட்டு, தூணபதம் - தன்னுடைய இரண்டுபாதங்களையும், பெயர்த்திலான் - எடுத்துவைக்கமாட்டாதவனாயினான், (எ-று.)

சு.—(இ-ள்.) அருமறை-அரியவேதமுணர்ந்த, முனிவர்யாரும்-முனிவர்களெல்லாரும், ஓர்கலத்து - ஒருபாத்திரத்தில், ஆர்வமோடும்-ஆசையுடன், பருகிய ஆறுநோக்கி - பானம்பண்ணுகின்றதெறியைப் பார்த்து, தீவினைபயந்தது என்னை - தீமையுண்டாயிற்றென்று, விளாவினில் - சிக்கிரத்தில், சேறலோடும் - போன மாத்திரத்தில், மறைமொழி - வேதவசனத்தை, கூறும் - சொல்லும், வேள்விக்கு - யாகத்

துக்கு, உரியது - உரித்தாகிய, சோமபானம் என - சோமபான்மெ
ன்று, உளம் உடைந்து - மனங்கலங்கி, போனான்—, (எ-று.)

எ.—(இ-ள்.) நிழல் - தன்னிழலே, கலி - கோபிக்கிற, கலி -
செருக்கையுடைய, கல்யானை - கல்யானையையுடைய, நிடதர்கோன்-
நளமகாராஜன், மகிழ்ச்சிகூர்ந்து - சந்தோஷமிகுந்து, பழமறை கிழ
வர்யாரும் - பழமையாகிய வேதப்பிராமணர்க ளெல்லாரும், பரி
வொடு - ஆசையுடன், கவர்ந்துகொள்ள - பெற்றுக்கொள்ள, விழு
கிதி - மேன்மையாகிய திரவியமும், பழனம் - கழனிகளும், நாடு -
நாடுகளும், வேண்டுப - வேண்டியவைகளே, வெறுப்ப - வெறுக்கும்
படியாக, நாளும் - நாள்தோறும், பொழிதரு - தத்தம் பண்ணுகிற,
புனலை - சலத்தை, நீத்தி - கடந்து, போக்கு அரிது என்ன - போகுத
லருமையென்று, நின்றான் - இருந்தான், (எ-று.)

அ.—(இ-ள்.) கடி - காவலையுடைய, மனை இடங்கள் தோறும் -
வீட்டினிடங்களெல்லாம், கற்புடை - பாதிவிருத்தியத்தையுடைய,
மகளிர் ஈட்டம் - மாதர்கூட்டங்கள்; கொடி - கொடிகளையுடைய,
நெடு - நீண்ட, வீதிஎல்லாம் - தெருக்களனைத்திலும், கடவுளர்விழவு-
தேவர்திருவிழா; துன்றும் - நெருங்கியிருக்கும், நெடி - நெல்வண்டு
கள், படும் - தங்கிய, கானமுற்றும் - காடுமுழுவதும், துறந்தோர் -
முனிவர்களுடைய, நெருக்கம் - கூட்டங்கள்; (ஆதலால்) யாண்டும்-
எவ்விடத்தும், அடியிடல் - அடியெடுத்து வைத்தல், அரிது என்று -
அருமையென்று, எண்ணி—, அல்லல்உற்று- துன்பமுற்று, அகன்ற
போனான் - நீங்கிப்போயினான் (கலி), (எ-று.)

கூ.—(இ-ள்.) இங்ஙகர் வனைப்பில் - இந்தநகரினிடத்தில், யாண்
டும் - எவ்விடத்தும், எய்துதற்கு அரிதென்றுஎண்ணி - போருதற்குக்
கூடாதென்று நினைத்து, சென்னி - தலை, வான்தடவும் - ஆகாசத்தை
அளாவுகின்ற, தெய்வம் - தெய்வத்தன்மைபொருந்திய, செழு - செ
ழித்த, மலர்-புஷ்பங்களையுடைய, சோலைபுக்கு-சோலையையடைந்து,
மன்னவன் - நளமகாராஜன், இழைக்கும்தீமை - செய்யுங் குற்றம்,
யாதென - எதுவென்று, மனத்தின் ஓர்ந்து - மனதில் ஆராய்ந்து,
துன்ன அரும் - சேரக்கூடாத, தான்றிமீ தில்-தான்றிமரத்தின்மேல்,
சூழ்ச்சியோடு - ஆலோசனையுடனே, இருக்கும் காலில் - இருக்கும்
காலத்தில், (வசந்தகாலம் வந்தது), (எ-று.)

ஸ்ரீ

பாரதம்.

பாரதம் என்பதற்கு பரதவமிசத்தாராகிய பாண்டவர்களுடைய சரித்திரம்என்பது பொருள். அதைக்குறித்துச் செய்ததூலும் **பாரதம்** என்னப்படும். ஸ்ரீவேதவியாச முனிவர் தாம்செய்த பாண்டவசரித்திரத்திற்கு **மஹாபாரதம்** என்று பெயரிட்டு அதற்கு, மகத்தாகையாலும் பாரமுள்ளதாகையாலும் மகாபாரதமென்னப்பட்டது, என்று பொருளுணர்த்தருளினர். அது ஏகதேசமாக 'பாரதம்' எனவும் வழங்குகின்றது. ஆயினும் இப்பொருள் கொள்வதும் அவர்கருத்தே யென்பதற்குத் தடையில்லை.

மகத்தாவது - பூசிக்கத்தக்கது. பாரங்களாவன:—வர்ணாசிரமதருமம், ராஜதருமம், மோக்ஷதருமம், நீதி முதலானவை. இவற்றை யறிவிக்கும் கடமையுடைய தாதலாலே பாரமுடைமை. இவ்விரண்டு சொல்லுங் காரியகாரணவகையிற் பொருந்தியிருக்கின்றன. "இதிலிருப்பதே எந்தநூலிலுமிருக்கும், இதிலில்லாதது எந்நூலிலுமில்லை" என்று பாரதத்திலேயே சொல்லியிருப்பதனாலும், "பாரதஃ பஞ்சமோ வேதஃ" என அதை ஐந்தாம்வேதமென்று பிறநூல்களிற் சொல்லியிருப்பதனாலும் இந்தமகிமை தக்கதேயெனவறிக.

இனி, இத்தமிழ்நூலுக்கும் "முதனூல்கருத்தனளவுமிகுதி" என்னுஞ் சூத்திரவிதிப்படி முதனூலின் பெயராகிய 'பாரதம்' என்பதேபெயராயிற்று.

ஸ்ரீமஹாபாரதம் * பதினெட்டுப் பர்வமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அவற்றுள் ஐந்தாவது உத்தியோகபருவம்.

---

* (க) ஆதிபருவம், (உ) சபாபருவம், (ங) ஆரணியபருவம், (ச) விராடபருவம், (ஞ) உத்தியோகபருவம், (ட) பீஷ்மபருவம், (ண) துரோணபருவம், (த) கர்ணபருவம், (ந) சல்லியபருவம், (ப) ஸௌப்திகபருவம், (ம) ஸ்திரீபருவம், (ய) சாந்திபருவம், (ர) அனுசாஸனபருவம், (ல) அசுவமேதபருவம், (வ) ஆசிரமவாஸபருவம், (ழ) மௌஸலபருவம், (ள) மஹாப்ரஸ்த்தானபருவம், (ற) ஸ்வர்க்காரோஹணபருவம்.

ஸ்ரீ

உத்தியோகபருவம்.

[உத்தியோகம்=முயற்சி; பாண்டவர்கள் யுத்தத்தைக் குறித்துச்செய்த முயற்சி. பருவம்=கணு; பிரிவுக்கு ஆருபெயர். ஆகவே, பாண்டவர்கள் யுத்தத்தைக் குறித்துச் செய்த முயற்சியைப்பற்றிச் சொல்லும் ஓர் பாகமென்றதாயிற்று.]

உலூகன்றூதுச்சருக்கம்.

[அதாவது - உலூகன் தூதுசென்ற கதையையுணர்த்துஞ் சருக்கம். சருக்கம் = ஒருமுடிபு, அல்லது ஒருபடைப்பு; எனவே, உலூகன் தூதுசென்றகதையை விளக்கும் பாகமென்பது கருத்து.]

க.—(இ-ள்.) மீனம் ஆகி உம் - மத்ஸ்யமாகியும், கமடமது ஆகி உம் - கூர்மமாகியும், மேருவை எடுக்கும் தாள் எனம் ஆகி உம் - மேருவை (வீரவண்டையமாகத்) தாங்கவல்ல திருவடியை யுடைய ஆதிவராகமாகியும், நரகரி ஆகி உம் - நரஸிம்ஹமாகியும், எண்ண அரு குறள் ஆய் உம் - நினைத்தற்கரிய வாமனனுகியும், கூனல் வாய் மழுதரித்த கோ ஆகி உம் - வளைவாகிய வாயையுடைய கோடாலியைத்தாங்கிய பரசுராமனுகியும், அரக்கனை கொலை செய்த வான நாயகன் ஆகி உம் - அரக்கனைச் சங்கரித்த ஸ்ரீராமனுகியும், நின்ற - அவதரித்து நின்ற, மால் - திருமாலாகிய கண்ணனுடைய, மலர் அடி - தாமரைமலர்போன்ற திருவடிகளை, மறவேன் - ஒருகாலு மறக்கமாட்டேன் [இடைவிடாது தியானிக்கிறேன் என்றபடி.], (எ-று.)

மீன முதலியன எட்டும் விஷ்ணுவின் அவதார விசேஷங்கள். இவ்வெட்டினே பலராமாவதாரமும் கற்கியவதாரமுஞ் சேர தசாவதாரங்களாம். பலராமாவதாரம் ஸ்ரீகிருஷ்ணவதாரத்தில் ஐக்கியமாதையாலும் கற்கியவதாரம் இனி நிகழப்போவதாதலாலும் அவ்விரண்டையும் நீக்கி இவ்வெட்டினையே யீண்டுக் கூறினர். இவ்வாறு திருவவதரித்த கண்ணனெனவே அவரது ஆச்ரித ஸம்ரக்ஷண முதலிய கல்யாண குணங்கள் விளங்கும். இவ்வவதாரங்களின் வரலாற்றை A அநுபந்தத்திற் கண்டுகொள்வது.

தம்மை யடைக்கலம் புகுந்தவர்களை ஆதரிக்கும்பொருட்டுத் தாம் கொண்டகருத்து இத்தன்மையது என எவர்க்கும் தெரியாதபடி மாயக்குறளாகி மண்கொள்ள வந்தவரென்பது தோன்ற எண்ணருங் குறளென்றும், ஸ்ரீகிருஷ்ணவதாரமும் ஸ்ரீராமாவதாரமும் பூர்ணவதாரமென்பது தோன்ற ஸ்ரீகிருஷ்ணனே மாலென்றும், ஸ்ரீராமனே வானநாயகனென்றும் கூறினர். வானநாயகன் - பரமபதநாதன்,

வானம் - பரமபதம். அரக்கரைக் கொலைசெய்த வென்னும் விசேடணத்தால் இது ஸ்ரீராமனைக் குறித்து நின்றது.

மீனம், கமடம் - வடசொற்கள். கமடமது, அது - பகுதிப்பொருள் விகுதி, இது "வறியார்க்கொன் றீவதே யீகை மற்றெல்லாங், குறியெதிர்ப்பை நீரதுடைத்து" என்னுங் திருக்குறளுக்குப் பரிமேலழகர் ருணாயானுமுணர்க. பிற்காலத்தார் து - விகுதி, அ - சாரியை எனர்பர். மேற்கவியுள் நீதியது என்பதுமது. அரக்கர் - ரக்ஷஸ் என்னும் வடமொழிச்சிதைவு. நரகரி - நரஹரி என்னும் வடமொழிச்சிதைவு; ந்ன் - பத. சூ - உ0-ஞுல் ஹ - க ஆயிற்று. நரவரி என்றும் பாடம். எண்ண என்னுஞ் செயவெனெச்ச வீறு தொகுத்தல். குறள் - ஆகுபெயர்.

கதையின் தொடர்ச்சிவருமாறு:— அஸ்திஞபுரியில் அரசு செலுத்திவந்த சந்திரவம்சத்து அரசர்களுள் சந்தனு என்பவனுக்கு முதற்மனைவியின் குமாரன் பீஷ்மன் என்பவனும், இரண்டாந்தாரத்தின் குமாரன் விசித்திரவீரியன் என்பவனும் இருந்தார்கள். விசித்திரவீரியனுடைய மனைவியான அம்பிகையின் வயிற்றில் திருதாட்டிரனும், அம்பாலிகையின் வயிற்றில் பாண்டுவும் ஆக இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள். சூத்திரப்பெண்வயிற்றிற்பிறந்த விதுரன் என்னும் ஒருபிள்ளையு மிருந்தான். திருதாட்டிரன் பிறவிக்குருடனதலால் பாண்டுவே அரசு செலுத்திவந்தான். திருதாட்டிரனுக்கு துரியோதனன், துச்சாதனன் முதலிய நூறுபிள்ளைகள் பிறந்தார்கள். பாண்டுமகாராஜனுக்கு மனைவியோடு சேரக்கூடாதென்று சாபம் நேரிட்டதனால் அவன் மனைவியாகிய குந்தி, தனக்கு இளமையில் துர்வாசமுனிவர் உபதேசித்திருந்த மந்திர மகிமையால் வந்த யமதருமராஜனால் யுதிட்டிரனையும் வாயுபகவானால் பீமசேனனையும், தேவேந்திரனால் அர்ச்சுனனையும் பெற்றாள். அவளுடைய சக்களத்தியான மாத்திரி யென்பவள் குந்தியால் ஒரு மந்திர முபதேசிக்கப் பெற்று அச்சுவினிதேவர்களால் நகுலன் சகதேவன் என்னும் இரட்டைப்பிள்ளைகளைப்பெற்றாள். இவ்வைவரும் பாண்டுவின் மக்களாகையால் பாண்டவர் என்னப்படுவார்கள். பாண்டு சிலகாலத்துக்குப்பின் இறந்துபோனான். பின்பு பாண்டவர்களும் துரியோதனாதியரும் கிருபாசாரியர் துரோணாசாரியர் என்னும் ஆசாரியர்களிடத்து வில்வித்தை கற்கும்போதே ஒருவர்க்கொருவர் பகைகொள்ள, துரியோதனாதியர் பாண்டவர்களுக்குப் பல தீமை செய்துவந்தார்கள். கடைசியில் அரக்குமாளிகையிலிட்டுத் தங்களை எரிக்கும்படி துரியோதனாதியர்செய்த யத்தனத்தைப் பாண்டவர்கள் விதுரனால் தெரிந்து தப்பித்துக்கொண்டு மாறுவேடம் பூண்டிருந்து, துரோபதியின் சுயம்வரத்துக்குச்சென்று, அங்கு கட்டியிருந்த யந்திரத்தையறுத்து அர்ச்சுனன் துரோபதியைக் கொண்டுவர, தேவருமுனிவரும் அருளிச்செய்தபடி அந்த ஒருத்தியை ஐவரும் கலியாணஞ் செய்துகொண்டு அஸ்திஞபுரத்துக்கு வந்தார்கள். வந்தவுடனே திருதாட்டிரன் இவர்களை இந்திரப்பிரஸ்தத்திலும், துரி

யோதனுதியரை அஸ்தினபுரியிலும் இருந்து ஆளும்படி இராச்சியத்தைப் பங்கிட்டுக்கொடுத்தான். பின்பு யுதிட்டிரர் தம்பிமார்களைக் கொண்டு திக்குவிஜயம்செய்வித்து இராஜசூயயாகம்செய்து லிம்ராட்டு என்கிற சிறப்புப் பெயர்பெற்று வெகு மகிமையுடன் விளங்கினர். அதுகண்டு பொறுமைகொண்டு துரியோதனன் யுதிட்டிரரைத் தந்திரமாத் தன்னிடம் அழைப்பித்துத் தனக்கு மாமனும் மிகு மோசக்காரனும் சூதாடுவதில் வெகு சமர்த்தனுமான சகுனியைக் கொண்டு அவருடன் சூதாவிவித்து அவருடைய செல்வமெல்லாம் பறித்துக்கொண்டதுமன்றி அவளையும் அவர் தம்பிமாரையும் அவர்கள் மனைவியான துரோபதியையும் அடிமையாக்கி, துரோபதியைத் தீண்டக்கூடாத காலத்தில் சபையிற் கொண்டுவந்து அவள் துகிலை யுரியச்செய்தான். ஸ்ரீ கிருஷ்ணனுக்கிரகத்திஞல் அவள் மேலே மேலே ஆடைகள் வளரப்பெற்று மானங் காத்துக்கொண்டாள். பின்பு அவளுடைய கற்பினது மகிமைக்கு அஞ்சி, திருதராட்டிரன் பாண்டவர்களை அடிமைத்தனத்தினின்று நீக்கி அவர்கள் செல்வத்தையுங்கொடுத்து ஊருக்கு அனுப்ப, துரியோதனுதியர் மறுபடியும் அவர்களைத் தந்திரமாய் அழைத்து முன்போலவே சூதாட்டத்தில் தோற்பித்து எல்லாவற்றையுங் கவர்ந்துகொண்டு, அவர்களைப் பன்னிரண்டு வருஷம் வனவாசமும் ஒருவருஷம் அஞ்ஞாதவாசமும் செய்துவரும்படி ஏற்படுத்தி யனுப்பினர்கள். அப்படியே பாண்டவர்கள் துரோபதியுடனேபோய்ப் பன்னிரண்டுவருஷம் காமியவனம் முதலிய வனங்களில் வசித்துப் பின்பு மாறுவேடம்பூண்டு விராடநகரத்தில் ஓராண்டளவு அஞ்ஞாதவாசஞ்செய்தனர். பதின்மூன்றுவது ஆண்டினிறுதியில் துரியோதனன், பாண்டவர்கள் விராடநகரத்திருக்கின்றனரெனவறிந்து அவர்களைக் கண்டுபிடிக்கும்படி படையெடுத்துச்சென்று, விராடராஜனது ஆனிரையைக்கவர்ந்து செல்ல, முன் ஏற்பாட்டின்படி பதின்மூன்றுவருடமும் கழிந்ததாதலால் அப்பொழுது பாண்டவர்கள் வெளிப்பட்டனர். அச்செய்தி கேட்டு அவர்களைக்காணவந்த அரசர்கள் பலரும்கூடி பாண்டவர்கள் அரசு பெறுமுபாயமென்னவென்று கண்ணனுடன் ஆலோசித்தாரென்பர்கள் என்பதாம்.

உ.—[இது மாயோனு மாயாக்குருமைந்தரு மன்னர்யாரும் போயோதைவீதி யுபலாவி புகுந்துதங்களாயோதனத்துக் குறுநீர்மைகளாயுங்கால் மாயோனருளிச்செய்தது.]—(இ-ள்.) வருகல் முகில் - (இந்திரனேவலால்) வந்த கல்மழையை, கல்லினல் விலக்கிய - (கோவர்த்தனமென்னுங்) குன்றினுல்தடுத்த, மா - பெரிய, கரியமுகில் - காளமேகம்போன்ற கண்ணன், அவன் - அத்துரியோதனன், வல்லினுல் கொண்டமண் - சூதாட்டத்தினுல் அபகரித்துக்கொண்ட ராச்சியத்தை, மீளவும் - மறுபடியும், வல்லினுல்கொளல் அன்றி - அச்சூதாட்டத்தாற் சயித்துக்கொள்வது (வேத்தநீதி) யல்லது, வில்லினுல் அமர் மலைந்துகொள்ளுதும் எனல் - வில்லினுல் போர்செய்து சயித்துக்கொள்வோமென்பது, வேத்து நீதியது அன்று - அரசநீதி

யன்று; (ஆகையால்) சுயோதனன் நினைவு - (இவ்விஷயத்தில்) துரி யோதனனெண்ணத்தை, சொல்லினுல் - (அவன்சொல்லும்) சொல் லால், ஒருதூதினில் - ஒருதூதனைக்கொண்டு, அறியல் ஆம் என்று—, சொன்னுன் - சொல்லியருளினர், (எ-று.)—ஆல் - அசை; ஆகையால் என்பதன் விகாரமுமாம்.

மண் - ம்ருண் என்னும் வடமொழிச்சிதைவு. தூது - தூத சப்தஜவம்; இங்குதூதனதுதொழிலே யுணர்த்துஞ் சொல்லன்று. அமர் - சமர், சமம் என்பனபோல் ஸமரம் என்னும் ஆரியச்சிதைவு. வருஎன்னும் காலங்காரத்தபெயரெச்சம் முதல்என்னும் பெயர்கொண் டது. வல் - சூதாடுகருவி: அது அதனுல்ஆடப்படும் ஆட்டத்திற்கா கியது. கல் - மலைக்கு ஆகுபெயர். கொள்ளுதும் - எதிர்கால முன் னர்த்தும் தன்மைப்பன்மை வினைமுற்று; தும் - விருதி [நன் - வினை - சூ-கக]. வேத்துநீதி [=வேந்து+நீதி] - இது செய்யுள்விகாரமாகிய வலித்தலன்று; [நன். உயிர் - சூ. நசு]னுல்வந்த புணர்ச்சிவிகாரம். விலக்கிய - இறந்தகாலப் பெயரெச்சம்; இதற்குத்தன்வினையில் வில கிய, விலங்கிய, என இரண்டுருபங்களுண்டு; விலகு, விலங்கு - இரண் டும் பகுதிகளாம். முதல்சொன்னுன் என அஃறிணைப்பெயர் உயர் திணை வினைகொண்டதற்கு விதி [நன். பொது - சூ - உஅ.] கல்வி னுல்வருகன்முதல்விலக்கியகதையை A அனுபந்தத்திற் காண்க.

க—[இது பலராமன் சொல்லியது.]—(இ-ள்.) கரியவன் புகல் கட்டுரை - கண்ணனருளிச்செய்த உறுதிமொழியை, கேட்டபின்—, காமபாலன் உம் - பலராமனும், (கண்ணனைநோக்கி) அவன் உற்ற வர் பலருங்காண - அச்சபையில் வந்திருந்தவர்கள் பலரும் காணும் படி, பரியவன் - துரியோதனன், பெரும் சூதினுல் - பெரிய சூதாட் டத்தினுல், உதிட்டிரன்தனை - தருமபுத்திரரை, வென்று - சயித்து, உரிய - (அவருக்கு) உரிய, அம்புவி - ராச்சியத்தை, பல் ஆண்டி - அனேக வருஷங்களாக, அடிப்பட - பழமையாகும்படி, ஆண் டான்—; (ஆகையால் இப்பொழுது), திரிய - (அவன் மனங்) கோ ணும்படி, வன்புடன் - பலாத்காரமாக, வாங்குதற்கு - அபகரிப்ப தற்கு, எண்ணும் இ தீமதி - ஆலோசிக்கின்ற இந்தத் தீயநினைவு, கொ டிது - கொடுமையானது, என்றுசொன்னுன்—, (எ-று.)

சூது - தூ ஊ ஈ ம் என்னும் வடமொழிச் சிதைவு. கட்டுரை-பண் புத்தொகைநிலைத் தொடர், கட்டாகிய வுரை எனவிரியும். cf. கட்ட ழகு, கூ. கேட்டபின் - வினையெச்சம், [தொல் - வினை - சூ. கூ] ஆண்டான் என்பதை வினையாலணையும் பெயராக்கொண்டு திரி வென்னும் எச்சத்திற்கு எழுவாயாகவுங் கொள்ளலாம்.

பலராமன் துரியோதன பக்ஷபாதியாகையால் அவன் செய்கை யில் குற்றமில்லை யென்பார் "கரியவம்புவி யுதிட்டிரன்றனை யவ ஜூற்றவர் பலர்காணப், பரியவன் பெருஞ் சூதினுல் வென்று பல் லாண்டடிப்படவாண்டான்" என்றும், பாண்டவர் இப்பொழுது

துரியோதனனிடத்துத் தாயம் வேண்டுவது அநியாய மென்பார் "வன்புடன் வாங்குதற் கெண்ணுமித்தீபதி கொடிது" என்றும் கூறினர். "அவனு முடிக்குரியான் றோன்ற லவனுக், கிவனு மிடுக வற்றூற் றேற்ற—னவனு, மரசிழவா வண்ண மறிந்துணாமி னென்றூன், வளைகெழுதோண் மன்னன் மதித்து" எனவெண்பாவிற் கூறியவாற்றானுமுணர்க.

சு.—[அதுகேட்டுச் சாத்தகி பலராமனை யிகழ்ந்ததும், அதற்குக் கண்ணன் கூறியதும்.]—(இ-ள்.) இளையசாத்தகி - (பலராமனுக்கு) இளையவனுகிய சாத்தகியென்பவன், தமையனை-தன் தமையனை [பலராமனை] (நோக்கி), இதயம் மிக கரிது ஆயின் உம்-உன்மனம் மிகக் கறுத்ததாயிருந்தாலும், நாவில் விளையும் மாற்றம்-உன்வாயில் வரும் வார்த்தை, நின் திருவடிவின் உம் மிக வெள்ளை ஆகியது-உன்மேனியைக்காட்டிலும் [உடம்பைக் காட்டிலும்] வெளுத்திருக்கின்றது, என்ன-என்று, உளைய-(பலராமன்மனம்), உளையும்படி, வார்த்தைகள் உரைத்தனன்-பரிகாசவார்த்தைகள் சொன்னன்; உரைத்தலும்-(அப்படியவன்) சொன்னவுடனே, உற்றவர் இடுக்கண்கள் களையும் மாபுயல்-தம்மையே சரணமாகப் பொருந்தினவர்களுடைய (அஞ்ஞானமுதலிய) துன்பங்களை (வேரற) க்களையும் காளமேகம் போன்றவன் [ஸ்ரீகிருஷ்ணன்], இனி-இப்பொழுது, இருவரும்-நீங்களிருவரும், நும்கட்டளை-உங்களுடைய கட்டாகிய வார்த்தைகளை, ஒழிமின் என்றூன்-(சொல்லாது) ஒழியுங்களென்று சொன்னர்.

இதயம்-ஹ்ருதயம் என்னும் வடமொழிச்சிதைவு. நோக்கினை ஒருசொல்வருவிக்க. பலராமன் பக்ஷபாதமாய்ச் சொன்னனென்பது தோன்ற 'மிகக்கரிதிதயம்' என்றும், அவன்பேச்சு நியாயத்திற்குப் பொருந்தாததென்பது தோன்ற 'மாற்றம் வடிவினும் வெள்ளையாகியது' என்றும் கூறினன். "மானமணிவனைத்தோள்வாள்வேந்தீர் மற்றிவன்றன், மேனியைக் காட்டின் வெளுத்தே—தானே, ரதத்தினுலன்றியே யன்பொருபாலோடி, மதத்தினுற் காட்டுனைத்த வாக்கு" என்றூர் வெண்பாவினுள்ளும். இங்கு வெண்மை சாரமின்மை குறித்துநின்றது. மிக என்னும் செயவெனெச்சம் கரிதுஎன்னும் குறிப்பு முற்றை விசேடித்து வினையுரியாய் நின்றது. நா-ஆகுபெயர். வடிவினும், இன்-உறழ்பொருவு. வெள்ளை-பண்புப்பெயர். உரைத்தனன் எனவமையாது வார்த்தைகள் எனவேண்டாது கூறினர் சாத்தகி பலராமனைப் பழித்துக்கூறினமை தோன்ற. உரைத்தலும்-உம் மீற்று வினையெச்சம். மா-கருமையாதலின் மாப்புயல்-காளமேக மென்னப்பட்டது. இருவரென்றது-சாத்தகியையும் பலராமனையும். இருவர் என்னும் படர்க்கைப்பெயர் முன்னிலைக்கண்வந்தது இடவழுவமைதி.

டு.—[அங்ஙனஞ்சொல்லிக் கண்ணன் உலூகனைத் தூதுபோக்கித் தாம் துவாரகைக்குச்சென்றது.]—(இ-ள்.) பேர் உலூகம் உம்-பிரசித்திபெற்ற உயர்சாதி யாண்குதிரையும், பிணை உம்-அப்பெண்

குதிரையும், நல்கிய - பெற்ற, பெரும் பிறப்பு உடை பரி - சிறந்த பிறப்பினையுடைய குதிரைகளையும், திண்தேர் - பலம்பொருந்திய தேர்களையும், உலூகலம் நிகர்அடி - உரலையொத்த அடிகளையுடைய, கார் நிகர்களிறு - மேகம்போன்றயானைகளையும், உடை - உடைய, கண் இலா அரசன்பால் - கண்ணில்லாத [குருடனான] அரசனிடத்து [திருதராட்டிரனிடத்து], தூதுசென்று - நீ தூதுபோய், இவர் மனம்-இப்பாண்டவர்கருத்தை, செப்பி - அவனுக்குச்சொல்லி, மீள்க - திரும்பக்கடவாய், என - என்று, சீர் உலூகனைபோக்கி - சிறப்புப்பொருந்திய உலூகமுனிவரையனுப்பி, ஓர் உலூகலமுடன் தவழ்ந்தவன் - (பிணிக்கப்பட்ட) ஓர் உரலுடனே தவழ்ந்து சென்றவராகியகண்ணன், அன்றே - அன்றைத்தினமே, தனது ஊர்புகுந்தனன் - தமதூர்போய்ச் சேர்ந்தார், (எ-று.)

பேருலூகமும்பிணையு நல்கிய பெரும்பிறப்புடைப் பரியென்றது - சிந்து, யவனம்முதலிய தேசத்துச்சிறந்த சாதிக் குதிரைகளென்றற்கு. உடைப்பரி, உடைக்கண்ணிலான்—இவற்றில் உடையென்பது ஈறுகெட்ட குறிப்புப்பெயரெச்சம். அரசன் - ராஜர் சப்தபவம். சிருலூகன் எனச் சிறப்பித்தது, தூதுரைப்பார்க் கின்றியமையாத அன்பு அறிவு ஆராய்ந்தசொல்வன்மை முதலிய குணங்களும், தானேவருத்துச்சொல்லு மாற்றலும் உடையான் என்றற்கு; அதுமேல் தூதுரைக்குமிடத்துக் காண்க. மீள்க - வியங்கோள், இங்கு விதிப்பொருட்டாய் நின்றது. வியங்கோள் வினைமுற்றுக்கள் விதிப்பொருளிலும், வேண்டுகோட் பொருளிலும், வாழ்த்துப்பொருளிலும்வரும்; அவை இடனேக்கி யறியத்தக்கன. மீள்கென - விகாரம். உலூகலமுடன் - மூன்றனுருபுசாரியையின்றி வந்தது [நன். உருபு - சூ. ஈ]. தவழ்ந்தவன் கண்ணிலான்பால் தூதுசென்று மீள்கென உலூகனைப்போக்கி அன்றே தனதூர்புகுந்தனன் எனக் கூட்டி முடிக்க. இனி, பரித்திண்டேர் என்றதற்கு குதிரைகள் பூட்டப்பெற்ற பலத்த தேர்களென்றும், காருலூகல நிகரடிக்களிறு என்றதற்கு கறுத்த அல்லது பெரிய உரலையொத்த அடிகளையுடையகளிறு என்றும் பொருள்கொள்ளலாம். அன்றே - அசையுமாம்.

சு.—[பாண்டவரின் வெளிப்பாடு காணவந்த மற்றஅரசர்கள் யுதிட்டிரரிடத்து விடைபெற்றுச் சென்றது.]—(இ-ள்.) அம்தண் மாமுரசகேதன - அழகிய தண்ணளியையுடைய பெரிய முரசக் கொடியோனே! இந்த அந்தணன் - இந்தப் பிராமணன், நீ இசைத்தன எலாம் - நீ சொல்லியவற்றையெல்லாம், இயல்புடன் - (தூதுரைப்போர்க்குரிய) முறையில், இனிது ஆக - இனிமையாக, அந்த அந்தவேந்து உரைத்தபின் - அந்தக் குருடனிடத்தில் [திருதராட்டிரனிடத்தில்] சொன்னபின்பு, அவன் - அந்தத் திருதராட்டிரன், நினது அவனி தந்திலன் ஆகில் - உனது ராச்சியத்தைக் கொடாவிடில், முந்த - முன்னதாக [உடனே], திருமுகம் வரவிகே என்று - (எமக்கு) ஒரு பத்திரிகையனுப்புகவென்று பிரார்த்தித்து, வந்த அந்த

மன்னவர்களும் - (இவர் வெளிப்பாடுகொணும்படி) வந்த அந்த ராஜர்க களும், தம் தம் மாநகர் அடைந்தனர் - தந்தம்முடைய ராஜதானி யைச் சேர்ந்தார்கள், (எ-று.)—மன், ஓ - அசைகள்.

அந்தணன் - அந்தத்தை அணவுவோன், அந்தம் - வேதாந்தம்; அழகிய தண்ணளியுடையோன் என்பதும் பொருளாம். இசைத் தன - வினையாலணையும் பெயர். உரைத்தபின் - வினையெச்சம், [தொல். வினை - சூ. கூ]. மூரசகேதனன் - வடதூண்முடிப. திரு முகம் - மங்கலவழக்கு. விடுகென்று - விகாரம்; வியங்கோள் இங்கு வேண்டுகோட் பொருளில்வந்தது. மன்னர்களும் என்பதில் இறந் ததுதழீஇய எச்சவும்மை கீழ்ப்பாட்டில் உலூகலமுடன் றவழ்ந்த வன் என்பதைக்கொள்ளும். வந்த வந்தமன்னவர் என்றது கீழ்வெளிப் பாட்டுச் சருக்கத்தில் "பாஞ்சாலர் போசகுலமன்னவர் பாண்டிவேந் தர், வாஞ்சாமனத்தின் வயமத்திரர் மாகதேயர், பூஞ்சாபவெற்றிக் கொடிக்கேரளர் பொன்னிநாடர்" என்றவர்களே.

எ.—(இ-ள்.) அரசர் போனபின்—, மால் பணி தவறு உரூது - கண்ணனுடைய நியமனந்தவறுமல், மூரசகேதனன் - யுதிட்டிரர், அம்முனிதனைநோக்கி - அந்தமுனிவரை [உலூகரை] ப்பார்த்து, நீ எழுந்தருள்க என - நீர் அத்தினபுரத்துக்கு எழுந்தருளக் கடவீர் என்று, முனிவனை தொழுது ஏத்தி - அவரைத்தொழுது துதித்து, வினை செய் தார் பூனை வீடுமன் - வாசனை வீசுகின்ற மாலையணிந்த பீஷ்மாசாரியரையும், எந்தை - எம்தந்தையையும் [திருதராட்டிர னையும்], மெய்விதுரன் - சத்தியவாக்காகிய விதுரனையும், வேதியர் கோவை - மறையவர்க் கிறையையும் [துரோணாசாரியரையும்], அடி பரசினேம் என்று - நாங்கள் திருவடியைத் துதித்தோம் என்று சொ ல்லி, பின்-அதன் பின்பு, உரியசொல் - நீர் சொல்லுதற்குரிய வார்த் தைகளை, பணித்தருள் என-சொல்லியருளுமென்று சொல்ல, போர் தான் - (அம்முனிவர்) போனார், (எ-று.)

முனிவனை யென்றது சுட்டுமொத்தினையாய் நின்றது. எம்தந்தை என்றும் பரசினேமென்றும் கூறியது தம்மையும் தம்பிமாரையும் சேர்த்துச்சொல்லியதெனவறிக.

போந்தான் - இது போ என்னும் பகுதிமேற் பிறந்த வினை முற்றும்; புகுந்தான் என்பதன் விகாரம் எனச் சிலர்சொல்லுவர். பீஷ்மர் முதலியோர்போ லன்றி விதுரன் பாண்டவர்களிடத்து எப் போதும் உண்மைதவறு திருந்தவறுதலின் அவனை மெய்விதுர னென்றார்.

அ.—(இ-ள்.) போன - தருமராஜனிடத்தினின்றும் விடை பெற்றுச்சென்ற, நான்மறைபுரோகிதன் - நான்கு வேதங்களையுமு ணர்ந்த புரோகிதர் [உலூகமுனிவர்], அத்தினபுரிபுகுந்து - அத்தின புரியை யடைந்து, எரி பைம்பொன் மானம்வார்கழல்-விளங்குகின்ற பசும்பொன்னாற்செய்த பெருமைபொருந்திய நீண்ட வீரக்கழலை

யணிந்த, திருதராட்டிரன் எனும் மன் அவைதனில் எய்த - திருதராட்டிரனென்னும் அரசனது சபையிலே செல்ல, அரவவெங்கொடியோன் - வெவ்விய சர்ப்பக்கொடியை யுடையவன் [துரியோதனன்], ஞானமாமுனி வரவுகண்டு - ஞானத்தையுடைய முனிசிரேஷ்டரது வருகையைப்பார்த்து, எதிர்கொளா - எதிர்கொண்டு சென்று, இருபதம் நயந்து போற்றி - இரண்டு திருவடிகளையும் விரும்பித் துதித்து, ஆன - சிறப்புடையதான, மாமணி ஆசனத்து இருத்தினன் - பெரிய ரத்தினங்களிழைக்கப்பெற்ற ஆசனத்தி லெழுந்தருளப்பண்ணினன், (எ-று.)

நான்மறையாவன: தைத்திரியமும் பௌடியமும் தலவகாரமும் சாமவேதமுமாம்; இனி வேதவியாசர் வகுத்தறைப்படுத்திய காலத்தோதுகின்ற இருக்கு யசுஸ் சாமம் அதர்வணம் என்னும் நான்கு வேதமுமாம். மறை - சிலவருணத்தார்க்கு மறைக்கப்படுவது; மறைந்தபொருளை யுடையதுமாம். புரோகிதன் - மேல்வரும் நன்மையை நாடிச்செய்பவன். அவை - ஸபா என்னும் வடமொழிச் சிதைவு. ஞானமாமுனி என்பதற்கு ஞானமே ஓர் திருவுருவமாக வந்தமுனி எனக்கூறினும் பொருந்தும். அரவவெங்கொடியோன் திரிகரண சுத்தியாய்ப் பூசித்தானென்பது தோன்ற நயந்து, போற்றி, இருத்தினனென்றார். இவனது கொடுமையைக் கொடிமேலேற்றி வெங்கொடியோனென்றார். அரவவெங்கொடியோ னென்றதனால் நாகம்போற் கொடிய நெஞ்சுடையன் எனவும் ஓர் பொருள் தோன்றுமாறறிக.

க.—(இ-ள்.) விந்தம் அன்ன தோள் - விந்தியமலையை யொத்த தோள்களையுடைய, வீடுமன் முதலியோர் - பீஷ்மாசாரியர் முதலியோர், விழைவுடன் தொழுது ஏத்தி - விருப்பத்துடன் வணங்கித் துதித்து, வந்த ஆறு உரைத்தருள்க என - தேவரீர் இங்கு எழுந்தருளிய காரணத்தைச் சொல்லியருள்வீராக வென்ன, முனிவனும் - அவ்வுலூக முனிவரும், அந்தன் ஆகிய கந்து அடர் கடம் களிறு அரசனும் - குருடாகிய கட்டுத்தறியை முறிக்கின்ற மதம் பொழிகின்ற யானைப் படையையுடைய திருதராட்டிரனும், அவன் கந்த மைந்தர் யாவரும் - அக்குருடன் பெற்ற (துரியோதனன் முதலிய) பிள்ளைகள் எல்லாரும், கன்னனும் - கர்ணனும், சகுனியும்—, (ஆகிய இவர்களெல்லாரும்), மனம் கனன்றிட - மனமெரிய, வரன்முறை அடைவாக - முறையே, சொல்வான் - (தாம் வந்த காரியத்தை) சொல்லுகின்றவரானார், (எ-று.)

விந்தம், தோள், கந்து - இவை முறையே விந்ய, தொளி, ஸ்கந்ய, என்னும் வடமொழிகளின் சிதைவு. வீடுமன் முதலியோர் என்றது வீடுமன், விதுரன், துரோணாசாரியர் முதலானவர்களை. முனிவனும் சொல்வான், எனக்கூட்டுக. அந்தன் [அந்ய:] - வடசொல்; இங்கு அந்தனென்றது, தன் மக்களிடத்துப் பக்ஷபாதமுடைமையின் புறக்கண்ணோடு அகக்கண்ணுமில்லாதவனென்பது தோன்ற. பின் அவன் நந்தமைந்தரெனச் சுட்டியதனால் அம்மைந்

தரும் அறிவிற்குருடரென்றதாயிற்று. களிற்றரசன் என்றதற்கு களிற்றையொத்த அரசன் எனக் கூறினும் பொருந்தும். அரசனும், மைந்தரும், கன்னனும், சகுனியும் கனன்றிடவெனவே, வீடுமன் முதலியோர்க்கு அக்கனன்றிடல் இல்லையென்றதாயிற்று. அருள்கயங்கோள். மூனிவனும், உம்மை-அசைநிலை; பின்னுள்ள நான்கும் எண்ணுப்பொருளன.

கo.—(இ-ள்.) பன்னிரண்டு ஆண்டு அடவியுற்று - பன்னிரண்டு வருஷம் வனவாசஞ்செய்து, ஒருவரும் அறிவுறுவகை - ஒருவரும் அறியாதபடி, மற்று ஓர் ஆண்டு - பின்னும் ஒருவருஷம், மன்னிய - வாசம்செய்த, பாண்டுவின் மதலையர் ஐவரும் - பாண்டு புத்திரர்கள் ஐந்துபேரும், வெளிப்பட்டார்—; ஆண்டு மன்னர்மூன்சபாமண்டபத்திலே அரசர்களுக்கு முன்னே, சூது போர்பொருது அழிந்திதலின் - சூது போராச்செய்து (அவர்கள்) ராஜ்யத்தை யிழந்தபடியினால், நீர் அது கொண்டு - நீங்கள் அத்தோல்வியைக் காரணமாகக்கொண்டு, ஆண்டுவந்தபார் - அரசாட்சி செய்துவந்த பூமியை, நும்மொழிப்படி - உங்கள் சொற்படியே, அவர்க்கு அளித்திரோ அளியீரோ - அவர்களுக்குக் கொடுப்பீர்களா கொடுக்கமாட்டீர்களா, (எ-று.)

ஐவரும்-முற்றும்மை. ஒருவருமறிவுறுவகை மன்னியது - அஞ்ஞாதவாசஞ்செய்தது. "காடுறையுமாண்டுங் கரந்துறையுமாண்டும் போய், நாடுறையும் பாண்டவர்க ணண்ணினரால்—நீடுறையிற், பூவேந்துவாவிப் புனலேந்து நன்னாடர், கோவேந்தே யென்னுங் குறிப்பு" என உலூகமுனிவருரையை வெண்பாவினுங் காண்க. நும்மொழியென்றது, "அரிவையோடன்றுநீவி ரைவருமடவியெய்திச், சுரர்தினமீராற்றங்கட் டென்னுதிர்மன்னுநாட்டி, லொருவருமறியாவண்ண மொருதினமுறைதிருங்கள், பெருவிறலரசும் வாழ்வும் பின்னுறப்பெறுதிர்" எனச் சூதுபோர்ச்சருக்கத்திற் கூறியதைச் சுட்டியென்க. இதுமுதல் கூ-பாட்டு ஒருதொடராய், கசு-ம் பாட்டிலுள்ள என்று என்பதனைக் கொள்ளும்.

கக.—(இ-ள்.) இலஞ்சியில் - அகழியிலுள்ள, பொன்செம்கால் அன்னமும் - அழகிய சிவந்த கால்களையுடைய அன்னப் பறவைகளும், இரிமயில்களும் - மலைகளிலுள்ள மயில்களும், உடன் விளையாடும் - கூடிவிளையாடப்பெற்ற, நல்வளம்நாட்டீர் - நல்லவளப்பம்பொருந்தியநாட்டையுடையவர்களே, நீர்—, முன்னரும்பொருதுளது சூதுபோர் - முன்புசெய்துள்ளதும் சூதுபோரே; (ஆதலால்) இன்னமும் பொரவேண்டுமேல்-இப்பொழுதும் சண்டைசெய்ய வேண்டுமானால், மோதுபோர் கருதாமல் - (ஒருவனா யொருவர்) மோதுகின்ற சண்டைசெய்யவிரும்பாமல், பொருதிடும் - அச்சூதுபோரையே செய்யுங்கள்; (அப்படிச் செய்தால்) பின்னரும் பிறவாது - (அதனால் உங்களுக்குள் யாதொரு) பேதமும் உண்டாகாது; இனி—, பண்டுபோல் பெருவாழ்வும் பீடுறும்-முன்போலப் பெருவாழ்வும் மேம்பட்டுவிளங்கும், (எ-று.)

முன்னர் என்னுங் காலப்பெயரில் அர்-பகுதிப்பொருள் விகுதி, உம் - எதிரது தழீஇய வெச்சவும்மை. இன்னமும் - இறந்தது தழீஇயது. அன்னமும் மயில்களும் - எண்ணும்மை; இவை முறையே ஹம்ஸம் மயூரம் என்பவற்றின் சிதைவு. கிரி, பின்னம்-வடசொற்கள். பின்னமும் வாழ்வும்-உம்மைகள் முறையே எதிரது தழீஇயதும் இறந்தது தழீஇயதும். சூதுபோர் - சூதாட்டமாடுவோர் காய்கள் ஒன்றிலொன்றை அடி, வெட்டு, கொல், குத்து என வழங்குதலின் சூதுபோரென்றும், ஆடுதல் பொருதலென்றுஞ் சொல்லப்பட்டன. பொன் + செங்கால்=பொலஞ் செங்கால், "பொன்னென் கிளவி" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தால் னகரங்கெட லகர மகரங்கள் தோன்றின. அன்னச்சாதியிற்சிறந்த ராஜஹம்ஸம் என்பார் செங்காலன்ன மென்றூர், காலும் மூக்குஞ் சிவந்துள்ளன அவையேயாதலின்; "பவளக்காலிவர்கவ்வனரசன்னமும்" என்றூர் கம்பராமாயணத்தினும். மருதநிலக் கருப்பொருளாகிய அன்னமும், குறிஞ்சி நிலக்கருப் பொருளாகிய மயிலும் வீணையாடப்பெற்ற வளநாட்டை யுடையீரென்றதனால், வெவ்வேறுநிலத்துள்ளனவாய பறவைகளும் தம்மில் பேதமின்றியுமது நாட்டில் ஒற்றுமைப்பட்டிருக்க, நீவிர் தம்முடன் பிறந்தோராய பாண்டவர்களோடு பேதப்பட்டிருப்பது தகுதியோ என்னும் பொருள் தொனிக்குமாறறிக. நாட்டூர் - வினி.

கஉ.—(இ-ள்.) அன்றி - அப்படியல்லாமல், அவருடன் மலைகுவம் என - அப்பாண்டவர்களுடன் மோதுபோர் செய்வோமென்று, அழிவினைகருதாமல்-அபஜயத்தை எண்ணுமல்,வென்றியே நினைந்து-ஜயத்தையேஎண்ணி, எதிர்த்திரேல் - எதிர்த்தீர்களாகுல், உங்களால் வெல்லுதல் அரிது - உங்களால் (அவர்களைச்) சயித்தல் அருமையாகும்; கன்றி - கோபமூண்டு, அடல் வீமனும் விசயனும்-பலம்பொருந்திய வீமனும் அருச்சுனனும், களம்புகின் - யுத்தகளத்திற் புகுந்தால், நீர் அனைவீரும் பொன்றியேவிடுகின்றிர்-நீங்களெல்லாரும் மடிந்தே போவீர்கள்; முனிவர் சொல் பொய்க்குமோ - முனிவர்களுடைய சொல் பொய்த்துப்போகுமோ, பொய்யாது - (ஓர் காலத்தும்) பொய்த்துப் போகாது, (எ-று.)

மலைகுவம், அம் - பன்மைத்தன்மை விகுதி. அன்றியே, கன்றியே - ஏகாரம் அசை; வென்றியே - பிரிநிலை; பொன்றியே தேற்றம். எதிர்காலத்தில் நிகழற்பாலதனை 'பொன்றி விடுகின்றீர்' என நிகழ்காலத்தாற் கூறியது, எதிர்த்தாலிறப்பது நிச்சயம் என்னுந் தெளிவு பற்றி. அம்மா - இடைச்சொல். கலம் - வலம் என்னும் வடமொழித்திரிபு. முனிவர்சொல் என்றது நாரதர், அயித்திரேயர், துர்வாசர் முதலியவர்களுடைய சாபத்தை யுட்கொண்டு.

கங.—(இ-ள்.) என்று - என்பதாக, பூசுரன் இயம்பலும் - பிராமணன் [உலகமுனிவர்] சொல்லவும், குங்குமம் பூசியது - குங்குமக்குழம்பு பூசப்பெற்றதாகிய, எழில் உறும் இணை மேரு குன்று - அழகு பொருந்திய இரண்டு மேருமலையை, அனைய - ஒத்த, பொன்

தடம்புயம் - அழகிய உயர்ந்த புயங்களையுடைய, குரு குல வய வேந்தன் - குருகுலத்திற்பிறந்த வெற்றி பொருந்திய அரசன் [துரியோதனன்] (அம்முனிவனைப்பார்த்து), இன்று - இப்பொழுது, பூசை போல் - பூனைபோல, இருந்தஉழி - இருந்தவிடத்தில், உரைக்கும் சூது - சொல்லுகின்ற இவ்வார்த்தை, இகலது அன்று - வலியதல்ல, இருவர்க்கும் - (எங்கள்) இருதிறத்தாருக்கும், துன்று பூசலில் - நெருங்கிய சண்டையில், ஆண்மையும் - (அவரவர்களின்) ஆண் தன்மையையும், தோள் வலிமையும் - புஜபலத்தையும், காணலாம் என்முன் - பார்க்கலாமென்றான், (எ-று.)

பூசுரன் - வடசொல், பூமிக்குத் தேவதையென்பது பொருள். இயம்பலும் - உம்மீற்று வினையெச்சம். இருந்துழி - விசாரம்.

கச.—(இ-ள்.) வில் வித்தூரன் - வில்வித்தையில் வல்லவனான விதுரன், கல்வி தூயநெஞ்சு இலாத அச்சுயோதனன் - கல்வியும் நல்லமனமும் இல்லாத அந்தத் துரியோதனன், கழறியமொழிகேட்டு-சொன்னவார்த்தையைக் கேட்டு (அவனைப்பார்த்து), இவ்வேதியன் மொழிப்படி - இந்த வுலூகமுனிவர் சொற்படியே, மேதினிவழங்காமல் - (பாண்டவர்களது) பூமியைக் கொடாமல், புல் விதூடகரினும் உணர்விலாதவர் - அற்பராகிய விதூஷகரைக் காட்டிலும் அறிவில்லாதவர்கள், புகலும் வாசகம் கேட்கில் - சொல்லும் வார்த்தையைக் கேட்பாயாயின், செல்வி தூரியள் ஆய்விடும் - லட்சுமி தூரத்தளாய் விடுவாள் [விலகிப்போவாள்], சுற்றமும் சேனையும் கெடும் - உறவும் சேனைகளும் கெட்டுப்போம், என்றான்—, (எ-று.)

தூயநெஞ்சு உண்டாதற்குக் கல்வி காரணமென்பார் கல்வி தூய நெஞ்சு என்றார். தூய - தூய்மையென்னும் பண்படியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம். விதூரன் என நீட்டல் பெற்றது செய்யுள் விகாரம். வேதியன் - வேதமுணர்ந்தோன்; பிராமணன். மேதினி - வடசொல், மதுகைடபர்களுடைய மேதஸ்வினால் நனைக்கப்பட்டது என்பது பொருள். விதூடகரினும், உம்மை - இழிவு சிறப்பு. விதூடகன் - விதூஷகன் என்னும் வடமொழித்திரிபு, என்றும் முகமன் பேசிப் புகழ்ந்து பரிஹாசம் செய்துகொண்டிருப்பவன் என்பதுபொருள்.

கரு.—(இ-ள்.) நீ—, திரத்து வாய்மை தவறி - உறுதியுள்ள சத்தியம்தவறி, அவருடன் - அப்பாண்டவர்களோடு, சேனையும் திறலும் கொண்டு - சேனைகளையும் வலியையுங்கொண்டு, உரத்து - திடப்பட்டு, வாள் அமர் உடற்றலோ பெரும்பிழை - வாட்போர் செய்தலோ பெருங்குற்றமாகும்; உடன்றனையாமாகில் - அவ்வாட்போரைச் செய்தனையாயின், தனஞ்சயன் தனு - அருச்சுனனுடைய வில்லானது, சரத்து வாய் தொறும் - அம்புகள் தைத்த இடங்களெல்லாம், சோரி கக்கிட - உதிரம் பெருக, விடும் என்று - அம்பு கனையெய்யும் என்று, பரத்து வாசனும் - துரோணாசாரியரும், பகர்ந்தனன் - சொன்னார்; கிருபனும் - கிருபாசாரியரும், பகர்ந்ததே - அந்தத்துரோணாசாரியர் சொன்னதே, பகர்ந்திட்டான்-சொன்னார்.

மீற்று - அசைநிலை. உடற்றலோ, ஓகாரம் - இழிவு சிறப்பு. பரத்துவாசனும் கிருபனும்-உம்மை யிரண்டும் இறந்தது தழீஇயன.

ககக.—(இ-ள்.) மன்னவ - அரசனே, காடுமன்னும் நின்புதல்வருக்கு - அரணியத்தில் தங்கியிருந்த நின்புதல்வராகிய பாண்டவர்க்கு, அறுதிசெய் காலமோ கழிந்தன்று - (அந்த அரண்யவாசத்துக்கு) அளவு செய்த காலமோ [பதின்மூன்று வருஷமோ] கழிந்துவிட்டது, (ஆதலால்) நாடுகொடாமல் - அவர்களுக்குரிய தேசத்தைக் கொடாமல், வெம்சமர்பொர் - வெவ்விய யுத்தஞ்செய்ய, நாடினையெனின் - நீ நினைத்தனையாயின், நாளை—, கோமென்னுவில் அருச்சுனற்கு எதிர் - வளைவுபொருந்திய வில்லையுடைய அருச்சுனனுக்கெதிரே, குனிக்கவல்லவர் எவர் என்று - வில்லைக்கவல்லார் யாவரென்று, வீமென் - பீஷ்மாசாரியர், திருதனயனோடு - தந்திருக்குமாரராகிய திருதராட்டிரனோடு, உறுதிகள் - உறுதி பயக்கும் வார்த்தைகளை, வெருண்டு உளைத்தனன் - கோபித்துச்சொன்னர், (எ-று.)

ஓ - இரக்கப்பொருளது. நாளை - எதிர்காலத்தை யுணர்த்துவதோர் குறிப்புச்சொல். கோடு - மூதனிலைத் தொழிற்பெயர். கழிந்தன்று - அஃறிணை யொன்றன்பால் வினைமுற்று. அன்று, எ-அசை.

கஎ.—(இ-ள்.) முன்னமே உகிர் இழந்த வெம்புலியென - முன்னரே நகமிழந்த வெவ்விய புலியைப்போல, முரண் அழி முனிமைந்தன் தன்னை - வலியழிந்த பரசுராமனை, அவனிடத்து நீ கற்ற வெம்சரத்தின் - அவனிடத்திலேயே நீ கற்றுக்கொண்ட வெவ்விய அஸ்திரபலத்தினுலே, வென்றமை அல்லால் - ஜயித்தமையல்லது, என்ன சேவகம் கொண்டு - வேறு என்ன பராக்கிரமத்தைக்கொண்டு, நீ யாரையும் இகழ்ந்து உரைப்பது என்று - நீ எவர்களையும் இழிவுபடுத்திச் சொல்லுவதென்று, கன்னனும்—, திறல் காங்கெயன் தன்னொடு - வல்லமைபொருந்திய பீஷ்மாசாரியரோடு, கண் சிவந்து உரைசெய்தான் - கோபித்துச் சொன்னன், (எ-று.)

முனிமைந்தன் - கௌதமமுனிவரது புத்ரராகிய பரசுராமன். ஸ்ரீராமன் சானகியை மணந்து மிதிலையினின்று திரும்பிச்செல்கின்ற வழியில் அவர் ஸ்ரீராமனுடன் பொரவெதிர்த்து அவரால் தந்தவமும் ஆற்றலும் இழந்திருப்பவராதலின் 'முன்னமேயுகிரிழந்த வெம்புலியென முரணழி முனிமைந்தன்' என்றார். புலிக்கு ஏனைய வயிர்களை வருத்துதற்குக் கருவி நகமாதலின் அதனை எண்டு எடுத்துக் கூறினர். பரசுராமன் தம்மாற்றலழிந்திருந்தது புலியுகிரிழந்திருந்ததுபோன்ற தென்பது கருத்து. இவரும் முன்னம் வெம்மைகொண்டு வேந்தர் குலத்தை வேரறுத்து வந்தவரென்பது தோன்ற வெம்புலியுபமானமாக்கப்பட்டது. உகிரிழந்த வெம்புலி என்றது இகழ்ச்சிக்குறிப்பு.

முனிமைந்தன் றன்னை நீகற்ற வெஞ்சரத்தின் வென்ற தென்ற தற்கு விவரம்:—காசிராசனுக்கு அம்பை, அம்பாலிகை, அம்பிகையெ

னப் பெண்கள் மூவரிருந்தனர். அவர்களுக்காகச் சுயம்வரம் கோடித்தபோது பீஷ்மரும் அங்குச்சென்று தந் தம்பிமாருக்காக அப்பெண்களை வலிமையில் கொண்டுவந்தார். மூத்தவளாகிய அம்பை, சான்சாலுவராசன்மேல் ஆசைப்பட்டிருந்தேனென்று சொன்னதனால் அப்படியே அவளை அவ்வரசனிடம் அனுப்பினர். அவன், பிறன் கொண்டுபோனவளை நான் கல்யாணஞ் செய்யமாட்டே னென்றான். அதனால் அவள் மீண்டு பீஷ்மரிடம் வந்து தன்னையும் கலியாணஞ்செய்துகொள்ளும்படி வேண்ட, அவர் வேறொருவன்மேற் காதல் வைத்தவளைத் தான் ஏற்றுக்கொள்வதில்லையென்று மறுக்கவே, அவள் இவருக்குக் குருவாகிய பரசுராமரிடம் போய்ப் பிரார்த்தித்தனள். அவர் இவளை யேற்றுக்கொள்ளும்படி எத்தனை சொல்லியும் பீஷ்மர் கேளாமையால் இருவர்க்கும் சண்டை யுண்டாயிற்று. அதில் பீஷ்மரே வெற்றிகொண்டாரென்பது. பின்பவள் தவஞ்செய்து பீஷ்மரைக்கொல்லத் தான் பிறக்கவேண்டுமென்று வரம்பெற்றுத் துருபதராசாவின் மகளை சிகண்டி யென்பவளைப் பிறந்தாள். "அத்திரங்க ளீந்தானே யம்பை பொருட்டாக, வித்தகத்தாற் பண்டொருநாள்வென்றுற்போல்—இத்தனையே, கல்லாதபுல்லறிவிற்காங்கேயன் றன்செய்த, வில்லாண்மை சொல்லுதிரோமற்று" என்றான் வெண்பாவினும். கண்சிவத்தல் அதன் காரணமாகிய கோபத்தை யுணர்த்தி நின்றது, "கருமையுஞ் செம்மையும் வெளுளிப் பொருள" வாதலின். மற்று - அசைநிலை. என்ன - என் என்னும் வினுப்பெயரடியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம். யாளையும் - முற்றும்மை. "உரைப்பது என்று" என்பதில் குற்றியலுகரம் சிறப்புவிதி பெறுது பொதுவிதிபெற்று, "உரைப்பதுவென்று" என நின்றது. காங்கெயன் - காங்கேயன் என்னும் ஆரியத்திரிபு, கங்கையின் மகன் என்பது பொருள். இது ஸம்ஸ்கிருத தத்திதாந்தம்.

[தத்திதமென அப்பாஷையில் பெயர்மேல் வரும் சில விகுதிகள் கூறப்பட்டிருக்கின்றன. அவைகளால் நூதனமாய் ஒருபொருளுக்குப் பெயர் உண்டாக்குவது எளிது. அவ்விகுதிகள் பல பொருள்களையும் சிறப்பாயும் பொதுவாயும் குறிக்கும். (உ-ம்.) இந்திரனைத் தேவதையாக்கொண்டது (ஐந்திரம்), நீலகண்டரைச் செய்யப்பட்ட நூல் (நீலகண்டீயம்), கிருத்திகையின் மகன் (கார்த்திகேயன்), பாண்டுவின்மக்கள் (பாண்டவர்), ரகுவமிசத்திற்பிறந்தவன் (ராகவன்), குருவமிசத்திற்பிறந்தவர் (கௌரவர்), நைஷதனைக் குறித்துச் செய்த நூல் (நைஷதம்), வேத சம்பந்தமானது (வைதிகம்), லோகசம்பந்தமானது (லௌகிகம்), இப்படி வேண்டிய பொருள்களுக்கு ஏற்ற விகுதிகளைக்கொண்டு சிறிய சொல்லுண்டாக்கலாம். ஆகையாலேதான் இவ்விகுதிகளுக்குத் தத்திதம் என்கிற பெயரிடப்பட்டது. அதன்பொருள் உலகவழக்கத்திற்கு அநுகூலமானது என்பதாம். தத்திதம்= தத் + ஹிதம். இவ்வாறே தமிழிலும் சில தத்தித பிரயோகங் காணப்படுகின்றன. (உ-ம்.) நாட்டிலுள்ளவன் (நாட்டான்), பட்டணத்திலுள்ளவன் (பட்டணத்தான்), ஆதிரையிற்பிறந்தவன் (ஆதிரையான்),

ஒணத்திற்பிறந்தவன் (ஒணத்தான்), பொன்னையுடையவன் (பொன்னன்), கூனையுடையவன் (கூனன்), கச்சினையுடுத்தவன் (கச்சினன்), கழலினைக்கட்டினவன் (கழலினன்) முதலியவை.]

கஅ.—(இ-ள்.) அடா - ஏடா (கர்ணு), தூமம் வெம்கனல் தோன்றிய தோகை - புகையோடுகூடிய வெவ்விய அக்கினியில் பிறந்த திரௌபதி, அம்தொடையல் சூட்டியநாளில் - அழகிய மணமாலை சூட்டிய காலத்தில், நாமம் வெஞ்சிலை - (பகைவருக்கு) அச்சத்தை விளைக்கின்ற வெவ்விய வில்லில், நாண் எடுத்தனை - நாணேற்றினவனாகி, நரனெடும் போர்செய்தாய் - அருச்சுனனோடும் சண்டைசெய்தாய்; தாமம் வெள்குடை நிருபனை - ஒளி பொருந்திய வெண் (கொற்றக்) குடையையுடைய துரியோதனனை, அந்தரசரிதர் கொண்டு எகாமல் - அந்தரவாசிகளாகிய (கந்தர்வர்) கவர்ந்து கொண்டு போகாமல், வீமன் வெஞ்சிறை மீட்டநாளினும் - வீமன் (அவனை) வெவ்விய சிறையினின்றும் மீட்டகாலத்தும், திறல்வினை புரிமூனை வென்றாய் - வெற்றிபொருந்திய போர்த்தொழிலைச் செய்தற்குரிய யுத்தகளத்தில் (அவர்களை) வென்று (அத்துரியோதனனை) மீட்டாய், (எ-று.)

வெம்மைபோலப் புகையும் நெருப்புக்கு உடனிகழ் பொருளாதலின் தூமவெங்கனல் என்றார். தோகை உவமவாகுபெயர். எடுத்தனை - முற்றெச்சம். அடா - ஏடா வென்பதன் மரூஉ. உம்மைகள் இரண்டும் இறந்தது தழீஇயன. நரனெடும் என்னும் உம்மையை உயர்வு சிறப்பென் றுரைத்தலும் ஒன்று.

இப்பாட்டில் எதிர்மறையிலக்கணையால், அக்காலங்களில் யாதொன்றும் செய்யமுடியாது தோற்றோடிப்போனாயே; இப்பொழுது வீண்வீரவாதம் பேசுவதிற் பயனென்னவென்னும் பொருள் தொனிக்கின்றது. [இவ்வாறு தோன்றும் பொருள்களைக் காப்பியத்திற்கு உயராகிய வ்யங்கியப் பொருளென்பர் வடநூலார். மற்றவிடங்களிலும் இங்ஙனமே கண்டுகொள்க.] துரௌபதியின் சுயம்வரத்தில் அர்ச்சுனன் யந்திரத்தை அறுத்ததனால் அவனுக்கே அவளை விவாகம் செய்யலாக, துரியோதனாதியர் பொறுமையாய் அவனை எதிர்த்துத் துரௌபதியைக் கொண்டுபோக முயன்றார்கள்; அப்போது அர்ச்சுனனே வெற்றிகொள்ளக் கர்ணன் முதலாயினோர் தோல்வியடைந்தனர். [இது ஆதிபருவகதை.]

பாண்டவர் வனவாசஞ் செய்கையில் ஒருகால் துரியோதனன் தன்பெருமையைக் காட்டிப் பாண்டவரை அழுங்கச்செய்ய வேண்டுமென்று ஆடம்பரத்துடனே சென்றபோது, இந்திரனேவலால் சித்திரசேனன்முதலியோர் அவனைக்கட்டி வானத்திற் கொண்டுபோக, கர்ணன் முதலாயினோர் தோற்று ஓட, அப்போது துரியோதனன் பரிதாபத்தை அவன் ஏவலாட்களாலறிந்த யுதிட்டிரர் கட்டளையினால் அர்ச்சுனன் தேரேறிச்சென்று கந்தருவனைவென்று துரியோதனனை விடுவித்தான். அவனுக்கு வீமனும் துணைபுரிந்

றவனுதலின், வீமன் வெஞ்சிறை மீட்டதென்றார். [இது ஆரணிய பருவகதை.]

கக.—(இ-ள்.) ஒருதன்மாநெடுந் தேரினை .. ஒப்பற்ற தன்னுடைய குதிரைகள் பூட்டிய பெரிய ரதத்தை, அறிவுரு உத்தரன் விளாந்து ஊர - நடத்த அறியாத உத்தரகுமாரன் விரைவாகச் செலுத்த, நெருநல் ஆன்நிரை கவர்தரு முகத்திலும் - நேற்று பசுமந்தை களை (அருச்சுனன்) மீட்டுக்கொண்டுபோன முனைமுகத்திலும், நெடும்போது நின்றனை - (நீயல்லவோ) நெடுநேரம் நின்றாய்; மருமருவு உமிழ்துழாயவன் - மணம் பொருந்திய தேனைச்சிந்துகின்ற துளவமாலையைத்தரித்த கண்ணன், தேர்விட - தேரைச்செலுத்த, மலையும் கால் - யுத்தம்செய்யுங் காலத்தில், வெருநர்மேல் - (போர்க்கு) அஞ்சுகின்றவர்கள்மேல், வயம்வாளிவிடா விசயனை - வெற்றிபொருந்திய அம்புகளைப் பிரயோகிக்காத அருச்சுனனை, நீ அலால் - உன்னை யல்லாமல், வெல்ல வல்லவர் உண்டோ - ஜெயிக்கவல்லவர் (வேறு ஒருவர்) உண்டோ (என்று), (எ-று.)

அறிவுரு உத்தரன் என்பதற்கு உணர்வுதோன்றாத வுத்தரன் எனப் பொருளுரைத்தலுமாம். இப்பாட்டிலும் முற்பாட்டிற் கூறியபடி எதிர்மறையிலக்கணையால், ஒன்றுமறியாத உத்தரனைப் பேருக்குச் சாரதியாகக்கொண்டு தானே சாரதியும் ரதியுமாகித் தனியாக வந்தவனை வெல்லமுடியாது மயங்கி நின்றனையே! கள்ள மாயப் பிரானுகிய கண்ணன் தேரூர, அவனைத் துணையாக்கொண்டு மலையு காளிலோ நீ அவனை வெல்லப்போகிறாய் என்னும் பொருள் தொனிப்பது காண்க. வயவாளிவெருநர்மேல் விடா விசயன் என்றது அவனது தர்மயுத்தத்தைக் குறிப்பிக்கின்றது. விசயன் [வி+சயன்]-தனக்குமேல் சயசாலி யில்லாதவன்; அன்றி மிக்கசயத்தையுடையவன் என்னினுமாம். ஆன் என்பதில் னகரம் சாரியை. கவர்தரு - ஒருசொல். உம்மை இறந்தது தழீஇயது. ஓ-எதிர்மறை. என்று எனஒரு சொல்வருவித்துமேற்பாட்டிலுள்ள புகல என்பதனோடு முடிக்க.

விராடநகரத்தில் பாண்டவர் ஒளித்திருக்கலாம் என்று துரியோதனாதியர் அந்நகரத்தின்மேற் படையெடுத்துச் சென்று விராடனுடைய பசுக்களைக் கவர்ந்து செல்ல, பேடியாயிருந்த அர்ச்சுனன் அத்தனைபேரையும் வென்று மறுபடி அந்தப்பசுக்களை மீட்டுக் கொண்டான். அப்பொழுது கர்ணன் அவனை எதிர்க்கமாட்டாமற் போயினன். [இது விராடபருவகதை.]

உ0.—(இ-ள்.) மாகங்கைமகன் - பெருமைதங்கிய கங்காபுத்திரராகிய பீஷ்மர், இவை இவைபுகலவும் - இவைகளைச் சொல்லவும், (கேட்ட) சர்ப்பகேதனன் - அரவக் கொடியையுடைய துரியோதனன், கன்னனைகசிந்து உள்கொண்டு - கன்னன் பொருட்டு இரங்கிச் சிந்தித்து, அங்கைகொட்டி நக்கு - கைகொட்டிச்சிரித்து, இருந்த அந்தணனையும் அவமதித்து-அங்குவந்திருந்த உலக முனிவரையும் அவமதித்து, பார்எமதே - பூமி எம்முடையதே, தங்கள் கானகம்

தம்து - தம்முடையகாடு தம்முடையது, என புகன்றனன் - என்று சொல்லினன்; (அதைக்கேட்ட) அந்த பங்கயாசன முனிவனும் - பிரமனையொத்த அந்தமுனிவரும், மீண்டுபோய் - திரும்பிப்போய், அவை-அவன்சொன்ன வார்த்தைகளை, பாண்டவர்க்குச் சொன்னன்- பாண்டவர்களுக்குச் சொல்லினர், (எ-று.)

அகம் + கை = அங்கை, "அகமூனர்ச்செவிகை வரினிடையன கெடும்" என்பது விதி. எகாரம் தேற்றம்.

உக.—(இ-ள்.) இவன் - இந்த வலுக முனிவரானவர், ஆங்கு - உபப்பிலாவியத்தில், அவர்க்கு - அப்பாண்டவர்களுக்கு, அவண் நிகழ்ந்தன எலாம் - அத்தினபுரியில் நடந்த சங்கதிகளனைத்தையும், அரும் தகையுடன் சொல்லி - அரியதருதியுடனே சொல்லி, ஈங்கு வந்து - துவாரகைக்குவந்து, எழில் யாதவர்க்கு இயம்பலும் - அழகிய கிருஷ்ணமூர்த்திக்குச் சொல்லவும், யாதவன் மகிழ்வுஉற்று - (அதைக்கேட்ட) ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி மகிழ்வடைந்து, வாங்கு வெம் சிலை விசயனை - வளைத்த வெவ்விய வில்லையுடைய அருச்சுனனை, விரைவினில் வரவிடுக என - சீக்கிரம் (இவ்விடத்தில்) அனுப்புவீராகவென்று சொல்லி, மீள - மறுபடியும், மாதவம் ஒங்கு உலுகனை போக்கினன் - மகத்தாகிய தவமானது (மிகுதியாக) வளரப்பெற்ற வலுகமுனிவரை அனுப்பினர், அவனும் வந்து உரைசெய்தான் - அவ்வலுக முனிவரும் வந்து (ஸ்ரீகிருஷ்ணமூர்த்திவரச்சொன்ன சங்கதியை அருச்சுனனுக்கு) சொல்லினர், (எ-று.)

ஆங்கு, ஈங்கு என்பன அங்கு, இங்கு என்பவற்றின் விகாரம். என - செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சத்திரிபு.

வாசுதேவனைப் படைத்துணையழைத்த சருக்கம்.

[அதாவது-வாசுதேவனைத் தமக்குப்படைத்துணையாம்படி துரியோதனனும் அர்ச்சுனனும் சென்று அழைத்தசெய்தியைக் கூறும் சருக்கம். வாசுதேவன் - வசுதேவன்மகன், ஸ்ரீகிருஷ்ணன்; தத்திதாந்தநாமபதம்.]

க.—(இ-ள்.) அன்று - பூருவத்தில், அசோதை கண்களிப்ப- அசோதைப் பிராட்டியார் கண்களிப்பெய்தவும், நீடு தாதலம் விளங்க - நீண்ட நிலவுலகமானது விளங்கவும், அரா அணை துறந்து போந்து - சேஷசயனத்தை நீங்கிவந்து [ஸ்ரீகிருஷ்ணனைத் திருவவதரித்து], வெண்ணெய் தாழி சூழ்தரின்று ஆடி - வெண்ணெய்த் தாழியைச் சுழ்ந்து நின்று திருவிளையாடல் புரிந்து, குராமணம் கமழும் கூந்தல் கோவியர் - குராமலரின் வாசனை வீசுகின்ற கூந்தலையுடைய கோபிகாஸ்திரீகளுடன், குரவைகொண்ட - குரவைக்கூத்தாடியருளிய, புராதனன் தனையே எத்தும் - புராண புருஷனையே (சதாகாலமும் தொழுது) எத்துகின்ற, புனிதர் தாள் போற்றி செய்வாம் - பரிசுத்தாத்மாக்களுடைய திருவடிகளைத் துதிசெய்வோம்;

போந்து - புகுந்து என்பதன் மரூஉ. குரவை - கைகோத்தாடல். வெண்ணெய்த்தாழி, குரா, கோவியர் இவை மூல்லைநிலப் பொருள். எகாரம் - தேற்றம்; அன்றி, பிரிநிலையுமாம். பாம்பணைமேற் பள்ளி கொண்டிருக்கும் பரஞ்சோதியே பூமிதேவியினது வேண்டுகோளால் பூபாரந் தீர்த்தற்பொருட்டுக் கண்ணனுகத் திருவவதரித்ததென்ப துதோன்ற அராவணை துறந்துபோந்தன் றசோதை கண்களிப்ப நீடு தாதலம் விளங்குவென்றும், யுகாந்தரங்களில் அவரவர்க்குத் தாம னித்த வாக்கைப்பரிபாவித்தலே இவ்வவதாரத்தின் முக்கியப்பிரயோ சன மென்பதும் அவர் பக்தபராதீனரென்பதும் தோன்ற குராம ணம் கமழுங்கூந்தற்கோவியர் குரவைகொண்ட வென்றும் கூறினர். ஆகவே, பூபாரந்தீர்த்து ஆச்ருதஸம்ரக்ஷணஞ்செய்யவந்தவராதலின் தம்மையே துணையாகப் பற்றியிருகுமு பாண்டவர்களைப் பரிபாலித் தற்பொருட்டுத் துரியோதனனை வஞ்சித்துக் கிரீடிவருமளவும் கண் விழியாதிருந்து பின் அந்தப்பார்த்தனுக்கே சாரதியாக வுடன்பட் டனரென்னும் இச்சரித்ரத்தின் கதை இக்காப்பிற் குறிப்பித்ததா யிற்று. புராதனன்றனையே யேத்தும் புனிதரென்றதனால், பாண்ட வர் அத்தன்மையராதலின் அவர்கட்கு ஒருபோதும் குறைவில்லை யென்பதும் குறிப்பிக்கப்பட்டதெனவறிக.

உ.—(இ-ள்.) பூரோகிதன் தூதுவந்து போனபின்—, புயங்க கேது - சர்ப்பக்கொடியையுடைய துரியோதனன், கங்காசுதனெ ஞ் விரோசனன் சுதனை வெகுளிமாற்றி - பீஷ்மாசாரியரோடு சூரிய குமாரனுகிய கர்ணனையும் கோபத்தினின்றுந் தணிவித்து, துரோ ணனை முதலாம் - துரோணாசாரியர் முதலாகிய, மிக்க - கல்வி கேள் விகளால் மிகுந்த, தொல்மதி - இயற்கையறிவோடு கூடிய, அமைச் சரோடும்-மந்திரிகளுடனே, சரோருக சதனம் என்ன-தாமரையிலை போல, தனித்து இருந்து எண்ணினன் - தனித்திருந்து ஆலோசித் தான், (எ-று.)

தூது - ஆகுபெயர். புயங்ககேது - அன்மொழித்தொகை. து ரோணனை என்பதில் ஐகாரம் சாரியை. உம்மை இரண்டும் அசை. எ - ஈற்றசை. வெகுளி, வெகுள் - பகுதி. சரோருகசதனம் - ஸ ரோருஹாஸநம் என்னும் வடமொழிச்சிதைவு; ஸரோருஹம் - தா மரை, குளத்தில் முளைத்ததென்பது அவயவப்பொருள்; குளத்தில் முளைத்தவை அல்லிமுதலாக மற்றும் பலவுளவாயினும் காரணஇடுகு றிப்பெயராய் இது தாமரையை உணர்த்தும். ஆஸநம் - இலை. தாம ரையிலையில் நிர்மலமான நீர்த்துளிகள் பல வீழ்ந்தாலும் அவை தன் னிடம் பற்றவொட்டாது அவ்விலை தனித்து நிற்றல்போல, து ரோணாசாரியர் முதலாய தொன்மதியமைச்சர் சூழ்ந்திருப்பினும் அவருடன் மனம் பற்றாது தனித்திருந்தன னென்றற்கு சரோருக சதனமென்ன வென உவமை யெடுத்துக்கூறினர். சரோருகசதனை மன்ன னெப்பாடாயின், திருமகள் [செல்வம்] தன்னிடத்து நிலை பெற்றிருக்கும்படி தனித்திருந்தெண்ணினனெனப் பொருள்கொள்

எலாம். சரோருகசதனை - தாமரைமலரைத் தனக்கு வீடாகவுடைய வன், திருமகள்.

கூ.—(இ-ள்.) (அப்படி ஆலோசித்தபின்பு) தேயம் எங்கு எங்கும் - எவ்வித தேசங்களிலும், செம்கோல் செலுத்தும் - அரசுசெலுத்துகின்ற, அதிகிரி வேந்தராயவர் தம்மை - ஆஜ்ஞாசக்கரத்தையுடைய அந்த அரசர்களை, கூட்ட - (படைத்துணையாகச்) சேர்க்க, அடைவினில் தூதுபோக்கி - வரிசையாகத் தூதனுப்பி, பொருள் தொறும் - சகலவஸ்துக்களிலும், காயமும் உயிரும் ஆகி - உடலும் உயிரும்போலாகி, கலந்துநின்ற - வியாபித்திருக்கின்ற, மாயவன் தன்னை - ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியையும், கூட்ட - (படைத்துணையாகச்) சேர்த்துக்கொள்ள, வளர்மதில் துவரைசேர்ந்தான் - வளர்கின்ற மதில்சூழ்ந்த துவாரகையைச் சேர்ந்தான், (எ-று.)

புயங்கமெது சேர்ந்தானென மூற்பாட்டிலுள்ள எழுவாயைக் கூட்டி முடிக்க. "மாயவன் றன்னைக்கூட்ட" - உம்மை விகாரத்தாற் றொக்கது. செங்கோல் - ஆகுபெயர். செங்கோலில் செம்மை பிறிதினியைபு நீக்கியவிசேடணம்; கொடுங்கோலில் கொடுமை இயைபின்மை மாத்திரை நீக்கியவிசேடணம். பிறிதினியைபுநீக்கலே அந்நியயோகவ்யவச்சேதம் எனவும், இயைபின்மை நீக்கலே அயோகவ்யவச்சேதம் எனவும் கூறுவர் வடநூலார். எங்கெங்கும் என்னும் அடுக்கு பன்மைகுறித்துநின்றது. 'காயமுமுயிருமாகிப் பொருடொறுங் கலந்து நின்ற' என்றது சர்வாந்தர்யாமி யென்றற்கு; "உடன் மிசையுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்" என்றூர் பெரியோரும். துவரை-துவாரகை என்னும் ஆரியத்திரிபு. இத்தன்மையனை ஸ்ரீமகாவிஷ்ணுவே கண்ணனுகத் திருவவதரித்ததாதலின் அவருக்குரிய விசேஷணங்கள் பலவும் கண்ணனுக்குப் பொருந்துமெனவறிக.

கூ.—(இ-ள்.) மாடம் - உபரிகைகளுள்ள [மாளிகைகளமைந்த], நீள்வீதி - நெடிய வீதிகளையுடைய, மூதூர் - பழமையாகிய துவாரகையின் (புறத்து), வயங்கும் மாமதிலின் தோற்றம் - விளங்குகின்ற பெரிய மதிலின் காட்சி (எத்தன்மைத்தெனில்), எடு அவிழ் துளவம் மால் - இதழ் விரிகின்ற துளசிமாலையைத்தரித்த திருமால், அங்கு இருந்தனன் என்றுகேட்டு - அந்த துவாரகையில் எழுந்தருளியிருக்கின்றூர் என்று கேள்விப்பட்டு, சேடன் - ஆதிசேஷன், அனந்த கோடி செம்கதிர் மணியின்பத்தி சூடிகாமகுடத்தோடும் - அநேகங் கோடிகளான செவ்விய கிரணங்களையுடைய மாணிக்க வரிசை பொருந்திய உச்சியாகிய கிரீடத்தோடும், வந்து சூழ்ந்ததோர் தோற்றம்போலும் - வந்து சூழ்ந்துள்ளதாகிய ஒப்பற்றகாட்சியை யொத்திருந்தது, (எ-று.)

மதிலின் வளவு ஆதிசேஷனது உடலின் வளவுக்கும், மதிலுறுப்புக்கள் அவனதுமணியின் பத்திச்சூடிகாமகுடத்திற்கும் உவமை. மூதுமை + ஊர் = மூதூர், "ஈறுபோதல்" என்னுஞ்சூத்திரவிதியால்

வந்தது. சூழ்ந்தது - வினையாலணையும்பெயர். [துவாரகையை மதில் சூழ்ந்துள்ள தோற்றத்தை ஆதிசேஷன் சூழ்ந்ததோற்றமாகக் குறித்தலால் இது தற்குறிப்பேற்றவணி.]

நி.—(இ-ள்.) பல் மலர் அகழி - பலவகைப் பூக்களையுடைய அகழியானது, கார்கடல் வண்ணன் - கரிய கடலினிறத்தையுடைய திருமால், தன்பால் கண்துயில் ஒழிந்துபோந்து - தன்னிடத்து யோகநித்திரை செய்தலை விட்டுச்சென்று, மேல்கடல் துவரா மூதூர் மேவரும் விரகுநோக்கி - மேல்கடலிலுள்ள துவாரகையாகிய பழைய ஊரில் எழுந்தருளியிருக்கும் உபாயத்தைக்கண்டு, போர்கடல் பொறிகள் யாவும் - போராகிய கடலை (கடத்தற்குரிய) யந்திரங்களையெல்லாம், பொறித்த அ புரிசை தன்னை-பதித்த அந்தமதிலை, பால்கடல்-திருப்பாற்கடலானது, வளைத்தது ஒக்கும் - வளைத்துக்கொண்டதைப்போலிருந்தது, (எ-று.)

"போர்க்கடற் பொறிகள்" - போர்க்கு அடல்பொறிகள் எனப் பிரித்து, போர்த்தொழிலுக்குரிய உறுதியான யந்திரங்கள் எனப் பொருள்கூறினுமாம். மேவரும் - ஒருசொல், மேவா-பகுதி; மேவு+அரும் எனப்பிரித்து பொருந்திய அரிதாகிய விரகு எனவுரைத்தலுமாம். [அகழியைப் பாற்கடலாகக் குறித்தலால் இதுவும் தற்குறிப்பேற்றவணியாம்.]

சு.—(இ-ள்.) ஈண்டு - இக்கரத்திற்கு, நீ வரினும் - நீ வந்தாலும், எங்கள் - எமது, எழில்உடை எழிலிவண்ணன் - அழகமைந்த மேகவண்ணன், பாண்டவர் தங்கட்கு அல்லால் - பாண்டவர்களுக்கேயன்றி (உனக்கு), படைத்தூணை ஆகமாட்டான்—, (ஆதலால்) மீண்டுபோக என்று என்று - நீ திரும்பிப்போய் விடுக என்று பல்முறைசொல்லி, அந்த வியன் மதில் குடுமிதோறும் - அந்தப்பெரிய மதிலின் சிகரங்கள் தோறும், காண்தகு - அசைந்து தோன்றுகின்ற, பதாகை ஆடை - கொடிச்சீலைகள், கைகளால் - கைகளிலால், தடுப்பபோன்ற - தடுப்பவைபோலிருந்தன, (எ-று.)

பாண்டவர் தங்கட்கு - இதில் தேற்றேகாரம் தொக்குநின்றது. வரினும் - உம்மை உயர்வுசிறப்பு; மற்றவரசர்க்குப் போலத் தூது போக்காது நீயே நேராகவரினு மென்னும் பொருள்படநின்றது. போக-ஈறுதொகுத்தல். அடுக்கு பன்மைகுறித்தது. [கொடிச்சீலைகள் அசைவதை கைகளே யசைத்துத் தடுப்பதாக உத்பிரேக்ஷித்தமையின் தற்குறிப்பேற்றவணி ஆம்.]

எ.—(இ-ள்.) சித்து அசித்து உணர்விலாதான் - சித்து அசித்துக்களைப் பகுத்தறியும் அறிவு (தன்னிடத்து) இல்லாத துரியோதனன், அருள்குடி இருக்கும் கண்ணன் - கிருபையானது குடியிருக்கப்பெற்ற திருக்கண்களையுடைய திருமால், அவதரித்தனன் என்று எண்ணி - (கண்ணனுகத்) திருவவதாரஞ் செய்தருளினனென்று தெரிந்து, தன் அடிசோதிவைகும் - பரவாசுதேவன் எழுந்தருளியி

ருக்கின்ற, பரமம் மா ஞானம் போகம்பதி - மிகவும் மேன்மைபெற்ற ஞானசுகத்தைத்தருகின்ற ஸ்ரீவைகுண்டமாகிய திவ்யநகரம், தரணியின் மீதுவந்து - பூமியில்வந்து, குடி இருந்தது அன்ன - குடியிருந்தாற்போன்ற, திருநகர் - துவாரகாபுரியினது, வீதி புக்கான் - வீதியில் பிரவேசித்தான், (எ-று.)

சித்து - ஆத்துமா; அசித்து - தேகம்; சித்தாகிய ஆத்துமாவின் தன்மையுணராது அசித்தாகிய உடலுக்கே பாடுபட்டு அலைபவன் என்பதுதோன்ற சித்தசித்துணர்விலாதான் என்றார்.

அ.—(இ-ள்.) வந்தமை அறிந்து - (துரியோதனன்) வந்ததையுணர்ந்து, கொற்றம் வாயிலோர்தம்மை நோக்கி - வெற்றிபொருந்திய வாயிற்காவலரைப்பார்த்து, அந்தன் மாமதலைவந்தால் - குருடனான திருதராட்டிரனது மூத்தகுமாரனுகிய துரியோதனன் வந்தால், அறிவியாது அழைமின் என்று - (எமக்கு) அறிவியாமலே வரவிடுங்களென்று, பந்தனை இலாதான் - இயல்பாகவே பாசங்களினீங்கி நிற்பவராகிய கண்ணன், சந்திரன் ஒடுங்கி நிற்ப - சந்திரகலையானது குறைந்துநிற்க, தபனனே சரிக்குமாறு - சூரியகலையே (மிகுதியாக) சஞ்சரிக்கும்வகை, யோகம் துயில்வர பள்ளிகொண்டான் - யோக நித்திரைவரும்படி சயனித்துக்கொண்டார், (எ-று.)

"மின்னு மணிநாக வெல்கொடிமேற் ரூனுயர்த்த, பொன்னங் கழற்காற் புரவலனே—முன்னே, வரவுணர்த்தா தென்பால் விரவிடுமி னென்ரூன், கரவுசெய்யுங் கையான் கலந்து" என்ரூர் வெண்பாவினும். யோகத்துயில் என்றது அறிதுயிலை. வந்தமை-இறந்தகாலத் தொழிற்பெயர். அறிவியாது - எதிர்மறை வினையெச்சம். தனக்கோர் பற்றுமில்லாதவனுயினும் தன்னடியார்களை யாதரித்தற் பொருட்டுப் பற்றுள்ளவனுக நடித்தனனென்பார் பந்தனையிலாதானென்ரூர்.

க.—(இ-ள்.) வெம் சர்ப்பம் பதாகைவேந்தன் - வெவ்விய சர்ப்பக்கொடியையுடைய துரியோதனன், பொற்பு உடைபுனிதன் கோயில் புறத்தினில் - அழகையுடைய பரிசுத்தனான கண்ணனது திருமாளிகைக்கு வெளிப்புறத்தில், அனிகம் நிற்ப - தன்சேனைகள் நிற்க, தனி - தான் தனியனுய், தடையறசென்று எய்தி - தடையில்லாமற்போய்ச் சேர்ந்து, உற்பலம் வண்ணன் - கருங்குவளை மலரினது நிறம்போன்ற நிறத்தையுடைய கண்ணன், பள்ளி உணர்தரு காறும் - விழித்தெழுந்திருக்குமளவும், திருமுடிபக்கம் - அவரது சிரசின் பக்கத்தில், இட்ட - அமைக்கப்பட்ட, சிற்பம் வள் தவிசின் - சிற்பவேலையமைந்த வளப்பமுள்ள ஆசனத்தில், எறிச்சேர்ந்தான் - ஏறியிருந்தான், (எ-று.)

அனீகம் - அனிகமெனக்குறுகியது. பள்ளி - படுக்கை, இங்கு நித்திரைக்கு ஆகுபெயர்; பள்ளியுணர்தல் - நித்திரைதெளிதல். முற்பாட்டில் "அந்தன்மாமதலை வந்தா லறிவியாதழைமின்" என்று வாயிலோர் தம்மைநோக்கி நியமித்ததனுல், தடைபோகின்றியிருக்க

"தடையறச் சென்றெய்தி" என்றார். உணர்தரல் - ஒருசொல்; உணர்தா - பகுதி. உற்பலம், சிற்பம் என்பனமுறையே உத்பலம் சில்பம் என்னும் வடமொழிகளின் திதைவு; "கடிசொல்லில்லே காலத்துப்படினே" என்னும் தொல்காப்பியச்சூத்திரத்தால் கொள்ளத் தக்கவை. "எந்திர வூர்தி யியற்றுமி னென்றூன்" என யகாரம் எகாரமென்னுங் குற்றெழுத்தாயும், "தெய்வமால்வரைத்திருமூனி," "தெய்வஞ்சுட்டியபெயர்நிலக்கிளவி" என ஜகாரம் எகாரமென்னுங் குற்றெழுத்தாயும், "கொங்கணக்கூத்தருங் கொடுங்கருநாடரும்" என்பதில் கோங்கணம் என்னு நெட்டெழுத்துக் குற்றெழுத்தாயும், "அமிர்தினுமாற்றவினிதே," "சோளவளநாடு சோறுடைத்து" என்பாலனவற்றை "அமிழ்தினுமாற்றவினிதே," "கோழவள நாடுசோறுடைத்து" என ணகார னகார மிரண்டும் தமிழிற்சிறந்த ழகாரமாயும், "அற்புத ஞாயணனரிவாமன, னிற்பது மேவியிருப் பதென்னெஞ்சக, நற்புகழ்வேதியர் நான்மறை நின்றதிர், கற்பகச் சோலைத் திருக்கடித்தானமே" எனத் தகாரமும் லகாரமும் றகாரமாயும், "ஈசற் கியாம்வைத்தவன்பு," "கடிநிலே யின்றே யாசிரியற்க," "அதங்கோட்டாசாற் கரிறபத்தெரிந்து," "கிவன்றமர்," "திருநாராயணன்ரூள் காலம்பெறச்சிந்தித்துய்மினே." என அகரவீறு னகரமாயும், திரிந்து பிராசீனராகிய சான்றோர் செய்யுட்கண் வருதலுங்காண்க.

கo.—(இ-ள்.) வான் துயில் புரிந்த அண்ணல் - பெருமை பொருந்திய அறிதுயிலமர்ந்தருளிய ஸ்ரீகிருஷ்ணன், விசயன் வந்திலன் என்று - அருச்சுனன் (இன்னும்) வரவில்லையே என்று, சிந்தனைசெய்யும் வேளை - சிந்தித்திருக்கும் சமயத்தில், சிந்தையின் கடியதேரோன் - மனோவேகத்தினும் கடிய (வேகமுள்ள) தேரையுடைய அருச்சுனன் (வந்து), பந்தனை அறுக்கும் பாதபங்கயம் பணிந்து நிற்ப - (ஆத்மாக்களுடையபாச) பந்தங்களை யறுத்தருள்கின்ற (ஸ்ரீகிருஷ்ணனது) திருவடித்தாமரைகளைச் சேவித்து (அத்திருவடிப் பக்கத்தில்) நிற்க, முந்துறவிழித்து நோக்கி - முன்பாக (அவனை) விழித்துப்பார்த்து, முகமலர்ந்து அருள்செய்தான் - முகமலர்ந்தருளினார் [சந்தோஷித்தார்], (எ-று.)

"பொய்யுறக்கங்கொண்ட பிரான் போர்விசயன்றன்னுடைய, செய்ய திருவடிகள் சேர்தலுமே—மெய்யடிமை, தெள்ளியுணர்ந்தார் தமது சிந்தையுள்ளே வீற்றிருப்பான், பள்ளியுணர்ந்தானவனைப்பார்த்து" என்றார் வெண்பாவினுள்ளும். உலகினர் தம்மை மறந்துறங்கும் உறக்கம்போலாத அறிதுயிலாதலால் வான்றுயில் என்றும், பக்தபராதீனனுதலால் அண்ணலென்றும் கூறினர். விசயன் என்பதில், வி - மிகுதிப்பொருட்டு. கடிய - குறிப்புப் பெயரெச்சம். "பெயர் வினையிடத்து" என்னுஞ் சூத்திரவிதியால், தேரான் என்பதில் ஆ ஓ வாயிற்று. சிந்தையின், இன் - உறழ்பொருவு. பாதபங்கயம் - வடநூன்முடிபு; "எட்டேயவ்வும்" என்பதனால் பங்கஜம் என்பதில் ஜய ஆயிற்று.

"ஈக.—(இ-ள்.) நின்றவன் - (திருவடிப்பக்கத்தில்) நின்ற அருச்சுனன், இருந்தவேந்தன் வரவினை நிகழ்த்த - (திருமுடிப்பக்கத்தில் ஆசனத்தில் ஏறி) இருந்த துரியோதனனது வருகையைச்சொல்ல, (அதைக்கேட்டு) பொன்திகழ் நேமி படையோன் - பொன்போல் விளங்குகின்ற சக்கராயுதத்தையுடைய கண்ணன், அந்த பொய் துயில்பாயல் நீங்கி - பொய்யுறக்கங்கொண்டிருந்த அந்தப்பக்கையினின்றும் நீங்கி, மன்றல் அம்தொடையல்மார்பன் வரவு - வாசனை பொருந்திய அழகிய நந்தியாவர்த்தமாலையைத் தரித்த துரியோதனனது வருகையை, எமக்கு உணர்செயாதது என் என்று - எமக்குச் சொல்லாதது என்ன காரணமென்றுசொல்லி, உரம் நெருங்கபுல்லி - (அவனைத் தம்) மார்போடு இறுகத்தழுவி, இன்சொலால் உவகை செய்தான் - இனிய சொற்களால் (அவனுக்குச்) சந்தோஷத்தையுண்டாக்கினர், (எ-று.)

மன்றலம் என்பதில் அம் - அல்வழிச்சாரியை, அன்றி அழகுமாம். துரியோதனனுக்கு அச்சத்தைவினைத்து, போரில் படையெடாதொழிதி என்னலாம்படி விளங்குவதனால், "நேமிப்பொன் நிகழ்படையோன்" என்றார். அருச்சுனன் வருமளவும் தூக்கங் கொண்டவன்போலப் பாவித்திருந்தன னென்பதற்குப் பொய்த்துயில் என்றார். துரியோதனனுக்கு நந்தியாவர்த்தமாலை யென்பதை மேல் கிருஷ்ணன்றூதுச் சருக்கம் உஉக - ம் பாட்டில் "வலம்புரித்தார்த்துரியோதனன்" எனக் கூறுவதனாலறிக. அந்த - அகரச்சுட்டின் மரூஉ.

கஉ.—(இ-ள்.) வாசம் மரு விரி துளவம் மாலை - வாசனைபொருந்தி மலர்ந்த துளசிமாலையைத்தரித்த, மரகதவண்ணன் - மரகதமணிபோன்ற நிறத்தையுடைய ஸ்ரீகிருஷ்ணன், (அவ்விருவரையும் நோக்கி), இருவிரும் வந்தவாறு என் - (நீங்கள்) இரண்டுபேரும் வந்த காரியம் என்னை, இயம்புதிர் என்றுகேட்ப - சொல்லுங்களென்றுகேட்க, அவ்விருவரும்—, பொருவு இலோய் - ஒப்பில்லாதவரே, நீ - நீர், செருவில் வெம்போர்செய - யுத்தகளத்தில் வெவ்வியபோர் செய்தற்கு, எமக்கு துணை ஆகவேண்டும் - எங்களுக்குச் சகாயமாவரவேண்டும், என்றுகொண்டு புகன்ற காலை - என்று பிரார்த்தித்த சமயத்தில், (எ-று.)

"செருவீரர் யானைத் திருநெடுந்தோண் மன்ன, நிருவீருமெப் பொழுது வந்தீர்—இருவீரு, மென்போந்த வாறென்றுரைத்தானெழு சுடரின், மின்போந்த வாழியான் மீட்டு" என வெண்பாவினுட் கூறுதலுங்காண்க. மரகதம் - பச்சைமணி; 'பச்சைமாமலைபோன்மேனி யச்சுதன்' என்றார் பெரியோரும். இருவரும் பொருவிலோய் எனவிளித்தது தம்மின் வலியறுதல் நோக்கி. "வரிப்புனைபந்து" என்பதில் வரி - என்னும் முதனிலை வினையெச்சப் பொருள்தந்தது போல், மரு என்பது - மருவி என வினையெச்சப் பொருள்தந்தது; வாசமரு - என்பதற்கு மிக்கமணம் எனினுமமையும். செய்-முதனி

லத் தொழிற்பெயர். வேண்டும் - இருதினையம்பான் மூவிடத்திற்கும் பொதுவாகிய குறிப்புவினைமுற்று. இப்பாட்டும் மேற்பாட்டும் ருளகம்.

கசு.—(இ-ள்.) பாண்டவர் சகாயன் ஆனன் - பாண்டவர்களுக்குச் சகாயராகிய ஸ்ரீகிருஷ்ணன், அமர் உற்று உதவிசெய்வான் - போர்க்களத்தில் பொருந்தி உதவிசெய்யும்படி, உதிட்டிரன் தனக்கு - தருமபுத்திரருக்கு, ஆங்கண் முன்னேசொற்றனம் - அவ்விடத்தில் முன்னதாகவே சொல்லியிருக்கிறோம், இங்கும் - இவ்விடத்திலும், இன்றுதுயில் உணர்பொழுதத்து - இன்று கண் விழிக்குங்காலத்தில், வில்திறல் விசயன் - வில்வித்தையில் வல்லவனுகிய அருச்சுனன், முந்த - முற்பட, விழிக்கு இலக்கு ஆனன் - கண்ணுக்கு எதிர்ப்பட்டான், என்று—, பற்று அற - (துரியோதனனுக்கு அவ்விஷயத்திலிருந்த) ஆசை நீங்கும்படி, துணிந்து சொன்னன் - நிச்சயித்துச் சொன்னர், (எ-று.)

செய்வான் - வானீற்றுவினையெச்சம். சொற்றனம் - தனித்தன்மைப்பன்மை. பொழுதத்து, அத்து - சாரியை. முந்த - செயவெனெச்சம். இலக்கு - லக்ஷ்யம் என்னும் வடசொற்சிதைவு.

கச.—(இ-ள்.) பன்னகதுவசன் - சர்ப்பக்கொடியை யுடைய துரியோதனன், முடைகமழ் முல்லைமாலை - முடைநாற்றம் வீசுகின்ற முல்லைமாலையைத் தரித்த, முடியவன்தன்னை - கிரீடத்தை யுடைய ஸ்ரீகிருஷ்ணனை, போரில் - யுத்தகளத்தில், படைஎடாது ஒழிதி என்று - ஆயுதம் எடாமலொழிவாயாகவென்று, வேண்ட - பிரார்த்திக்க, நெடியமாமுகிலும் - பெரிய நீலமேக வண்ணனும், நோக்கு - (அதற்குச்) சம்மதித்து, (அருச்சுனனைநோக்கி) விசய - அருச்சுன, அபெடையின்றி - கொல்லுகின்ற ஆயுதமில்லாமல், போரில்—, நினக்கு—, இனிசெய்யும் - இனிநான் செய்யத்தக்க, ஆண்மைஎன் - ஆண்தொழில் என்ன, அறைதி என்றான் - சொல்லுவாயென்றார், (எ-று.)

ஒழிதி, அறைதி - முன்னிலையொருமை வினைமுற்று. ஒழிதி, அறைதி, வருதி, வருந்துதி, பெயர்தி, கொள்ளுதி, செல்லுதி, இயம்புதி, அறிதி, சேறி, கோடி, நிற்றி முதலிய விடங்களில் தகர இகரமே முன்னிலை விகுதியென்றும், "ஐயாயிகரவீற்ற" என்னும் சூத்திரத்துக்கூறிய இகரவிகுதி செல்லாதின்றி, உண்டி, தின்றி, உளாத்தி முதலிய காலங்காட்டு மிடைநிலை பெற்றுவருமிடங்களில் மாத்திரம் வருமென்றும் கூறுகின்றனர். பெரும்பாலார் எல்லாவிடங்களிலும் இகரமேவிகுதியென்றும், அது ஊர்ந்துவரும் தகர முதலியமெய்யை அவ்வவ்விடத்திற் சேர்ப்ப இடைநிலையென்றும் எழுத்துப்பேறென்றும் கூறுவர். பன்னகதுவசன்-வடநூல்முடிபு; பன்னகம் - பாம்பு, காலால் நடவாதது என்பது அதன் பொருள். விசய - அண்மைவிளி; சேய்மைவிளியில் விசயா அல்லது விசயனே எனவரும்.

கடு.—(இ-ள்.) செருமலி ஆழி அம் கை - போர்த்தொழில் மிகுந்த சக்கராயுதத்தை ஏந்திய கையினையுடைய, செழும் சுடர் - பஞ்சோதியாகிய தேவரீர், என்தேரில்நின்று - என்தேரின் மீது எழுந்தருளி, பொருபரி தூண்டின் - போர்செய்தற்குரியகுதிரைகளை நடத்துவீராயின், இந்தப் பூதலத்து அரசர் ஒன்றே - இந்தப் பூமியிலுள்ள அரசர்கள் ஒருபொருளோ, வெருவரும் இயக்கர் எனினும் - பார்த்தோர்க்கு அச்சம் உண்டாதற்குக் காரணமாகிய இயக்கராயினும், விண்ணோர் எனினும் - தேவர்களாயினும், விஞ்சையர் எனினும்-வித்தியாதரராயினும், என்கைவரிசிலை குழையவாங்கி - என்கையிலுள்ள கட்டமைந்த வில்லை வளையும்படி வளைத்து, மணித்தலை தமிப்பன் என்றான்-(அவர்களது) மூடித்தலைகளை அறுப்பேன்என்று, (கண்ணனை நோக்கி அர்ச்சுனன்) கூறினன், (எ-று.)

இதற்கு இவ்வாறு அன்றி, 'வெருவருமியக்கர் விண்ணோர் விஞ்சையரெனினும் என்கை வரிசிலை குழையவாங்கி மணித்தலை தமிப்பன்' அங்ஙனமாக 'இந்தப்பூதலத்தரசரொன்றே' என நிறுத்திப் பொருள் கூறுதலுமொன்று. வெருவு அரும் இயக்கர் என்பதற்கு அச்சமில்லாத இயக்கர் எனினுமமையும். வெருவரும் என்பதை விண்ணோர் விஞ்சையர்களுக்குங் கூட்டுக. வரிசிலை - நீண்ட வில் எனினும் ஆம். செழுஞ்சுடர் - முன்னிலையில் வந்த படர்க்கை; அண்மைவிளியாகவும் கொள்ளலாம்.

கசு.—(இ-ள்.) அடர்சிலைவிசயன் - கொல்லுந்தொழிலையுடைய வில்லேத்தரித்த அருச்சுனன், இவ்வாறு இசைத்தலும் - இந்தப்பிரகாரம் சொல்லிய வளவில், அமலன் - மலரகிதனுகிய கண்ணபிரான், பட அரவு உயர்த்த - படத்தையுடைய சர்ப்பக்கொடியைத்தாங்கிய, வஞ்சம் - வஞ்சனையுள்ள, வென்றி - வெற்றியையுடைய, பார்த்திவன் தன்னைநோக்கி - அரசனுகிய துரியோதனனைப் பார்த்து, வேந்த - அரசனே, நான்—, இவற்கு - இந்த அருச்சுனனுக்கு, நடை உடை புரவி தின் தேர் - ஐங் கதியையுடைய குதிரைகட்டிய வலிய தேரை, ஊர்வது அன்றி - செலுத்துவதல்லாமல், நம்மோடு - உங்களோடு, மிடை படை எவி - நெருங்கிய ஆயுதங்களைப் பிரயோகித்து, அமர்செயேன் என்றான் - போர்செய்யமாட்டேன் என்று சொன்னார், (எ-று.)

வஞ்சப்பார்த்திவன் எனக்கூட்டுக. பாண்டவர்களை மாயச்சூதால் வஞ்சித்து வெற்றிகொண்டவனென்பார் இவ்வாறு கூறினர்.

அரவுயர்த்த=அரவு+உயர்த்த; அர+உயர்த்த எனவும் பிரிக்கலாம். அரவு, அர - இரண்டும் அரா என்பதன் விகாரம், [நன். உயிர். சூ. 22]. நிலா, இரா, புரு, நரு, சுரு, பலா, விளா முதலியவும் இவ்வாறு வரும். இங்கு அரவு என்றது அவ்வுருவம் எழுதப்பெற்ற கொடிக்கு ஆகுபெயர். ஐங்கதியாவன: "விக்கிதம் வற்கிதம் வெல்லுமூபகண்டை, மத்திமஞ்சாரியோடைந்து" என்பனவாம்; இது "ஐங்கதிக்கலினப்பாய்மா" என்னுஞ்சிந்தாமணிச் செய்யுளுள

யிற் கண்டது. அன்றி, ஆஸ்கந்திதம், தோரிதகம், ரேசிதம், வல்கிதம், ப்லுதம் எனவும் பெயர்பெறும். அவற்றுள், நிச்சலமாக அதிவேகமும் அதி மந்தமுமாகாமல் சமமானகதி, ஆஸ்கந்திதம்; அதைக் காட்டிலும் அதிகமாய் சதுரமானகதி, தோரிதகம்; தாளகதியுடன் வட்டமிட்டநடை, ரேசிதம்; வேகத்தினுலே முன்னங்காலைத்தூக்கி வரும்நடை, வல்கிதம்; அவ்வளவு வேகமாகவும் சமமாகவும் போகுகல், ப்லுதம்.

கஎ.—(இ-ள்.) மும்மையும் உணர்ந்தநாதன் - மூக்காலமு முணர்ந்த கண்ணன், எம்மையே ஒழிய - எம்மொருவனையே நீங்கலாக, உள்ள - வேருயிருக்கிற, யாதவகுலத்துளோர்கள் தம்மையும் - யாதவவமிசத்தில் உள்ளவர்களையும், எம் முன்ஆன - எமக்குத்தமயனை, தாலகேதுவையும் - பனைக்கொடியையுடைய பலராமனையும், சேர - ஒருமிக்க, செம்மையோடு - செவ்வையாக, உதவியாககொண்டு - துணையாகக்கொண்டு, நீ செல்க என்று - நீ போகக்கடவாயென்று சொல்லி, முன்னுற - (துரியோதனன்) ஆலோசிக்கும்படி, பின்னும் சொல்லுவான் - மேலும் சொல்லுவாராயினர், (எ-று.)

மும்மையு முணர்ந்தநாத ஞகையால், எம்மையொழிந்தவர்களையும், பலராமனையும் படைத்துணையாகக்கொண்டு நீ செல்வாயாகவென்றது, அவன் அவர்களைத் துணையாகக்கொண்டு செல்லினும் வெற்றிபெறுனென்பதை அறிந்தெனக்கொள்க. முன்னுற - யாதவகுலத்தோரையும் பலராமனையும் படைத்துணையாகக் கொண்டு நீ செல்கவென்றமட்டில்லமையாது கிருதவன்மாவும் அக்குரோணி சேனையோடு உனக்குத் துணையாக வருவான் என்றதற்குக் காரணம் யாதென ஆலோசிக்க.

கஅ.—(இ-ள்.) மருதுபோழ்ந்திட்ட - மருதமரத்தைப் பிளந்து சென்ற, செம்கண்மாயவன் - செந்தாமரைக் கண்களையுடைய கண்ணன், கிருதவன்மா - கிருதவன்மா வென்பவன், இளர்-விளங்குகின்ற, அக்குரோணி படையோடு-ஒரு அக்ஷௌஹிணி சேனையுடன், நின் பால்வருவன் என்று உரைத்து - உன்னிடத்தில் (படைத்துணையாக) வருவன் என்று சொல்லி, வேண்டும் மதுரவாய்மைகளும் கூறி-அச்சமயத்திற்கு அவசியமான இன்சொற்களையுஞ் சொல்லி, விடுப்பவிடை கொடுத்தனுப்ப, (துரியோதனன்) வினயம் ஒன்றும் கருதலான் எகி - (இவ்வார்த்தைகளி லுள்ள) சூதைச் சிறிது முணராதவனுகிச் சென்று, கண்ணன் முன்னுனை - பலராமனை, கண்டான்—.

மாயவன் - மாயையையுடையவன்; மாயையாவது - கூடாததையுங் கூட்டுவிக்குந்திறம், அகடித கடநா ஸாமர்த்தியம்; பிரபஞ்சகாரணமாகிய மாயையுமாம். மாயன் என்பதற்கும் இதுவேபொருள். துரியோதனனிடத்து அன்பு தம்மனத்தின்கண் இன்றி வாயினளவாகவே யிருக்கு மென்பதுதோன்ற "மதுரவாய்மைகள்" என்றுர். மதுரம் - அன்பு. வாய்மை - வாயினின்றும் உண்டாம்தன்மை; இது சொல்லுக்காதலால் ஆகுபெயர். "கருதலான்" என்றதற்கு பகைவனை

கிய துரியோதனன் என்றும், "வினையமொன்றுங் கண்ணன்" என்ற தற்கு - குதி பொருந்திய கண்ணன் என்றும் பொருளுரைத்தலுமாம். அக்குரோணி - அக்ஷௌஹிணி என்பதன் திரிபு. அக்குரோணிக் கணக்கு "கரிமூன்று தேர்பத்துக் காலா யிரமும், பரிதூறு தாகும் பதாதி—வருதொகையில், எண்பத்தொருமடங்கு கண்டாயிகலெய்திக், கொண்டதோ ரக்குரோணிக்கூறு," என்றும், "ஒன்பதினாயிரம் யானையொடி யானையாற், பொன்பதிந்த தேர்தூறு தேரொன்றூற்—கண்பொதிந்த, காண்டகைய மக்குதிரையொன்றினூற் காலாளுரு, முண்டகைய வக்குரோணி யாங்கு" என்றும், வெண்பாவினுட் கூறப்பட்டிருப்பினும், அவை அக்குரோணியின் தொகையை சாஸ்திரத்திற்கூறியபடி வருக்காமையின், அவை கண்ணுக்குத் தோன்றிய உத்தேசத்தின்படி கூறப்பட்டவையாம்; இனி சாஸ்திரத்திற்கூறிய தொகைவருமாறு:—

	யானை	தேர்	குதிரை	காலாள்.
பத்தி ...	க	க	கூ	கு
சேனாமுகம் ...	கூ	கூ	க	கசு
குல்மம் ...	கூ	கூ	உஎ	சகு
கணம் ...	உஎ	உஎ	அக	கசுகு
வாஹினீ ...	அக	அக	உசகூ	சஅசு
ப்ருதனை ...	உசகூ	உசகூ	எஉக	க,உகசு
சமூ ...	எஉக	எஉக	ஊகஅஎ	கூ,சுசசு
அநீகினீ ...	ஊ,கஅஎ	ஊ,கஅஎ	சூ,குசுக	கஅ,கூகுசு
அக்ஷௌஹிணீ	உக,அஎ0	உக,அஎ0	சுகு,சுக0	க,0க,கூகு0

ககக.—(இ-ள்.) அரசன் - துரியோதனன், கண்ணன்—, அங்கு அருளிச்செய்த கட்டுரைப்படியே - அவ்விடத்துச்சொல்லியருளிய உறுதிவார்த்தையின்படியே, சங்கவண்ணனுக்கு - சங்கினது நிறமுள்ள பலராமனுக்கு, இளவல் சொன்ன மாற்றமும்சாற்றி - தம்பியாகிய கண்ணன் சொன்ன சொல்லையும் சொல்லி, எண்ண அரும் தொகைகொள் - நினைத்தற்கரிய தொகையைக் கொண்ட, சேனை யாதவ குமரரோடு - சேனைகளோடும் யாதவகுமாரர்களாகிய நாராயண கோபாலரோடும், அண்ணலே - பெரியோனே, வருக என்று ஓதி - வருவீராகவென்று சொல்லி, அத்தினபுரிபுக்கான் - அத்தினபுரிக்குச் சென்றான், (எ-று.)

சேனை யாதவகுமரர் என்பதற்கு சேனையாகிய யாதவகுமரர் எனக்கூறினும் பொருந்தும். "ஒப்பரியகோபால ரோர்பதினாயிரவர்" என வெண்பாவிற் கூறியபடி அவர்கள் பதினாயிரவர்; இவர்கள் ஸ்ரீகிருஷ்ணனுடைய குமாரர்கள்; நாராயணகோபாலர் என்னப்படுபவர். படைத்துணையாக வரவேண்டுகின்றவனுதலின், அண்ணலே என உயர்த்திக் கூறினான்.

உ0.—(இ-ள்.) கூறிய - அவ்வாறு சொல்லிய, வேகம்காகம்கொடியவன் - வேகமுடையதாகிய சர்ப்ப மெழுதப்பெற்ற கொடியை

யுடைய துரியோதனன், அகன்றபின்னர் - நீங்கினபிறகு, தேறிய விசயனேமெம் - தெளிந்த அருச்சுனனேமெம் (கண்ணன்), செழும்புனல் துவரைநீங்கி - வளமுள்ள நீர்சூழ்ந்த துவாரகாபுரியைவிட்டு, ஆறு இரண்டு நாமத்தோனும் - பன்னிரு நாமங்களையுடைய கண்ணனும், ஐந்து இரண்டு நாமத்தோனும் - பத்து நாமங்களையுடைய அருச்சுனனும், ஊறியகருணை நெஞ்சின் - சுரக்கின்ற கிருபையோடு கூடிய மனத்தையுடைய, உதிட்டிரன் - தருமபுத்திரரது, இருக்கை - இருப்பிடமான உபப்பிலாவியத்தை, புக்கார்—, (எ-று.)

கேசவன், நாராயணன், மாதவன், கோவிந்தன், விஷ்ணு, மதுசூதனன், திரிவிக்கிரமன், வாமனன், சீதரன், இருடீகேசன், பதுமநாபன், தாமோதரன் - இவை கண்ணனுக்குரிய பன்னிரு நாமங்கள். அர்ச்சுனன், பல்குனன், பார்த்தன், கிரீடி, சுவேதவாஹனன், பீபத்ஸு, விஜயன், கிருஷ்ணன், ஸவ்யஸாசீ, தனஞ்சயன் - இவை அர்ச்சுனனுக்குரிய பத்துநாமங்கள்.

சஞ்சயன்றூதுச்சருக்கம்.

[அதாவது - சஞ்சயன் பாண்டவரிடம் தூதுசென்ற கதையையுணர்த்துஞ் சருக்கம்.]

க.—(இ-ள்.) ஒரு தலத்திடை அவதரித்து - ஓரிடத்தில் [மதுராபுரியில்] திருவவதரித்து, அணிபொதுவர் சில் குடில் உறைவது - அழகிய ஆயர்தஞ் சிறுகுடிசையில் வசிப்பதாகிய, ஓர்மரகதப்புயல் - ஒப்பற்ற நீலமேகம் போன்றவனும், தனே - தன்னே, தனது இறுதியால் - தனது மூடிவுகாலத்தின் வலியால், ஒரு மக என எடுத்து - ஒரு குழந்தையென்று நினைத்தெடுத்து, அரிது பற்றிய - அருமையாகப்பிடித்த, அலகை - பூதனையை, செற்றிட - கொல்ல, அணிமூலபயம் தகர்வுறு - (அவளது) ஆபரணங்களையணிந்த முலைகளின் பாலே உண்டு, மருது இடைதவழ் - மருதமரங்களினிடையில் ஊர்ந்து சென்ற, பொருவு இல்வித்தகன் - ஒப்பற்ற வல்லவனுமாகிய கண்ணபிரானது, மலரடிக்கண் வழுத்துவாம் - தாமரைமலர்போன்ற இருவடியைத்துதிப்போம், (எ-று.)

மலரடிக்கண் - எழாவது செயப்படுபொருளில் வந்தது. ஒரு தலத்திடையவதரித்தணி பொதுவர் சிற்குடிலுறைவது என்றதனால் தேவர்களின் துயர்தீர்க்க வந்தவதரித்தவரென்பதும், அலகைசெற்றிடவணிமூலேப்பய தகர்வுறு என்றதனால் துஷ்டநிக்கிரகம் செய்பவரென்பதும், மருதிடைத்தவழ் பொருவில்வித்தகன் என்றதனால் சாபவிமோசனஞ்செய்து சிஷ்டபரிபாலனஞ் செய்பவரென்பதும் விளங்குகின்றன. இக்கதைகளை A. அநுபந்தத்தில் கண்டுகொள்வது.

உ.—(இ-ள்.) நஞ்சம் நாகம் உயர்த்தமீளி - விடம்பொருந்திய சர்ப்பமெழுதிய கொடியை உயர்த்திப்பிடித்த காளையாகிய துரியோ

தனன், தன் நகர்புகுந்துழி - (துவரையை விட்டுச்சென்று) தன்ன கரத்தில் [அஸ்தினபுரியில்] பிரவேசித்தகாலத்தில், கஞ்சன்மாமனே-கம்ஸனுகிய மாமனே, நண்புஅற வென்றவன் செயல்-பரிவில்லாமல் சயித்த கண்ணனது செய்கையை, கண்ணிலாளனே உரைத்தபின்-திருதராட்டிரனுடு சொன்னபிறகு, (அத்திருதராட்டிரன்) வஞ்சம் மைந்தரொடு மீளவும் உயவி - வஞ்சகர்களாகிய பிள்ளைகளோடு மறுபடியும் கலந்துபேசி, மண்கொடாத குறிப்பினன் - பூமியைப் பாண்டவர்களுக்குக்கொடாத எண்ணமுடையவனுகி, சஞ்சயன் தனே வருக என்று - சஞ்சயனே வரவழைத்து, இருதாள்பணிந்து - (அவரது) இரண்டு பாதங்களேயும் வணங்கி, இவை சாற்றுவான் - இவற்றைச் சொல்வானுயினன், (எ-று.)—அவைமேற்கூறுகின்றார்.

மண் கொடுக்கலாகாதென்னும் எண்ணம் அவனுக்கு இயற்கையானதன்றென்பார் "வஞ்சமைந்தரொடுயவிமீளவும் மண்கொடாத குறிப்பினன்" என்றார். மகாவஞ்சகனுகிய கம்ஸனேவென்றவன் துணைநிற்றலால் அப்பாண்டவர்களிடத்து இவர்களது வஞ்சனே பயன்படாதென்பது தோன்ற, கஞ்சமாமனே வென்றவன்செயல் என்றார். கஞ்சன் - கம்ஸன் என்னும் வடமொழிச்சிதைவு; "சில விகாரமா முயர்திணை" என்பதனுல் கஞ்சன் என்பதன் ஈற்று னகரம் கெட்டது.

௬.—(இ - ள்.) குருகுலத்து அரசர்க்கு—, உறும் தொழில் கூறும் - மேல்வருங் காரியங்களே (முன் அறிந்து) சொல்லுகின்ற, நல் குரு ஆதலால்-சிறந்த ஆசாரியர் நீரே ஆதலால், இருகுலத்தினும் உற்பவித்தவர் - இரண்டுவம்சத்திலும் பிறந்தவர்கள், என்றும் நின் சொல் மறுத்திடார் - ஒருபோதும் உமது வார்த்தையைத் தடுக்க மாட்டார்கள்; (ஆதலால்) பெருகு உலை கனல் அன்ன - மிகுந்த உலேநெருப்பையொத்த, பிள்ளைகள் - நம்மைந்தர்கள், பேசுகின்றபி னைக்கு - சொல்லுகின்ற மாறுபாட்டை, அறுத்து - கண்டித்து, ஒரு குலத்தவர்—, உததிசூழ்புவி - கடல் சூழ்ந்தபூமியை, இனி ஆளும் ஆறு - இனி அரசாட்சிசெய்யும்படி, உவ்கொளாய் - திருவுள்ளம்பற் றுவீராக, (எ-று.)

ஒருவரோடொருவர் துவேஷங்காரணமாகச் சிறுகின்றவரா தலின் "உலக்கனலன்ன பிள்ளைகள்" என்றார். உலக்கன லன்ன பினைக்கு எனவும் கொள்ளலாம். உலக்கனலன்ன பிள்ளைகள் என்றும், ஒரு குலத்தவரென்றும் பொதுப்படக் கூறினுனேனும், கன லன்னபிள்ளைகளென்றது பாண்டவர்களேயும், ஒரு குலத்தவரென் றது துரியோதனுதியரையும் சுட்டிக் கூறியது; பாண்டவர்கள் வீண்வழக் காடுகின்றனரென்றும், அவர்களுக்குப் பாரளிக்கலாகா தென்றும் எண்ணங் கொண்டவனுதலின் இவ்வாறு கூறினன்; இக் கருத்து மேற்பாட்டால் விளங்கும். குரு என்னும் பிரசித்தனை ஒரு அரசன் இம்மரபில் உதித்திருந்தமையின் இந்தக் குலத்திறகுக் குருகுலமென்றும், அவன் சந்ததியார்க்கு கௌரவரென்றும் பெயர்கள் வழங்கலாயின. இருகுலமென்றது திருதராஷ்டிரன் குலத்

தையும் பாண்டவின் குலத்தையும். உததி - வடசொல், தோன்றல் என்பதுபொருள். உட்கொளாய் என்பது மேற்பாட்டிலுள்ள எனை என்பதைக் கொண்டுமுடியும்.

சு.—(இ-ள்.) அறத்தின் மைந்தனும் - தருமபுத்திரனும், இளைஞரும் - அவன் தம்பிமார்களும், புவி ஆசை அற்று - ராஜ்யத்தில் ஆசை நீங்கி, அகல் அடவியின்புறத்து இருந்து - விசாலமான காட்டிலிருந்து, தவம்செயும்படி—, போய் - அவர்களிடம்சென்று, புரிவு உளைத்தருள் - அன்பாகச் சொல்வீராக, எனை-என்று, செறுத்திடும்-வெறுக்கின்ற, திருதராட்டிரன்—, தன சிந்தை ஒப்பனசெப்பினன் - தன் எண்ணங்களுக்கு இசைந்தவைகளைச் சொன்னான்; பெரு முனியும் - (அதைக்கேட்ட) பெரிய சஞ்சய முனிவரும், மறுத்திலன் - (அவ்வார்த்தைகளை) தடுக்காதவராய், அவர் - அப்பாண்டவர்கள் (வசிக்கிற), பாடி வீடு உற மன்னினன் - படைவீட்டை அடைந்தார், (எ-று.)

ரு.—(இ - ள்.) மன்றல் துளவோனும் - வாசனைபொருந்திய துளசிமாலையையணிந்த கண்ணனும், நல் அறன் மைந்தனும் - நல்ல தருமபுத்திரரும், திறல் அனுசரும் - பராக்கிரமத்தையுடைய (அவரது) தம்பிமார்களும், சென்ற அ முனிசெலவு அறிந்து - வந்த அந்த சஞ்சய முனிவரது வருகையைத்தெரிந்து, எதிர்சென்று - எதிர் கொண்டுபோய் - தத்தமசென்னி - தங்கள் தங்கள் சிரங்களை, தாள் ஒன்றவைத்து - (அவரது) திருவடியில் பொருந்தவைத்து, வணங்கி-தொழுது, ஆசி உரைக்கும் - ஆசீர் வசனம் கூறுதலாகிய, மெய்பயன் உற்றபின் - மெய்யான பிரயோசனத்தையடைந்தபிறகு, பொன் துன்று தவிசினில் இருத்த - பொன்னுற்செய்த ஆசனத்தில் இருக்கச்செய்ய, இருந்து - அதில் எழுந்தருளியிருந்து, சில உரைசொல்லுவான் - சில வார்த்தைகளைச் சொல்லத்தொடங்கினர், (எ-று.)—அவைமேற்கூற்கின்றார்.

நிறைமொழி மாந்தராதலின் மெய்ப்பயனென்றார். அதுஜர் - வடசொல், பின்பிறந்தோர் என்பது பொருள். அது - உபசர்க்கம். சென்ற, செலவு என்பன இடவழுவமைதி. ஆசி - ஆசிஸ் என்னும் வடமொழிச் சிதைவு. உற்றபின் - வினையெச்சம். இருத்த - பிற வினை; இருக்க - தன்வினை.

சு.—(இ-ள்.) புடவி ஆளுதல் விட்டு-பூமியை அரசாட்சி செய்தலைவிட்டு, நல் நெறிபுரியும் மாதவர்தம்மின் - நற்கதியை விரும்புகின்ற பெருந்தவத்தினர்போல, நீர் அடவியாளவும் வல்லிர் ஆயினீர் - நீங்கள் காட்டை ஆளவும் வல்லமையுடையீராயினீர், ஆதலால்—, நலம் ஆனதே - இப்படியானது உங்களுக்கு நன்மையான காரியமே; மடவியார் - அறியாமையையுடையவர்கள், நிலை அற்ற செல்வம் - நிலையில்லாத செல்வத்தை, மகிழ்ந்து வாழ்தினம் - (நிலையுள்ளதென்று) மகிழ்ந்து வாழ்கின்ற தம் வாழ்நாட்கள், மாறினுல்-கழியுமாயின், விடவி ஆர் அழல் உற்றென மரங்கள் பெருநெருப்

பில் வீழ்ந்தாற்போல, பெருநரகில் - (ரவுரவமுதலான) பெரிய நரகங்களில், ஆழ்வு உற வீழ்வர் - அழுந்தும்படி வீழ்ந்துவருந்துவார்கள், (எ-று.)

மடவியார் நிலையற்ற செல்வமகிழ்ந்து என்பதற்கு, மாதரையும் நிலையற்ற செல்வத்தையும் விரும்பி என்றலும் ஒன்று. விடவிடபி என்னும் ஆரியத்திரிபு. இவ்வாறன்றி, விடு அவி ஆர் அழல் உற்றென என பிரித்து, நெய் சொரிந்த பெருநெருப்பில்வீழ்ந்தாற் போல எனவும் பொருள் கொள்ளலாம். அழல் - அநல் என்னும் வடமொழிச்சிதைவு; அனல், கனல் என்பனவுமது. இதுமுதல் ஏழுபாட்டு ஒருதொடர்.

எ.---(இ-ள்.) உற்றயோனிகள் தம்மில் - இழிவுபொருந்திய அநேகமான யோனி பேதங்களில், உற்பவியாமல் - (போய்ப்) பிறக்காமல், மானுட உற்பவம்பெற்று - மானுடப்பிறப்பை அடைந்து, வாழுதல் அரிது - உயிர்வாழ்வது அருமை; அதுபெறினும் - அம்மானுடப் பிறப்பைப்பெற்றாலும், மாயைசெய் பெருமயக்கு அற்ற-மாயையா லுண்டாக்கப்பட்ட பெரிய (அறியாமையென்னும்) மயக்கம் நீங்கிய, ஞானியராய் விளங்குதல் அரிது - ஞானிகளாய் விளங்குவதருமை; இஃது - (ஞானிகளாக விளங்குதலாகிய) இதுவே, பின் வீடு உறும் அறிவுபற்றும் ஆறு - பிறகு மோட்சத்தை யடைதற்குக் கருவியாகிய பேரறிவு உண்டாகும் வழியுமாம்; இங்கு உமக்கு இவை பண்பிலேடு பலித்த - இவ்விடத்தில் உங்களுக்கு இவையாவும் தக்கபடியே பலித்திருக்கின்றன, (எ-று.)

யோனி - பிறக்குமிடம்; அவை முட்டை, வேர்வை, மண், கருப்பை என்பனவாம். முட்டையிற்றோன்றுவன அண்டஜம் [அண்டம் - முட்டை] என்றும், வேர்வையிற்றோன்றுவன ஸ்வேதஜம் [ஸ்வேதம் - வேர்வை] என்றும், வித்து வேர் இழங்கு முதலியவற்றை மேற்பிளந்து நிலத்தினின்று தோன்றுவன உத்பிஜ்ஜம் என்றும், கருப்பையிற்றோன்றுவன ஜராயுஜம் [ஜராயு - கருப்பை] என்றும் சொல்லப்படும்.

அ.---(இ-ள்.) திகந்த எல்லை உற - திசைகளின் முடிவாகிய எல்லையைப்பொருந்தவும், பெரும்புவிசெல்ல - பெரிய வுலகமுழுதினும் வியாபித்து நடக்கவும், நேமிசெலுத்த - ஆஜ்ஞா சக்கரத்தைச் செலுத்துதற்கு, நும் அகந்தையோடு - உங்கள் அகங்காரத்துடன், அமராடல் எண்ணல் - போர்செய்தலே நினையாதொழிக; அரவகேதனன் - அந்தச் சர்ப்பக்கொடியை யுடைய துரியோதனன், உங்களோடு உகந்து வாழ ஒருப்படான் - உங்களோடு சந்தோஷமாய் (கலந்து) வாழ்தற்குச் சம்மதியான்; இனி---, உற்றதாயமும் உரிமையும் இகந்த - உமக்குப்பொருந்திய தாயபாகத்தையும் அரசுரிமையையும்விட்டு, ஈறு இலா உலகு எய்த - முடிவில்லாத மோட்ச வுலகத்தை அடையும்பொருட்டு, மாதவம் முயல்தலேகடன் - பெரியதவத்தை முயன்று செய்தலே உங்களுக்குக் கடமையாகும், (எ-று.)

மூலத்தில் எண்ணில் என்பதை எண்ணல் எனத்திருத்துக; எண்ணல் - அல்லீற்று எதிர்மறை வியங்கோள். நீங்கள் அகந்தை கொண்டு போர்புரியப் புகுவது உங்களுக்குத் தகுதியன்று; துரியோதனனே உங்களுடன் கூடிவாழ உடன்படான்; ஆதலின் நீங்கள் நிலையில்லாத இக்காட்டில் ஆசையை ஒழித்து நிலையான பெருநாடுபெறத் தவமுயல்வீர்களென்று உபதேசித்தனர் என்பதாம். திகந்தம் - வடதூன் முடிபு. அகந்தை - அஹந்தா என்னும் வடசொல் ஆவீறு ஐயாயிற்று. ஒருப்படான் - ஒருசொல்; ஒருமைப்படான் என்பதன் விகாரமுமாம். தாயம் - பங்கிடத்தக்க பொருள், வடசொல்.

க.—(இ-ள்.) பராசரன்குலம் ஆகினும் - பராசர முனிவரது குலத்தில் பிறந்தவர்களாயிருப்பினும், சுயோதனாதியர் - துரியோதனன் முதலானவர்கள், பெறுபயன் - தாம் அடைதற்குரிய பயனை, பாரில் இறுக்கிலர் - உலகத்தில் நிலைநிறுத்திஞரில்லை, துராசர் - பேராசையுள்ளவர்கள், அன்பு இலர் - அன்பில்லாதவர்கள், இன்று என் சொல் கைகொளார் - இன்று என்வார்த்தையை அங்கீகரியார்கள்; (ஆதலால்) இனி—, சராசரங்கள் அனைத்தும் ஆகிய - சகலசராசரங்களின் சொரூபமாயிருந்த, சுகனையே நிகர்தன்மையாய் - சுகமுனிவனையொத்த குணத்தையுடையவனே, நிராசர் - பற்றற்றஞானிகள், குறித்தவை - கூறியதத்துவங்களை, உறுதியென்று - உயிர்க்குறுதி செய்பவை என்று, நின் அனவில் நீ கொளாய் - உன்மட்டில் நீ கொள்ளக்கடவாய், (எ-று.)

பராசரர் - வியாசருடைய பிதா; வியாசரால் உற்பவித்த குலமாதலின் இக்குலத்தை பராசரன்குலமென்றார். குலமாயினும் என்னும் உயர்வு சிறப்பும்மையால், தத்துவத்தை உள்ளபடி உணர்ந்த அம்முனிவரது மரபில்தோன்றியும் உண்மையை உணர்ந்திலர் என்னு மிகழ்ச்சி தோன்றுகின்றது. சுயோதனாதி, சராசரம் - வடதூன்முடிபு; சரம்=ஜங்கமம் - இயங்கியற்பொருள். [தேவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன.] அசரம்=ஸ்தாவரம் - நிலையியற்பொருள். சராசரங்களனைத்துமாகிய சுகன் என்றது - சுகமுனிவர் மெய்ந்நிலையுணர்ந்து முற்றத் துறந்து சென்றது கண்டு அவரது விரக மாற்றாது வியாசர் அவனைத்தேடிச் சென்று புத்திரனே எனக் கூவியவளவில், அரணியத்தில் உள்ள மரமுதலியவெல்லாம் ஏனென்று விடை தந்தனவென்பதை நோக்கி என்க. சுகனையே நிகர்தன்மையாய் என்றது - அம்முனிவனைப்போல நீயும் இவ்வுலகப்பற்றை உடனே துறந்து உயர்பதம் பெற ஆசை கொள்வாயெனக் குறிப்பித்தற்கு.

கக.—(இ-ள்.) பாரில் ஆசையும் - பூமியினிடத்துள்ள ஆசையையும், நின் இராசபதத்தில் ஆசையும் - உன்னுடைய ராஜ்யாதிகாரத்திலுள்ள ஆசையையும், மன்னு வெம்போரில் ஆசையும் - பொருந்திய கொடிய யுத்தத்திலுள்ள ஆசையையும், நேயம் மங்கையர் போகம் - நேசமுள்ளமாதர்களின் சுகத்தை, அன்பொடு புதிது உண்

ணும் - ஆசையுடன் புதிது புதிதாக அனுபவிக்கின்ற, செ.
யும் - பெருமையிலுள்ள ஆசையையும், விட்டு—, நல் நெ,
நல்லமார்க்கத்தை யடைய, நீ உன்னுதி என - நீ நினைப்ப
வென்று, ஆசைதனில் அற - ஆசையானது வேரோடற்றுப் போ
படி, துறந்தருள் - துறந்தருளிய, சுருதிமாமுனிசொல்ல - வேத.
களே யுணர்ந்த பெரிய சஞ்சயமுனிவர் சொல்லிய வளவில், எ-று.)

தூரில் - உருபுமயக்கம்.

கக.—(இ-ள்.) செம்மை அல்லது - நன்மையும் தீமையும், விரகு
இலாதுதெரிந்த - உள்ளபடி பகுத்தறிந்த, மேதருநிந்தையான் - மேம்
பட்ட மனத்தையுடைய தருமபுத்திரர், மும்மையும் தெரிமுனி
உரைத்த சொல்முன்னி - முக்காலமு முணர்ந்த சஞ்சயமுனிவர்
சொல்லியவார்த்தைகளே நினைத்து, ஒல் குறு முறுவல் செய்து -
ஒள்ளிய புன்சிரிப்படைந்து, நீ புகல்வு - நீர் சொல்லுதல், வீடு உற
எண்ணியே என்னினும் - காங்கள் மோக்ஷமடைதலே யெண்ணியே
யென்றாலும், இம்மை வசைநிற்க - இவ்வுலகத்தில் பழிநிலைநிற்க,
(அவ்வாறு வீடடைதலினும்) வெம்மை எழ்நரகும் - வெவ்விய சப்த
நரகங்களினும், தனித்தனி வீழ்வதே - தனித்தனி வீழ்ந்து வருந்
துவதே, மிகவும் நலம் - மிகவும் நல்லதாகும், (எ-று.)

செம்மை அல்லது - உம்மைத்தொகை. எழ்நரகு: அள்ளல்,
ரௌரவம், சூம்பிபாகம், கூடசாலம், செந்துத்தானம், பூதி, மாபூதி.

கஉ.—(இ-ள்.) நின் அறத்தின் இன் நீர்மைதன்னை - உமது
துறவறத்தினது நற்குணத்தை, விளங்குமாறு நிகழ்த்தினும் -
(எமக்கு) விளங்கும்படிச் சொன்னாலும், மன்னராணவர் - அர
சர்கள், மன் அறத்தினைவிட்டு - ராஜதர்மத்தைவழித்து, நல் அறம் -
துறவறத்தை, முயல்வரோ - (அடைய) முயல்வார்களோ [முயலார்];
(ஆதலால்) என் அறத்தினில் நின்று - எனக்குரிய ராஜதருமத்தில்
நின்று, தெவ்வரை - பகைவர்களை, இரு விசும்பினில் ஏற்றினால் -
பெரிய வீரசுவர்க்கத்தில் அடைவித்தால், பின்—, அறத்தினில்
நினைவுகூரும் - துறவறத்தின்மேல் நினைவு அதிகரிக்கும், என-என்று,
கனன்று - கோபித்து, இவை பேசினன் - இவ்வார்த்தைகளைச்சொன்
னார் (தருமபுத்திரர்), (எ-று.)

கரு.—(இ-ள்.) தினகரனை-சூரியனை, கனி என-கனியென்றுநினை
த்து, வவ்விய - கவர்ந்த, கடவுள் - தெய்வத்தன்மையமைந்த, மாருதி -
அனுமானுக்கு, தோன்றல் - தம்பியாகிய வீமசேனன், முனியும் -
சஞ்சயமுனிவரும், அ பெரு மூரசுயர்த்தவனும் - அந்தப் பெரிதா
கிய மூரசக்கொடியை உயர்த்தவராகிய தருமபுத்திரரும், புகன்றன -
சொன்னவைகளை, முன்னி - ஆலோசித்து, நாம் இனி உரைப்பது
கடன் என - நாம் இனிப்பேசுவது கடமையாமென்று நிச்சயித்து,
தோள் விழி செவிப்பு எழ - இருவிழிகளிலும் செங்நிறமுண்டாகவும்,
வெம்சினம்மூள - வெவ்விய கோபமூளவும், எழிலியின் தனிதம்
உற்றன உருமின் - மேகத்தின் முழக்கத்தைப் பொருந்தினவாகிய

கூறப்போல், இவை சாற்றுவான் - இந்த வார்த்தைகளைச்சொல் வான், (எ-று.)—அவை மேற் கூறுகின்றார்.

மாருதி - மருத்தின்மகன்; மருத் - வாயு. தினகரனைக்கனியென வ்விய என்பதனால் அத்துணை ஆற்றலுடையவனது துணைவனென மசேனனது பராக்கிரமம் சொல்லியபடி. கனியெனத்தினகரனை வவ்விய கதையை A அநுபந்தத்தில் கண்டுகொள்வது. தனிதம் - ஸ்தனிதம் என்னும் வடமொழிச்சிதைவு. தினகரன் - நாளைச்செய் பவன், பகலோன். உரும் - இடி.

கச.—(இ-ள்.) நீ-நீர், எமக்கு - எங்களுக்கு, பிரமப் பெருங்குரு- பிரமோபதேசம் செய்கின்ற பெரிய ஆசாரியராயிருக்கின்றீர், (இது) எங்களோடு—, எதிராகுவார் தமக்கும் ஒக்கும் - பகைவராயுள்ளவர்க ளுக்கும் ஒத்ததே, (அங்ஙனமாக) அருள் - உமதருளான்றது, ஓர் உ ழையிலே சார ஓதுதல் - ஒரு பட்சத்தில் பொருந்தும்படி [பக்ஷபாத மாக] பேசுவது, தக்கதோ - தகுதியான காரியமோ; என்னல் - சே ற்று, உலுகநாமமெனு - உலகமென்னும் பெயரையுடைய மூன்றி ரோடு, அமர்க்கு அறுதி இட்டனன் - யுத்தஞ்செய்வதற்குத் (துரியோ தனன்) தீர்மானித்துச் சொன்னான், அரவு இனம் சுமக்கும் மேதினி ஆளுவோர் - அஷ்டமகாநாகங்களால் தாங்கப்படுகின்ற உலகத்தை ஆளுகின்றவர்களாகிய அரசர்கள், வினைவேறுபட்டது சொல்வரோ- (மனமொன்றியிருக்க) செய்கை வேறுபட்ட காரியத்தைப் பேச வார்களோ [பேசார்கள்], (எ-று.)

பிரமப்பெருங்குரு என்பதற்கு - பிரமப்பொருளை வெளியாகக் காட்டுகின்ற பெரிய ஆசாரியர் எனினுமாம். என்னல் - இது இங்கு இறந்தகாலத்தை யுணர்த்த வந்ததோர் குறிப்புச்சொல். "அரவி னம்" என்றதனால் அஷ்டமகா நாகங்களென்றுரைக்கப்பட்டது. அ வை,— வாசுகி, அநந்தன், தக்கன், சங்கபாலன், குளிகன், பதுமன், மகா பதுமன், கார்க்கோடகன் என்பன: இதுமுதல் மூன்பாட்டு ஒரு தொடர்.

கடி.—(இ-ள்.) இடக்கண் ஆக - இடது கண்ணே ஆக, வலக் கண் ஆக - வலது கண்ணே ஆக, இரண்டும் - இவ்விரண்டு கண்க ளும், ஒக்கும் என்னுமல் - தம்முளொக்குமென்று கொள்ளாமல், பிடர்க் கண் மதி ஆன - பிடரினிடத்தில் புத்தியுள்ள, கண்ணினில் - திருதராட்டிரன், பெற்றி அல்லன பேசினான் - குணமல்லாத வார்த் தைகளைச் சொல்லினான்; (அது நிற்க) நாளை—, பெரு கடல் - பெரும் கடலை யொத்த, படை கூடி அணிந்த - சேனைகள் சேர்ந்து அலங்கரித்த, வெய்ய களத்தில் - வெவ்விய யுத்த களத்தில், அடல் கெழு கதையால் - வெற்றி பொருந்திய கொடிய கதாயுதத்தினால், நான் அடித்திடும் அதிசயந்தனை - நான் அடிக்கப்போகிற அதிச யத்தை, ஐய - ஐயனே, கேள் - கேட்பீராக, (எ-று.)

பெற்றி-தன்மை, அது ஈண்டுக் குணத்தின்மேல் நின்றது. ஒசை யினாலும் பரப்பினாலும் கடல் படைக்கு உவமப்பொரு ளாயிற்று.

யாவையும் ஒரு தன்மையாக நோக்காது தன்பிள்ளையென்றும் பிள்ளையென்றும் வேற்றுமை நோக்கி விபரீதமாச் சொல்லுத திருதராட்டிரனே பிடர்க்கண்மதியான கண்ணிலி யென்றான். ந என்பது எதிர்கால முணர்த்த வந்ததோர் குறிப்புச்சொல்.

கசு—(இ-ள்.) நீ உவந்து மொழி தவம் - நீர் மனமகிழ்ந்து சொன்னதவமானது, அருதவம் அல்ல - அரியதவமல்ல, ஒன்னலர்-பகைவரது, உடல் உகும் - உடம்பினின்றும் சிந்துகின்ற, சிவந்தசோரியில் மூழ்கி - சிவந்த உதிர வெள்ளத்தில் முழுகி, மாழ்கு சிரங்கள்போய் - மயங்குகின்றதலைகள் அறுபட்டு, நடம் ஆடும் - கூத்தாடுகின்ற, அ கவந்தம் கானகம்மேவி - அந்த வுடற்குறைகள் அடர்ந்த (போர்க்களமாகிய) காட்டிடை அடைந்து, ஊடுஉறு - உள்ளத்திற்பொருந்திய, தீயவெவ்வினை - கொடிய தீவினைகளை, களைவதே - கடிவதே, தவம் தன்னில் தலையான - தவத்தில் தலைமையான, வீடு உறுதவம் - மோக்ஷமடைதற்குரிய தவமாகும், இது எமக்கு சாலும் - இது எங்களுக்கு அமையும், (எ-று.)

"தலையான வீடுறுதவம்" என்பதை தலையான ஈடு உறு தவம் எனப்பிரித்து, முதன்மையான பெருமைபொருந்திய தவம் என்றலு மொன்று. போய் - செயவெனெச்சத்திரி பென்னவுமாம்.

கஎ.—(இ-ள்.) போரது ஆகிய பூமி சாலையின் - போர்செய்தற் குரிய யுத்தகளமாகிய யாகசாலையில், வேலைசூழ்தரு - கடலால் சூழப்பட்ட, பூமியின் - பூமிக்கு, பாரம்ஆன - பளுவாயிருக்கிற, சுயோதனதியர் என்னும் - துரியோதனன் முதலானவர்களென்று சொல்லப்படுகிற, நூறு பசு படுத்து - நூறுபசுக்களைக் கொன்று, சமமான தயா மனத்தொடு - குளிர்ச்சியாகிய தயையுள்ள மனத்துடன், இராய சூய மகம்செயும் - இராஜசூயயாகத்தைச் செய்த, வீரம் மாமுனி தன்னை - வீரம் பொருந்திய மாமுனியாகிய தருமபுத்திரரை, களம்வேள்வியும் புரிவிப்பன் - களவேள்வியையும் செய்விப்பேன்—,(எ-று.)

துரியோதனதியர் நூற்றுவரையும் போர்க்களத்தில் கொல்வே னென்பது கருத்து.

கஅ.—(இ-ள்.) நேமியான் - சக்கராயுதத்தையுடைய கண்ணன், இவை சொன்ன வீரனை - இவைகளைச் சொன்ன வீரனாகிய வீமனை, நிற்க என்று நிறுத்தி - நிற்கக் கடவாயென்று நிறுத்தி விட்டு, இவர்கள் - இப்பாண்டவர்களுக்கு, இப்பூமி ஆளுதல் - இவ்வுலகத்தை யாளுதலும், அவர்களுக்கு - அத்துரியோதனதியருக்கு, அமர் உலகம் எறுதல் - வீர சுவர்க்கத்தை யடைதலும், புரிதவம் - செய்தவமாகும்; யாம்—, யாது உரைத்தும் - என்ன சொன்னாலும், என் பயன் - என்ன பிரயோசனம், [ஒன்றுமில்லை]; (ஆகையால்) நீ எழுந்தருள் என்ன - நீர் எழுந்தருள்வீராகவென்று, உள் காமியாத முனிக்கு - மனத்தினால் யாதொரு விஷயத்தையும் விரும்பாத சஞ்சய முனிவருக்கு, கட்டுரைத்தனன் - உறுதி மொழி கூறினர், (எ-று.)

தயே முதலில் அனுசரிக்க வேண்டுமென்பதையுணர்ந்தார் என்
கு சாம பேத தான தண்டமென நிருபர் தரும முறைமையிற்
ந் தகுதி நோக்கி யென்றார். மேல் நாலாம்பாட்டில் " அருஞ்
ம்புரியும்வகை யவருணர்த்தாராஞலுமறமொன்றின்றிப், பெருஞ்
ரம் விளக்குமதுகடனன்று" எனக் கூறுவதனு லிதுகண்டு விள
கும். கண்ணன் அத்தருமங்களே முறைப்படி யெடுத்துரைக்கும்
தகுதியுடையவரென்பதை யுற்றுநோக்கி அவனைத் தூதுவிட வெண்
ணினரென்னவுமாம். சாமம் - நல்வார்த்தைசொல்லுதல்; பேதம் -
மித்திரபேதஞ்செய்தல்; தானம் - பொருள் கொடுத்து வசப்படுத்து
தல்; தண்டம் - போர்புரிதல். இந்நான்கனுள் முதல் மூன்றையும்
முறையே செலுத்தி அவற்றுல் பகைவன் வழிப்படாஞயின் அப்
பால் நான்காவதாகிய தண்டோபாயத்தை அனுசரிக்க வேண்டுமென்
பது அரசநீதி. சுனைகடோறுமேனலந்தண் கிரிப்பெருந்தேனிலை
க்குமெழிற்குருநாடு என நாட்டினழகு கூறவே அத்தன்மைய
தாகிய நாட்டைவிட்டுக் காட்டுக்குச் செல்ல எவர்க்கும் மனமுண்டா
காதென்பது குறிப்பிக்கப்பட்டது.

கூ.சை.—(இ-ள்.) யார் மனத்தும் இருக்கும் சோதி-யாவருடைய
இருதயத்திலும் எழுந்தருளியிராநின்ற சோதியே [சர்வாந்தர்யாமி
யென்றபடி], செம்சொல் சஞ்சயமுனிக்கு - செவ்வையாகிய வார்த்
தைகளையுடைய சஞ்சயமுனிவருக்கு, யாம் உரைத்த கருமமும் -
யாம் சொல்லிய செய்தியையும், முன்சென்றகாலை - (அவ்விடம்மை
து தூதராக) முன்போனபொழுது, அம்சொல்முனி புரோகிதனுக்கு -
அழகிய சொல்லையுடைய முனிவராகிய புரோகிதருக்கு [உலக
ருக்கு], அவன் இசைத்த கருமமும் - அத்துரியோதனன் சொல்லிய
செய்தியையும், நீ அறிதி அன்று எ - தேவரீர் அறிந்திருக்கிறீரன்றே?
நஞ்சுதனை மிக அருந்தி - விஷத்தை யதிகமாகவுண்டு, நல்மருந்தும்
மந்திரமும் வினைந்துகாடா - (அது நீங்கத்தக்க) நல்ல ஔஷதத்தை
யும் மந்திரத்தையும் விரைவாகத்தேடாமல், துஞ்சினர்தங்களைப்
போல - உயிரிழந்தவர்களைப்போல, இருக்குமதோ - (எமக்குரிமை
யாகிய நாட்டைத்துறந்து சும்மா) இருப்பதுதகுதியோ? அரும்
சமரம் - (செய்தற்கு) அரியயுத்தத்தை, புரியும் வகை - செய்யும்
விதமாக, அவர் - துரியோதனுதியர், உரைத்தார் - சொன்னார்கள்,
ஆனலும்—, அறம் ஒன்று இன்றி - ஒரு தருமமுமில்லாமல், பெருஞ்
சமரம் விளக்குமது - பெரிய யுத்தத்தைவிளைப்பது, கடன் அன்று
என்று - முறைமையல்லவென்று, அருள்வெள்ளம் - கருணைவெள்ள
மானது, பெருக கூறும் - அதிகரிக்கும்படிச் சொல்லிய, பொரும்
சமரம் - மோதுகின்றயுத்தத்தில் (வெற்றிக்காகப் பிடிக்கின்ற), நெடு
மூரசம் பூ கொடியோன்தனை - நெடிய அழகிய மூரசக்கொடியை
யுடைய தருமபுத்திரரை, நோக்கி - பார்த்து, புயம்போர்வாணன்
இரு சமரம் தொலைத்தபிரான் - (ஆயிரம்) புயங்களையுடைய பாணா
சுரனது பெரிய யுத்தத்தை யொழித்தருளியபெருமாள் [ஸ்ரீகிருஷ்
ணன்], இளைஞரையும் உடன், இருத்தி - (அத்தருமபுத்திரரது) தம்

வல்வனையும் அவருடன் இருக்கச்செய்து, இயம்புவ
த்தொடங்கினார், (எ-று.)

அம்சொல் - உரிச்சொற்றொடர்; அம்மைசொல் எனப்
தாகையாகவும் கொள்ளலாம். மிகவென்னும் செயவெ
ம இங்கு வினையுரியாய் அருந்தியென்பதை விசேடித்து நின்
நஞ்சுதனை, தன் - சாரியை; "அன்னவின்னல்" என்னும் சாரியை
சூத்திரத்து 'இன்னபிறவு' மென்றதனுல் இது கொள்ளத்தக்கது
நாடா - நாடாது என்பதன் ஈறுதொகுத்தல், இவ்வினையெச்சம்
துஞ்சினர் என்பதன் முதனிலைகொண்டுமுடியும். துஞ்சினர் - மங்
கலவழக்கு. இருக்குமதோ, இருக்குமது - தொழிற்பெயர், இருத்
தல் என்பதுபொருள், தகுதியென வருவித்த பயனிலையுடன் ஓகா
ரத்தைச்சேர்த்து முடிக்க; ஓகாரம் - எதிர்மறை. வடமொழியிலக்
கணப்படி 'தகுதி' என்னும் சொல் வருவியாமல் இருக்கிறபடியே
முடிபுகொள்ளலாம்; அது ஸாவேப்ரயோகம் எனப்படும். வினைக்
குமது என்பதுந் தொழிற்பெயரே. இளைஞர் - ஞகரம் பெயர்ப்பகுபத
விடைநிலை. பிரான்-விராட்என்னும்வடமொழிச்சிதைவு. இது பெண்
பாலில் பிராட்டி எனவரும்.

இதுமுதல் கூ-பாட்டு இனிப்பாண்டவர்கள் என்செய்வதென்
பதைப்பற்றித் தருமபுத்திரருக்கும் கிருஷ்ணனுக்கும் நடந்த சம்பா
ஷணை. இப்பாட்டில் தருமபுத்திரர், தமக்கு வேண்டுவது இன்
னது, அதை நீர் அவசியம் செய்துமுடிக்கவேண்டுமென வெளிப்
படையாக விரித்துக்கூறுது, "நீயறியாயன்றே, நஞ்சுதனை மிகவு
ருந்தி கண்மருந்து மந்திரமும் விளைத்து காடாத் துஞ்சினர் தங்களைப்
போல விருக்குமதோ" என உபமானமாத்திரமெடுத்துக்கூறி, துரி
யோதனனது வஞ்சமாகிய நஞ்சுண்டவெமக்கு நீரே கண் மருந்து மந்
திரமுமாகவேண்டுமெனக் குறிப்பித்தது அவரது பெருந்தகைமை
யை விளக்குகின்றது. யாவருட்கருத்தையும் நீர் கண்குளிர்ந்தவரா
தலின் உமக்கு யாவுணென்று மெடுத்துக் கூறவேண்டுவதின்றே யெ
ன்றற்கு 'யார்மனத்துமிருக்குஞ் சோதி' என விளித்துக் கூறினர்.
அவ்வாறு உட்கருத்தை யுணர்கின்ற கண்ணனுக்குப் பாண்டவர்க
ளுள் பலருக்குப் போர்புரிய பிரியமிருப்பது தெரியுமாதலின் அதி
காரிப்பிராயம்பற்றி அங்ஙனமே திருவுளம்பற்றி அவர் கூறுவாரோ
வெனவஞ்சி, "அறமொன்றின்றிப் பெருஞ்சமரம் விளைக்குமது கட
னன்று" என, அங்ஙனஞ் செய்வது நீதிக்கொவ்வாததென்னு மொன்
றனைமாத்திரமே சுண்டெடுத்துக் கூறினர், அதனை யறகெறிதவறது
நடத்தவேண்டு மென்றற்கு. புயற்போர்வாணனிருஞ்சமரந் தொலை
த்தபிரா னெனவே அவர் பூபாரந் தீர்க்கவே வந்தவரென்பதும் போர்
புரிதலே அவருக்குப் பிரியமென்பதும் குறிப்பித்ததாயிற்று. ஐவரு
டைய அபிப்பிராயத்தையும் அறியவேண்டுமென்றற்கு ஐவனையு
முடனிருத்தி யென்றார். ஐவரெனவே அவர்களது தருமபத்தினி
யாகிய துரோபதியும் அவர்களுள் அடங்கினளென வவ்வுத்தமியை
வேறுகூறாது விடுத்தார்.

ஞ.—(இ-ள்.) செய் - வயல்களில், வரால் இனம் - வரால் மீன் கூட்டம், உகளும் - குதிக்கின்ற, திருநாடு - செல்வ மிகுந்த நாடை, பெற - (சுகந்தி செய்து) பெற்றுக்கொள்ள, நினைவோ? மீள சென்று - திரும்பப்போய், பைவராய் - துல்லியராய், அரும் கானில் - கொடிய காட்டில், பயின்று திரிதர - நெஞ்சரித்துத் திரிய, நினைவோ—? பகைத்த போரில் - ஒருவரை யொருவர் பகைத்துச் செய்கின்ற யுத்தத்தில், உய்வர் ஆர் என - யார் பிழைப்பார்களென்று (கண்டோர்) சொல்லும்படி, விரைவின் - சீக்கிரமாக [உடனே], உருத்து எழுந்து - கோபித்தெழுந்து, பொர - போர் செய்ய, நினைவோ—? ஐவராம் அவனிபர்க்கு - அரசர்களாகிய உங்க ளிவர்க்கும், உண்மையாக - உண்மையாக (உள்ள), நினைவு எது என்று - எண்ண மெதுவென்று, அமர் கோமான் - தேவ நாயகன் [ஸ்ரீ கிருஷ்ணன்], அருள் புரிந்தான் - கேட்டருளினார், (எ-று.)

"போர் வீரர் தம்மோடும் போந்தரசு கொள்வீரோ, பார்வீரரென்றும் பரியெக்க — ஓர்நீர், உய்வீரா மூன்றடைந்த வெங்கானம் போவீரோ, ஐவீருஞ்சொல்லீரமர்த்து" என்னும் வெண்பாவினுள்ளும். நிரதர, நிரதா - பகுதி. ஐவர் - தொகைக் குறிப்பு. ஓகாரம் - மூன்றும் வினாப்பொருள. உய்வரார் என்பதில் ஆர் - யார் என்பதன் மரூஉ. அவனிபர் - பூமியைக்காப்பவர், அவனி - பூமி. அமரர் - மரணமில்லாதவர்.

சு.—(இ-ள்.) வயிரமெனும் கடு நெருப்பை - பகையாகிய கொடிய தீயை, மிக மூட்டி வளர்க்கின் - மிகுதியாக மூட்டி வளர்த்தால், உயர்வனைகாடு என்ன - (தானே யிழைந்தெரிந்து போகின்ற) உயர்ந்த மூங்கிற் காடுபோல, செயிர் அமரில் - கோபிக்கின்ற யுத்தத்தில், வெகுளி பொர - கோப மதிகமாக, சேர - ஒன்றுக, இருநிறத்தேமும் - நாங்கள் இருநிறத்தாரும், சென்று மாள்வேம் - போய் இறந்து போவோம்; (ஆகையால்) கயிரவமும் - செவ்வல்லியும், தாமரையும்—, கமழ் - பரிமளிக்கின்ற, பழனம் குரு நாட்டில் - வயல்கள் சூழ்ந்த குருநாட்டில், கலந்து வாழ - (நாங்கள் ஒருவரோ டொருவர்) கூடி வாழும்படி, உயிர் அனையாய் - எங்க ளுயிரை யொத்தவரே, சந்து பட - சந்தி யுண்டாகும்படி, உரைத்தருள் - (நீர் அவர்களுக்குச்) சொல்லியருள வேண்டும், என்றான் - என்றுசொன்னார், அறத்தின் உருவம்போல்வான் - தருமத்தினுருவத்தையொத்தவராகிய யுதிட்டிரர், (எ-று.)

மூங்கிற் காடுகள் தம்மிடத்தினின்றும் தீயையுண்டாக்கித் தாமே யழிவதுபோல யாரும் வெகுளியை யுண்டாக்கில் அதனால் மாண்டு போவோம், அப்படி போகாமல் கயிரவமும் தாமரையும் ஒரிடத்தே கமழ்ந்திருப்பதுபோல நாங்களும் ஒருவரோ டொருவர் கலந்து வாழும்படி சந்தி செய்விக்கக் கடவீரென்பது கருத்து. நிறத்தேம், மாள்வேம் - பட்டார்க்கை யிடத்தானைத் தம்மொடு படுத்த உளப்பாட்டுத்தன்மைப் பன்மை.

P51.97 M89 40 O 32

I

TAMIL TEXT (*POETRY*) **FOR 1889**

WITH

Copious Notes, Explanations, &c.

Price Re. 1 *per Copy.—Postage* 2 *Annas.*

III

B. A. TAMIL TEXT (*COMPLETE*) **FOR 1890**

WITH

Copious Notes, &c.

Price Rs. 4 *per Copy.—Postage* 4 *Annas.*

V

NOTES

ON

THE TAMIL TEXT

FOR THE

MATRICULATION EXAMINATION OF 1889

WITH

An Appendix containing English Translation, and other matter of great value for Students.

Price 8 *Annas per Copy.—Postage* 2 *Annas extra.*

Extracts from the Opinions of the Press, &c., on the above Series (Nos. I & II.)

"We have received from the Editor of the *Kalatarangini*, a Tamil literary periodical published in Madras, two booklets contain-

annotations on portions of ..
F. A. and Matriculation Examina..
om we have formed a favourable opinion.
d pedantic. There is not too much of gra..
hey are easy, simple and such as the students re..
Hindu.

"Your Notes seem to be good. I observe with satisfaction that you attempt to state the reason why you prefer one interpretation to another. Students for the University Examinations will do well to *understand* the Notes you give them, and not simply to get them up by heart."—P. RANGANADHA MUDALIAR, Esq., M. A., *Professor, Presidency College, Madras.*

"They" (the Notes) "contain much useful information on the Text-books annotated.....The Annotators seem to have studied the Texts very carefully and the Notes given by them are generally very reliable and are based upon proper authority. Even in ambiguous passages, to which no definite meaning can be attached, their interpretations are more reasonable than those given by others .....The Notes display *critical* accuracy and wide research and a conscientious desire to avoid far-fetched meaning and explanations and dogmatic remarks. As far as I have seen, the Notes are very good".....—M. SESHAGIRI SASTRIAR, Esq., M. A., *Assistant Professor, Presidency College, Madras.*

Apply for the above Series to any of the undermentioned:

1. SRINIVASA, VARADACHARI & Co.,
   Booksellers, Triplicane, Madras.
2. AIYAROOLAI IYENGAR & Co.,
   Booksellers, Esplanade Row, Madras.
3. V. KALYANARAM IYER,
   Bookseller, Esplanade Row, Madras.
4. K. SRINIVASARAGHAVACHARYAR,
   Head Master, C. H. Orphanage, Vepery, Madras.
5. P. M. SRINIVASACHARYAR,
   Head Tamil Pandit, Ch. of Scot. Miss. College, Madras
6. P. V. KISTNASAWMY NAIDU & Co.,
   Booksellers, next to Pacheappa's College, Madras.
7. RAJAGOPAL & Co.,
   Opposite to the Municipal Commissioners' Office, Madras.
8. THE PROPRIETOR, *Indian Book Depot,*
   Vepery, Madras.